# நம்முன்னோரளித்த

# அருஞ் செல்வம்.

## இலங்கைச் சரித்திரமும், உலக சரித்திரமும்.

1500 - 1796

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்முன்னோரளித்த அருஞ்செல்வம்

இரண்டாம் பாகம்

## இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்
## 1500-1796


ஆக்கியோர் :

பேராசிரியர் எஸ். ஏ. பேக்மன், M.A., F.R.Hist.S.

ஜீ. ஸீ. மெண்டிஸ், B.A., Ph.D.

தமிழாக்கம் :

நவாலியூர், சோ. நடராஜன்


இலங்கைப் பாடசாலைகளில் ஆறுந்தரத்துக்கு ஏற்றதாய் வித்தியா பகுதியாரின் பாடத்திட்டத்துக்கிசைய எழுதப்பெற்றது


பிரசுரிப்பவர் :

கொழும்பு அப்போதிக்கரீஸ் கம்பெனி, லிமிற்றெட்

குமார வீதி, கோட்டை, கொழும்பு, இலங்கை

1954

6793—A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பதிப்பு, 1954

கொழும்பு
அப்போதிக்கரீஸ் கம்பெனி, லிமிற்றெட்
அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்முகம்

இரு ஆசிரியர்கள் கூடி எழுதும் நூலில் பல பிழைகளும் முரண்பாடுகளும் ஏற்படக்கூடும். இந்நூலில் உலக சரித்திரம் சம்பந்தமான பகுதிகள் ஒருவராலும், இலங்கையும் கீழ்நாடுகளும் சம்பந்தமான பகுதிகள் மற்றவராலும் எழுதப்பட்டன. இந்நூல் 'நம்முன்னோரளித்த அருஞ்செல்வம்' முதலாம்பாகத்தின் தொடர்ச்சியாகும். இதன் மூன்றும் பாகத்தில் இங்கு கூறப்பட்டிருக்கும் சரித்திரத்தைத் தொடர்ந்து, 18-ம் நூற்றுண்டினிறுதியிலிருந்து ஆரம்பித்து இற்றை நாள்வரையும் சாத்தியமானவரை கூறுவோம். இந்நூலைப் படிக்கும் சிறுவர் அறியவேண்டிய விஷயங்கள் எல்லாம் இங்கு கூறப்படவில்லை. அவர்கள் இன்னும் விரிவான நூல்களை வாசித்துத் தமது விவேகத்தினுலும் சில விஷயங்களை ஆராய்ந்தறிய ஆசிரியரானேர் ஊக்கமளிப்பதோடு, நிகழ்ச்சிகள் சம்பவங்களைப்பற்றி 'ஏன்'? 'எப்படி'? என்றெல்லாம் உசாவி அறியும் பழக்கத்தையும் அவர்களிடயே வளரச் செய்வார்களென நம்பப்படுகிறது.

செல்தன்ஹாம் பெண்கள் கல்லூரி ஆசிரியை மிஸ் ஜே. எம். பேக்கர், மிஸ். எம். டபிள்யூ. யூறியான்ஸ், திருவாளர்கள் இறீமேஸ், ஜே. எல். ஸி. றொட்ரிகோ ஆகியோரின் அரிய உதவிகட்காக இந்நூலாசிரியர்கள் தமது நன்றியறிதலைச் செலுத்துவதுடன், கருத்தொருமித்து ஐக்கியமாக இந்நூலை எழுதி முடித்ததற்காக தம்முள் ஒருவருக்கொருவர் நன்றி பாராட்டிக்கொள்ளவும் விரும்புகின்றனர்.

எஸ். ஏ. பேக்மன்
ஜீ. ஸி. மெண்டிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கட்குச் சில குறிப்புக்கள்

அநேக சம்பவங்கள் நிறைந்த மூன்று நூற்றூண்டு களின் சரித்திரத்தை இந்நூல் கூற முற்படுகின்றது. ஐரோப்பாவில் மத்திய காலம் முடிவுக்கு வந்ததும், ஐரோப்பிய ஆதிக்கத்தை உலகமெங்குமே பரவச் செய் யக்கூடிய குடியேற்ற முயற்சியில் மேற்கு ஐரோப்பிய நாடுகள் முனைந்து நின்றன. இதற்கு மிக முக்கியமான சாதனமாயிருந்தது கடற்படையின் வலிமையே. கடல் யுத்தத்தைப் பொறுத்தவரையில் இந்து சமுத்திரம் மிக முக்கியமான ஒரு தானத்தில் அமைந்திருக்கிறது. அதனுல் இந்து சமுத்திரத்தில் ஆதிக்கஞ் செலுத்தவேண்டு மாஞல், உலகத்தில் முதன்மையுள்ள எந்தக் கடற்படை யும் இலங்கையைக் கைப்பற்றி வைத்திருக்கவேண்டியது மிக முக்கியம். (இன்று அது மிக அவசியமாய் விட்டது). இந்த முக்கியத்துவத்தை போர்த்துக்கீசர் அறிந்திருந்தனர். ஓரளவுக்கு ஒல்லாந்த (டச்சுக்கார) ரும் அறிந்திருந்தார்கள். ஐக்கிய மாகாணங்கள், பிரித்தா னியரோடு வைத்திருந்த நீண்டகால நட்பைக் கைவிட்டு பிரான்ஸுடன் கூடி அவர்களை எதிர்த்ததும் நெடுங்கால அபிலாஷை ஒன்றை பிரித்தானியர் முற்றுவிக்கும் முறை யில் இலங்கையைத் தம்வசமாக்கினர். கண்டியரசர்கள் தமது பழைய சொத்துக்களைப் பெறக் காரியார்த்தமான முயற்சி செய்யாமலும், ஐரோப்பியரின் சொத்துக்களிற் றலையிடாமலும் இருக்கும்வரையில், உள்நாட்டைச் சுவீகரித்துக்கொள்வதைப்பற்றி பிரித்தானியர் அக்கறை கொள்ளவில்லை. இலங்கைத் துறைமுகங்களைக் கைப்பற்றியிருப்பதே அவர்கட்கு போதுமானதாயிற்று. ஆனுல் கிளர்ச்சிகளை அடக்குவதாற் பெரிய பணச் செலவு உண்டானது.

இம்மூன்று நூற்றூண்டுகளிலும் இலங்கையில் நடை பெற்ற சம்பவங்களும், பிரதானமாக இலங்கையின் கடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்த மாகாணங்கள் எவ்வாறு ஐரோப்பிய சாதியாரால் கைப்பற்றப்பட்டு ஆட்சிசெய்யப்பட்டன என்பதும், இலங்கையர் அறிந்தும் அறியாமலும் எவ்வளவு தூரம் ஐரோப்பியர் நாகரிகத்தைச் சிறிது சிறிதாய்க் கைக்கொண்டனர் என்பதும் ஈண்டு கூறப்படுகின்றன. பிரதானமாகக் கறுவா முதலிய இலங்கையின் விளைபொருள்களுக்காகவும், இந்து சமுத்திரத்தில் அது அமைந்திருக்கும் முக்கியமான தானத்தை முன்னிட்டும் ஐரோப்பியர் இலங்கையைக் கைப்பற்ற விரும்பினர்.

உலக சரித்திரத்தில் இந்நூற்றாண்டுகளில் புராதன யுகம் சிறிது சிறிதாக மாறி நமது புதிய யுகம் தோன்றிற்று. மறுமலர்ச்சி, சமயச் சீர்திருத்தம், புதிய இரு கடற்பாதைகளைக் கண்டுபிடித்தல் ஆகிய இம்மூன்று பெரிய சம்பவங்கள் நம்மைப் புது யுகத்தில் கொண்டு வந்து விடுகின்றன. ஐரோப்பிய நாட்டவரின் ஆதிக்கம் நாளுக்கு நாள் உலகெங்கும் பரவி வருகின்றபடியால், இலங்கைச் சிறுர் ஐரோப்பிய சரித்திரத்தைப்பற்றியும் அறியவேண்டியதவசியம். எனவே, ஸ்பானியா, போர்த்துக்கல் ஆகிய இராச்சியங்களின் எழுச்சி, வீழ்ச்சியைப்பற்றியும். பிரித்தானியா, பிரான்ஸ், ஐக்கிய மாகாணங்கள் ஆகிய தேசங்களிடையே ஏற்பட்ட போட்டியைப்பற்றியும் விசேஷமாக அறியவேண்டியதவசியம். அன்றியும், 19-ம், 20-ம் நூற்றுண்டுகளில் நடைபெறும் சம்பவங்களைப்பற்றி அறிவதற்கு ஜெர்மனி, ருஷ்யா, வட அமெரிக்கா ஆகிய தேசங்களின் சரித்திரங்களைச் சிறிது படிக்கவேண்டியதும் இன்றியமையாததாகின்றது. இந்நூற்றுண்டுகளின் சமூக சரித்திரமும் கலைவளர்ச்சி, நாகரிகம் சம்பந்தமான வரலாறுகளும் அரசியல் சரித்திரத்தைப்போலவே முக்கியமானவை என்பதை உபாத்திமார் கவனிக்கவேண்டும்.

மேலும் இலங்கைச் சரித்திரத்தைக் கற்பிக்கும் பொழுது, மாணவர் தாமே நேரிற் கண்டறியக்கூடிய உதாரணங்களால் விஷயங்களைத் தெளிவுபடுத்தவேண்டும். அதாவது சாத்தியமான இடங்களில் மாணவர்க்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கமுள்ள சாதாரணமான உதாரணங்களை எடுத்துக் காட்டவேண்டும். விஷயத்தில் சிரத்தையுள்ள உபாத்திமார், இந்நூலிற் கூறப்பட்டிருக்கும் விஷயங்களை மேலும் விளங்குவதற்கு இதில் காட்டப்படாத அநேக படங்களைச் சேகரிக்கலாம். உள்ளூரில் நிலவிவரும் சரித்திர சம்பந்தமான கதைகளையும் ஐதீகங்களையும் கேட்டறியலாம். புதினப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் சரித்திர சம்பந்தமாய் வெளிவரும் விஷயங்களை வெட்டி அவற்றைத் தொகுத்து வைக்கலாம். சரித்திரக் கல்வியில் ஊக்கமளிப்பதற்கு இதுவே நல்ல முறை. அதைவிடுத்து, வகுப்புகளில் சரித்திர பாடத்துக்குரிய நேரங்களில் சரித்திரப் புத்தகத்தை எடுத்து பத்தி பத்தியாக மாணவரைக்கொண்டு உரக்க வாசிப்பித்து விட்டு, அவர்கள் மனனம் பண்ணிய பகுதிகளில் கேள்விகளைக் கேட்டு, அவர்களின் சரித்திர அறிவைப் பரீட்சை செய்கிறோமென்று கூறுவது ஆசிரியர்க்கும், துர்ப்பாக்கியசாலிகளான அம்மாணவர்க்கும் வீண்காலப் போக்கேயாகும். அத்துடன் கல்வி வளர்ச்சிக்கும் இம்முறை ஒரு தடையாகவே முடியும்.

ஒவ்வொரு அத்தியாயத்தினிறுதியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் முக்கியமான ஆண்டுகளை மாணவர் கிளிப்பிள்ளைபோல் மனனஞ் செய்யவேண்டுமென்பது நோக்கமல்ல. காலக் கிரமத்தைப்பற்றி ஒரு பொதுவான காட்சியைக் கொடுப்பதற்காகவே அவை குறிப்பிடப்பட்டன. கால அட்டவணைகளை எழுதுவதும் இதற்கு உதவியாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

நான்முகம்

ஆசிரியர்கட்குச் சில குறிப்புகள்

அத்தியாயம் | பக்கம்

I. புது நாடுகளைக் கண்டுபிடித்தலின் பொருட்டுச் செய்த பிரயாணங்கள் 1

1. ஐரோப்பாவும் கீழ்நாடுகளும். 2. போர்த்துக்கீசர் புதிய நாடுகளைக் கண்டுபிடித்தல். 3. கொலம்பஸின் யாத்திரை. 4. வேறு யாத்திரைகள். 5. அமெரிக்காவில் ஸ்பானியர். 6. யாத்திரைகளின் பயன்.

II. கல்வியின் மறுமலர்ச்சியும் புரட்டஸ்தாந்து மதச்சீர்திருத்தமும் .. 14

1. மத்திய காலத்தில் கல்வி நிலை. 2. கல்வியின் மறுமலர்ச்சி. 3. நற்கலைகளின் மறுமலர்ச்சி. 4. புதுக் கல்வி பரவுதல். 5. புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தம்.

III. பிரான்ஸும் ஸ்பானியாவும் .. 24

1. புதிய ராச்சியங்களின் பிறப்பு. 2. ஸ்பானியாவின் எழுச்சி. 3. பிரான்ஸின் எழுச்சி. 4. சமயச் சண்டைகள். 5. ஸ்பானியாவின் வீழ்ச்சி.

IV. பதினேழாம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் நிலைமை .. 34

1. மத்திய வகுப்பாரின் தோற்றம். 2. கிழக்கு ஐரோப்பாவின் நிலைமை. 3. பிரான்ஸின் உன்னத நிலைமை. 4. பதினாலாம் லூயியின் காலம். 5. ஐக்கிய மாகாணங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் பக்கம்


V. இங்கிலாந்து (1485-1714) .. 46

1. தியூடர் வம்சம். 2. எட்டாவது ஹென்றியும் மதச்சீர்திருத்தமும். 3. இங்கிலாந்தில் புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தம். 4. எலிஸபெத் ராணியின் ஆட்சி. 5. ஸ்ரூவெர்ட் வம்சம். 6. பிரான்ஸிய யுத்தங்கள்.

VI. கீழ்நாடுகளில் போர்த்துக்கீசர் .. 60

1. முஸ்லிம்களின் வர்த்தகம். 2. முஸ்லிம்களதும் போர்த்துக்கீசரதும் கப்பல்கள். 3. போர்த்துக்கீசரின் வியாபாரம். 4. இந்தியாவில் மொகலாயர் ஆட்சி. 5. கிறிஸ்தவ சமயம் பரவுதல். 6. கீழைத்தேசங்களில் போர்த்துக்கீச நிர்வாகம்.

VII. போர்த்துக்கீசர் வருகையும் கத்தோலிக்க சமயமும் .. .. 82

1. 1505-ல் இலங்கை பிரிக்கப்பட்டிருந்த விதம். 2. விவசாயமும் வர்த்தகமும். 3. போர்த்துக்கீசரின் முதல் வருகை. 4. கொழும்பில் போர்த்துக்கீசரின் முதற் கோட்டை. 5. மாயாதுன்னையோடும் முஸ்லிம்களோடும் நடைபெற்ற யுத்தம்; போர்த்துக்கலுக்கு தூது. 6. கிறிஸ்தவ குருமாரின் வருகையும் அதனுல் ஏற்பட்ட பயனும்.

VIII. சீதவாக்கையின் எழுச்சியும் வீழ்ச்சியும் .. .. .. .. 103

1. நொறன்ஹாவும் விதிய பண்டாரனும். 2. சங்கிலி ராசனுடன் யுத்தம். 3. முதலாம் இராஜசிங்கன் (1581-92).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் — பக்கம்

IX. போர்த்துக்கீசர் கண்டியைப் பிடிக்க முயலுதல் .. .. .. 113

1. விமலதர்ம சூரியனுக்கெதிராக யுத்தம். 2. அஸிவிடோ. 3. கொன்ஸ் தாந்தைன் டி சா.

X. கீழ்நாடுகளில் டச்சுக்காரர் .. 131

1. கீழ்நாடுகளில் டச்சு வியாபார ஆரம்பம். 2. டச்சுக்காரரின் கீழைத் தேச வியாபார விருத்தி. 3. இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் டச்சுக் காரர் அடைந்த வெற்றி. 4. கீழைத் தேசங்களில் டச்சு அரசியல்.

XI. இலங்கையில் போர்த்துக்கீசருக்கும் டச்சுக்காரருக்குமிடையில் சண்டை .. .. .. .. 143

1. டச்சுக்காரர் நீர்கொழும்பையும் காலியையும் கைப்பற்றுதல். 2. சமாதானத்தின் பின் டச்சுக்காரருடன் இராசசிங்கன் தொடர்பு. 3. டச்சுக் காரர் கொழும்பைக் கைப்பற்றுதல்.

XII. பிரித்தானியரும் பிரெஞ்சுக்காரரும் தமது ராச்சியங்களைப் பெருக்கிய வரலாறு .. .. .. .. 158

1. ஐரோப்பிய வல்லரசுகள் புதிய நாடுகளைக் கைப்பற்றல். 2. அமெரிக் காவில் பிரெஞ்சுக்காரரும் பிரித்தானியரும் குடியேறிய ஆரம்ப வரலாறு. 3. ஆபிரிக்காவில் பிரித்தானியரும் பிரெஞ்சுக்காரரும். 4. இந்தியாவில் பிரித்தானியரும் பிரெஞ்சுக்காரரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் பக்கம்

XIII. பதினெட்டாம் நூற்றுண்டில் பிரித்தானியாவுக்கும் பிரான்ஸுக்குமிடையில் நடைபெற்ற போட்டி 167

1. ஸ்பானிய சிங்காசனப் போர். 2. அமெரிக்காவில் வர்த்தகப் போட்டியும் குடியேற்றப் போட்டியும். 3. பிரித்தானியர் அமெரிக்காவை இழத்தல். 4. இந்தியாவில் பிரித்தானியரின் வெற்றி. 5. பிரித்தானிய கிழக்கிந்திய சங்கத்தின் ஆட்சி முறை.

XIV. மத்திய ஐரோப்பாவும் கிழக்கு ஐரோப்பாவும் .. .. .. 181

1. புதுயுக ஆரம்பத்தில் கிழக்கு ஐரோப்பாவின் நிலைமை. 2. வட ஐரோப்பா. 3. ஆஸ்திரியாவின் எழுச்சி. 4. பிரஷ்யாவின் எழுச்சி. 5. ருஷ்யாவின் எழுச்சி.

XV. 1714-ம் ஆண்டு தொடக்கம் 1795 வரை பிரித்தானியாவின் நிலைமை 192

1. விக் கட்சியாரின் ஆட்சி. 2. விக் கட்சியின் வீழ்ச்சி. 3. பொருளாதாரப் புரட்சியும் செல்வச் செழிப்பும்.

XVI. சாத்திர அறிவிலும் எண்ணப் பாங்கிலும் ஏற்பட்ட மாற்றமும், பிரெஞ்சு அரசியல் புரட்சியும் .. 200

1. சாத்திர அறிவின் வளர்ச்சி. 2. அறிவுத்துறையில் ஏற்பட்ட வேறு சில மாற்றங்கள். 3. பிரெஞ்சுப் புரட்சியின் ஆரம்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் பக்கம்

XVII. கண்டி நாட்டரசரும் ஒல்லாந்த தேசாதிபதிகளும் .. .. .. 211

1. இரண்டாம் இராசசிங்கன், ரைகிளப் வான் கோயன்ஸ் (மூத்தவன்), இரண்டாம் விமலதர்ம சூரியன். 2. கோர்னேலியஸ் ஜோன் சைமனும் சட்டத் திருத்தமும். 3. பெக்கர் தொடக்கம் வான் இம்மாவ்வரையுமிருந்த ஒல்லாந்த தேசாதிபதிகள்.

XVIII. நாயக்கர் அரசர்களுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் ஏற்பட்ட விரோதம் .. .. .. .. 227

1. பௌத்த சமயப் புனருத்தாரணம். 2. கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனும் ஒல்லாந்தருடன் நடத்திய யுத்தமும். 3. ஆங்கிலேயர் கரைநாடுகளைக் கைப்பற்றல்.

XIX. இலங்கையில் போர்த்துக்கீச, ஒல்லாந்த ஆட்சி .. .. .. 241

1. கண்டி ராச்சியத்தின் அரசியல் நிருவாகம். 2. போர்த்துக்கீச நிருவாக முறை. 3. ஒல்லாந்தர் அரசியல் முறை. 4. போர்த்துக்கீச, டச்சுக் கோட்டைகள். 5. டச்சுக்காரரதும் போர்த்துக்கீசரதும் மதப்பிரசாரம். 6. போர்த்துக்கீச, டச்சு ஆட்சியின் வேறு சில அம்சங்கள்.

விஞக்கள் .. .. .. .. 263

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரப் படங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடலோடி ஹென்றி .. .. .. | 3 |
| 2. | வஸ்கோடிகாமா .. .. .. .. | 7 |
| 3. | கொலம்பஸின் கப்பல் .. .. .. | 8 |
| 4. | கல்வின் .. .. .. .. .. | 20 |
| 5. | இக்னேஸியஸ் லோயலா .. .. .. | 21 |
| 6. | இரண்டாம் பிலிப்பு .. .. .. | 26 |
| 7. | மௌனி வில்லியம் .. .. .. | 30 |
| 8. | ஓர் ஸ்பானிய யுத்தக் கப்பல் .. .. | 31 |
| 9. | பதினாலாம் லூயி .. .. .. .. | 40 |
| 10. | ஒல்லாந்திலுள்ள ஒரு கால்வாய் .. .. | 41 |
| 11. | ஒரு டச்சு நாணயம் .. .. .. | 42 |
| 12. | ஒரு டச்சுக் கப்பல் .. .. .. | 43 |
| 13. | எலிஸபெத் ராணி .. .. .. | 50 |
| 14. | சேர் பிரான்ஸிஸ் டிரேக் .. .. .. | 52 |
| 15. | ஒலிவர் குறொம்வெல் .. .. .. | 54 |
| 16. | மூன்றுவது வில்லியம் .. .. .. | 57 |
| 17. | ஒரு போர்த்துக்கீச கப்பல் .. .. .. | 66 |
| 18. | அல்புக்கூர்க்கே .. .. .. .. | 69 |
| 19. | அக்பர் .. .. .. .. .. | 74 |
| 20. | பிரான்ஸிஸ் சபைச் சந்நியாசி .. .. | 78 |
| 21. | போர்த்துக்கல் வீரமுத்திரை .. .. | 89 |
| 22. | கொழும்பில் முதல் முதல் கட்டப்பட்ட போர்த்துக்கீசக் கோட்டை .. .. | 92 |
| 23. | ஸ்பில்பேர்கனும் விமலதர்ம சூரியனும் சந்தித்தல் .. .. .. .. | 118 |
| 24. | பின்ஹாவோவும் எதிர்மன்னசிங்கனும் .. | 126 |
| 25. | கீழ்த்திசைக் கடல்களில் ஓடிய டச்சுக் கப்பல்கள் .. .. .. .. | 132 |
| 26. | ஜோன் பீட்டர்ஸ் கோவன் .. .. | 134 |
| 27. | பழவேற்காட்டிலுள்ள டச்சுக் கோட்டை .. | 136 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்

28. அந்தோனியோ வான்டிமன் .. .. 138
29. டச்சுப் பீரங்கி .. .. .. .. 143
30. குண்டுவெடி வீசும் டச்சுப் போர்வீரன் .. 145
31. காலிக் கோட்டையின் வீழ்ச்சி .. .. 146
32. ஜோன் மட்ஸூய்கர் .. .. .. 150
33. டச்சு ஈட்டிப் போர்வீரன் .. .. .. 151
34. ஹல்ப்ட், இராசசிங்கன் அவைக்களத்துக்குப் பவனிபோதல் .. .. .. .. 152
35. ஜெராட் ஹல்ப்ட் .. .. .. .. 153
36. மன்னர் கைப்பற்றப்படுதல் .. .. 154
37. போர்த்துக்கீசரின் கொழும்புக் கோட்டை .. 156
38. சென்னையிலிருந்த செயின்ற் ஜோர்ஜ் கோட்டை .. .. .. .. 165
39. சதாம் பிரபு வில்லியம் பிற் .. .. 171
40. மகா பிரெடரிக் .. .. .. .. 184
41. மகா பீற்றர் .. .. .. .. 187
42. இரண்டாவது இராசசிங்கன் .. .. 212
43. ரைகிளப் வான் கோயன்ஸ் .. .. 214
44. டச்சு துப்பாக்கி வீரன் .. .. .. 231
45. திருக்கோணமலையிலுள்ள டச்சுக் !கோட்டையும் துறைமுகமும் .. .. .. 237
46. காலிக் கோட்டையும் அதன் சுற்றுப்புறமும் 250
47. நீர்கொழும்பிலுள்ள டச்சுக் கோட்டை .. 252
48. காலியிலுள்ள கோட்டையின் கொத்தளம் .. 254
49. காலி டச்சுத் தேவாலயம் .. .. .. 256
50. நீர்கொழும்பு டச்சுக் கால்வாய் .. .. 259
51. போர்த்துக்கீச உடையில் டோனு கதரினு .. 261


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசப் படங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வஸ்கோடிகாமாவின் யாத்திரை .. .. | 4 |
| 2. | கொலம்பஸின் பிரயாண மார்க்கம் .. | 6 |
| 3. | மகலனின் யாத்திரை மார்க்கம் .. .. | 9 |
| 4. | ஐரோப்பா .. .. .. .. | 36 |
| 5. | கிழக்குத் தேசப் படம் .. .. | 64-65 |
| 6. | கோவை .. .. .. .. .. | 71 |
| 7. | இந்தியா .. .. .. .. .. | 73 |
| 8. | இலங்கை .. .. .. .. .. | 83 |
| 9. | சீதவாக்கை .. .. .. .. | 96 |
| 10. | கோட்டை .. .. .. .. | 108 |
| 11. | வெளியுலகு சம்பந்தப்பட்டவரையில் கொழும்பு வீற்றிருக்கும் நிலை .. .. | 115 |
| 12. | தென்மேற்கு இலங்கை .. .. .. | 122 |
| 13. | வட அமெரிக்கா .. .. .. .. | 169 |
| 14. | வாறன்ஹேஸ்டிங்ஸ் காலத்தில் இந்தியா .. | 178 |
| 15. | ஐரோப்பா—1792-1795 .. .. .. | 188 |
| 16. | 1780-ல் ஐரோப்பியருக்கிருந்த தேசங்கள் .. .. .. | 208-209 |
| 17. | டச்சுக்காரரின் யாழ்ப்பாணப் படம் .. | 244 |
| 18. | டச்சுக்காரரின் இலங்கைப் படம் .. .. | 248 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் அத்தியாயம்

## புது நாடுகளைக் கண்டுபிடித்தலின் பொருட்டுச் செய்த பிரயாணங்கள்

### I. ஐரோப்பாவும் கீழ்நாடுகளும்

பதினாறும் நூற்றாண்டு தொடக்கம் பதினெட்டாம் நூற்றாண்டுவரையுள்ள மூன்று நூற்றாண்டுகளில் இலங்கையில் நடைபெற்ற சம்பவங்களையும், அதே காலத்தில் உலகின் பல பாகங்களிலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் சுருக்கமாக இந்நூலிற் கூறுவாம். 16-ம் நூற்றாண்டு வரை இலங்கையராவது இந்தியராவது மேல்நாட்டவரைப்பற்றி அதிகம் அறிந்திருக்கவில்லை என்பதை 'நம்முன்னோரளித்த அருஞ்செல்வம்' என்னும் நூலின் முதலாம் பாகத்தில் கூறினேம். அடுத்த இம்மூன்று நூற்றாண்டுகளிலும் இவர்கள் ஐரோப்பியருடன் நெருங்கிய தொடர்பு பெற்றனர். இலங்கையில் கண்டி இராச்சியந் தவிர்ந்த மற்றைய பாகங்களெல்லாம் இந் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய இனத்தவரால் மாறி மாறி ஆளப்பட்டன. முதலில் போர்த்துக்கீசரும், அதன் பின்னர் ஒல்லாந்தரும் இலங்கையைக் கைப்பற்றினர். கடைசியாக ஆங்கிலேயர் இந்தியாவின் பெரும்பாகத்தைக் கைப்பற்றிக்கொண்ட பின் இலங்கையையுந் தம் ஆட்சிக்குட் சேர்த்துக்கொண்டார்கள்.

ஐரோப்பியர் கீழ்நாடுகளை நோக்கி வந்ததன் காரணம் என்ன? எவ்வாறு வந்தார்கள்? என்ற இன்னோரன்ன விஷயங்களை இவ்வத்தியாயத்தில் நோக்குவாம். அடுத்த அத்தியாயங்களில் அவர்கள் கீழ்நாடுகளிற் செய்தவைகளையும், பிரதானமாக இலங்கையில் நடத்திய கருமங்களையும் கவனிப்போம். இலங்கைச் சரித்திரம் உலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திரத்தோடு தொடர்புற்றிருப்பதால் இவ்விஷயங்களையெல்லாம் சரிவர அறிவதற்கு ஐரோப்பாவிலும், உலகின் ஏனைய பாகங்களிலும் இதே காலத்தில் நடைபெற்ற சம்பவங்களை அறியவேண்டியதும் இன்றியமையாததாயிருக்கின்றது.

குளிர் காலங்களில் ஐரோப்பியர் மிருகங்களை உணவின் பொருட்டுக் கொன்று, அவற்றின் மாமிசத்துக்கு உப்பிட்டுப் பதம் கெடாதபடி பாதுகாத்தனர். ஆயின், செல்வந்தர் உப்பிட்ட மாமிசத்துக்கு வாசனைச் சரக்குகளையுஞ் சேர்த்து நல்லுணவாக்கப் பெரிதும் விரும்பினர். அவர்கள் தங்களுக்குத் தேவையான வாசனைத் திரவியங்களைக் கீழ்நாடுகளிலிருந்தே பெறவேண்டியிருந்தது. *மத்திய காலத்தில் மிளகு, கறுவா, சாதிக்காய், கிராம்பு முதலாம் வாசனைச் சரக்குகள் தரை மார்க்கமாக ஐரோப்பிய நாடுகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டன. 'கரவன் பாதை' (சார்த்தர் பாதை) என்றழைக்கப்பட்ட அத்தரை மார்க்கங்கள் ஆபத்து நிறைந்தனவாயும் நீடித்தவையாயுமிருந்தன. ஆனால் வாசனைச் சரக்குகளை இலாபகரமாகவும் பத்திரமாகவும் கடல்வழியாகக் கொண்டுசெல்லக்கூடிய வசதிகள் உண்டானபோது உலக சரித்திரத்தில் பலவகையான மாறுதல்களேற்பட்டன.

## II. போர்த்துக்கீசர் புதிய நாடுகளைக் கண்டு பிடித்தல்

இந்தப் பூமியானது தட்டை வடிவமைந்தது என்ற எண்ணம் புராதன மக்களிடத்திற் பல காலமாய் நிலவி வந்தது. ஆனால் காலஞ் செல்லச் செல்ல, அறிஞர் பலர் இப்பூமி உருண்டை வடிவமாயிருக்கிறதென உறுதியிட்டனர். இதையறிந்த ஐரோப்பிய கடலோடிகள் நீண்ட கடற்பிரயாணஞ் செய்ய எண்ணினார்கள். உலகின் அதிசயங்களைக் காணப் பலர் விருப்பமுற்றனர். நீண்டு,

---

*கி.பி. 5-ம் நூற்றாண்டு தொடக்கம் 15-ம் நூற்றாண்டு உட்பட இடையிட்ட காலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிந்து கிடந்த ஆபிரிக்காவின் மேற்குக் கரை முழுவதை யும் மாலுமிகள் மனத்துணிவுடன் சுற்றிப் பார்த்தார்கள். 16-ம் நூற்றுண்டிலே பூமிசாத்திரத்தில் தேர்ந்த சில அறிஞர்கள், புராதன கிரேக்கர் எழுதிவைத்த நூல்களைப் படித்துப் பூமியின் சுற்றளவைக் கணிக்க முயன்றனர். சரியாக அதன் அளவைக் கணிக்க முடியாவிட்டாலும், மாலுமிகட்குப் பெருந்துணை புரியக்கூடிய 'தேசப் படங்களை அவர்கள் வரைந்தார்கள்.




கடலோடி ஹென்றி

அடிவானத்திருந்து மேலே எவ்வளவு உச்சத்தில் துருவ நட்சத்திரம் நிற்கிறதென்று கணிக்கும் 'அஸ்ருே லேப்' என்ற கருவியையும், பிரயாணஞ் செய்யும்பொழுது போகும் திக்கைக் காட்டக்கூடிய 'கொம்பாஸ்' என்னும் திசையறி கருவியையும் கண்டுபிடித்தார்கள். இதுவரை பூமியின் இயல்பையும், திசைகளின் நெறியையும், கடல்களின் தன்மையையுமறியாது, பயந்து பயந்து கரையோரமாகக் கடலோடிய மாலுமிகள், இப்புதிய உபகரணங்களின் துணைகொண்டு நீண்ட கடற்பிரயாணங்களைச் செய்தனர். புதுப் புதுத் தேசங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற மனவெழுச்சி எல்லார் மனதிலுந் தோன்றியது.

போர்த்துக்கீச இளவரசஞன ஹென்றி என்பவன் இத்தகைய நீண்ட கடற்பிரயாணங்களை ஊக்கப்படுத் தினன். கடற்பிரயாணத்தில் இவன் கொண்ட பேரார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வஸ்கோடிகாமாவின் யாத்திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வத்தினல், 'கடலோடி ஹென்றி' என்ற காரணப் பெயரையுமிவனுக்கு வழங்கினர். திரைகடலோடிப் புதிய தேசங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதே இவனுடைய வேணவா. அத்துடன் கிறிஸ்தவ மார்க்கத்தை வெளிநாடுகளிற் பரப்பிவிடவேண்டுமெனவும் விரும்பினன். இவன் 1460-ல் இறந்தான். இதற்கிடையில் இவனது போர்த்துக்கீச கடல் வீரர் ஆபிரிக்காவின் மேற்கரை முழுவதையும் பரிசோதித்து முடித்துவிட்டனர். 1488-ல் பார்தலோமியஸ் டயஸ் என்பவன் ஆபிரிக்காவின் தெற்கு முனைவரை சென்று, அதற்குப் 'புயல் முனை' என்ற பெயரையுஞ் சூட்டித் திரும்பினன். போர்த்துக்கீச மன்னன் அதற்கு 'நன்னம்பிக்கை முனை' என்ற பெயரைச் சூட்டினன். ஒன்பது வருடங்களின் பின் வஸ்கோடிகாமா என்ற கடல் வீரன் அம்முனையைத் தாண்டி ஆபிரிக்காக் கண்டத்தின் கிழக்குக் கரையோரமாக வெகு தூரம் சென்றுவிட்டு, அராபிய மாலுமிகள் சிலரின் துணைகொண்டு இந்தியாவை நோக்கிப் பிரயாணமானன். தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றின் உதவியால் இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள கள்ளிக்கோட்டையை அடைந்தான். இவன் திரும்பித் தன் தேசஞ் சென்றபொழுது தனது பிரயாணச் செலவிலும் அறுபது மடங்கு பெறுமதியான வாசனைச் சரக்குகளைக் கொண்டுபோனன். பிற்காலத்தில் கடல் யாத்திரை செய்த கடல் வீரர் பலருக்கு இவனே வழிகாட்டியாய் விளங்கினன்.

இப்பிரயாணிகளுடைய சரித்திரம் இலங்கைச் சரித்திரத்தோடு மிகவுந் தொடர்புடையதாய் இருக்கின்றபடியால் அதை இன்னொரு அத்தியாயத்திற் கூறுவாம்.

## III. கொலம்பஸின் யாத்திரை

வஸ்கோடிகாமாவின் கடல் யாத்திரைக்குச் சில ஆண்டுகட்கு முன், ஜெனேவா நகரைச் சேர்ந்த கிறிஸ்தோபர் கொலம்பஸ் என்னும் இத்தாலியக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொலம்பஸின் பிரயாண மார்க்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலோடி, ஸ்பானிய மன்னர் முன் சென்று,மேற்குத்திசை யாகக் கப்பல் ஓட்டி, கீழைத் தேசங்கட்குத் தான் செல்ல விரும்புவதாகவும், அதுவே அதற்குச் சிறந்த மார்க்க மென்பதாகவுங் கூறினன். முன்னேறிய போர்த்துக்கீசர் இவனுடைய எண்ணத்தை அலட்சியஞ் செய்தனர். கொலம்பஸ் ஸ்பானிய மன்னனாகிய பேர்டினன் டையும் அரசியாகிய இஸபெல்லாவையும் தனது எண்ணத்துக்கு இசையச் செய்தான். கடைசியாக 1492-ம் ஆண்டு, ஆவணி மாசத்தில் மூன்று சிறு கப்பல்களோடு மேற்கு நோக்கிப் பிரயாண மானன். அவன் அஞ்சா நெஞ்சும், மன உறுதி யும், கருமத்திலேயே கண்ணுமுடையவனு யிருந்தபடியால், தன் னுடன் சென்ற கட லோடிகள் மனஞ்சலித் துப் பின் வாங்கின போதும், ஒரே பிடி வாதமாகத் தான் நினைத்ததையே முடிக்க விரும்பினன். இவ்வாறு சென்ற கொலம்பஸ் ஐப்பசி மாசத்தில் மேற்கு இந்தியத் தீவுகளில் ஒன்றை அடைந்தான். பின்னர் 1498-லும் 1502-லும் பல யாத்திரைகள் செய்து கரிபியன் கடல் முழுவதையும் தாண்டினன். ஆனல் அவன் விரும்பிய 'சிப்பாங்கு' என்ற ஜப்பான் தீவையாவது, மகாகான் என்ற பெரிய அரசனல் ஆட்சி புரியப்பட்டு வந்ததாக அவன் எண்ணிய 'கதே' என்ற சீன தேசத்தையாவது அவன் கண்டதுமில்லை; அவை களுடன் வியாபாரம் நடத்த வேண்டுமென்ற ஆசையை




வஸ்கோ டிகாமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றியதுமில்லை. தான் சென்றடைந்த தேசம் அமெரிக்காவென்னும் புதிய கண்டமென்பதையும் அவன் அப்பொழுது அறிந்திருக்கவில்லை.

## IV. வேறு யாத்திரைகள்


கொலம்பஸ் இரண்டாம் முறை யாத்திரை செய்யப் புறப்படுவதற்கு ஒரு வருடத்துக்கு முன், வேனிஸ் நகரத்திலிருந்து ஓர் இத்தாலிய கடலோடி புறப்பட்டான். இவன் பெயர் ஜோன் கபொட் என்பது. இவன் இங்கி



சந்தா மேறியா—கொலம்பஸின் கப்பல்

லாந்துக்குச் சென்று, அங்கே ஆட்சி செய்த ஏழாவது ஹென்றியைக் கண்டு, கீழைத்தேசத்துக்கு யாத்திரை செய்ய உதவி வேண்டினன். பின்னர் தனது மக்களுடன் பிரிஸ்டல் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு அமெரிக்காவின் கிழக்குக் கரையிலுள்ள பனியுறையும் நாடான லபுர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மகலனின் யாத்திரை மார்க்கம்

டோர் என்னும் தேசத்தை அடைந்தான். ஆனுல் ஆங்கிலேயர் அவனைப் பின்தொடர்ந்து யாத்திரை செல்ல உடனே நினைக்கவில்லை. வெகு காலத்தின் பின்னரே அதில் முனைந்து நின்றூர்கள்.

1500-ம் ஆண்டில் கீழ்நாட்டுக்கென்று புறப்பட்ட கப்ருல் என்னும் போர்த்துக்கீச யாத்திரிகனுடைய கப்பலானது புயலினுலும் கடல் நீரோட்டத்தினுலும் எற்றுண்டு தென் அமெரிக்காவின் ஒரு பாகமாகிய பிரேஸில் கரையை அடைந்தது. இவ்வாறு மேல் கடல் வழியாக ஆசியா செல்ல நினைத்த ஐரோப்பிய யாத்திரிகர்கள், மேற்குத் திசையில் புதிய ஒரு பெருங்கண்டம் பரந்து கிடக்கிறதெனச் சிறிது சிறிதாய் அறிந்தார்கள். அமெரிக்கோ வெஸ்புக்கூயி என்னும் வேருெரு போர்த்துக்கீச யாத்திரிகரும் பிரேஸிலை அடைந்தார். அவருடைய பெயரைக் கொண்டே இப்புதிய கண்டம் அமெரிக்கா என்றழைக்கப் படுகிறது. 1519-ல் மகலன் என்ற ஒரு ஸ்பானியர் தென்மேற்குத் திசையாக மகலன் நீரிணைக்கூடாக அமெரிக்காவின் மேற்குப் பாகத்தை அடைந்தார். பிலிப்பைன் தீவுக்கு மகலன் சென்றதும் அவ்வூர் வாசிகள் அவனைக் கொன்றனர். அவனுடைய கப்பலொன்று உலகத்தைச் சுற்றிக்கொண்டு 'நன்னம்பிக்கை முனை' வழியாக ஸ்பானியா வந்து சேர்ந்தது. முதன்முதல் உலகைச் சுற்றி வந்த கப்பல் இஃதென்றே கூறுப.

## V. அமெரிக்காவில் ஸ்பானியர்

அமெரிக்காவென்னும் புதிய கண்டத்துக்கு ஸ்பானியர் சென்றபொழுது அங்கே அவர்களின் கவனத்தைப் பல விஷயங்கள் கவர்ந்தன. அதன் பரந்த தென்பாகத்தையும் மத்திய பகுதியையும் அவர்கள் சுற்றிப் பார்த்தார்கள். அங்கே மிகப் புராதனமான நாகரிகத்துக் குறைவிடமாயிருந்த மெக்ஸிக்கோ, பீரு என்ற இரு இராச்சியங்களைத் தம்மடிப் படுத்திக்கொண்டனர். மெக்ஸிக்கோவில் அஸ்டெக்ஸ் என்ற சாதியாரும் பீருவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்காஸ் என்ற வகுப்பினரும் ஆட்சிசெலுத்தி வந்தனர். இவர்களை வென்று நாட்டைக் கைப்பற்றிய ஸ்பானிய வீரர்களுள் கோட்டஸ் என்பவனும் பிஸாரோ என்பவனும் சிறந்தவர்கள். கோட்டஸ் மெக்ஸிக்கோவை வென்றான். பிஸாரோ பீருவை அடிப்படுத்தினான். மிகச் சிறிய படையோடு இவர்கள் இவ்வெற்றிகளைப் பெற்றபோதிலும், பெரிய துரோகங்களையும் கொலை பாதகங்களையும் செய்யப் பின்னிற்கவில்லை. ஏராளமான வெள்ளியையுந் தங்கத்தையும் இவர்கள் இங்கே கண்டார்கள். 16-ம் நூற்றாண்டின் மத்தியில் புகழ்பெற்ற பொட்டோஸிபோன்ற பெரிய சுரங்கங்கள் அறுக்கப்பட்டன.

ஆண்டுகள் செல்லச் செல்லத் தென்னமெரிக்காவிலும் மத்திய அமெரிக்காவிலும் புதிய இடங்கள் கைப்பற்றப்பட்டன. தங்கமும் வெள்ளியும் ஆண்டுதோறும் ஸ்பானியாவுக்கு வந்து குவிந்துகொண்டிருந்தன. ஸ்பானியத் திறைசேரியும் இப்புதையலால் நிரம்பிற்று. ஸ்பானியா அரசனே ஐரோப்பாவில் மிகுந்த செல்வனானான். ஆனால் அச்செல்வத்தை அவன் தக்க வழியில் பயன்படுத்தாது வீண் யுத்தங்களில் செலவு செய்தான். ஆங்கிலேயரும் பிரெஞ்சு மக்களும் இக்கப்பல்களை ஆறலைத்துச் சூறையாட முயன்று அதனால் பெரிய நயம் பெற்றார்கள். ஸ்பானிய அரசாட்சிக்குட்பட்ட நெதலந்து பிரசைகள் இரண்டாம் பிலிப்பென்ற ஸ்பானிய மன்னனுக்கு மாறாகக் கிளம்பி ஸ்பானியத் திரவியக் கப்பல்களைக் கொள்ளையடித்து வந்ததுமுண்டு.

இருந்துமென்? பிலிப்பு மன்னனின் ஆதிக்கம் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே வந்தது. 1580-ல் அவ்வேந்தன் போர்த்துக்கல் நாட்டை வெற்றி பெற்றதுமன்றி கீழைத்தேசங்களில் போர்த்துக்கீசருக்குச் சொந்தமாயிருந்த நாடுகளையும் இலங்கையிலவர்கட்குச் சொந்தமாயிருந்த பகுதிகளையும் கைப்பற்றினான். ஆங்கிலேயரும் கீழ்நாட்டு வியாபாரத்தில் பெரிதும் ஊக்கமெடுத்

தனர். ஸ்பானியரது ஆட்சியிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்ட ஒல்லாந்தரும் இவ்வர்த்தகத்தில் இறங்கிவிட்டார்கள். 17-ம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் டச்சுக்காரர் என்று சொல்லப்படும் ஒல்லாந்தர் போர்த்துக்கீசருக்குச் சொந்தமாயிருந்த பல தேசங்களையும், இந்து சமுத்திரத்தில் அவர்கள் கைப்பற்றியிருந்த பல தீவுகளையும், சாவகத் தீவையும் (Java), இலங்கையையும் தமதாக்கினர். இது சமயம், ஆங்கிலேயர் அதிகம் வெற்றி பெறாதபோதிலும், காரியாலயங்கள் என்ற பெயருடன் சில வர்த்தகக் குடியிருப்புகளை மாத்திரம் இந்தியாவின் மேற்குக் கரையில் ஏற்படுத்தினார்கள்.

## VI. யாத்திரைகளின் பயன்

உலக சரித்திரத்தில் இங்கு கூறிவந்த கடல் யாத்திரைகள் மிக முக்கியமானவை. ஐரோப்பியர் சிறிது சிறிதாகத் தத்தம் தேசத்தை விட்டு வேற்றிடங்கட்குப் பரவத் தொடங்கினர். விடா முயற்சியும், அதி சிறப்பு வாய்ந்த அவர்களின் யுத்த முறையும், கடலோடுந் திறமையுமே அவர்களை தற்கால உன்னத நிலைக்குக் கொண்டுவந்தன. வட அமெரிக்காவில் கிழக்குக் கரைகளில் ஆங்கிலேயர் குடியேறினர். அக்குடியிருப்புக்களே பிற்காலத்தில் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களென்றும் கனடாவென்றும் பெரிய ராச்சியங்களாயின. கனடாவில் முதல் முதல் பிராஞ்சிய மக்களே குடியேறினர் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

மத்திய அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் வாழ்ந்து வந்த ஆதிக் குடிகளோடு ஸ்பானிய மக்கள் கலந்து புதிய ராச்சியத்தை உண்டாக்கினர். இவ்விராச்சியம் 19-ம் நூற்றாண்டில் லத்தீன் அமெரிக்க குடியேற்ற நாடுகளென்ற பெயருடன் தனிப்பட்ட சிறு சிறு அரசுகளாக மாறியது. கிழக்கு இந்தியத் தீவுகளிலும் பரந்த இந்திய நாட்டிலும், டச்சுக்காரருடைய ஆட்சிக்கும் ஆங்கிலேயர் ஆட்சிக்கும் அத்திவாரம் இடப்பட்டது. இந்த அத்திவாரமே பிற்காலத்தில் அவர்களுடைய நீண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சிக்கு உறுதுணை புரிந்தது. ஐரோப்பிய நாகரிகம் உலகின் நாலு பக்கங்களிலும் விரைந்து, பரந்து செறியவே அந்நாகரிகத்துக்கு நிலைக்களனாயிருந்த மத்திய தரைக் கடலைச் சார்ந்த நாடுகளுக்குள்ள முதன்மை குன்றியது.

## முக்கியமான ஆண்டுகள்

1488. நன்னம்பிக்கை முனையை டயஸ் கண்டுபிடித்தல்.

1492. கொலம்பஸின் முதற் பிரயாணம்.

1497. வட அமெரிக்காவை கபொட் அடைதல்.

1498. வஸ்கோடிகாமா இந்தியாவுக்கு வருதல்.

1500. கப்ருல் பிறேஸிலைக் கண்டுபிடித்தல்.

1519. மகலனின் பிரயாணம்: உலகைச் சுற்றுதல். மெக்ஸிகோவை ஸ்பானியர் கைப்பற்றல் (கோட்டெஸ்).

1531. பீருவை ஸ்பானியர் கைப்பற்றல் (பிஸாரோ).

1580. போர்த்துக்கலையும் வெளி நாடுகளில் அதற்குச் சொந்தமாயிருந்த பகுதிகளையும் ஸ்பானிய மன்னனான இரண்டாவது பிலிப்பு கைப்பற்றல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் அத்தியாயம்

## கல்வியின் மறுமலர்ச்சியும் புரட்டஸ்தாந்து மதச்சீர்திருத்தமும்

### I. மத்திய காலத்தில் கல்வி நிலை

கி. பி. ஐந்தாவது நூற்றாண்டிலே ஐரோப்பாவில் நிலவிவந்த பழைய ரோம ராச்சியம் மிலேச்ச சாதியாருடைய படையெடுப்பினால் நிலை குலைந்தது. அவ்வாறு நிலை குலையவே தனிப்பட்ட புதிய ராச்சியங்களதிலிருந்து கிளைத்தன. அவற்றுள் பிரான்சும் இங்கிலாந்தும் சிறந்தவை. தற்காலம் ஜெர்மனி என்று வழங்கப்படுந் தேசமும் இத்தாலியும், அக்காலத்தில் 'பரிசுத்த ரோம ராச்சியம்' என்ற பெயருடன் ஒரு குடைக்குக் கீழ் ஜெர்மன் சக்கரவர்த்திகளால் ஆளப்பட்டு வந்தன. பலபட விரிந்த இத்தேசங்களையெல்லாம் ஒன்றுபடுத்தும் முயற்சியில் இச்சக்கரவர்த்திகள் சித்தி பெறாது போகவே நாளடைவில் இத்தேசங்கள் சிறு சிறு இராச்சியங்களாகப் பிரிந்தன. பேரளவில் மட்டும் அவை பரிசுத்த ரோம ராச்சியத்தைச் சேர்ந்தனவாயிருந்தன. ஐரோப்பாவின் நடுப்பகுதியிலும் மேற்குப் பாகங்களிலும் வாழ்ந்த மக்கள் கத்தோலிக்கராய் மாறி ரோமாபுரியிலுள்ள போப்பரசரையே தம் தலைவராய் ஏற்றுக்கொண்டனர்.

ஐரோப்பாவின் மத்திய பகுதிகளிலும் மேற்குப் பகுதிகளிலும் இவ்வாறு நடைபெற, கிழக்கே பழைய ரோம ராச்சியம் மேலும் சில நூற்றாண்டாக நிலை குலையாதிருந்தது. பின்னர், இஸ்லாமியரின் எதிர்ப்பால் நாளுக்கு நாள் வலிகுன்றிப் பலமிழந்தது. கடைசியாக 1453-ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துருக்கியர் அவ்விராச்சியத்தின் தலைநகரான கொன்ஸ்தாந்திநோபிளைக் கைப்பற்றவே ரோம ஆதிக்கமும் வீழ்ந்தது. கிரேக்க, ரோமக் கலைகளையும் நூல்களையும் கற்பதில் கிழக்கு ரோம ராச்சியத்தவர் ஊக்கங் குன்றவில்லை. ஆனால் மேற்குப் பாகத்தில் கல்வியென்னுந் தீபம் அணைந்தது. சில சில இடங்களில் மாத்திரம் மத குருமார் கல்வியை வளர்த்து வந்தனர். நகரங்களில் வசித்த சிலரைத் தவிர மற்றைய குடிகளெல்லாரும் கமஞ் செய்வதிலோ, சேனையில் சேர்ந்து சண்டை செய்வதிலோ ஈடுபட்டிருந்தனர். கிறிஸ்து சமயக் கோட்பாடுகளை அறிவதற்காகவே பிரதானமாக மதகுருமார் லத்தீன் பாஷையைப் பயின்றனர். மேலும் ஐரோப்பிய நாடுகளொவ்வொன்றுந் தங்கள் சொந்தப் பாஷையை விருத்தி செய்தபோதிலும், அவற்றைப் பேசுவதற்கன்றி எழுதுவதற்கு உபயோகிக்கவில்லை.

## II. கல்வியின் மறுமலர்ச்சி

பன்னிரண்டாம் பதின்மூன்றும் நூற்றுண்டுகளில் லத்தீன் கல்விக்குப் பெரிதும் புத்துயிரளிக்கப்பட்டது. சுதேச பாஷைகளிலும் புதிய நூல்கள் சில இயற்றப்பட்டன. பாடசாலைகள் பல நிறுவப்பட்டன. பல்கலைக் கழகங்கள் என்ற முறையில் உயர்தரக் கல்விச்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. கல்வியைக் கற்று அதனையே விருத்தி செய்யக்கூடிய வித்தியா விநோதரான ஒரு வகுப்பினர் தோன்றினர். இவர்கள் ஏற்கெனவே நிலவி வந்த சமயக் குருக்கண்மாருக்கும், படையாட்சி வகுப்பினருக்கும், நிலந்திருத்தியுண்ணும் கமக்காரருக்கும், நகர மாந்தர்க்கும் புறம்பான ஒரு தனி வகுப்பினராய் கல்வி கற்றலையே தொழிலாகக்கொண்டு லத்தீன், கணிதம், சங்கீதம் முதலிய கலைகளைக் கற்றுவந்தனர். வேத சாத்திர அறிவை விருத்திசெய்வதும் சமய சாத்திரங்களை ஆராய்வதுமே இவர்களுடைய கல்வியின் முக்கிய நோக்கமாயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினைந்தாம் நூற்றாண்டில் இத்தாலியின் பெரிய நகரங்களிலெல்லாம் கலைஞர் கிரேக்க மொழியையும் அவற்றிலுள்ள நூல்களையுங் கற்றார்கள். ரோம ராச்சியத்தின் கிழக்குப் பாகத்தைத் துருக்கியர் தாக்கவே பல பண்டிதர் அவ்விடங்களை விட்டு மேற்கு நோக்கிப் புலம் பெயர்ந்தார்கள். அவ்வாறு பெயரும்பொழுது அநேக கிரேக்க நூற்சுவடிகளைத் தம்முடன் எடுத்துச் சென்றனர். பின்னர் புத்தகங்களை அச்சடிக்கும்முறை கண்டுபிடிக்கப் படவே, நீண்ட காலமெடுத்து மிகுந்த சிரமத்தோடு நூல்களைக் கையினால் எழுதிப் படித்து வந்த சனங்களுக்கு அச்சியந்திரம் ஒரு பெரிய துணைபுரிந்தது. ஆயிரக்கணக்கான நூல்கள் அச்சியற்றப்பட்டன. கிரேக்க கல்வியும் ஏனைய கலைகளும் இதனால் முன்னிலும் அதிகமாகப் பயிலப் பட்டு வந்தன.

புராதன கிரேக்க அறிஞர்கள் எதையும் உசாவி அறியும் விசித்திரமான உள்ளப்பான்மையுடையவராயிருந்தனர். அவர்கள் ஒரு பொருளைக் கண்டால் அது எங்கிருந்து வந்தது, எவ்வாறு வந்தது, ஏன் வந்தது என்ற விதமாக வினவி உண்மையறிய அவாக்கொண்டிருந்தனர்.

கிரேக்க பேரறிஞரான அரிஸ்டோட்டில் என்பவருடைய அரிய நூல்கள் 12-ம் நூற்றாண்டிலிருந்தே ஐரோப்பாவின் மேற்குப் பாகங்களில் பயிலப்பட்டன. ஸ்பானியாமீது அராபியர் படையெடுத்தபொழுது, அவர்கள் அவற்றை அவ்விடத்திற்குக் கொண்டு சென்று அரேபிய பாஷையில் மொழிபெயர்த்திருந்தார்கள். நாளடைவில் அந்நூல்கள் லத்தீன் பாஷையிலும் மொழி பெயர்க்கப்பட்டன. ஆனால் தற்போது அவற்றை மூல பாஷையாகிய கிரேக்க மொழியில் அநேகர் படிக்கக்கூடிய வசதி ஏற்படவே பிளேட்டோபோன்ற ஏனைய கிரேக்க அறிஞரின் நூல்களும் பயிலப்பட்டன.

இப்புதுக் கல்வி மலர்ச்சியினால் இத்தாலிய அறிஞரிடையே பெரிய மாற்றங்களுண்டாயின. அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய ஆசிரியர் கருத்துக்களால் கட்டுப்படாது தாமாகவே விஷயங்களை நுணுகி ஆராயத் தொடங்கினர். சமய அறிவை மாத்திரம் பெறும் நோக்கமாய் கல்வி பயின்ற பழைய பண்டிதர்களைப்போல இராமல், இப்புதிய கலைஞர் அறிவை வளர்த்து மெய்ப்பொருளைக் காணும் கருத்துடன் இந்நூல்களைப் பயின்றனர். சுதேச பாஷைகளில் ஏராளமான நூல்கள் இதன் பயனுயெழுந்தன. இவற்றுள் பல சிறந்த நூல்களும் தோன்றின.

## III. நற்கலைகளின் மறுமலர்ச்சி

கிரேக்கரின் இலக்கிய நயங்களை வியந்து பாராட்டி அவற்றைப் பின்பற்றிப் புது இலக்கியஞ் செய்தது போலவே, கிரேக்க ஓவியம், சிற்பம் முதலியவற்றையும் இத்தாலியர் பின்பற்றினர். மத்திய கால மனிதர் பெரிய தேவாலயங்களையும் வானுறவுயர்ந்த கோட்டைகளையும் கட்டினுர்கள். அவை இன்றும் நின்று நிலவிப் பண்டை மக்களின் கைத்திறனைக் காட்டுகின்றன. கூரான தோரணங்களை யுடைத்தாயிருப்பதே இம்மத்திய காலச் சிற்பங்களின் சிறந்த அமிசமாகக் காணப்படுகின்றது. இம்முறையை 'கோதிய' (Gothic) சிற்பமுறையென்று கூறுவர். இலங்கையிலுள்ள பல தேவாலயங்கள் இதே முறையில்தான் கட்டப்பட்டிருக்கின்றன. உதாரணமாக கொழும்பிலுள்ள அர்ச். மைக்கேல் தேவாலயமும் கண்டியிலுள்ள அர்ச். பவுல் தேவாலயமும் இம்முறையில் கட்டப்பட்டிருக்கின்றன. 15-ம் 16-ம் நூற்றுண்டுகளில் விளங்கிய இத்தாலிய சிற்பவேலைகளெல்லாம் கிரேக்க, ரோம சிற்பிகளையே பின்பற்றி எழுந்தன. இச்சிற்பமுறை 'மறுமலர்ச்சி' (Renaissance) முறையென வழங்கப்படும். ரோமாபுரியிலுள்ள அர்ச். பேதுரு தேவாலயமும், லண்டனிலுள்ள அர்ச். *பவுல்

---

*அர்ச். பவுல் தேவாலயம் 17-ம் நூற்றுண்டில்தான் கட்டப்பட்டது. 19-ம் நூற்றுண்டில் ஆரம்பம்வரையில் 'மறுமலர்ச்சி முறை நிலவிவந்தது'. 19-ம் நூற்றுண்டிலே கோதியமுறை மறுபடியும் புனருத்தாரணஞ் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாலயமும், கொழும்பிலுள்ள அர்ச். லூசியா தேவாலயமும், கொழும்பு நகர மண்டபமும் இம் 'மறுமலர்ச்சி' முறையில் தான் அமைந்தன. இவற்றின் தோரண அமைப்பு விருத்தமாயிருக்கும்.

எனினும் சிற்பத்தை விட ஓவியமே இக்காலத்தில் சிறந்து விளங்கியது. இக்காலத்தில் தான் உலகிற் சிறந்த ஓவியராகிய மைக்கேல் ஆஞ்செலோ, றப்பியேல், லியனுடோ டாவின்ஸி ஆகியோர் தோன்றினர். மைக்கேல் ஆஞ்செலோ சிற்பக் கலையிலுஞ் சிறந்து விளங்கினுர். கிறிஸ்து நாதரின் 'கடைசி இராப்போசனம்' என்ற சிறந்த படத்தை வரைந்த லியனுடோ டாவின்ஸி ஏனைய பல கலைகளிலுந் தேர்ந்திருந்தார். இன்று ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமுள்ள கலாபவனங்களிலெல்லாம் இக்காலத்திலிருந்த ஓவியப் பேராசிரியரது படங்களே சிறந்து விளங்குகின்றன.

## IV. புதுக் கல்வி பரவுதல்

இத்தாலியில் தொடங்கிய கல்வியின் மறுமலர்ச்சி விரைவில் மற்ற நாடுகளிலும் பரவியது. ஒல்லாந்து தேசத்தில் ஹொல்பீன், ரூபென்ஸ், வான்டைக் எனப் பெயரிய ஓவிய அறிஞர் தோன்றினர். பிரான்ஸிலும் இங்கிலாந்திலும் கிரேக்க, லத்தீன் பாஷைகள் படிக்கப் பட்டன. சுய பாஷைகளிலும் நூல்கள் எழுதப்பட்டன. புலவருள் தலை சிறந்த நாடக ஆசிரியரான ஷேக்ஸ்பியர் இங்கிலாந்தில் தோன்றினுர். அவர் காலத்திலே வேறு பல சிறந்த ஆங்கிலக் கவிகளும் விளங்கினர். இவ்வாறு கல்வி பரவி வந்தது. பல்கலைக்கழகங்களிலெல்லாம் கிரேக்க, லத்தீன் நூல்கள் பயிலப்பட்டன.

கிரேக்கரின் விஞ்ஞான சாத்திரங்களையும் அவர்களது கலை, இலக்கியம் முதலியவற்றையும் மக்கள் பயின்று புதுப் புது ஆராய்ச்சிகளில் முனைந்து நின்றுர்கள். கோப்பேணிக்கஸ், கலிலேயோ என்னும் வானசாத்திரிகள் தோன்றி, பூமி சூரியனைச் சுற்றி வருகின்றதென்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையைக் கண்டுபிடித்தார்கள். கிரகங்கள் எவ்வாறு சுழல்கின்றன என்பதை அறிந்தார்கள். வானத்தில் இயங்கும் கோள்களும் நட்சத்திரங்களும் மனிதருடைய வாழ்வைப் பாதிக்கும் இயல்புடையன என்ற எண்ணத்துடன் மத்தியகால மக்களால் சோதிடம் பயிலப் பட்டு வந்தது. ஆனால் இக்காலத்தில் சாத்திர ரீதியாக வான மண்டலத்தை ஆராய்ச்சிசெய்து பழைய சோதிடத்துக்குப் பதிலாக வானசாத்திரத்தை ஒரு கலையாய்ப் பயின்றனர். கணிதம், ரசாயனமென்ற சாத்திரங்கள் தழைத்தன. அடுத்த இரண்டொரு நூற்றாண்டில் வைத்தியமும் சாத்திரமுறையில் ஆராயப்பட்டது. பூமி சாத்திரக் கலையானது சாத்திர ரீதியாக வளர்ச்சியுற்று பெரு மாற்றங்களை உண்டாக்கியது என்பதை சென்ற அத்தியாயத்திலேயே கூறினும்.

## V. புரட்டஸ்தாந்து மதச்சீர்திருத்தம்

மத்திய காலத்தில் ஐரோப்பாவெங்கும் கத்தோலிக்க சமயமே பரவியிருந்தது. ரோம ராச்சியத்துள் வந்து சொரிந்துகொண்டிருந்த அந்நிய சாதியாரை நாகரிகப் படுத்தி மனுத்தன்மையுள்ளவராக்கியது போப்பரசரைத் தலைவராகக்கொண்ட கத்தோலிக்க சமயமே. அச்சமய குருமாரிடையே பல சிறந்த அர்ச்சிய சிஷ்டர் களும் புலமையுடையோருந்தோன்றினர். கல்வியென்னுந் தீபத்தை அவர்களே அணையவிடாது காப்பாற்றி வந்தனர். ஆனால் 15-ம் நூற்றாண்டில் கத்தோலிக்க திருச்சபை ஓரளவுக்குச் சீர்குலைந்தது. குருமாரும், சன்னியாசிகளும், சில போப்பரசர்களும் வாழ்ந்த வாழ்க்கையைப் பார்த்துச் சமயாபிமானிகள் நடுக்கமுற்றனர். இக்காலத்திருந்த அறிஞருள் சிறந்தவரான பிளாண்டேஸ் தேசத்து இரூஸ்முஸ் என்பவர் இவர்களின் சீர்கேட்டைக் கண்டித்து பல நூல்கள் எழுதினர். சனங்கள் அவற்றை வாசித்தார்கள்.

இப்புதுக் கல்வியின் பயனாக ஜெர்மனியர் விவிலிய நூல்களை எபிரேய, கிரேக்கமாகிய மூல பாஷைகளில் படித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார்கள். சமய விஷயமாக ஒவ்வொருவரும் தனித்தனி எண்ணத் தொடங்கினர். சனங்கள் உண்மை மார்க்கத்திலிருந்து விலகுகிறார்களென வைதீகக் கத்தோலிக்கர் எண்ணிப் பயமடைந்தார்கள். கத்தோலிக்க திருச்சபையின் அதிகாரத்தை மத்திய காலத்தில் வைகிளிப் என்னும் ஆங்கிலேயரும் ஹிஸ் என்ற பொஹீமியரும் எதிர்த்துக் கிளர்ச்சி செய்ததுண்டு; ஆனால் அவர்களுடைய முயற்சி நிலைத்த பயனைத் தரவில்லை.


கல்வின்

பதினாறும் நூற்றாண்டினாரம்பத்தில் ஜெர்மனியில் மாட்டின் லூதர் என்ற ஒரு சன்னியாசி இருந்தார். இவர் கத்தோலிக்க மதக் கொள்கையை மிகவுங் கண்டித்ததினால் திருச்சபை அதிகாரிகளின் தீராத கோபத்துக்காளாயினர். வைதீகக் கொள்கையுடையார் இவரைப் போலிக் கொள்கைக்காரன் என்றும் சமயத்துரோகி என்றும் இழித்துரைத்தார்கள். ஜெர்மனியர் பலர் இவரைப் பின்பற்றினர். சிலர் திருச்சபை அதிகாரிகளின் சீர்கேடுகளைத் திருத்தும் நோக்கமாகவும், சிலர் மதகண்டனஞ் செய்வதை ஒரு விநோதமாகக் கொண்டும், இவரை ஆதரித்தார்கள். வேறு சிலர் குருமாரிடத்திலுள்ள செல்வத்தை அபகரித்து விடலாமென்ற நோக்கங்கொண்டும் இவரை ஆதரித்தார்கள். லூதரைப் பின்பற்றினவர்கள் புரட்டஸ்தாந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அதாவது, பழைய மதத்தை எதிர்த்தோர்) என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் கத்தோலிக்க மதத்திலிருந்தும் முற்றாக விலகிக்கொண்டார்கள்.

சுவிற்சலாந்தில் சுவிங்கிலி என்பவரும் பிரான்ஸில் கல்வின் என்பவரும் லூதரைப் பின்பற்றினர். மதச் சண்டைகள் கிளம்பி ஐரோப்பாவைச் சின்னாபின்னப்படுத்தின. அதனால் உள்நாட்டுக் கலகங்களுமேற்பட்டன. இங்கிலாந்தில் எட்டாம் ஹென்றி என்பவர் போப்பரசருடன் கோபித்துக்கொண்டு, கத்தோலிக்க சமயத்திலிருந்து விலகினார். இங்கிலாந்திலுள்ள கத்தோலிக்க மடங்களிலிருந்த செல்வமெல்லாவற்றையுங் கைப்பற்றினார். இந்நூற்றாண்டின் மத்தியில் கத்தோலிக்க திருச்சபை தனது சீர்கேடுகளை நிவர்த்தி செய்ய முற்பட்டது. ரெண்ட் என்னுமிடத்தில் பெரிய கத்தோலிக்க மகாநாடொன்று கூடியது. கூடி மதவிஷயமாகப் பல சீர்திருத்தங்களைச் செய்தது. கத்தோலிக்க மதத்தை விட்டுப் பிரிந்த புரட்டஸ்தாந்தரை மறுபடியும் அம்மதத்தில் சேர்த்துக்கொள்ளவும், கிறிஸ்தவரல்லாதவரிடையே கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பவும் ஒரு சங்கம் அமைக்கப்பட்டது. இதை ஏற்படுத்தியவர் ஒரு ஸ்பானியப் பெரியாரான இக்னேஸியஸ் லோயலா என்பவராகும்.



இக்னேஸியஸ் லோயலா
(அர்ச். இஞ்ஞாசியார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சங்கம் யேசுசபையென வழங்கப்பட்டது. இதன் அங்கத்தவர் யேசுசபைக் குருமார் (ஜெஸூயிட்ஸ்) என அழைக்கப்பட்டனர்.

கத்தோலிக்கர் எத்துணை முயற்சி செய்தபோதிலும் நோர்வே, சுவீடன், டென்மார்க், இங்கிலாந்து, ஸ்கொத்லாந்து, வட ஐரோப்பா முதலிய தேசங்களிலெல்லாம் புரட்டஸ்தாந்து சமயமே பரவிற்று. பிரான்ஸிலும், நெதலந்திலும், ஜெர்மனியிலும் சமயச் சண்டைகள் நாட்டைப் பல வருடங்களாகக் கலக்கின. இவற்றின் பயனாக ஜெர்மனி இரண்டாகப் பிரிந்தது. நெதலந்து வாசிகள் தமது ஸ்பானிய அரசனுக்கெதிராக எழுந்தனர். அதன் வட பகுதியான ஐக்கிய மாகாணங்கள் தனிப்பட்ட நாடாகப் பிரிந்து புரட்டஸ்தாந்து சமயத்தையே அனுசரித்தன. பிரான்ஸிலுள்ள புரட்டஸ்தாந்தர் சண்டை செய்து சமய சுதந்திரம் பெற்றனர்.

இதுவரை ஒரு சமயத்தின் கீழ் ஒன்றுபட்டிருந்த மேற்கு ஐரோப்பிய நாடுகள் சமயச் சச்சரவு காரணமாகத் தனித்தனி பிரிந்தன. தேசீய இன* உணர்ச்சி உண்டாகிற்று. இதனாலும் இப்பிரிவு வளரவே ஒவ்வொரு தேசமுந் தொட்டதற்கெல்லாம் மற்றத் தேசத்துடன் சண்டை செய்து கலகம் விளைத்தது.

---

*குறித்த ஒரு பகுதியில் அநேகமாக ஒரே பாஷையையே பேசி வாழும் ஒரே சாதியினர் தம்மைத் தாமே ஆட்சி செய்து கொண்டு, பிறரின் ஆதிக்கமில்லாமல் சுதந்திரமாய் வாழ விரும்பும் எண்ணமே தேசீயம் எனப்படும். இதனால் பல நன்மைகளுந் தீமைகளும் விளைந்திருக்கின்றன. தேசீயத்துக்குப் பாஷை ஒற்றுமை அத்தியாவசியமெனக் கருதப்பட்டு வரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கியமான ஆண்டுகள்

*1453.* துருக்கியர் கொன்ஸ்தாந்திநோப்பிளைக் கைப்பற்றல்.

*1450.* (சுமார்) ஐரோப்பாவில் அச்சடிக்கும் முறை ஆரம்பிக்கப்பட்டது.

*1452-1519.* லியனுடோ டாவின்ஸி.

*1517.* பாவ மன்னிப்பை லூதர் கண்டித்தல்.

*1529-1536.* இங்கிலாந்தில் மதசீர்திருத்தகாலப் பாராளுமன்றம்.

*1536-1554.* ஜெனீவாவில் கல்வின்.

*1540.* யேசுசபை ஸ்தாபிக்கப்படல்.

*1555.* லூதரை பின்பற்றிஞேருக்கும் கத்தோலிக்கருக்குமிடையில் ஒக்ஸ்பர்க்கில் உடன்படிக்கை செய்யப்பட்டது.

*1545-1563.* ரெண்டில் கூடிய கத்தோலிக்க மகாநாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றும் அத்தியாயம்

## பிரான்ஸும் ஸ்பானியாவும்

### I. புதிய ராச்சியங்களின் பிறப்பு

மேற்கு ஐரோப்பாவில் ரோம ராச்சியம் வீழ்ச்சியுற்றதும் ஒன்றுயிருந்த ஐரோப்பிய நாடுகள் தனித் தனித் தேசங்களாகப் பிரிந்தன. ஒவ்வொரு தேசத்தையும் ஒவ்வொரு அரசன் ஆண்டு வந்தான். சனங்கள் வெளிநாடுகளுக்குப் பிரயாணஞ் செய்து விசாலமான அறிவைப் பெருமல் குறுகிய மனப்பான்மையுடன் தத்தந் தேசத்தில் அடங்கியிருந்தார்கள். சிலுவை யுத்தங் காரணமாகவும், தல யாத்திரை காரணமாகவும், எதிரிகளுடன் சண்டை செய்யுங் காரணமாகவும், வெளிநாட்டுக்குப் பிரயாணஞ் செய்த பிரசைகளன்றி மற்றையோர் பிறநாடுகளைப்பற்றி அறிவற்றவர்களாய் கிணற்றுத் தவளையாகவே வாழ்ந்துவந்தனர். அவர்களுக்கு விரிந்த எண்ணமென்பதே கிடையாது. தாங்கள் ஒரு ராச்சியத்தின் ஆட்சிக்குட்பட்டவர், விரிந்த ஒரு சாதியினர் என்ற எண்ணமின்றித் தத்தங் குழுவுக்குரிய அலுவல்களை மாத்திரம் கவனித்துக்கொண்டிருந்தார்கள். நிலம் படைத்த பிரபுக்கள் தமது வாரக் குடிகளைப்பற்றிய சிந்தனை மட்டுமுடையராயிருந்தனர். நிலந்திருத்தி வாழும் குடிகள் தமது எசமானரோடு மட்டும் பழகி வந்தார்கள். வியாபாரிகளுந் தொழிலாளிகளும் தம்மூரிலு மயற் பட்டினங்களிலுமுள்ள தொழிற் கூட்டத்தவரோடு மாத்திரம் தொடர்பு வைத்திருந்தனர். குருமார் தங்கோவிற்பற்றைச் சேர்ந்தவர்களில் மாத்திரம் கவனஞ் செலுத்தினர். சில வேளைகளில் அவர்கள் கத்தோலிக்க திருச்சபையென்ற பெரிய ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாபனத்தின் அங்கத்தவரென்ற விரிவான எண்ணங் கொள்வதுமுண்டு.

நாளடைவில் வியாபார விருத்தியினுலும், தேசங் களிடையே மூண்ட யுத்தத்தினுலும், ஒவ்வொரு தேசச் சனங்களும், சாதி அபிமானமும், தேசாபிமானமுங் கொண்டு தேசீயஇன உணர்ச்சியைப் பெரிதும் வளர்த்து வந்தனர். இங்கிலாந்தோடு பிரான்ஸுக்கும் ஸ்கொத் லாந்துக்கும் ஏற்பட்ட யுத்தங் காரணமாக இத்தகைய தேசீயஇன உணர்ச்சி அந்நாடுகளில் தோன்றியது. இ[illegible] ஞல் ஒரு தேசத்தவர் மற்றத் தேசத்தவரைத் தமது சத்துருக்களாகவே மதித்தனர். ஆஞல் இம்மாதிரியான தேசீயஇன உணர்ச்சி ஜெர்மனியிலும் இத்தாலியிலு மிருக்கவில்லை. சக்சனி, பவேரியாபோன்ற ஜெர்மன் சம[illegible]ானங்கள் ஏனைய சமஸ்தானங்களோடு கலகம் வி[illegible]தன. வெனிஸ், புளோரான்ஸ், ஜெனீவாபோன்ற [illegible] இத்தாலிய பட்டினங்கள் இதர பட்டினங்களுடன் [illegible] விட்டன. ஆஞல் அரசர்கள் வலியவராயிருக்குங் [illegible]ளில், தம்மாட்சிக்குட்பட்ட பல பகுதிகளையும் [illegible]ப்படுத்தவே முயன்று வந்தார்கள்.

## II. ஸ்பானியாவின் எழுச்சி

எட்டாம் நூற்ருண்டில் ஆபிரிக்காவிலிருந்து சென்ற முஸ்லிம்கள் ஸ்பானியாமீது படையெடுத்து அத் தேசத்தின் பெரும்பகுதியைக் கைப்பற்றினர். ஆஞல் அங்கே சிறிய பல கிறீஸ்த ராச்சியங்கள் முளைத்தெழுந்து முஸ்லிம்களுடன் ஓயாமல் சண்டையிட்டதுமன்றித் தம்முள் தாமே கலகம் விளைத்தும் வந்தன. முஸ்லிம்கள் ஸ்பானியாவில் அதிஉன்னதமான ஒரு நாகரிகத்தை நிலைநாட்டினர். நாளடைவில் போர்த்துக்கல், காஸ்டீல், அரகன் என்ற இராச்சியங்கள் அவர்களைத் தெற்கே கலைத்தன. 1479-ல் அரகன் ராச்சியத்தரசஞன பேர் டினன்ட், காஸ்டீல் ராச்சியத்தரசியான இஸபெல்லா என்ற மாதை மணந்தான். இவர்களிருவருஞ் சேர்ந்து 1492-ல் முஸ்லிம்களுக்குச் சொந்தமாய் மிஞ்சியிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரானடா என்ற பகுதியையும் கைப்பற்றவே, ஐபீரியக் குடாநாட்டில் போர்த்துக்கலைத் தவிர்ந்த மற்றப் பகுதிகளெல்லாம் ஸ்பானிய ராச்சியத்தின் கீழடங்கின. தவிர, இத்தாலியின் தென் பாகத்திலுள்ள நேபிள்ஸ் ராச்சியமும் சார்டினியா, சிசிலி என்ற தீவுகளும் பேர்டினன்ட் ஆளுகைக்குக் கீழ் இருந்தன. பேர்டினன்டின் மகனான பிலிப்பு என்பவன் விவாக சம்பந்தத்தின் பயனாக நெதலாந்தையும் பெற்றான். பேர்டினன்டின் பேரப்பிள்ளையான சாள்ஸ் என்பவனுக்கு அவனுடைய தாயின் தந்தையான மாக்ஸ்மிலியனுடைய குடும்பச் சொத்துக்கள் ஜெர்மனியில் வழங்கப்பட்டன. 1519-ம் ஆண்டில் மாக்ஸ்மிலியனின் பின் பரிசுத்த ரோம சக்கரவர்த்தியாக ஆட்சி செய்வதற்கு சாள்ஸ் தெரிவு செய்யப்பட்டான். எனவே, சாள்ஸ் மன்னன் அரசுகட்டிலேறியதும் பல தேசங்களையுள்ளடக்கிய பெரிய ஏகாதிபத்தியத்துக்குத் தலைவனானான். மேலும் புதிய உலகம் என்று கூறப்படும் அமெரிக்காவில் ஸ்பானியர் வென்ற நாடுகட்கும் இவனே மன்னனானான்.



இரண்டாம் பிலிப்பு

இவ்வாறு சாள்ஸ் மிகுந்த செல்வமுஞ், சீரும், வல்லமையும் பெற்று விளங்கினான். ஆனால் அவனுடைய நாடுகள் பல திக்கிலுஞ் சிதறிக்கிடந்தபடியால் அவற்றை ஒன்று சேர்த்து ஸ்திரப்படுத்துவதற்கு அவனால் முடியவில்லை. 1555-ல் அவனது மகனான இரண்டாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலிப்பு என்பவன் சிங்காசனமேறினன். ஜெர்மனியிலுள்ள குடும்பச் (ஹப்ஸ்பேர்க்) சொத்துக்கள் இவனுக்குக் கிடைக்கவில்லை. அவை ஹப்ஸ்பேர்க் வம்சத்தைச் சேர்ந்த வேறு அரசர்வசம் சென்றன. அவ்வாறே பரிசுத்த ரோம ராச்சியத்தின் கீழ்ப்பட்ட மற்ற இராச்சியங்களும் மாறின. இங்கிலாந்தில் அரசுசெலுத்திய எட்டாவது ஹென்றியின் மகளை விவாகஞ் செய்ததால் சிறிது காலம் இவன் இங்கிலாந்துக்கும் அரசனுனன். 1580-ல் போர்த்துக்கலைக் கைப்பற்றியதால் அதுவும், ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும், அதன் ஆளுகைக்குட்பட்டிருந்த தேசங்களும் இவன் கையில் சிக்கின.

இவ்வாறு செல்வாக்குற்ற சாள்ஸ், இரண்டாம் பிலிப்பு என்னும் இவ்விரு அரசர்களையுங் கண்டு ஐரோப்பிய வேந்தரெல்லாம் நடுங்கினர். பிரதானமாக பிரான்ஸ் மிகப்பயமுற்றது. 16-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பிரான்ஸும் ஸ்பானியாவும் இத்தாலியிலுள்ள சில நாடுகளைக் கைப்பற்றுவதற்காக ஓயாமல் சண்டையிட்டுக் கொண்டேயிருந்தன. இச்சண்டைகளால் இத்தாலிக்குப் பெரும் நட்டமுண்டானது. இந்த யுத்தம் 17-ம் நூற்றுண்டின் இடைக்காலம்வரை ஓய்வின்றி நிகழ வேண்டியதாயிற்று.

## III. பிரான்ஸின் எழுச்சி

மத்திய காலத்தின் ஆரம்பத்தில் பிரான்ஸ் ஒரு ராச்சியமாக விளங்கவில்லை. பேரளவில் அரசன் என்ற நாமத்தைப் பூண்டுகொண்டு மன்னர்கள் ஆட்சி செய்து வந்தனர். மானியமுறைப் பிரபுக்கள் (Feudal Lords) என்றழைக்கப்படும் நிலம்படைத்த பெரிய பிரபுக்கள் குறுநில மன்னர்போல் நாட்டின் ஒவ்வொரு பகுதியைத் தம்மாணையில் வைத்துக்கொண்டு அரசனுக்குக் கீழ்ப்படிந்தோர்போல் நடந்து வந்தனர். ஆனல் அரசனிடமோ ஆதிக்கம் இருக்கவில்லை. இக்குறுநில வேந்தர் தாம் நினைத்தவாறு தமது ஜமீன்களின் அலுவல்களை நடத்தினர்கள். அரசனுடன் போரும் புரிந்தனர். இருந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனையே தமது வேந்தனெனவும் கூறிவந்தனர். தாங்கள் பிரெஞ்சுக்காரர் என்ற தேசீய உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படவில்லை. ஆனால் பிரெஞ்சு அரசர்கள் நாளடைவில் தமது செல்வாக்கைப் பெருக்கிக்கொண்டார்கள். சலகம் விளைத்த குறுநில மன்னரின் பலம் வீழ்ச்சியுற்றது. 14-ம் 15-ம் நூற்றுண்டுகளில் பிரான்ஸ்மீது இங்கிலாந்து படையெடுத்ததனுல் பெரிய அழிவு ஏற்பட்டது. 15-ம் நூற்றுண்டின் இறுதியில் பிரெஞ்சு அரசர் ஆங்கிலேயரைத் தம் தேசத்தை விட்டுத் துரத்தி குறுநில மன்னரின் செருக்கடக்கி அந்நாட்டை ஒரு குடைக்கீழ் ஆண்டனர். இவ்வாறு பிரான்ஸ் ஒரு இராச்சியமாகக் கிளம்பியது.

1494-ல் எட்டாவது சாள்ஸ் என்ற பிரெஞ்சு மன்னன் இத்தாலிமீது படையெடுத்து அதன் மூலம் ஸ்பானியாவைப் போருக்கழைத்தான். இரு தேசங்களிடையிலும் போர் மூண்டது. தற்கால யுத்தக் கருவிகளும் துப்பாக்கி முதலியனவும் இப்போரில்தான் முதன் முதல் கையாளப்பட்டன. நிலையான ஒரு யுத்தப்படையை அரசாங்கச் செலவில் நிறுவவேண்டுமென்பதன் அவசியத்தை அரசர்கள் உணர்ந்தார்கள். இதனுல் யுத்த தளவாடச் செலவுகள் உயர்ந்தன. சனங்கள்மீது வரிப்பழு அதிகமாயிற்று. ஆனுல் இப்போரினுல் ஒருவருக்கும் பயன் உண்டாகவில்லை.

## IV. சமயச் சண்டைகள்

பதினுறும் நூற்றுண்டின் ஆரம்பந் தொடக்கம் 17-ம் நூற்றுண்டின் இடைக்காலம்வரை கத்தோலிக்கருக்கும் புரட்டஸ்தாந்தருக்குமிடையில் நடைபெற்ற சமயச் சண்டைகளால் ஐரோப்பாக் கண்டம் சின்னுபின்னமாகப் பிளவுபட்டது. இச்சண்டைகள் முதல் முதல் ஜெர்மனியில் உண்டாயின. லூதர் என்ற புரட்டஸ்தாந்து மத சீர்திருத்தக்காரரைப் பின்பற்றிய ஜெர்மன் சமஸ்தானங்கள் சில, கத்தோலிக்க அரசரையும் சக்கரவர்த்தியையும் எதிர்த்துப் போர் நடத்தின. இதன் பயனுக 1555-ல் லூதரின் சமயத்தைப் பின்பற்றச் சுதந்திரமளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸில் கல்வின் என்ற மதசீர்திருத்தக்காரரைப் பலர் பின்பற்றினர். இவர்கட்கு 'ஹியூஜனட்ஸ்' (Huguenots) என்று பெயர். பல வர்த்தகர்களும் தொழிலாளிகளும் சில பிரபுக்களும் இம்மதத்தில் சேர்ந்திருந்தார்கள். பிரெஞ்சு அரச குடும்பத்தைச் சேர்ந்த நவார் நாட்டு ஹென்றி என்பவனும் இம்மார்க்கத்தையே தழுவினுன். 1572-ல் பாரிஸ் நகரத்தில் பெருந்தொகையான 'ஹியூஜனட்ஸ்' கொலே செய்யப்பட்டார்கள். ஹென்றி ஒருவாறு தப்பி ஓடிப் பெரும்படை திரட்டி வந்தான். முடிவில் சிங்காசனத்தையும் கைப்பற்றினுன். ஆனுல் அரசுரிமை ஏற்றுக்கொள்வதற்கு அவன் கத்தோலிக்கனுய் வரவேண்டியதாயிற்று. எனினும், ஹியூஜனட்ஸுக்கு மத விடுதலே யளித்தான். இதை அவர்கள் ஒரு நூற்ருண்டாக அனுபவித்து வந்தார்கள்.

ஜெர்மனியில் 1618-ல் மறுபடியும் குழப்பம் உண்டானது. பொஹீமியா என்ற அயல் நாட்டில் சில புரட்டஸ்தாந்தியர் மூன்று கத்தோலிக்கரை ஒரு ஜன்னல் வழியாக வெளியே எறிந்தார்கள். இது காரணமாக மூண்ட போர் முப்பது வருடமாக மிக மும்முரமாய் நடைபெற்றது. ஜெர்மனியர் இப்போரில் பெருஞ் சேதமடைந்தார்கள். அவர்களது குடிசனத்தொகையில் மூன்றில் இரு பகுதி அழிந்தது. கத்தோலிக்கர் சார்பாக ஸ்பானியா தலேயிட்டது. புரட்டஸ்தாந்தருக்காக முதல் டென்மார்க்கும் பின்னர் சுவீடனும் தலே யிட்டன. சுவீடன் தேசத்தரசனுன கஸ்தாபஸ் அடோல்பஸ் என்னும் ஒப்பற்ற யுத்த வீரன் தனது சிறந்த குதிரைப் படையின் வலிமையால் அநேக யுத்தங்களே வென்ருன். பிரான்ஸ் பெரும்பாலும் கத்தோலிக்க மதத்தையே சார்ந்ததாயிருந்தபோதிலும் தனது எதிரியான ஸ்பானியாவை வீழ்த்தும் நோக்கத்தோடு புரட்டஸ்தாந்தர் சார்பாக இக்கொடும் போரில் தலேயிட்டது. 1659 வரையில் பிரான்ஸ் பூரணமான வெற்றியடைந்தது. இப்போரின் பயனுக 1648-ல் ஜெர்மனியிலுள்ள கல்வின் கட்சியினர், லூதரைச் சார்ந்த புரட்டஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாந்தர் எந்த உரிமைகளைப் பெற்றிருந்தார்களோ அதே உரிமைகளைப் பெற்றூர்கள். ஜெர்மன் சக்கரவர்த்தியின் செல்வாக்கும் பெரிதும் குறைக்கப்பட்டது.

## V. ஸ்பானியாவின் வீழ்ச்சி


இரண்டாவது பிலிப்பு மிக முயற்சியுடையவனுயிருந்தபோதிலும் அவன் அதிகம் சித்தியடையவில்லை. தன்னுடைய வல்லமையில் அளவிறந்த நம்பிக்கையும், தனது மந்திரிகளிடத்து அவநம்பிக்கையுங் கொண்டு இருந்தபடியால் அவனுடைய பெரிய திட்டங்களொன்றும் நயம்படவில்லை. கத்தோலிக்க சமயத்தில் அவனுக்குப் பெரிய அபிமானமிருந்தது. அதனுல் ஐரோப்பா முழுவதிலும் அச்சமயத்தையே பரப்பவேண்டியது தனது முக்கிய கடமையெனக் கொண்டான். எனவே, நெதலந்திலுள்ள அவனது சில பிரசைகள் கல்வினுடைய மதத்தைப் பின்பற்றியபொழுது அவர்களை அடக்குவதற்கு முயன்ருன். இத்தருணத்தில் ஆளும் அரசனை மீறுவதையே பழக்கமாகக்கொண்டிருந்த நெதலந்து வாசிகள் குழப்பத்தை உண்டாக்கினர். புகழ்பெற்ற ' ஒரேஞ்சு ' வமிசத்தைச் சேர்ந்த மௌனி வில்லியம் என்ற பெயர் வாய்ந்த ஒரு பிரபு குழப்பக்காரருக்குத் தலைவனுனன். பிலிப்பினுடைய சேனைகள் அளவுக்கடங்கா அட்டூழியங்



மௌனி வில்லியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைச் செய்தன. ஐரோப்பாவில் மிகச் சிறந்த நகரமாய்த் திகழ்ந்த அன்ட்வேப் என்னுஞ் செல்வங்கொழித்த பட்டினத்தைக் கொள்ளை அடித்தன. வில்லியம் தனது சேனையைக் காப்பாற்றுவதற்காக கடல் அணைகளைத் திறந்து வெள்ளத்தை உள்ளே வரவிட்டான். நெதலந்து கடல் மட்டத்துக்குக் கீழே உள்ள பூமி என்பதையும், அது கடல் அணைகளால் காப்பாற்றப்பட்டிருக்கிறதென்பதையும்



ஓர் ஸ்பானிய யுத்தக் கப்பல்

நாம் அறிவோம். ஈற்றில் வில்லியம் ஒரு சதிகாரனுல் கொல்லப்பட்டான். ஆனுல் அவனுடைய கூட்டாளிகள் போரைத் தொடர்ந்து நடத்தி, புரட்டஸ்தாந்தர், மலிந்த வட பகுதியை சுதந்தர நாடாக்கி ஐக்கிய மாகாணங்கள் என்ற பெயருடன் ஒரு குடியாட்சியை நிறுவினர். பிலிப்பு போர்த்துக்கலைக் கைப்பற்றியபொழுது அவனுடைய ஆட்சிக்குக் கீழ் வந்த இலங்கையையும் இதர நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் இந்தப் போரின் பயனாக இம்மாகாண வாசிகளான ஒல்லாந்தர் தம்வசமாக்கினர்.

பிரான்ஸில் நடைபெற்ற சமயச் சண்டைகளில் தலையிட்டதினாலும், நெதலந்தில் நடத்திய இந்தப் போரினாலும் ஸ்பானியா ஏராளமான பொருளையும் சேனையையும் இழந்தது. 1588-ல் பிலிப்பு மன்னன் இங்கிலாந்துக்கு எதிராக அனுப்பிய 'ஆமடா' என்னும் கடற்படை ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்டது. இதனாலும் ஸ்பானியா பலமிழந்தது. மேலும், அமெரிக்காவிலிருந்து ஸ்பானியாவுக்குக் கொண்டுவரப்பட்ட திரவியம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வந்தது. வந்த சிறிதையும், பிரெஞ்சுக் கப்பல்களும், ஆங்கிலேயக் கப்பல்களும், ஒல்லாந்துக் கப்பல்களும் வழிமறித்துச் சூறையாடின. விவசாயம் வீழ்ச்சியுற்றது. ஸ்பானியக் கைத்தொழிலுக்கும் வர்த்தகத்துக்கும் அரணாயிருந்த முஸ்லிம்களைப் பிலிப்பு மன்னனுக்குப் பின்னாண்ட அரசன் நாட்டிலிருந்து கலைத்துவிட்டான். அதனால் கைத்தொழில் சிதைவுற்றது. அன்றியும் தனக்கு ஒருவித பயனுமில்லாமல் 17-ம் நூற்றாண்டில் நிகழ்ந்த சமயச் சண்டைகளில் ஸ்பானியா தலையிட்டதினால் அதனுடைய செல்வமெல்லாம் அழிந்துபோயிற்று.

ஆனால் ஸ்பானியர் புது நாடுகளைக் கண்டுபிடிப்பதிலும், புதிய குடியேற்ற நாடுகளை ஸ்தாபிப்பதிலும் சிறந்த முயற்சி செய்திருக்கின்றனர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கலைவாழ்விலும் அவர்கள் மேல் நிலையடைந்திருந்தனர். கல்வியை வளர்த்தார்கள்; சிறந்த காவியங்களை எழுதினர். முதற்றரமான ஓவியங்களை வரைந்தனர். உலக சரித்திரத்திலேயே முற்பட்ட ஓவியரான வெலாஸ்கு, ஆஸ்மூரில்லோ ஆகியோர் 17-ம் நூற்றாண்டில் திகழ்ந்த ஸ்பானியரே. அநேக சர்வ கலாசாலைகள் நாடெங்கும் ஸ்தாபிக்கப்பட்டன. சிறந்த நூல்கள் வரையப்பட்டன. ஸேர்வான்ரஸ் என்ற பிரபல ஆசிரியரால் இக்காலத்தில் எழுதப்பட்ட 'டொன் குவிக்சொட்' என்னும் நூலன்றோ இன்றும் உலகத்தை மகிழ்வித்து வருகின்றது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கியமான ஆண்டுகள்

*1492.* பெர்டினண்டும் இஸபெல்லாவும் முஸ்லிம்களிடமிருந்து கிரானடாவைக் கைப்பற்றல்.

*1519.* ஐந்தாவது சாள்ஸ் பரிசுத்த ரோம ஏகாதிபத்தியத்தின் சக்கரவர்த்தியாகத் தேர்ந்தெடுக்கப்படல்.

*1555.* இரண்டாவது பிலிப்பு ஸ்பானியா அரசனுதல்.

*1588.* ஸ்பானிய ஆமடா என்ற கடற்படையை ஆங்கிலேயர் தோற்கடித்தல்.

*1598.* இரண்டாம் பிலிப்புவின் மரணம்.

*1618-1648.* ஜெர்மனியில் முப்பதாண்டு யுத்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காம் அத்தியாயம்

## பதினேழாம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் நிலைமை

### 1. மத்திய வகுப்பாரின் தோற்றம்

பதினலாம் நூற்றாண்டு தொடக்கம் ஐரோப்பிய சமுதாயத்தில் பணக்காரர் என ஒரு புதிய வகுப்பினர் தோன்றி 17-ம் நூற்றாண்டளவில் செல்வாக்குற்றனர். இவர்கள் முக்கியமாக பெரிய வியாபாரிகளாக இருந்தார்கள். இவர்களிற் சிலர் இங்கிலாந்தில் நாளடைவில் பிரபுக்கள் வகுப்பில்கூட இடம் பெற்றனர். மத்திய காலத்தில் நகர மாந்தர் ஒவ்வோர் தொழில் பற்றிய குழுவினராய்த் தத்தமக்குரிய வெவ்வேறு தொழிற் சங்கங்களில் சேர்ந்திருந்தனர். உதாரணமாக, ஒரு நகரில் பொன் வேலைசெய்யுந் தட்டார் ஒரு குழுவினராகவும், இறைச்சி விற்குந் தொழில் செய்வோர் இன்னொரு குழுவினராகவும் சேர்ந்திருந்தார்கள். இத்தாலியிலுள்ள பெரிய பட்டினங்களில் பொற்கொல்லராகிய தட்டாரும் புடைவை வியாபாரிகளும் பெரிய செல்வந்தரானார்கள். இங்கிலாந்தில் முதல் கம்பளி வியாபாரிகளும் பின்னர் சீலை வியாபாரிகளும் பணக்காரராயினர். இவ்வாறு தேசங்களிடையே நடைபெற்ற வியாபார வளர்ச்சியினுல் பணம் பெருகிற்று. வியாபாரிகள் குபேர சம்பத்துடையவர்களானார்கள். மற்ற வியாபாரிகளுக்கும் பணங்கொடுத்து லேவாதேவி செய்தார்கள். சிலர் பெருந்தொகையான தொழிலாளிகளைத் தங்கீழமர்த்தி வேலை செய்வித்து முதலாளிகளானார்கள். இதனுல் தொழிற்குழுவை நீங்கி இவர்கள் வேருேரு வகுப்பினராகச் சிறிது சிறிதாய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறினர். போர் செய்யுமரசர்க்கும் யுத்தத்தை நடத்தப் பணம் கடன் கொடுத்தார்கள். வெளி நாடுகளில் வியாபாரம் நடத்தும் வர்த்தகர்களுக்கு நீண்ட பிரயாணங்களைச் செய்வதற்கான செலவுகளைக் கொடுத்தார்கள். இவ்வாறு இவ்வர்த்தக முதலாளிகள் நிலம் படைத்த தனவந்தரிலும் பார்க்கப் பன்மடங்கு செல்வமுடையவராயினர். இப்புது வகுப்பாரிடையே வியாபாரிகளைத் தவிர பெரிய தொழிற்சாலைத் தலைவரும், வங்கிக்காரரும், அரசாங்க உத்தியோகத்தரும், நியாயவாதிகளுமாகப் பல தொழிலிலுமீடுபட்டோரிருந்தார். இவர்களை மத்திய வகுப்பினர் என்று கூறுப. சிறந்த அறிஞரும் கலாவல்லுனரும் இவ்வகுப்பாரிடையே தோன்றியிருக்கின்றனர். இங்கிலாந்திலும் ஒல்லாந்திலும் இவ்வகுப்பினர் முக்கியமாய் விளங்கியபோதிலும் ஐரோப்பாவின் மேற்குப் பாகங்களிலும் மத்திய பாகங்களிலும் இவர்கள் காணப்பட்டனர்.

## II. கிழக்கு ஐரோப்பாவின் நிலைமை

மத்திய காலத்தில், கிழக்கே நிலவி வந்த ரோமராச்சியம், பலமுற்று வளர்ந்து வந்த இஸ்லாமியரின் எதிர்ப்பைப் பல நூற்றுண்டுகளாகச் சகித்துக் கடைசியில், ஆசியாவிலிருந்து வந்த கொடிய துருக்கியர் முன் வீழ்வதாயிற்று. 1453-ல் இத்துருக்கியர் சுல்தானுக இருந்த இரண்டாவது முகம்மது என்பவன் கொன்ஸ்தாந்திநோப்பிளைக் கைப்பற்றினுன். அவன் பின் வந்த சுல்தான்கள் துருக்கியின் ஆட்சியை போல்கன் குடா நாடெங்கும் பரவச்செய்து 16-வது நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஹங்கேரி பிரதேசத்தையுங் கைப்பற்றினர். இவர்களுடைய ஆதிக்கம் வர வரப் பெருகி வந்தது. வீயன்ஞ நகரத்தைக்கூட அவர்கள் முற்றுகையிட்டனர். துருக்கிய அரசர்களின் ஆட்சி ஆசிய துருக்கி, மெசப்பொத்தேமியா, அராபியா, வட ஆபிரிக்கா ஆகிய இடங்களெங்கும் பரவியிருந்ததென்றுல் அவர்களுடைய செல்வாக்கு எவ்வளவாயிருந்திருக்கவேண்டும்? அவர்களே 'கலீபா'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பெயருடன் முஸ்லிம் மதத் தலைவராகவுமிருந்தார்கள். 1914-ல் நடைபெற்ற உலக யுத்தம்வரை துருக்கியர் இச்செல்வாக்கைக் குலையவிடாது பாதுகாத்து வந்தனர். ஆனால் இவர்களுடைய பரந்த ராச்சியங்களில் அரசியல்முறை செவ்வனே நடைபெறவில்லை. 16-ம் நூற்றாண்டில் சில காலமாக அவர்களுடைய செல்வாக்கு ஐரோப்பிய தேசங்கட்குப் பெரிய ஆபத்தை வருவிக்கக்கூடியதாயிருந்தது. சாள்ஸ் என்ற சக்கரவர்த்தியும் ஸ்பானிய மன்னனாகிய இரண்டாவது பிலிப்பும் அவர்களோடு எதிர்த்துப் போர் புரிய நேர்ந்தது. பிலிப்பு மன்னன் 1590-ல் லெப்பான்ரோ என்ற கடல் யுத்தத்தில் பெரிய வெற்றி பெற்றான். அடுத்த நூற்றாண்டில் மறுபடியும் அவர்களது செல்வாக்குக் கொஞ்சக் காலமாகத் தழைத்தது. ஆனால் போலந்து தேசத்துப் பெரும் போர்வீரனான சோபீஸ்கி என்பவனுடைய பெரு முயற்சிகளால் அது பலிக்கவில்லை. ஈற்றில் ஆஸ்திரிய மன்னர் அவர்களைத் தோற்கடித்து ஹங்கேரியை மீட்டனர். மீட்டுமென்? போல்கன் பிரதேசத்திலுள்ள கிறிஸ்தவரை, அடுத்த இரண்டு நூற்றாண்டுகளாக இஸ்லாமியர் ஆட்சி புரிந்தே வந்தனர்.

## III. பிரான்ஸின் உன்னத நிலைமை

பதினேழாம் நூற்றாண்டில் பிரான்ஸ் ஐரோப்பிய தேசங்களெல்லாவற்றிலும் முதன்மையுடையதாய்ச் சிறந்து விளங்கியது. சேனாபலத்திலென்ன, பொருட்செல்வத்திலென்ன, கல்வியிலென்ன, கலைகளிலென்ன, பிரான்ஸே மற்றத் தேசங்களெல்லாவற்றுக்கும் எடுத்துக் காட்டாய்த் திகழ்ந்தது. நான்காம் ஹென்றி (நவார் நாட்டு ஹென்றி) அரசுகட்டிலேறி நாட்டிலே அமைதியை நிலைநிறுத்தி, நான்டிஸ் சாசனத்தின்மூலம் ஹியூஜனட்சுக்கு மத சுதந்தரத்தையும் அளித்தான். அதன் பயனாக, உள்நாட்டுக் குழப்பத்தால் சிதறிக்கிடந்த நாடு மீண்டும் பலவகையாலும் வளம் பெற்றது. அவன் சல்லி என்ற சிறந்த மந்திரியின் துணைகொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் அரசாங்க நிர்வாகத்தைச் சீர் திருத்திச் செலவைச் சுருக்கினன். சனங்கள் சீருடன் வாழ வசதிகள் ஏற்படுத்தினன். நடுத்தர வகுப்பாரை முயற்சியில் ஊக்கப்படுத்தினன். 1610-ல் அவனை ஒரு கத்தோலிக்க மதப்பித்தன் கொலைசெய்தான். அவனது மகனை 13-ம் லூயி அரசாட்சி செய்த காலத்தில் ரிச்சலியூ, மஸாரின் என்னுமிரு பெருமரசியல் விற்பன்னர் ஒருவருக்குப் பின் ஒருவராய் சல்லியது வேலையைத் தொடர்ந்து நடத்தினர்கள். இவர்கள் பிரபுக்கள் செய்து வந்த கலகத்தை அடக்கி அரசனின் செல்வாக்கை அதிகரிக்கச் செய்தனர். ஸ்பானியாவை பிரான்ஸின் சன்ம சத்துருவாகவே மதித்து வந்தார்கள். ஜெர்மனியில் முப்பது வருட யுத்தம் என்ற சமயச் சண்டை நடைபெற்றபொழுது ஸ்பானியாவினது துடுக்கை அடக்குவதற்காக புரட்டஸ்தாந்து மதத்தை ஆதரித்தார்கள். 1659-ல் இரு நாடுகளுஞ் சமாதானத்தை நாடிய பொழுது பிரான்ஸ் தான் விரும்பிய நிபந்தனைகளை ஸ்பானியா ஒப்புக்கொள்ளுமாறு செய்து பிரனீஸ் சமாதான உடன்படிக்கையை முற்றுவித்தது.

அரசனது விருப்பப்படியே நாட்டின் அலுவல்களெல்லாவற்றையும் நடத்தி, அவனுக்கு சர்வ அதிகாரத்தையும் வழங்கி முடியாட்சியை நிலைநிறுத்தவேண்டுமென்பதே இவ்விரு மந்திரிகளுடைய பெரு நோக்கமாயிருந்தது. அந்நோக்கத்தை முற்றுவிக்க பிரெஞ்சு பிரதிநிதிகள் சபையைக் கூட்டாமல் விட்டுவிட்டனர். அரசன் ஆணையைச் சிரமேற்கொண்டொழுகக்கூடிய ராஜ உத்தியோகத்தர்களை எல்லா மாகாணங்களிலும் நியமித்தார்கள். அரசனும் அவனுடைய மந்திரிமாரும் பாரிஸ் நகரத்திலிருந்து ஆணை பிறப்பிக்கக் காரியங்களெல்லாம் நடைபெற்று வந்தன. சுயாட்சி, குடியாட்சி என்ற பேச்சே கிடையாது. பகைவரை எதிர்த்து நாட்டைக் காப்பாற்றக்கூடிய வலிமையுள்ள ஒரு அரசன் ஆளுவதைச் சனங்கள் விரும்பிச் சுகமாக வாழ்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IV. பதினாலாம் லூயியின் காலம்

மஸாரின் என்ற மந்திரி இறந்ததும், பிரெஞ்சு ராச்சியத்தின் அரசியல் நிருவாகத்தை வாலிபப்பருவத்தினனான 14-ம் லூயி ஏற்றுக்கொண்டான். இவன் மிகுந்த உழைப்புந் திறமையுமுள்ளவன். சகல ராஜ குணமும் வாய்ந்தவன். 'வெர்செயில்ஸ்' என்ற பெயருடன் ஒரு விசித்திரமான அரச கோட்டத்தைக் கட்டி அதில் பெருஞ் சிறப்புடன் வாழ்ந்து வந்தான். பிரான்ஸிலுள்ள சகல பிரபுக்களும் இவ்வேந்தனின் இந்திர போகத்தை அனுபவிப்பதற்காகத் தமது இல்லங்களை விடுத்து இம்மாளிகையில் வந்து திரண்டார்கள். பெரிய புலவர்களும் சிறந்த நாடகாசிரியர்களும் இவனது சபையை அலங்கரித்தனர். இம்மன்னன் கல்வியை வளர்ப்பதற்காக ஒரு சங்கத்தை நிறுவினான். நாட்டிலுள்ள அறிஞர்களும், புலவர்களும், கலாவிற்பன்னரும் இச்சங்கத்தில் அங்கத்தவராயிருப்பதையே ஒரு பெரிய மகிமையாகக்கொண்டனர். கொல்பேட் என்ற மந்திரி கைத்தொழில், வாணிபம் முதலியவற்றை விருத்தி செய்யவேண்டிய முயற்சியெடுத்தார். வியாபாரத் துறையொவ்வொன்றையும் நன்னிலைப் படுத்தினார். பிரெஞ்சுக் கைவினைஞரே மற்றெல்லோரையும்விட உயர்ந்து விளங்கினர். கடலெங்கும் பிரெஞ்சுக் கப்பல்களே அதிகமாய் ஓடின. இந்தியா, அமெரிக்கா முதலிய இடங்களிலும் பிரெஞ்சு ஆதிக்கம் பரவியது.

எவ்வளவு அரச லட்சணம் வாய்ந்திருந்தபோதிலும், லூயி துரதிஷ்டவசமாக அளவற்ற ஆசையுடையவனாயிருந்தான். ஐரோப்பாவில் முதன்மையான சக்கரவர்த்தியாயிருப்பதுடன் அவன் திருப்திப்படவில்லை. மற்றத் தேசங்கள்மீதும் தனது ஆணையைச் செலுத்த விரும்பினான். அல்லாமலும் நெதலந்திலுள்ள ஐக்கிய மாகாணங்களில் குடியாட்சி நடைபெறுவது அவனுக்குப் பிடிக்கவில்லை. அங்கே ஸ்பானியருக்குச் சொந்தமான பகுதியைக் கைப்பற்றி, பரிசுத்த ரோம ராச்சியத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கு நாடுகளை வென்று பிரான்ஸின் கிழக்கு எல்லையை றைன் நதிவரை விஸ்தரிக்கவேண்டுமெனப் பேராசை கொண்டான். இவ்வாறு செய்தால் கிழக்கேயிருந்து வரும் பகைவர் தன்னுட்டை இலேசாய்க் கைப்பற்ற மாட்டார்களெனவும் எண்ணினுன். கடல் கடந்து சென்று புதுத் தேசங்களைக் குடியேற்றவேண்டும், நாட்டில் போர்ச் சஞ்சலமிருக்கக் கூடாது, சமாதானமே நிலவவேண்டுமென கொல்பேட் என்னும் மந்திரி நாட்டிய கொள்கைகளை லூயி கைவிட்டு அயல் நாடுகளுடன் போர் செய்யத் தொடங்கினுன்.




பதினுலாம் லூயி

ஒரேஞ்சு வம்சத்து வில்லியம் என்ற இளவரசனின் தலைமையில் டச்சுக்காரர், லூயி ராசனுடைய சேனையை வீரத்தோடு எதிர்த்தார்கள். அடுத்த நூற்ருண்டில் ஸ்பானிய தேசங்கூட லூயி அரசன் குடும்பத்துக்கே சேரும் போலிருந்தது. உடனே ஐரோப்பிய நாடுகளெல்லாம் ஒன்று சேர்ந்தன. பிரான்ஸை எதிர்த்தன. ஐக்கிய மாகாணங்களும், பிரித்தானியா, ஆஸ்திரியா ஆகிய தேசங்களும், ஜெர்மன் சமஸ்தானங்கள் பலவும் ஒன்ருகச் சேர்ந்து பிரான்ஸை எதிர்த்தன. இந்த யுத்தமே ஸ்பானிய சிங்காசனப் போர் என்று வழங்கப்படும். இப் பெரும் போரில் லூயி இராசனுடைய சேனை எதிரிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனுபலத்துக்கும் போர்த் திறமைக்கும் ஈடுநிற்க முடிய வில்லை. மாள்பரோ என்ற பிரித்தானிய சேனுதிபதியின் வீரத்துக்கு பிரெஞ்சு சேனை எதிர்நிற்கமாட்டாது பின்வாங்கியது. மேலும் பிரித்தானியா, ஒல்லாந்து முதலிய துணைப்படைகளின் பொருளுதவியும் சேனு பலமும் லூயி ராசனை 1714-ல் தோல்வியுறச்செய்தன.



ஒல்லாந்திலுள்ள ஒரு கால்வாய்

## V. ஐக்கிய மாகாணங்கள்

ஸ்பானிய நெதலந்து முழுவதும் பிலிப்புக்கெதிராகக் கலகஞ் செய்தபோதிலும் புரட்டஸ்தாந்திய வட பகுதி யினரே பூரண அரசியல் சுதந்திரம் பெற்றனர். போர்த் துக்கீசர் கையிலிருந்து நீங்கியதும் இலங்கை இவ்வடபகுதி யினரின் (ஐக்கிய மாகாணங்களின்) ஆட்சியில் சிக்கியது. மௌனி வில்லியம் என்ற அரசனின் மக்களிருவரினதும் அல்டன்பேண்வெல்ட் என்ற ஓர் அறிஞரதும் முயற்சியின் பயனுக 1609-ல் உத்தர நெதலந்தின் சுதந்தரம் ஸ்பானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யாரால் ஒப்புக்கொள்ளப்பட்டது. அத்துடன் ஸ்பானிய கடல்களில் வியாபாரஞ் செய்யும் உரிமையையும் டச்சுக்காரர் பெற்றனர். இப்புதிய சுதந்தர நாடு நாளுக்கு நாள் பல வளமும் நிறைந்து வளர்ந்தது. நெதலந்து தேசம் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றுள் வடக்கேயுள்ள ஏழு மாகாணங்களே ஐக்கிய மாகாணங்களென்ற பெயரைப் பெற்றன. ஒவ்வொரு மாகாணமும் சுயாட்சி நடத்தியது. இம்மாகாணங் களுக்கெல்லாந் தலைமையாக ஒரு பிரதிநிதிகள் சபை யுண்டு. இங்ஙனம் நடைபெற்ற குடியாட்சியின் தலைவர் ஸ்ராத்ஹோல்டர் என்றழைக் கப்பட்டார். இவர் ஒரேஞ்சு வமிசத்திலிருந்தே தெரிவு செய்யப்படவேண்டுமென நியதியிருந்தது. இம்மாகாணங் களில் ஒன்றின் பெயரே ஒல்லாந்து. ஒல்லாந்து வாசிகள் டச்சுக்காரர் என்றழைக்கப் படுவர். இது மற்ற மாகா ணங்களிலெல்லாஞ் சிறந்து விளங்கியபடியால், இப்பெயரே மற்ற மாகாணங்களுக்கும் வழங்கப்பட்டது. கல்வின் என்பவரால் சீர்திருத்தப்பட்ட புரட்டஸ்தாந்த சமயமே இந்நாட்டவரால் அனுசரிக்கப்பட்டு வந்தது. இச்சமயத்தை 'சீர்திருத்தப்பட்ட டச்சு திருச்சபை' என்று வழங்குப. இலங்கையிலுள்ள ஒல்லாந்தர் பலர் இச்சமயத்தையே சேர்ந்தவர்கள்.


ஒரு டச்சு நாணயம்

நகரத்தில் வாழ்ந்த தனவந்தரிடையும், ஒரேஞ்சு வமிசத்தைச் சார்ந்தவர்களிடையும் அடிக்கடி பல சச்சரவுகள் உண்டாயின. இந்நூற்ருண்டில் டச்சுக்காரர் பல தேசத்தவரோடுஞ் சண்டையிட்டார்கள். முதலாவது, ஸ்பானியாவுடனும் போர்த்துக்கலுடனும் பின்னர், இங்கி

லாந்துடனும், கடைசியாக பிரான்ஸுடனும் போர் செய்தார்கள். இவ்வாருக கலகமும் சச்சரவும் நடைபெற்ற போதிலும், அவர்கள் நாட்டின் வளத்தைப் பெருக்குவதில் பின்னிற்கவில்லை.

இந்நூற்ருண்டின் ஆரம்பத்தில், அதாவது 1602-ல் *'டச்சு ஐக்கிய கிழக்கிந்திய கம்பெனி' என்ற வியாபார



ஒரு டச்சுக் கப்பல்

ஸ்தாபனம் நிறுவப்பட்டது. இது மற்றைய கீழ்நாட்டு வியாபாரச் சங்கங்களைப் பார்க்கிலும் அதிகம் சிறப்புற்று

*டச்சு நாணயங்களில் V.O.C. என்ற அட்சரங்கள் பதிக்கப்பட்டிருந்தன. இவ்வெழுத்துக்களை இலங்கையிலுள்ள பழைய டச்சு கட்டிடங்களில் இன்னும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியது. இதன் சரித்திரம் இன்னொரு அத்தியாயத்தில் கூறப்படும். எங்கும் டச்சுக்காரரே பெருமையுற்று விளங்கினர். டச்சு மீன்பிடி வள்ளங்கள் நல்ல வியாபாரம் நடத்தின. டச்சுக் கப்பல்கள் எல்லாத் துறை முகங்களிலும் காணப்பட்டன. அமஸ்ரடாம் என்ற டச்சு நகரம் ஐரோப்பாவின் தலைநகர்போல விளங்கிற்று. வியாபாரமோ, வங்கி அலுவல்களோ எல்லாவற்றுக்கும் அந்நகரமே மத்தியத்தானமாயிருந்தது. அக்காலத்தில் புலமைக்கும் அறிவுக்கும் பேர்போனவர்கள் புகழ்பெற்ற டச்சுச் சர்வகலாசாலையான லெய்டன் சர்வகலாசாலையிலேயே காணப்பட்டார்கள். றெம்பிறுண்ட்போன்ற புகழ்வாய்ந்த ஓவியக்காரர் வாழ்க்கையைப் படம் பிடிக்கும் பல சிறந்த ஓவியங்களை வரைந்தார்கள். ஓவிய உலகில் இச்சித்திரங்கள் இன்றுவரை புகழ்பெற்று விளங்குகின்றன. ஒல்லாந்து அக்காலங்களில் பெரிய சுதந்தர பூமியாக விளங்கிற்று. சுதந்தர எண்ணம் நிறைந்த நூல்களை இயற்றிய ஆசிரியர்கள் தம் நாட்டில் அந்நூல்களைப் பிரசுரிக்க முடியாமல் ஒல்லாந்துக்குச் சென்று அங்கே அவற்றைப் பயமின்றிப் பிரசுரித்தார்கள்.

இவ்வாறு டச்சுக்காரர் சிறப்புற்று விளங்குவதும், திரைகடல் ஓடி அவர்கள் வியாபாரத்தில் சிறந்து வருவதும் ஆங்கிலேயருக்குப் பொருமையைக் கிளப்பியது. இதன் பயனாக இவ்விரு சாதியாருக்குமிடையே மூன்று கடல் யுத்தங்கள் நடைபெற்றன. டச்சுக்காரர் ஒன்றிலாவது தோல்வியடையவில்லை. 1672-ம் ஆண்டில் நடைபெற்ற மூன்ருவது யுத்தத்தில் பிரெஞ்சுச் சக்கரவர்த்தியான 14-ம் லூயி ஆங்கிலேயருடன் சேர்ந்து இந்த டச்சு வியாபாரிகளை அடக்கவேண்டுமென முயற்சி செய்தான். ஆனல் ஒரேஞ்சு வம்சத்தில் வில்லியம் என்ற இன்னொரு டச்சு இளவரசன் தோன்றி ஒல்லாந்தைப் பகைவரிடமிருந்து காப்பாற்றியதுமன்றி இங்கிலாந்துக்கு அரசனுமானன். இவனது ஆட்சியின் கீழ் ஒல்லாந்தும் இங்கிலாந்தும் ஒன்று சேர்ந்து 14-ம் லூயி என்ற மாட்சிமிக்க மன்னனை வீழ்த்தின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கியமான ஆண்டுகள்

1526. மொஹாக்ஸ் என்ற யுத்தத்தில் துருக்கியர் ஹங்கேரியரைத் தோற்கடித்தல்.

1570. லெப்பான்ரோ என்னும் கடல் யுத்தத்தில் ஸ்பானியர் துருக்கியரைத் தோற்கடித்தல்.

1584. மௌனி வில்லியம் கொலை செய்யப்படல்.

1598. நாண்டிஸ் சாசனம்.

1609. டச்சுக்காரரின் சுதந்தரத்தை ஸ்பானியர் ஒப்புக் கொள்ளல்.

1659. பிரனீஸ் சமாதானம்.

1672. பதினாலாம் லூயி ஐக்கிய மாகாணங்களைத் தாக்குதல்.

1678. நிம்வெகென் சமாதானம். பதினாலாம் லூயியின் ஆதிக்கம் உச்சநிலையடைதல்.

1701. ஸ்பானிய சிம்மாசனச் சண்டையின் ஆரம்பம்.

1713. உற்றெச்ட் சமாதானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் அத்தியாயம்

## இங்கிலாந்து (1485-1714)

### 1. தியூடர் வம்சம்

பிரெஞ்சிய யுத்தங்களில் தோல்வியடைந்திருந்த இங்கிலாந்து, 15-ம் நூற்றுண்டில் பிரபுக்களிடையே நிகழ்ந்த உள்நாட்டுக் குழப்பங்களாற் கலக்கமுற்றது. ஆனல் மற்ருெரு புறத்தில் நாடு வளப்பமுற்றுச் செல்வங் கொழித்தது. நடுத்தர வகுப்பாரென்ற புதிய வகுப்பினர் மற்றத் தேசங்களிலும் பார்க்க இங்கு அதிகமாகப் பெருக்கமுற்றனர். இவர்கள் கம்பளி, சீலை முதலிய பொருள்களில் வியாபாரஞ் செய்து ஏராளமான பொருள் திரட்டினுர்கள். வியாபாரிகள் தங்கள் சொந்தக் கப்பல்களில் வியாபாரப் பண்டங்களை அந்நிய தேசங்கட்கு அனுப்பி வந்தனர். 1485-ல் தியூடர் வம்சத்தைச் சேர்ந்த ஏழாவது ஹென்றி என்பவன் அரசனுனுன். இவன் நாட்டில் அமைதியை உண்டாக்கி முடியாட்சியை வலியுறச் செய்யவேண்டுமென உறுதிகொண்டு அதை நிறைவேற்றினுன். மேலும் இன்னெரு முக்கியமான அலுவலையும் இவன் செய்தான். அதாவது, தனது மகளை ஸ்கொட்லாந்து இளவரசனெருவனுக்கு விவாகஞ் செய்து கொடுத்தான். அதன் பயனுக மூன்று நூற்றுண்டுகளாகத் தீராப் பகை சாதித்து வந்த ஸ்கொட்லாந்து தேசத்தவரையும் ஆங்கிலேயரையும் ஒற்றுமைப் படுத்த அஸ்திவாரமிட்டான். ஒரு நூற்றுண்டின் பின்னர் இவ்வொற்றுமை வலிமை பெற்று இரு தேசங்களும் ஒரு குடைக்கீழாளப்பட்டன.

இங்கிலாந்து கடல் சூழ்ந்த ஒரு தீவாயிருப்பதால் அந்நியர் படையெடுப்பைத் தடுப்பதற்கு பலமுள்ள ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்படை ஏற்படுத்தவேண்டியது அவசியமென ஹென்றி எண்ணினன். அத்துடன் ஐரோப்பிய விஷயங்களில் அதிகம் தலையிடுவதால் தரைப்படைக்காக பெரும் பணச் செலவு ஏற்படுமெனவும், அவ்வாறு தலையிடுவது யுக்தியல்லவென்றும் நிச்சயித்தான். இதே கொள்கையே இவனுக்குப் பின் வந்த பல அரசராலும் கைக்கொள்ளப்பட்டது. இங்கிலாந்துக்கு இக்கொள்கை நற்பயனளித்தே வந்ததென்பதில் ஐயமில்லை. ஆங்கிலேயரின் தரைப்படை எப்பொழுதும் சிறிதாகவே இருந்து வந்திருக்கிறது.

பதினரும் நூற்ருண்டில் இங்கிலாந்தின் கடற்படை அதிகரித்தது. அத்துடன் கடல் வியாபாரிகளும் ஏராளமான வர்த்தகக் கப்பல்களைக் கட்டுவித்தார்கள். ஐரோப்பாவிலும் ஒழிந்த மற்றைய நாடுகளிலும் முன்னொருபோதும் போயறியாத துறையெங்கும் ஆங்கிலக் கப்பல்கள் சென்றன. நெசவுத் தொழிலுக்கும் சீலை வியாபாரத்துக்கும் பெரிதும் ஊக்கமளிக்கப்பட்டது. இந்நூற்ருண்டின் இறுதியில் செம்புச் சுரங்கமறுக்கும் தொழிலும், கண்ணுடி, கடுதாசி முதலியவற்றின் உற்பத்தியும், பட்டு முதலிய நொய்தான புடவைகள் நெசவு செய்யும் வேலையும் பெருகியது.

## II. எட்டாவது ஹென்றியும் மதச்சீர்திருத்தமும்

ஏழாவது ஹென்றிக்குப் பின் எட்டாவது ஹென்றி சிங்காசனமேறினன். இவன் உறுதியான குணம் வாய்ந்தவன். இளமையில் இவன் அழகும், கல்வியும், சமயபக்தியும், திடகாத்திரமும்வாய்ந்த ஒரு சுந்தர புருஷனயிருந்தமையால் பிரசைகளிடத்து மிகுந்த செல்வாக்குடையவனுனன். தனக்கு மந்திரிகளாக இவன் மிகத் திறமையுள்ள அரசியல் விற்பன்னரைத் தேர்ந்தெடுத்தான். இவ்வாறு இவன் முதல் தேர்ந்தெடுத்த மந்திரி ஊல்சி என்பவராகும். ஊல்சி கத்தோலிக்க திருச்சபையில் 'கருதினல்' என்ற உயர்தரப் பதவியை வகித்து வந்தார். நடுத்தர வகுப்பிலுதித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசைக்காரரான இவர் அவசியமில்லாமல் ஐரோப்பிய விஷயங்களில் தலையிட்டு ஏழாம் ஹென்றி தேடி வைத்த செல்வமெல்லாவற்றையும் செலவு செய்தார்.

தனக்குப் பின் தனது அரசாங்கத்தைக் கொண்டு நடத்த ஓர் ஆண் மகவு இல்லையேயென்று கவலைகொண்ட எட்டாவது ஹென்றி, தனது மந்திரியான ஊல்சியுடன் ஆலோசிக்கலானான். தனது முதல் மனைவியான ஸ்பானிய இளவரசியாகும் கத்தரீனாள் என்பவளை விவாகரத்துச் செய்து வேறொருத்தியை மணக்கவேண்டுமென்று அவன் விரும்பினான். அதை ரோமாபுரியிலிருக்கும் பாப்பரசரின் அனுமதியில்லாமல் செய்யக்கூடாதாதலின் அவரிடம் எப்படியாவது அனுமதி பெறுமாறு ஊல்சியைத் தூண்டினான். ஆனால் பாப்பரசரின் மனச் சாட்சி இதற்கு இடங்கொடுக்கவில்லை. அன்றியும், பாப் பரசர்மீது இக்காலத்தில் செல்வாக்குடையவராயிருந்த கத்தரீனாளுடைய மருமகனான சாள்ஸ் சக்கரவர்த்தியும் இந்த விவாகத்தைப் பலமாக ஆட்சேபித்தான். எனவே, ஊல்சி அனுமதி பெற முடியாமற் போய்விட்டது. உடனே ஹென்றி ஊல்சியை மந்திரி பதவியிலிருந்து நீக்கினான். பாப்பரசரின் அனுமதி தனக்கு வேண்டியதில்லையெனக் கூறி அவரது ஆதிக்கத்தையும் முற்றாகத் தள்ளினான். ஆங்கில திருச்சபைக்குத் தானே தலைவனானான். மிகவும் அநீதியான முறையில் சந்நியாச மடங்களைச் சூறையாடி, வெறுமையுற்றிருந்த அரசாங்க பொக்கிஷ சாலையை அப்பொருளினால் நிரப்பினான். அம்மடங்கட்குரிய நிலங்களையெல்லாம் தனது பிரபுக்களுக்கும் மற்றையோர்க்கும் லஞ்சமாக வழங்கி அவர்களுடைய ஆதரவைப் பெற முயன்றான். லூதர், கல்வின் என்பாரைப்போல் ஹென்றி ஒரு தீவிர புரட்டஸ்தாந்தியனல்லாதபடியால் மத ஆசாரத்தில் ஒருவிதமான மாற்றத்தையும் கொண்டுவரவில்லை. பாப்பரசருக்குப் பதிலாக தன்னைத் தலைவனாக மாத்திரம் அமைத்துக்கொண்டான். முன்னிருந்தமாதிரி ஆங்கில திருச்சபையில் சந்நியாசிகளுக்கும் கன்னியாஸ்திரிகளுக்கும் இடம் கொடுக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தரீனுள் அரசியது விவாகத்தை ரத்து செய்துவிட்டு ராஜசபையிலிருந்து வந்த அன்னிபோலின் என்ற மாதை மணந்தான். அவளுக்கு எலிஸபெத் என்ற ஒரு பெண் மகவு பிறந்தது. முடிவில் ராசத்துரோகக் குற்றச்சாட்டின்பேரில் அன்னிபோலின் சிரச்சேதம் செய்யப்பட்டாள். இவளுக்குப் பின் ஜேன் செய்மூர் என்ற பெண்ணை ஹென்றி மணந்தான். இவள் ஓர் ஆண் மகவைப் பெற்றதும் இறந்துபோனுள். அதன் பின்னும் ஹென்ரி மூன்று முறை மணஞ்செய்தான். ஆனுல் பிள்ளைகள் பிறக்கவில்லை.

## III. இங்கிலாந்தில் புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தம்

ஹென்றியின் மகனுன ஆருவது எட்வேட் ஆரோக்கியமில்லாத ஓர் இளவலாயிருந்து ஐந்து வருடம் அரசாண்டான். அவனுடைய ஆட்சியில் புரட்டஸ்தாந்திய கொள்கைகள் தலையெடுத்துப் பரவின. அவனுக்குப் பின் கத்தரீனுளின் மகளான மேரி சிங்காசனமேறி, கத்தோலிக்க மதத்தைப் பரப்ப விரும்பினபோதும் புரட்டஸ்தாந்து மதமே தலையெடுத்தது. இங்கிலாந்திலுள்ள தேவாலயங்களெல்லாம் புரட்டஸ்தாந்திய முறைப்படியே ஆராதனை நடத்தின. மேரி ராணி 300 புரட்டஸ்தாந்து மதத்தவரை உயிருடன் தூணில் கட்டித் தீக்கிரையாக்கினுள். இதைப் பார்த்துப் பிரசைகளெல்லாரும் நடுக்கமுற்றனர். மேலும் மேரி ஸ்பானிய தேசத்து அரசனுன இரண்டாவது பிலிப்பை விவாகஞ் செய்தது பிரித்தானிய பிரசைகளுக்கு அதிருப்தியளித்தது. ஸ்பானிய ஏகாதிபத்தியத்தில் தாங்களும் ஒரு பகுதியினராக வர அவர்கள் விரும்பவில்லை. இவ்விரு சம்பவங்களும் அவர்களுக்கு கத்தோலிக்க மதத்தில் வெறுப்பை உண்டாக்கின. கத்தோலிக்க மதம் என்றதும் அந்நியர் ஆட்சியென்றே அவர்கள் கருதினர். ஆனுலும் எல்லாரும் புரட்டஸ்தாந்து மதத்தைச் சேரவில்லை. சிலர் கத்தோலிக்கராகவே யிருந்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, மேரிக்குப் பின் எலிஸபெத் ராணி சிங்காசனத்துக்கு வந்ததும் தேவாலயங்கள் புரட்டஸ்தாந்திய சம்பிரதாயத்தை ஒட்டியிருந்தபோதிலும் கத்தோலிக்க முறைகள் சிலவற்றையும் அனுசரிக்கும்படியாக ஒழுங்குசெய்யப்பட்டது. உதாரணமாக மேற்றிராணிமாரின் ஆதிக்கம் பாதிக்கப்படவில்லை. ஆராதனை பெரிதும் கத்தோலிக்க ஆராதனையையே ஒத்திருந்தது. ஆனால் அதில் லத்தீன் பாஷைக்குப் பதிலாக ஆங்கில பாஷை வழங்கப்பட்டது.

## IV. எலிஸபெத் ராணியின் ஆட்சி

எலிஸபெத் ராணி பேராற்றல் வாய்ந்தவள். மேரி அரசி இறக்கவும் 1558-ல் இவள் அரியாசனமேறினாள்.



எலிஸபெத் ராணி

இங்கிலாந்தில் இக்காலத்தில் முன்னொருபோதுமில்லாத பெரிய நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது. ஒரு புறத்தில் பிரான்ஸும் இன்னொரு புறத்தில் ஸ்பானியாவும் ஆங்கில அரசைத் தமது தமதெனக் கொண்டன. சிறிது காலமாக பிரெஞ்சு அரசனை மணந்திருந்த ஸ்டுவெர்ட் வம்சத்தைச் சேர்ந்த மேரி என்னும் ஸ்கொட்லாந்து அரசி, ஏழாவது ஹென்றியின் மகள் தனது பேத்தியென்ற உரிமை பாராட்டி ஆங்கில அரசு தனக்குச் சொந்தமானதென வாதாடினாள். எட்டாவது ஹென்றியின் மகளான மேரி ராணியை விவாகஞ்செய்து, அதன் பயனாகச் சிறிது காலம் இங்கிலாந்தின் அரசனாகவுமிருந்த ஸ்பானிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனுன பிலிப்பு ஆங்கில அரசை நழுவவிட விரும்ப வில்லை. இவ்வாறு ஆங்கில அரசுக்கு பிரான்ஸும் ஸ்பானியாவும் தனித்தனி உரிமை பாராட்டியபடியால் அது ஒருவர் கையிலுமகப்படாமல் தப்பிற்று. ஸ்கொட்லாந்து ராணியான மேரியின் கணவன் இறக்கவே, 1549-ல் டச்சுக்காரரைப்போல அதிதீவிர புரட்டஸ்தாந்தியராயிருந்த ஸ்கொட்லாந்து பிரசைகள் கத்தோலிக்க மதத்தவளாகிய அவளை நாட்டை விட்டுக் கலைத்தனர். அவள் இங்கிலாந்துக்கு ஓடவே அங்கு பாதுகாப்பில் வைக்கப்பட்டாள். அங்கேயுள்ள கத்தோலிக்கர் அவளை ஆதரித்து, எலிஸபெத் ராணிக்கெதிராகச் சதிசெய்யவுந் தலைப்பட்டனர். 1587-ல் அவள் சிரச்சேதஞ் செய்யப்பட்டாள். சிறந்த ரூபலாவண்ணியமும் திறமையுமுள்ள அவ்வரசியின் கதி அவ்வாருயிற்று.

எட்டாவது ஹென்றியைப்போலவே எலிஸபெத் ராணியையும் குடிகள் மிகவும் நேசித்து வந்தார்கள். அவளுடைய கீர்த்தி நாடெங்கும் பரவிற்று. மணப்பருவமுற்ற காலத்திலும் அவள் விவாகஞ் செய்யாது கடத்தினுள். தான் ஒரு பிரெஞ்சு இளவரசனையோ அல்லது ஸ்பானிய இளவரசனையோ மணக்கப்போவதாகப் பாசாங்கு செய்து வந்தாள். இதை அறிந்த அந்நாட்டரசர்கள் போர்ச் சஞ்சலமின்றியே இலகுவில் இங்கிலாந்துக்கு அரசராகிவிடலாமென எண்ணி மனப்பால் குடித்துக்கொண்டிருந்தார்கள். ஆனுல் எலிஸபெத் விவாகஞ் செய்வதைக் தந்திரமாகப் பின்போட்டுக்கொண்டே வந்தாள். ஆங்கிலக் கடற்படையும் நாளுக்கு நாள் வலிமையுற்று வந்தது. பிரான்ஸ் சமயச் சண்டையினுல் சீர்குலைந்து நிலைதளம்பிற்று. ஈற்றில் ஸ்பானிய தேசத்தரசனுன பிலிப்பு விறல்மிக்க ஒரு பெரிய கடற்படையைத் திரட்டி, 'ஆமடா' என்ற பெயருடன் 1588-ல் இங்கிலாந்துக்கு எதிராய் அனுப்பினுன். 'அடற்கரிய ஆமடா' என பிலிப்பு மன்னனுல் அனுப்பப்பட்ட அப்படையை ஆங்கிலேயர் முறியடித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாவது ஹென்றி கடற்படை விஷயத்தில் மிகவும் அக்கறை காட்டியிருந்தான். எலிஸபெத் ராணியும் வில்லியம் சீசில், பேர்லி பிரபு என்ற கீர்த்திவாய்ந்த அவளது மந்திரியும் அதே விதமாகச் சிரத்தை எடுத்து கடற்படையின் வலிமையைப் பெருக்கி வந்தனர். இங்கிலாந்தின் செல்வத்தையும் ஆதிக்கத்தையும் பெருக்க வேண்டுமெனச் சீசில் அல்லும் பகலும் உழைத்து வந்



சேர் பிரான்ஸிஸ் டிரேக்

தான். பிரபுக்களும் நடுத்தர வகுப்பினரும் அவனுக்கு நிரம்பிய ஆதரவளித்தனர். கடல் கடந்து வேற்று நாடுகளுக்குப் போய் வர்த்தகஞ் செய்வதற்காக ஆங்கில வர்த்தகர்கள் வியாபார சமுதாயங்களை உண்டாக்கினர். ஆங்கிலக் கடலோடிகள் புதிய புதிய நாடுகளைக் கண்டு பிடித்தனர். ஸ்பானிய திரவியக் கப்பல்களைக் கொள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்தனர். பிரான்ஸிஸ் டிரேக் இவர்களில் பேர் போனவன். இவன்போன்ற கடல் வீரரே ஸ்பானிய கடல்படையாகிய 'ஆமடாவை' வெல்லப் பெரிதும் உதவி செய்தவராவர்.

மேலும் எலிஸபெத் ராணி காலத்தில் எத்தனையோ புலவர்கள் இங்கிலாந்தில் திகழ்ந்தனர். ஐரோப்பாவில் ஏற்பட்ட கல்வியின் மறுமலர்ச்சி இங்கிலாந்தில் சிறிது தாமதித்தே தோன்றியபோதிலும், நாட்டில் சிறந்த கவிகளும் நாடகாசிரியர்களும் பல்கினர். ஷேக்ஸ்பியர் என்ற மகா கவி இக்காலத்திற்முன் தோன்றினுர். கல்வி திக்கெல்லாம் பரவியது. பிரபுக்களும் வர்த்தகர்களும் பழங்காலத்து இருளறைக் கோட்டைகளை விடுத்து அழகிய மாட மாளிகைகளைக் கட்டினுர்கள். இங்கிலாந்து நாளுக்கு நாள் செல்வமும் சீரும் பெற்று தீவிரமாக முன்னேற்றமடைந்தது.

## V. ஸ்ரூவெர்ட் வம்சம்

இவ்வாறு எலிஸபெத் ராணி பெருங் கீர்த்தியுடன் நீண்ட காலம் அரசாண்ட பின் 1603-ல் இறந்தாள். பின்னர் ஸ்கொட்லாந்து அரசியான மேரியின் மகன் ஜேம்ஸ் என்பான் இரண்டு தேசங்கட்கும் அரசனுகவே, இரு ராச்சியங்களும் ஒரு குடைக்கீழ் ஒன்றுபட்டன. ஜேம்ஸ் சிறு வயதுதொட்டே புரட்டஸ்தாந்து மதத்தை அனுசரித்து வந்தான். பழைய தியூடர் வம்சத்து ராசாக்களைப்போலவே ஜேம்ஸும் அவனுக்குப் பின் அவனது மகனுன சாள்ஸும் சர்வாதிகார ஆட்சி நடத்த விரும்பியதால் அவர்கள் சனங்களால் வெறுக்கப்பட்டனர். சந்நியாச மடங்களைக் கொள்ளையடித்ததினுல் செல்வந்தராய் வந்த பிரபுக்களும், நடுத்தர வகுப்பைச் சேர்ந்த புதுப் பணக்காரரும் அரசாங்க நிர்வாகத்தில் கூடிய பங்கு பெறவேண்டுமென விரும்பினுர்கள். இவர்களிற் சிலர் 'பியூரித்தானியர்' (Puritans) என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் ஆங்கில திருச்சபையை மேலும் புரட்டஸ்தாந்திய சமயமாக்க விரும்பினுர்கள். நாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஏற்பட்ட நெருக்கடியைச் சாதுரியமாகச் சமாளித்துவிட முதலாம் சாள்ஸால் முடியாமற் போய் விட்டது. எனவே, 1642-ல் உள்நாட்டுக் குழப்பமுண் டாயிற்று. அரசனுக்கெதிராக ஒரு சாரார் எழுந்து கலகமுண்டாக்கி வெற்றியடைந்தார்கள். ஸ்கொட் லாந்திலுள்ள புரட்டஸ்தாந்தியரது துணை இவர்களுக்குக்



ஒலிவர் குறொம்வெல்

கிடைத்தது. இவ்வாறு இவர்கள் வெற்றி பெறுவதற்காக ஏற்கனவே ஒரு சேனையைத் திரட்டியிருந்தார்கள். இச்சேனையின் தலைவர்கள் தீவிரமான போக்கையுடைய வராயிருந்தபடியால் 1649-ல் அரசனைச் சிரச்சேதஞ் செய்தார்கள். அடுத்த 11 வருடமாக இங்கிலாந்து இச் சேனைத் தலைவர்களின் ஆட்சியிலிருந்தது. இவர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவனும் மிக்க பராக்கிரமசாலியுமான ஒலிவர் குறெம்வெல் என்பவன் அரசனுக்குச் சமமான அந்தஸ்துடன் ஆட்சிசெய்து வந்தான். ஆனல் ஆங்கில பிரசைகள் இம்மாதிரியான ஆட்சியை வெறுத்தார்கள். மேலும் குறெம்வெல் அவர்களுடைய தினசரி வாழ்க்கையிற்கூடத் தலையிட முற்படவே அவர்கள் வெறுப்பு அதிகரித்தது. குறெம்வெல் இறந்த பின் முதலாம் சாள்ஸின் மூத்த மகனை அரசனுக ஏற்று 1660-ல் மிகுந்த சந்தோஷ ஆரவாரத்துடன் அவனுக்கு முடிசூட்டினர்கள்.

இரண்டாவது சாள்ஸ் மிகுந்த ஆற்றல் படைத்தவன். பல வருடங்களாக நாடு கடத்தப்பட்டு அந்நிய தேசங்களில் சஞ்சரித்து வந்தவனுதலால் அந்நிய நாட்டுச் சீவியத்தின் துன்பத்தை இவன் நன்கு உணர்ந்திருந்தான். ஆதலால் பாராளுமன்றத்தின் விருப்பத்துக்கு மாருக நடந்து மீண்டும் பழைய அனுபவத்திற்கு ஆளாக அவன் விரும்பவில்லை. அவன் அரசனுனதும் நாட்டின் நிலைமையை ஆராய்ந்து பார்த்தான். தனது தந்தையார் பாராளுமன்றத்தின் உரிமைகளில் தலையிட்டுத் தலையிழந்ததை எண்ணினுன். சனங்கள் கைப்பற்றியுள்ள உரிமையைக் கைவிடமாட்டார்களென்று அறிந்தான். 14-ம் லூயி என்ற பேரரசன் பிரான்ஸை எவ்வாறு ஆட்சி செய்தனனே அவ்வாறே தானும் இங்கிலாந்தைக் கட்டி ஆள அவனுக்கு விருப்பமிருந்தபோதிலும், பாராளுமன்றத்தில் அதிக செல்வாக்குடையவரின் சொற்படியும் நடக்க வேண்டியதாயிற்று. இருந்தும் அவர்களோடு இவன் பலகால் பிணங்கியதுமுண்டு. 1681-ம் ஆண்டளவில் பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெற்றபடியால் நான்கு வருடங்களுக்கு பாராளுமன்றமின்றியே ஆட்சி செய்யக்கூடியதாயிருந்தது. சனப்பிரதிநிதி சபையில்லாமல் தியூடர் வம்சத்து அரசர் ஆண்ட காலம் மலையேறிவிட்டது.

இங்கிலாந்தில் இக்காலத்தில் இரண்டு கட்சிகள் ஏற்பட்டன. ஒன்று அரசன் பக்கத்தைச் சேர்ந்த 'டோரி' (Tory) க்கட்சி ; மற்றது அவர்களுக்கு எதிரான 'விக்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Whig) கட்சி. ஆனால் பாராளுமன்றத்தையாவது இங்கிலாந்தின் திருச்சபையையாவது கைவிட ஒரு கட்சிக்கும் விருப்பமில்லை. இரண்டாவது சாள்ஸ் கத்தோலிக்க சமயத்தையே விரும்பினபோதும், புத்தியாக இவ்விரு ஸ்தாபனங்களையும் அகற்றிவிட முயன்றானில்லை. அவனது தம்பியாகிய இரண்டாவது ஜேம்ஸ் அவனுக்குப் பின் 1658-ல் அரசுகட்டிலேறினான். இவனோ ஒரு தீவிரமான கத்தோலிக்கன். இவன் தனது தமையன் கையாண்ட கொள்கைக்கு மாறாக பாராளுமன்றத்தையும் புரட்டஸ்தாந்து சமயத்தையும் நீக்கிவிட முயன்றான். கத்தோலிக்கர்மீது இக்காலத்திலும் நாட்டில் வெறுப்பு இருந்தபடியால் டோரிக் கட்சியினர் ஜேம்ஸை ஆதரிக்க மறுத்தனர். எனவே, ' விக் ' கட்சியார் இவனைத் தேசப் பிரஷ்டம் செய்து, இவனது மகளான மேரி என்பவளையும், அவளது கணவனான நெதலாந்தின் ஐக்கிய மாகாணத்தை ஆண்ட ஒரேஞ்சு வில்லியம் என்பவனையும், அரசியும் அரசனுமாக முடிசூட்டினர். இம்மாற்றத்தையே சரித்திரத்தில் ' 1688-ம் ஆண்டின் புரட்சி' என்று குறிப்பிடுவர். இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து ஆகிய இவ்விரு தேசங்களிலும் உறுதியான பாராளுமன்ற ஆட்சியும் புரட்டஸ்தாந்து சமயமும் எக்காலமும் நிலவுமாறு இப் புரட்சி அடிகோலியது.

## VI. பிரான்ஸிய யுத்தங்கள்

பேராசைக்காரனான 14-ம் லூயியை வலிதொலைக்க வேண்டுமென ஒரேஞ்சு வில்லியம் (மூன்றாவது வில்லியம்) அல்லும் பகலும் முயன்று வந்தான். ஆங்கிலேயரைத் தூண்டி அவனுக்கு எதிராக இரண்டு யுத்தங்களை நடத்தினான். ஆனால் ஆங்கிலேயர் இக்காலங்களில் தமது ' விக் ', ' டோரி ' என்ற கட்சிச் சண்டைகளில் அதிக சிரத்தைகொண்டிருந்தார்கள். இருந்தும் லூயியின் அக்கிரமம் அவர்களை ஈற்றில், போரில் இறங்கச் செய்தது. வில்லியம் இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன் லூயி, இரண்டாவது ஜேம்ஸின் மகனே, ஆங்கில அரசன் என்று அங்கீகரித்ததோடு தனது பேரப்பிள்ளையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்பானிய அரசனுகவும் முடிசூட்டினுன். இது ஆங்கிலேயருக்கு ஆத்திரத்தை யுண்டாக்கிற்று. பிரான்ஸ் இனி எவ்வித கட்டுப்பாடுமின்றி ஸ்பானியருக்குச் சொந்தமான அமெரிக்க தேசங்களோடு வியாபாரம் நடத்தக் கூடியதாயிற்றே என்று ஏங்கினர். ஒரு நூற்றுண்டுக்கு முன் ஸ்பானிய அரசனுன இரண்டாவது பிலிப்பு ஐரோப்பாவுக்கு எவ்வளவு சஞ்சலத்தைக் கொடுத்தானே அவ்வாறே லூயியும் இப்போது கொடுத்தான். இங்கிலாந்து உடனே லூயியுடன் சண்டைக்கெழுந்தது. இதற்கிடையில் வில்லியம் இறந்து போனுன். அவனது மனைவி மேரி ஏற்கெனவே தேகவியோகமாய்விட்டபடியால் அவள் தங்கை அன்னி 1702-ல் அரசியானுள். இவள் இப்போரை நடத்துமாறு ஜோன் சர்ச்சில் என்ற மாள்பரோ பிரபுவை சேனைத் தலைவனுக நியமித்தாள். இவன் மகா பராக்கிரமசாலி. டச்சுக்காரரையும் ஆஸ்திரியரையும் துணைகொண்டு லூயி அரசனுடன் நீண்ட காலமாய் ஸ்பானியா, நெதலாந்தில் யுத்தம் நடத்தி வாகை சூடினுன்.



மூன்ருவது வில்லியம்

ஆரம்பத்தில் 'விக்', 'டோரி' என்ற இரு கட்சியினரும் யுத்தத்தை ஆதரித்தார்கள். ஆனுல் நாளடைவில் டோரிகளுக்கு யுத்தத்திலிருந்த ஆர்வம் குறைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. அவர்கள் பாராளுமன்றத்தில் ஆதிக்கம் பெற்றதும் சேனாதிபதி மாள்பரோவை வேலையினின்றும் நீக்கி, 1713-ல் 'உற்றெச்ட்' சமாதான உடன்படிக்கையைப் பிரெஞ்சுக்காரருடன் செய்தார்கள். அன்னிக்குப் பின் இரண்டாவது ஜேம்ஸின் மகனை முடிசூட்டுவதற்கும் யோசித்தார்கள். அனால் அவர்களுடைய ஏற்பாடுகள் பூரணமாவதற்குமுன் அன்னி ராணி இறக்கவே, 'விக்' கட்சியினர் தீவிர நடவடிக்கையெடுத்து, ஜெர்மனியைச் சேர்ந்த ஹனோவர் சமஸ்தான இளவரசனான ஜோர்ஜ் என்பவனை ஆங்கில அரசனாக்கினார்கள். இவன் ஒரு வழியில் அன்னி ராணிக்குச் சொந்தமானவனே. 1702-ல் நிறைவேறிய ஒரு சட்டத்தின்படியும் அரசுரிமை இவனுக்குச் சொந்தமாயிருந்தபடியால் டோரிகள் ஒன்றுஞ் செய்யமுடியாமற் போய்விட்டது. பாராளுமன்ற ஆட்சியும் தங்களுடைய ஆதிக்கமும் நிலைபெறவேண்டுமென்றால் புரட்டஸ்தாந்து அரசனே முடிசூடவேண்டுமென 'விக்' கட்சியார் கருதியிருந்தனர். ஆனால் இரண்டாம் ஜேம்ஸின் மகன் ஒரு கத்தோலிக்கன். முதலாம் ஜோர்ஜ் அரசுகட்டிலேறியபொழுது நாட்டில் ஒருவித குழப்பமும் ஏற்படவில்லை. இவ்வரசனே இப்போதுள்ள ஆங்கில அரச வம்சத்தின் மூதாதையாவன்.

இன்னொரு விஷயமும் கவனிக்கவேண்டியிருக்கிறது. 1707-ல் இங்கிலாந்து-ஸ்கொட்லாந்து ஐக்கிய சட்டம் நிறைவேறியது. இதன் பிரகாரம் ஏற்கனவே ஒரு மன்னனின் கீழ் ஆளப்பட்டு வந்த இவ்விரு நாடுகளும் ஒரு பாராளுமன்றத்தின் ஆட்சிக்குக் கீழ் வந்தன. இதன் பின் இரு சாதியினரும் பழைய பகையை மறந்து ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்போல வாழ்ந்தனர். ஸ்கொட்லாந்து வாசிகள் பிரித்தானியா, பிரித்தானிய சாம்ராச்சியம் இவை இரண்டின் வளர்ச்சியிலும் அதிக பங்கு எடுத்திருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கியமான ஆண்டுகள்

1485. தியூடர் வம்சத்து ஏழாவது ஹென்றி சிம்மாசன மேறல்.

1534. பாப்பரசரின் அதிகாரத்தை ஹென்றி மீறுதல்.

1558. எலிஸபெத் ராணி சிம்மாசனமேறல்.

1603. ஸ்ரூவெர்ட் வம்சத்து முதலாவது ஜேம்ஸ் சிம்மாசனமேறல்.

1642. உள்நாட்டுக் கலகம் ஆரம்பம்.

1649. முதலாவது சாள்ஸின் சிரச்சேதம்.

1660. இரண்டாவது சாள்ஸ் அரசனாகுதல்.

1688. மங்களப் புரட்சி.

1714. ஹனேவர் தேசத்து முதலாம் ஜோர்ஜ் சிம்மாசனமேறல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறும் அத்தியாயம்

## கீழ்நாடுகளில் போர்த்துக்கீசர்

### 1. முஸ்லிம்களின் வர்த்தகம்

சிலுவை யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி, கீழ்நாடுகளில் முஸ்லிம்களுக்கிருக்கும் ஆதிக்கத்தை அழித்து விடுவதற்கும், கீழ்நாடுகளில் வர்த்தகஞ்செய்து பெரும் பொருளீட்டுவதற்குமே போர்த்துக்கீசர் கீழைத் தேசங்கட்குச் செல்லுவதற்கு ஒரு வழியைக் கண்டுபிடிக்க விரும்பினர்.

கீழைத் தேச வர்த்தகத்தினுல் ஐரோப்பிய நகரங்கள் பல பெருஞ்செல்வமுற்று விளங்கினவென்று ஏற்கனவே நாம் கூறினேம். அலெக்ஸாந்திரியா, கொன்ஸ்தாந்தினேபிள், வெனிஸ், ஜெனேவா ஆகிய இந்நகரங்களெல்லாம் அவ்வாறே செல்வமுற்றன. போர்த்துக்கீசரும் தாங்கள் இந்தியாவுக்குச் செல்ல ஒரு கடற் பாதையைக் கண்டுபிடித்து முஸ்லிம்களிடமிருந்து வர்த்தகத்தையும் கைப்பற்றிவிட்டால் ஐரோப்பாவில், தமது தலைப்பட்டினமாகிய லிஸ்பன் செல்வம் செழித்த ஒரு நகரமாகவும் போர்த்துக்கல் வளம்மிக்க ஒரு நாடாகவும் விளங்குமென்று கருதினுர்கள்.

1498-ல் வாஸ்கொடிகாமா கள்ளிக்கோட்டையை அடைந்தபொழுது கீழைத் தேச வர்த்தகம் முற்ருக முஸ்லிம்கள் ஆதிக்கத்திலேயே இருந்தது. போர்த்துக்கீசர் இம்முஸ்லிம்களை மொரெருக்கோ பிரதேசத்திலேயே முதன்முதலாகச் சந்திக்க நேர்ந்ததால் இவர்கட்கு 'மூர்கள்' (Moors) என்ற பெயரிட்டழைத்தனர். கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியத் தீவுகளிலிருந்து இம்முஸ்லிம்கள் கராம்பு, ஏலம், சாதிக்காய் முதலிய சரக்குகளையும், மலையாளத்திலிருந்து மிளகையும், இலங்கையிலிருந்து கறுவாவையும், சீனுவிலிருந்து பட்டுப்புடைவையையும் வாங்கி ஐரோப்பாவுக்கு அனுப்பி வியாபாரம் நடத்தினர். சோழமண்டலக் கரையிலும், வங்காளத்திலும், கூர்ஜரத்திலுமிருந்து பருத்தித் துணிகளை வாங்கி இலங்கையிலும் கிழக்கிந்திய தீவுகளிலும் விற்றார்கள். 'கம்பாயம்' என்று வழங்கப்படும் துணி ஆதியில் கம்பாயக் குடாக்கடலிலுள்ள கூர்ஜரத் துறைமுகங்களிலிருந்தே வந்திருக்கவேண்டும். கூர்ஜரத்திலும் வங்காளத்திலும் அபின் வாங்கி, முஸ்லிம்கள் சீனுவில் விற்று வந்தார்கள். வங்காளத்திலும் சோழமண்டலத்திலுமிருந்து அரிசி வாங்கி மலையாளத்தில் விற்று அந்நாடுகட்கு மலையாளத்து மிளகை மாற்றினுர்கள்.

தென்னிந்தியாவிலிருந்து சுண்ணக்கல் முதலியன ஏற்றிக்கொண்டு கொழும்புக்கு வரும் சிறு படகுகளைப் போன்ற மரக்கலங்களில்தான் அக்காலத்தில் கடற்பிரயாணம் நடைபெற்றது. இப்படகுகள் கரையோரமாக மாத்திரம் ஓடவில்லை; பெரிய சமுத்திரங்களில் நீண்ட பிரயாணங்கூடச் செய்துவந்தன. இந்த முஸ்லிம் சுடலோடிகள் பருவப் பெயர்ச்சிக்காற்றுகளின் துணைகொண்டே கடலில் யாத்திரை செய்தனர். ஏடென் துறைமுகத்திலிருந்தும் பஸ்ராவிலிருந்தும் மலையாளம், கூர்ஜரமாகிய இடங்கட்குச் சென்றனர். வங்காளத்திலிருந்து மலாக்காவுக்குச் சென்றனர். மலாக்காவிலிருந்து மறுபடியும் மலையாளக்கரைக்கு இக்காற்றுக்களின் துணையால் திரும்பினர். விரைவாகப் பிரயாணம் செய்யவும் இக்காற்றுக்கள் உதவியாயிருந்தன. மேலும் வியாபாரமும் மிக நயமாக நடைபெற்றது.

இக்காலங்களில் தூரகீழ் திசையில் பிரதான வர்த்தகத் தலமாயிருந்தது மலாய்க் குடாநாட்டிலுள்ள மலாக்கா என்னும் பட்டினமே. இக்காலம் சிங்கப்பூர் ஆங்கில வர்த்தகர்க்கு எவ்வளவு முக்கிய ஸ்தலமாயிருக்கிறதோ அவ்வாறே மலாக்காவும் அந்நாட்களில் முஸ்லிம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகர்கட்கு முக்கிய ஸ்தலமாயிருந்தது. கிழக்கிந்திய தீவுகளிலுள்ள கராம்பு, சாதிக்காய் முதலிய சரக்குகள் இங்கிருந்தே ஐரோப்பாவுக்குக் கப்பல்களில் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. சீனு, ஜப்பான், கிழக்கிந்தியத் தீவுகள் ஆதிய இடங்களுக்குச் செல்லுங் கப்பல்கள் இத்துறையைக் கண்டே போகவேண்டியிருந்தன. பகைவரது கப்பல்கள் இக்கடல்களில் வர்த்தகஞ் செய்யாமல் தடுக்க இப்பட்டின வாசிகட்கு வசதியிருந்தது. அடுத்த பெரிய துறைமுகம் கள்ளிக்கோட்டை, மலாக்காவிலும் வங்காளத்திலுமிருந்து வரும் பண்டங்கள் கள்ளிக்கோட்டையிலிறக்கப்பட்டு மறுபடியும் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. சோழமண்டலக் கரையிலிருந்து வரும் சாமான்களும் அக்கரையில் தகுந்த துறையில்லாதபடியால் ஏலக்குன்றுக்கும் நீலகிரிக்குமிடையேயுள்ள பாலைக்காட்டு கணவாய் மூலம் கள்ளிக்கோட்டைக்கு அனுப்பப்பட்டன. எனவே, இத்துறைமுகம் பெரிய வர்த்தகத் தலமாயிருந்தது.

வாசனைச் சரக்குகள், பட்டு வஸ்திரங்கள் ஆகியவற்றை ஐரோப்பாவுக்குக் கொண்டுசெல்வதற்கு இரண்டு மார்க்கங்களிருந்தன. ஒன்று பாரசீகக் குடாக்கடல் மார்க்கம்; மற்றது செங்கடல் மார்க்கம். பாரசீகக் குடாக்கடல் வழியாகச் செல்வோர் பஸ்ராவுக்குப் போய் அங்கிருந்து பாக்டாட்டை அடைந்து அவ்வழியாய் கொன்ஸ்தாந்திநோபிளைச் சேர்வர்; அல்லது மத்திய தரைக் கடலின் கீழைக்கரையான லிவாந்துக்குச் செல்வர். செங்கடல் வழியாகச் செல்வோர் சுவேஸ் மார்க்கமாக கெய்ரோ சென்று அங்கிருந்து அலெக்ஸாந்திரியா போவர்: இவ்விடங்களைக் காட்டும் படத்தைப் பார்ப்பீர்களானுல் ஓர்மஸ் என்ற இடத்திலும் ஏடெனிலும் கப்பல் ஒரு ஒடுங்கிய தொடுவாய் வழியாய்ப் போகவேண்டியிருப்பதைக் கவனிப்பீர்கள். எனவே, பாரசீகக் குடாக்கடல் மூலஞ் செல்லுங் கப்பல்களை ஓர்மஸிலிருந்தும், செங்கடல் வழியாய்ச் செல்பவற்றை ஏடென் கோட்டையிலிருந்தும் கட்டுப்படுத்தக்கூடியதாக இருந்தது. இக்காரணத்தால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர்மஸுும் ஏடெனும் மலாக்காவைப்போல மிகப் பிர தானமான இடங்களாய் விளங்கின.


## II. முஸ்லிம்களதும் போர்த்துக்கீசரதும் கப்பல்கள்

போர்த்துக்கீசர் கீழைத் தேசங்கட்கு வந்தபொழுது வாசனைச் சரக்கு வர்த்தகத்தைத் தம்வசமாக்கிக்கொள்ள விரும்பினரேயன்றி அச்சரக்குகளுற்பத்தியாகும் நாடு களைக் கைப்பற்றவேண்டுமென விரும்பவில்லை. சொற்ப சனங்கள் வாழும் ஒரு சிறிய நாட்டிலிருந்து வரும் தம் போன்ற சாதியார் வலிய அரசர்களை போர்புரிந்து வெற்றிபெறுவது அசாத்தியமென்பதை அவர்கள் நன்கறிந்திருந்தார்கள். எனவே, கீழை நாட்டு வியாபா ரத்தை மட்டும் கைப்பற்றி அதை முற்றாய்த் தமது கையில் வைத்திருக்க எண்ணினார்கள். இதற்கும் அக்காலங் களில் யுத்தமே செய்யவேண்டியதாயிற்று. இக்காலங் களில் மலிவாகப் பண்டங்களைக் கொடுப்பதால் வியாபா ரத்தைக் கைப்பற்றிக்கொள்ளுகிறார்கள். உதாரணமாக ஜப்பானை எடுத்துக்கொள்வோம். இலங்கையின் தேவைக் கான சாமான்களை ஜப்பான் சில வருஷங்களுக்கு முன் மலிவாகக் கொடுக்க ஆரம்பித்தது. அதனால் மற்ற நாட்டுச் சாமான்களைவிட ஜப்பானிய பொருள்களே அதிகம் விலையாயின. இதன் பயனாக ஆங்கிலேயரின் வியா பாரம் குன்றவே, ஜப்பான் பொருள்கள்மீது ஆங்கில அரசாங்கம் அதிக இறக்குமதி வரிகளை விதித்தது. அத் தோடமையாது குறித்த ஓரளவுக்கு மீறி ஜப்பானிய சாமான்களை இலங்கையில் இறக்குமதி செய்யக்கூடா தென்ற கட்டுப்பாட்டையும் விதித்தது. ஆனால் முற் காலங்களில் இம்மாதிரி நடைபெறவில்லை. வியாபாரத் தில் போட்டியிடுவோர் ஒருவரோடொருவர் போர் செய் தனர். அவ்வாறே போர்த்துக்கீசரும் முஸ்லிம் வியாபாரி களுடன் சண்டையிட்டு அவர்களை இந்து சமுத்திரத் தினின்றும் கலைக்க முயற்சி செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கீசரின் கப்பல்கள் மிகத் திறமையுடையன வாயிருந்தன. அதனால் முஸ்லிம்களை வெல்வது அவர்களுக்கு இலேசாயிருந்தது. முஸ்லிம்கள் சிறந்த கடலோடிகளாயிருந்தபோதிலும் அவர்களுடைய கப்பல்கள் அவ்வளவு சிறந்தனவல்ல. காற்றோட்டத்துக்கு எதிராய் ஓடும் திறமை அவைகளுக்கிருக்கவில்லை. கடலில் புயல் கிளம்பினால் அக்கப்பல்கள் சமீபத்துள்ள துறைமுகத்தைத் தேடி ஓடிவிடும். அன்றியும் பீரங்கிகளைத் தாங்கக் கூடிய திண்மையற்றனவாயுமிருந்தன. பீரங்கியினதிர்ச்சியாலேயே அவைகள் உடையக் கூடியனவாயிருந்தன.



ஒரு போர்த்துக்கீச கப்பல்

ஆனால் போர்த்துக்கீசரோ முதல் தரமான கப்பல்களும் அவற்றுக்கேற்ற உபகரணங்களுமுடையவராயிருந்தனர். கடலோடு முறையிலுமவர்கள் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார்கள். சாஸ்திரீகமான முறையில் கப்பல்களைக் கட்டி, அவற்றுக்குத் தேவையான உபகரணங்களையும் புது முறையில் செய்து வந்தார்கள். அதனால் கண்ணுக்கெட்டாத நெடுந்தூரம் பிரயாணஞ் செய்வதற்கும், பெரும் புயல்களைத் தாங்குவதற்கும், பீரங்கிகளை ஏற்றி வெடிவைப்பதற்கும் அக்கப்பல்கள் ஏற்றவையாயிருந்தன. அவர்களுடைய கப்பலில் சுமார் 60 பேர் பிரயாணஞ் செய்யவும், பலமாசப் பிரயாணத்துக்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுகளைக் கொண்டுசெல்லவும் வசதியிருந்தது. எனவே, போர்த்துக்கீசரோடு எதிர்நிற்க முஸ்லிம் வியாபாரிகளால் முடியாமற் போய்விட்டது.

## III. போர்த்துக்கீசரின் வியாபாரம்

கள்ளிக்கோட்டை அரசனுன ஸாமோரின் என்னும் இந்து ராசா முஸ்லிம்களுடன் வியாபாரஞ் செய்வதைத் தடுப்பதற்குப் போர்த்துக்கீசர் முதலில் முயற்சி செய்தனர். ஆனுல் ஸாமோரின் அவர்கள் விருப்பத்துக்கு இணங்க மறுக்கவே, அவர்கள் அவனுடைய பகையரசனுன கொச்சி ராசாவிடஞ் சென்றனர். (சோழ மண்டலத்திலிருந்து வரும் பொருள்களை ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு கொச்சியும் ஒரு துறைமுகமாயிருந்து வந்தது). அது முதல் முஸ்லிம் வியாபாரிகளையும் அவர்களோடு வர்த்தகஞ் செய்யும் துறைமுகங்களையும் போர்த்துக்கீசர் தாக்கி வந்தார்கள். இதன் பயனுக அவர்களுக்கும் கள்ளிக்கோட்டை அரசனுக்கும் போர் உண்டானது. இம்மாதிரியான போர்நிலையைக் கண்ட போர்த்துக்கீசர், தங்களுடைய வியாபாரத்தை நிலைநிறுத்துவதற்கும் துணையரசர்களுக்கு உதவி செய்வதற்கும் ஒரு நிரந்தரமான சேனையைத் தாபிக்க எண்ணினுர்கள்.

எனவே, 1505-ம் ஆண்டில் பெரிய ஒரு கடற்படையுடனும் சேனையுடனும் பிரான்ஸிஸ் டி அல்மேயிதா என்பவனை இந்தியாவிலிருக்குமாறு போர்த்துக்கீசர் அனுப்பினுர்கள். அவன் கொச்சியில் காரியாலயம் வகுத்து அங்கேயே இருந்துகொண்டு போர்த்துக்கீசருடன் மாத்திரம் வியாபாரஞ் செய்ய விரும்பிய இந்திய மகாராசாக்களோடு உடன்படிக்கை செய்தான். தற்பாது காப்புக்காக அவர்களுடைய சமஸ்தானங்களில் கோட்டைகளும் கட்டினுன். மலையாளக் கரையில் நடைபெறும் வியாபாரம் முழுவதையும் போர்த்துக்கீசர் வசமாக்கி விடவேண்டுமெனவும் முஸ்லிம்களை அப்பகுதியிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரத்திவிடவேண்டுமெனவும் அல்லும் பகலும் முயற்சி செய்து வந்தான்.

அல்மேயிதாவின் முயற்சிகள் இருந்திருந்து வேறு பல கிளர்ச்சிகளை உண்டாக்கின. முஸ்லிம்கள் வியாபாரம் நடத்தும் நாட்களில் மிளகு முதலிய வாசனைச் சரக்குகளைச் செங்கடல் மார்க்கமாக ஐரோப்பாவுக்குக் கொண்டுசென்றனர். அக்காலத்தில் எகிப்தில் அரசு நடத்திய மாமலூக் சுல்தான் என்பவன் செங்கடல் வழியாய்ப் போகும் சரக்குகளுக்கு ஒரு சுங்கவரி விதித்து ஏராளமான பொருள் பெற்றான். போர்த்துக்கீசர் கையில் வியாபாரம் சிக்கினதும் அவர்கள் செங்கடல் மார்க்கத்தை விடுத்து நன்னம்பிக்கை முனை வழியாய்ச் செல்லவே சுல்தானுக்கு வருவாய் குன்றியது. அன்றியும் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து வந்த வாசனைச் சரக்குகளையும் போர்த்துக்கீச கடலோடிகள் ஆறலைத்துச் சூறைகொண்டபடியால், அதனாலும் எகிப்திய சுல்தானின் வருவாய் குன்றியது. மத்தியதரைக் கடலிலுள்ள அலெக்ஸாந்திரியா முதலிய துறைகளில் வந்திறங்கும் வாசனைச் சரக்குகளை ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்து வர்த்தகம் நடத்திவந்த வெனிஸ் வர்த்தகர்களின் வருவாயும் குன்றியது. இந்தியாவில் கூர்ஜரம், பிஜாப்பூர் ஆகிய சமஸ்தானாதிபதிகளும், போர்த்துக்கீசர் தங்களுடைய வியாபாரத்திலும் தலையிடுவார்களோவென எண்ணிப் பயப்பட்டனர்.

எனவே, வெனீசியரும் குஜராத்தியரும் போர்த்துக்கீசருக்கெதிராகப் போர் தொடுக்குமாறு எகிப்திய சுல்தானைத் தூண்டினர். அதனால் 1507-ல் அவன் கூர்ஜரக் கரையிலுள்ள டியூ என்னும் தீவுக்கு ஒரு கடற்படையை அனுப்பினான். அப்படை அல்மேயிதாவின் மகனான லொறன்ஸோ என்பவன் தளபதியாய் நின்று செலுத்திய போர்த்துக்கீசப் படையை எதிர்த்துக் கொஞ்சக் காலம் அவர்களுடைய ஆதிக்கத்தைக் குன்றச்செய்தது. ஆனால் 1509-ல் போர்த்துக்கீசர் இப்படையை முறியடித்துப் பழையபடி தங்கள் ஆதிக்கத்தைப் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழைத் தேச வர்த்தகத்தைக் கைப்பற்றுதற்கு அல்மேயிதா அனுட்டித்துவந்த கொள்கை ஏற்றதல்ல வென்பதும், போர்த்துக்கீசர் புதிய கஷ்டங்களுக்காளாக வேண்டியிருந்ததென்பதும் இப்போரினுல் தெரிய வந்தது. மேலும் மலையாளக் கரையைக் காவல் செய்வதனுல் மாத்திரம், கீழைத் தேச வர்த்தகத்தில் ஏகபோக உரிமையை அவர்கள் பெறக்கூடியதாயிருக்கவில்லை. அன்றியும் வேறு துணையின்றிக் கடற் படைத்துணை மட்டும் கொண்டு இந்து சமுத்திரத்தின் பல பாகங்களிலும் ஒரே முறையில் ஆதிக்கஞ் செலுத்தவும் முடியாதிருந்தது. எனவே, அல்மேயிதாவுக்குப் பின் ராஜப்பிரதிநிதியாய் நியமிக்கப்பட்ட அல்புக்கூர்க்கே ஒரு புதிய கொள்கையை அனுசரித்தான். இந்திய சமுத்திரம் முழுவதையும் தங்கள் அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவதற்குத் தேவையான இடங்கள் யாவற்றையும் கைப்பற்றவேண்டுமென்றும், கொச்சி ராசாவின் தயவில் நம்பியிராமல் தனக்கென ஒரு வேறுன தலைமைக் காரியாலயம் அமைக்க வேண்டுமெனவும் நிச்சயித்தான்.



அல்புக்கூர்க்கே

இந்நோக்கத்தோடு **1510**-ல் வடக்கேயுள்ள கோவை யென்னுந் தீவைக் கைப்பற்றி அங்கே பாசறை அடித்தான். அத்தீவு சிறந்த ஒரு துறைமுகத்தையுடையதாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பெரும் வியாபாரத் தலமாயிருந்தது. மேலும் கடல் சூழ்ந்த தீவாயிருந்தபடியால் போர்த்துக்கீசக் கடற்படை இந்து சமுத்திரத்தில் ஆதிக்கஞ் செலுத்தும்வரை பகைவர் அத்தீவை இலேசாய்த் தாக்க முடியாமலுமிருந்தது. அல்புக்கூர்க்கே ஏற்கெனவே சோகொத்ரா என்ற தீவையும் ஓர்மஸ் என்ற தீவையுங் கைப்பற்றி அங்கே கோட்டைகளுங் கட்டியிருந்தான். இக்கோட்டைகளின் துணையைக்கொண்டு செங்கடலிலும் பாரசீகக் குடாக் கடலிலும் நடைபெற்ற வியாபாரத்தைக் கட்டுப்படுத்திப் பகைவர் சஞ்சலமின்றியிருந்துவந்தான். சீன தேசத்தோடும் கிழக்கிந்தியத் தீவுகளோடும் வர்த்தகஞ் செய்வதற்கு உதவியாயிருந்த மலாக்கா என்னும் இடத்தை 1511-ல் பிடித்தான். ஏடென் என்ற இடத்தைக் கைப்பற்றத் தவறியபோதிலும், சொகோத்திரா அவன் வசமிருந்ததால் அங்கேயும் அவன் ஆணை சென்றது.

இந்து சமுத்திரத்தில் தமது ஆதிக்கம் வலியுற்றதும் போர்த்துக்கீசர் தூர கீழ்த்திசையிலும் தமதுசெல்வாக்கைப் பரப்ப எண்ணினார்கள். பிலிப்பைன் தீவுகளுக்குத் தெற்கேயுள்ள மொலுக்காஸ் என்னும் தீவுகளையும் கைப்பற்றி அங்கிருந்து கராம்பு, சாதிக்காய் முதலிய சரக்குகளை ஏற்றுமதி செய்தனர். அடுத்ததாக சீனுவிலுள்ள கான்ரன் என்னும் பட்டினத்திற்குத் தெற்கேயுள்ளதும் ஹொங்கொங் என்னுமிடத்துக்கு மேற்கேயுள்ளதுமான மக்காவோ என்னுந் தீவையுங் கைப்பற்றினர். இத்தீவிலிருந்து சீனுவுக்கு அபினும் வாசனைச் சரக்கும் கொடுத்து அங்கிருந்து பட்டும், தேயிலையும், மட்பாண்டங்களும் பெற்றனர். 1542-ல் போர்த்துக்கீசர் ஜப்பானுக்குச் சென்றார்கள். யுத்த வெறி பிடித்திருந்த ஜப்பானியர் போர்த்துக்கீசர் கொண்டுவந்த வெடிமருந்தையும் துப்பாக்கிகளையும் வாங்குவதற்காக அவர்களை வரவேற்றார்கள்.

ஏற்கெனவே போர்த்துக்கீசர் வங்காளக் குடாக்கடலைச் சிறிது சிறிதாகத் தம்வசமாக்கி வந்தனர். ஆனால் வட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்ப் பருவப் பெயர்ச்சிக்காற்றுக் கிளம்பினுல் கப்பல்கள் ஒதுங்குவதற்கும், பழுதடைந்த கப்பல்களைத் திருத்து வதற்கும் இங்கே ஏற்ற துறைகளில்லாதது பெருங் குறையாயிருந்தது. 1518-ல் இலங்கைக் கறுவா வியாபா ரத்தைக் கைப்பற்றுவதற்காக கொழும்பில் ஒரு கோட்டை கட்டினுர்கள். வங்காளக் குடாவை காவல் செய்வதற் குக் கொழும்பும் மலாக்காவும் போர்த்துக்கீசருக்குப் பெரிய அரணுக விளங்கின. சிறிது காலத்தில் சோழமண்டலக் கரையிலும், வங்காளத்திலுள்ள ஹுக்லி யிலும், அரக்கன் கடற்கரையிலும் அவர்கள் வேறு காரி யாலயங்களைத் தாபித்தார்கள்.



இந்தியாவில் கடைசியாகப் போர்த்துக்கீசர் கைப்பற்றிய இடம் கூர்ஜரப் பகுதியாகும். 1517-ல் துருக்கியர் எகிப்தைக் கைப்பற்றியதும் அவர்கள் கூர்ஜரத்தோடு சேர்ந்து தங்களைத் தாக்குவர்களோ என்று போர்த்துக்கீசர் பயப்பட்டனர். மேலும் தமது வர்த்தகத்தையும் குலைத்து விடுவார்களோ என்றும் நினைத்தார்கள். எனவே, அந்நாட்டொட்டுக் கூர்ஜரத் துறைமுகமொன்றைக் கைப்பற்றவேண்டுமெனவும், அப்பகுதியின் வியாபாரத்தையும் தம்வசப்படுத்தவேண்டுமெனவும் முயற்சி செய்தார்கள். அதிக நாளாக அவர்கள் விரும்பியிருந்த டியூ என்னுந் தீவுத் துறை 1535-ல் அவர்கள் கையில் சிக்கியது. துருக்கியரின் துணைக்கொண்டு கூர்ஜர வாசிகள் அத்தீவை மீட்டுவிட எத்தனித்துப் பல முறை தோல்வியடைந்தனர். 1546-ன் பின் இம்முயற்சியில் அவர்கள் ஈடுபடவில்லை. அந்நாட்டொட்டு 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வருடமாக போர்த்துக்கீசர் சஞ்சலமின்றி வியாபாரம் நடத்தி வந்தார்கள்.

## IV. இந்தியாவில் மொகலாயர் ஆட்சி

இந்திய அரசர்கள் ஒருவர்க்கொருவர் கலகம் விளைத்து வந்தமை போர்த்துக்கீசருக்கு வாய்ப்பாயிருந்தது. இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி நடைபெற்றதைப்பற்றியும் இபின் துக்லக் என்ற முஸ்லிம் ராஜன் இறந்த பின் ஒன்றுபட்டிருந்த இந்திய ராச்சியம் சிறு சிறு இராச்சியங்களாய்ப் பிரிந்ததைப்பற்றியும் ஏற்கெனவே நாம் கூறியுள்ளோம். 15-ம் நூற்றுண்டின் இறுதியிலும் இந்நிலைமையில் மாற்றம் ஏற்படவில்லை. டில்லியில் அரசாண்ட ஆப்கானிஸ்த அரசன் வட இந்தியாவை மாத்திரமே ஆட்சி செய்து வந்தான். மேற்கேயுள்ள கூர்ஜரம் தனி ராச்சியமாய்ப் பிரிந்திருந்தது. தக்கிணத்தில் பல முஸ்லிம் அரசுகள் விளங்கின. அதன் தென்பாகம் முழுவதும் விஜயநகர இந்து சாம்ராஜ்ஜியத்தில் அடங்கியிருந்தது. விஜயநகரச் சக்கரவர்த்தி பிஜாப்பூரையாண்ட முஸ்லிம் அரசனுடன் அடிக்கடி சண்டையிட்டு வந்தான். இவ்விரு அரசரின் ஒற்றுமையீனம் போர்த்துக்கீசருக்குத் துணையாயிருந்தது. எனவே, மாறுபட்ட இவ்விரு இராச்சியங்களுக்குமிடையிலுள்ள கோவையை அவர்கள் இலேசாய்க் கைப்பற்றினர். மலையாள ராச்சியத்தைப் பல குறுநில மன்னர் ஆண்டு வந்தனர். இவர் தம்முள் பொருமையுற்றுச் சண்டை செய்தனர். கள்ளிக்கோட்டையை ஆண்ட ஸாமோரின் என்ற அரசனுடன் போர்த்துக்கீசர் பகைத்தபொழுது கொச்சி ராஜா அவர்களுக்கு துணைபுரிந்ததை ஏற்கனவே அறிந்திருக்கிறேம். எனவே, தம்மை எதிர்க்கக்கூடிய வல்லரசு இல்லாததினுலும், குறுநில மன்னர் தம்முள் தாமே பிணங்கிச் சண்டை செய்ததினுலும் கீழ்நாடுகளில் போர்த்துக்கீசர் தமது ஆட்சியை வலியுறத் தாபித்தார்கள்.

ஆனல் இதே நிலைமை எப்பொழுதுமிருந்து வரவில்லை. 1565-ல் தக்கிணத்திலுள்ள முஸ்லிம் சமஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானங்களெல்லாம் ஒன்றுசேர்ந்து விஜயநகர ராச்சியத்தை வலிதொலைத்தன. பிஜாப்பூர் அரசனது தென்றிசைச் சத்துரு அழியவே, அவன் 1570-ல் கோவையை முற்றுகையிட்டான். அதே காலத்தில் கூர்ஜரத்தைத் தன்னடிப்படுத்திய மொகலாய வல்லரசு இந்தியாவில் போர்த்துக்கீசருக்குச் சொந்தமாயிருந்த துறைகளையெல்லாங் கைப்பற்றியது.



அக்பர்

இம்மொகலாயர் இந்தியாவில் சக்கரவர்த்திகளாகச் சிலகாலம் இருந்து வந்தார்கள். இவர்களில் முதல் மொகலாயச் சக்கரவர்த்தி டில்லியில் அரசாண்ட ஆப்கானிஸ்த அரசனை வென்று வட இந்தியா முழுவதுக்குந் தனியரசனானன். இச்சந்ததியின் மூன்றும் அரசனே புகழ்பெற்ற அக்பர் சக்கரவர்த்தி (1556-1605) என்பான். இவன் 1556-ல் அரசுகட்டிலேறினன். இந்தியாவையாண்ட பெரிய சக்கரவர்த்திகளுள் இவனும் ஒருவன். முஸ்லிம் அரசருளெல்லாம் இவனே தலைசிறந்தவன். இவன் வட இந்திய 'சக்கரவர்த்தியான தோடமையாது, மகாநதிக்குக் கீழுள்ள தக்கிணத்திலும் சில பகுதிகளைக் கைப்பற்றினன்.

பொதுவாக இஸ்லாமிய அரசர் இந்து ராஜாக்களைப் போலல்லாது தம்மதத்தவர்க்கு விசேஷ சலுகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியும், சில சமயங்களில் அந்நிய மதத்தவரை வதைத்தும் வந்தார்கள். ஆனால் அக்பர் தாராள மனப்பான்மையுடன் இந்துக்களையும் தன் மதத்தவரைப் போலவே போற்றி வந்தான். ராஜபுத்தானத்து இந்து இளவரசிகளைக்கூட மணந்தான். இந்து ராஜ வம்சங் களோடு ஐக்கியமாகவும் வாழ்ந்து வந்தான்.

அக்பர் சிறந்த நிர்வாகத் திறமை படைத்தவன் அக்காலத்தில் ஆண்டு வந்த ஏனைய கீழை நாட்டரசரைப் போல அவன் சர்வாதிகாரியாயிருந்தபோதிலும் அவனு டைய ஆட்சி மொத்தத்தில் குடிகளுக்கு நன்மையையே கொடுத்தது. நாட்டுச் சட்டங்களெல்லாம் தனது அதி காரத்துக்குக் கீழ்ப்பட்டன என்றெண்ணித் தான் நினைத்த படி அவன் நடந்தபோதிலும் அரசியல் நிர்வாகத்தைத் தகுதியுள்ள உத்தியோகஸ்தரிடம் ஒப்புவித்தான். மாகாணங்களொவ்வொன்றும் ஒவ்வொரு சேனாதிபதிகள் வசம் ஒப்புவிக்கப்பட்டன. அவர்கள் தாம் வசூலிக்கும் வரியைக்கொண்டு அரசனுக்கு ஒரு தொகை சேனையை வழங்கி வந்தார்கள்.

இவ்வாறு அக்பர் பெரிய சேனையை வைத்து நாட்டில் சமாதானமும் திருந்திய ஒழுங்கும் நிலவச் செய்தான். ஆனால் அவனிடம் ஒரு கடற்படையில்லாதது பெருங் குறையாயிற்று. இக்குறையினால் கடலிலுந் தனது ஆணை யைச் செலுத்த முடியாமல் போர்த்துக்கீசக் கடற்றுறை களை எதிர்த்தபொழுதெல்லாம் தோல்வியடைந்தான். அக்பருக்குப் பின் அவனது மகனான ஜெஹாங்கீர் அரசனானான்.

அக்பரின் பேரனான ஷாஜஹான் (1627-1658) என்ப வனே தாஜ்மஹால் என்ற சிற்பக் கழஞ்சியத்தைக் கட்டி முடித்தவன். மும்தாஸ் மஹால் என்ற அவனது மனைவி யின் ஞாபகார்த்தமாகவே அது எழுந்தது. ஷாஜஹா னது மகனான அவுரங்கசீப் என்பவனும் சிறந்த அரசன். ஆனால் அக்பரைப்போன்ற சமயச் சகிப்புத்தன்மை யுடையவனல்ல. தன் மதமே சிறந்ததென்று அதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக பற்றுடையவனுயிருந்ததுடன் இந்துக்களைத் துன் புறுத்துவது தனது கடமையெனவுமெண்ணினன். இஸ் லாமிய மதத்தைப் பரப்புவதற்காக இந்துக் கோயில்களை இடித்தான். இந்துக்களை இஸ்லாம் மார்க்கத்துக்குத் திருப்புவதற்காக முஸ்லிம்களுக்குச் சலுகை காட்டினன். இந்துக்களுக்கு அரசாங்க உத்தியோகங்களை மறுத்தான். அவர்கள்மீது விசேஷமான ஒரு தலைவரியை விதித்தான். இந்து வர்த்தகர்மீது அதிகமான சுங்கத் தீர்வையை ஏற்படுத்தினன்; ஏற்படுத்தி அவர்கள் வியாபாரத்தில் தலையெடுக்கவிடாது தடுத்தான்.

இவ்வாருன ஆட்சி இந்துக்களிடையே அதிருப்தியை உண்டாக்கிற்று. பல இடங்களில் குழப்பங்களுண்டாயின. கூர்ஜரத்தின் தெற்கேயுள்ள மகாராஷ்டிரர் பல குழப்பங்களை உண்டாக்கினர். சிவாஜி என்ற மகாராஷ்டிர வீரன் தோன்றி ஒரு இந்து ஏகாதிபத்தியத்தைத் தாபிக்க முயன்றுன். இவன் தனது காலத்தில் மகாராஷ்டிர ஏகாதிபத்தியமொன்றைத் தாபித்து, திறமையுள்ள ஒரு நிர்வாக முறையையும் நிலைநாட்டி 1680-ல் இறந்தான். அடுத்த ஆண்டில் அவுரங்கசீப் தானுகவே சேனையைச் செலுத்திக்கொண்டு மகாராஷ்டிரரை எதிர்த்தும் அவ் வீரரைப் புறந்தர முடியவில்லை. மகாராஷ்டிரருக்கெதி ராய்த் தனக்குப் படைத்துணை புரியாத பிஜாப்பூர், கோல் கொண்டா ஆகிய தேசங்களோடு சண்டைசெய்து அவற் றைப் புறந்தந்தான்.

அவுரங்கசீப்புக்குப் பின் வந்த அரசர்கள் வலிமையற்ற வரும் ஆளுந்திறமை யில்லாதவர்களுமாயிருந்தார்கள். அதனுல் தம் நாடுகளை அடக்கியாள முடியாது போகவே மகாராஷ்டிரர் ஆதிக்கம் எங்கும் பரவிற்று. எனவே, முஸ்லிம் சக்கரவர்த்திகளின் கீழ் சமஸ்தானங்களை ஆண்டு வந்த சிற்றரசர் நாளடைவில் சுதந்திரம் பெற்றுத் தனி யரசராகப் பிரிந்தார்கள்.

போர்த்துக்கீசர் இந்தியாவுக்கு வந்த காலத்தில் மொகலாய ராச்சியமிருந்திருக்குமானுல் இந்தியத் துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகங்களை அவர்கள் இலேசாகக் கைப்பற்றியிருக்கமாட்டார்கள். ஆனால் அவர்களுடைய கடற்படையே அவர்கட்குப் பெருந்துணையாயிருந்தது. 1570-ல் அவர்களுடைய கடற்படையின் வலிமை சிறந்திருந்ததினால் தரைப்படையை மட்டும் வைத்திருக்கும் எந்த வல்லரசும் அவர்களை அவர்களேற்கெனவே கைப்பற்றியிருந்த இடங்களிலிருந்து துரத்தக்கூடிய நிலைமையிலிருக்கவில்லை. ஏடெனைத் தவிர்ந்த மற்றைய விசேஷ துறைமுகங்களையெல்லாம் அவர்கள் கைப்பற்றியதினால் இந்து சமுத்திரத்தில் அவர்களனுமதியின்றி வேறு கப்பல்கள் வியாபாரஞ் செய்ய முடியாதிருந்தன. இதனால் ஐரோப்பாவுக்குங் கீழ்நாடுகட்குமிடையே நடந்த வர்த்தகத்தை போர்த்துக்கீசர் தமது கைவசம் வைத்திருந்ததுமல்லாமல், இந்தியத் துறைமுகங்களுக்கிடையில் பரஸ்பரம் நடந்து வந்த வர்த்தகமும் அவர்களுடைய ஆதிக்கத்திலேயே இருந்தது.

## V. கிறிஸ்தவ சமயம் பரவுதல்

தாம் சென்ற சென்ற இடங்களிலெல்லாம் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பவேண்டியது தமது கடமையெனப் போர்த்துக்கீசர் எண்ணினர். ஆனால் தொடக்கத்தில் அவர்கள் தமது அரசியல் ஆதிக்கத்தை நிலைபெறச் செய்வதற்கே முயன்று வந்ததால் சமயத்தைப் பரப்புவதில் கருத்துக்கொள்ளவில்லை. இக்காலங்களில் மதபோதகர்களும் அதிகமாக கீழைத் தேசங்கட்கு வரவில்லை. வந்த சில குருமார்கள்கூட போர்த்துக்கீச கிறிஸ்தவர்கள் சம்பந்தப்பட்டவரையில் மாத்திரமே தமது கடமைகளைச் செய்து வந்தனர்.

1521-ல் போர்த்துக்கலுக்கு அரசனான மூன்றாவது ஜோன் கிறிஸ்தவ சமயத்தைக் குருமார்மூலம் பரப்பப் பெரிதும் முயற்சிசெய்தான். எனவே, கீழைத் தேசங்கட்கு ஏராளமான குருமார் வந்தனர். இவ்வாறு வந்த குருமார் பிரான்ஸிஸ் சபை, டொமினிக் சபை, யேசு சபை எனப் பெயர்கொண்ட பல தாபனங்களைச் சேர்ந்தவராயிருந்தார்கள். இவர்கள் இந்தியாவில் தமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரான்ஸிஸ் சபைச் சந்நியாசி

மார்க்கத்தைப் பரப்பினர். பிரான்ஸிஸ் சபையினரும் டொமினிக் சபையினரும் 'சகோதரர்' (Friar) என்ற வகுப்பைச் சேர்ந்த சந்நியாசிகள்.

சிலுவை யுத்தத்தின் பின் ஏற்பட்ட சமயப் புனருத்தாரணத்தின் பயனாக அஸிஸியூர் பிரான்ஸிஸ் (1170-1221) என்ற மதத்தலைவர் விளங்கி பிரான்ஸிஸ் சபையை ஸ்தாபித்தார். டொமினிக் (1182-1225) என்ற மதத்தலைவர் விளங்கி டொமினிக் சபையை நிறுவினார். இச்சபைகளைச் சேர்ந்த 'சகோதரர்' பிரமசாரிய விரதமனுட்டித்துத் துறவிகளாய் வறுமையான, எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். அவர்கள் கரடுமுரடான துணியினால் தைக்கப்பட்ட சட்டையணிந்து, அவற்றின் மேல் அரையில் கயிறு கட்டிக் கொண்டு, காலில் பாதரட்சையின்றி உலாவி வந்தனர். ஆனால் வேறு சில சந்நியாசிகளைப்போல அவர்கள் உலகத்தை வெறுத்துக் காட்டுக் கோடவில்லை. உலகத் தவரது நன்மைக்காகவும் இரட்சிப்புக்காகவும் அவர்களோடிருந்து உழைத்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனர். இவர்கள் பௌத்த பிக்குகள்போல ஊரூராய்த் திரிந்து, பிச்சையெடுத்துச் சாப்பிட்டுக்கொண்டு வறியோர், பிணியாளராகியோரைத் தேடிப்பிடித்து அவர்கட்கு உதவி செய்து வந்தார்கள்.

அமெரிக்காவைக் கண்டுபிடித்தமையும், இந்தியா செல்ல ஒரு புதிய கடல் மார்க்கம் ஏற்பட்டமையும் பிரான்ஸிஸ் சபையாரிடையே பெரிய ஊக்கத்தை உண்டாக்கின. தமது சமயத்தை அந்நிய தேசமெங்கும் பரப்பலாமென அவர்கள் சந்தோஷங்கொண்டு வெளி நாடு சென்ற கடற் பிரயாணிகளோடு அவர்களும் கூடப் போனார்கள்.

இயேசு சபை என்ற இன்னொரு சந்நியாச வர்க்கம் இக்னேஷஸ் லோயலா என்பவரால் தாபிக்கப்பட்டதென ஏற்கனவே கூறினோம். இவருடைய தோழரான பிரான்ஸிஸ் சேவியர் 1543-ல் இந்தியாவுக்கு வந்து மதப் பிரசாரஞ் செய்துகொண்டிருந்தார். தென் இந்தியாவில் இவர் பன்னூற்றுக்கணக்கானவரை கிறிஸ்து மதத்திற்குத் திரும்பச் செய்த பின் ஜப்பானுக்கு யாத்திரை செய்தார். அங்கேயும் அநேக ஆயிரம் பேர் இவருடைய மதத்தைத் தழுவினார்கள்.

இவ்வாறு கிறிஸ்து மதம் அந்நிய நாடுகளில் பரவவே அத்தேச அரசர்கள் தமது பிரஜைகள்மீது தமக்கிருக்கும் அதிகாரம் குறைந்துவிடுமோ எனப் பயந்தனர். எனவே, குருமாரின் மதப்பிரசாரத்திற்கு அடிக்கடி எதிர்ப்பு ஏற்பட்டது. உதாரணமாக ஜப்பானில் கிறிஸ்தவ குருமார் நாட்டை விட்டுக் கலைக்கப்பட்டதுடன் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய பிரஜைகளும் துன்புறுத்தப்பட்டனர். அதனால் கிறிஸ்து மார்க்கம் அங்கிருந்து மறைந்தது.

## VI. கீழைத்தேசங்களில் போர்த்துக்கீச நிர்வாகம்

இந்தியாவிலும் மற்றைய கீழைத்தேச நாடுகளிலும் போர்த்துக்கீசருக்கிருந்த தேசங்களை ஆட்சி செய்ய ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜப்பிரதிநிதி நியமிக்கப்பட்டான். இவன் கோவையிலிருந்து அரசாங்க அலுவல்களைப் பார்த்து வந்ததுடன் வர்த்தகத்தையும் மேற்பார்வை செய்தான். போர்த்துக்கல் அரசனால் நியமிக்கப்படும் இவ்விராசப்பிரதிநிதியே அரசியல், வியாபாரம், யுத்தம் சம்பந்தமான விஷயங்களில் ஆஞ்ஞை பிறப்பித்தான். இவனிட்டதே கட்டளை. இராச்சிய அதிகாரம் முழுவதும் இவன் கையிலிருந்தது. இவனுக்குத் துணையாக நீதிபதிகள் சிலர் வழக்கு விசாரணை நடத்தி வந்தனர். போர்த்துக்கீசர் பிரதானமாக வியாபாரத் தொழிலில் ஈடுபட்டிருந்ததால் கப்பல்கள் அதிகம் வேண்டியிருந்தன. அக்கப்பல்களை மேற்பார்வை செய்வதற்கு ஒரு உத்தியோகத்தன் நியமிக்கப்பட்டான். இவன் புதுக் கப்பல்கள் கட்டுவதையும் உடைந்த கப்பல்களைப் பழுது பார்ப்பதையுங் கவனித்து வந்ததுடன், போர்த்துக்கீசருக்குத் தேவையான உணவு, உடை முதலிய பொருள்களையும் மேற்பார்வை செய்தான். வியாபாரத்துக்கு அவசியமான புதுக் காசுகளை அடிப்பதற்கும் இவனே பொறுப்பாளியாயிருந்தான்.

பல திக்குகளிலுஞ் சிதறிக்கிடக்கும் போர்த்துக்கீச நாடுகளை ராஜப்பிரதிநிதி ஒருவனே நிர்வகித்து வருவதென்றால் விரைவான போக்குவரவுச் சாதனங்களில்லாத அக்காலங்களில் கஷ்டமாகவேயிருந்தது. கப்பற் பிரயாணம் நீண்ட நாட்களையெடுத்தது. எனவே, அரசாங்க நிர்வாகத்தை நடத்துவதற்காக அங்கங்கே தேசாதிபதிகள் நியமிக்கப்பட்டனர். ராஜப்பிரதிநிதி அவர்களை மேற்பார்வை செய்து வந்தான். இவ்வாறான கிளை அரசாங்கங்கள் ஆபிரிக்காவில் மொஸாம்பிக் என்ற இடத்திலும், ஈரானில் ஓர்மஸிலும், கொழும்பிலும், மலாய்க் குடாநாட்டில் மலாக்காவிலும் தாபிக்கப்பட்டன.

கீழைத்தேசங்களில் தாபிக்கப்பட்ட போர்த்துக்கீச ஆட்சியை 16-ம் நூற்றாண்டில் போர்த்துக்கலிலுள்ள அதிகாரிகள் மேற்பார்வை செய்யவில்லை. 1604-ல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கீசருடைய கீழ்நாடுகளின் அரசியல் பரிபாலனத்தைக் கண்காணிப்பதற்காக 'கீழ்நாட்டுப் பரிபாலன சபை' என்ற ஒரு சங்கம் நிறுவப்பட்டது. ஆனால் இதற்கு முந்தியே போர்த்துக்கீசரின் கிழைத்தேச ஆதிக்கம் வலிகுன்ற ஆரம்பித்துவிட்டது. போர்த்துக்கல் போன்ற ஒரு சிறிய தேசத்துக்குக் கீழ்நாடுகளிலும் அமெரிக்காவிலுமாகத் திக்கெல்லாம் ராச்சியங்களை வைத்துப் பரிபாலிப்பது முடியாத காரியமாயிற்று. மேலும் அடுத்தடுத்து வரும் யுத்தங்கள் அதன் சனத்தொகையைக் குறைத்தது. அதனால் திறமையற்றவர்களே கீழ்நாட்டு அரசியல் நிர்வாகத்தை நடத்தவேண்டியவராயினர். அது காரணமாகவும் அரசாங்கம் நாளுக்கு நாள் வீழ்ச்சியுற்றது. 17-ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் போர்த்துக்கீச அரசாட்சி தள்ளாடியது.

## முக்கியமான ஆண்டுகள்

1498. கள்ளிக்கோட்டையில் வஸ்கொடிகாமா வந்திறங்குதல்.

1505. அல்மேயிதா ராஜப்பிரதிநிதியாக நியமிக்கப்படல்.

1510. அல்புக்கூர்க்கே கோவையைக் கைப்பற்றல்.

1426. இந்தியாவில் மொகலாயர் ஆட்சி.

1535. போர்த்துக்கீசர் டியூவைக் கைப்பற்றல்.

1542. ஜப்பானில் போர்த்துக்கீசர் வரவு.

1543. இந்தியாவுக்குப் பிரான்ஸிஸ் சேவியர் வருதல்.

1556-1605. அக்பரின் ஆட்சி.

1565. விஜயநகரின் வீழ்ச்சி.

1658-1707. அவுரங்கசீப்பின் ஆட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாம் அத்தியாயம்

## போர்த்துக்கீசர் வருகையும் கத்தோலிக்க சமயமும்


### 1. 1505-ல் இலங்கை பிரிக்கப்பட்டிருந்த விதம்

போர்த்துக்கீசர் கீழ்நாடுகட்கு வந்தபொழுது இலங்கை மூன்று அரசர்களால் ஆளப்பட்டுவந்தது. கோட்டையில் அரசுபுரிந்த ஆருவது பராக்கிரமபாகு இறந்த சில காலத்தின் பின் யாழ்ப்பாண அரசனும் கண்டி அரசனும் கோட்டை அரசனின் ஆதிக்கத்திலிருந்து நீங்கித் தனியரசு செலுத்தினர். கோட்டையில் இக்காலத்தில் எட்டாவது வீரபராக்கிரமபாகு (1484-1509) என்பவன் ஆட்சிபுரிந்தான். யாழ்ப்பாணத்தில் பரராஜசேகரனும் (1478-1519) கண்டியில் விக்கிரமபாகுவும் (1480-1511) ஆண்டார்கள். விக்கிரமபாகு கம்பளையை விட்டுக் கண்டியை ராஜதானியாக்கி ஆண்டுவந்தான்.

ஒவ்வொரு ராசாக்களின் ராச்சிய எல்லைகளும் வரையறுக்கப்பட்டிருந்தன. புராதன காலத்தில் இலங்கை ராஜரட்டை, மாயரட்டை, உருகுணை, மலையரட்டை என நான்காகப் பிரிக்கப்பட்டிருந்தது. அந்தப் பிரிவுகளெல்லாம் இப்பொழுது மாறிவிட்டன. படத்தில் காட்டியபடி கோட்டை ராச்சியம் வடக்கே கலஓயா தொடங்கி தெற்கே வளவை கங்கைவரை பரந்து தற்கால மாகாணங்களாகிய வடமேல் மாகாணம், மேல் மாகாணம், சப்பிரகமுவா மாகாணம் ஆகிய மூன்றையும், தென் மாகாணத்திலுள்ள காலி, மாத்தறைப் பகுதிகளையும் உள்ளடக்கியிருந்தது. அது சப்த கோறளையென்றும், நான்கு கோறளை, மூன்று கோறளையென்றும், ரயிகம், தேவனுக, மாத்தறை என்றும் குறிச்சிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



16-ம் நூற்றாண்டு
இலங்கை
யானை இறவு
மன்னார்
முல்லைத்தீவு
வன்னி
திருகோணமலை
புத்தளம்
சப்த கோறளை
தெதுரு ஓயா
மாத்தளை
நான்கு கோறளை
மகா ஓயா
தும்பறை
கண்டி
நீர்கொழும்பு
மூன்று கோறளை
கொழும்பு
கோட்டை
சீதாவாக்கை
பாணந்துறை
களுத்துறை
வெல்லஸ
மட்டக்களப்பு
காலி
மாத்தறை
தேவேந்திரமுனை (தேவி நுவரை)

கோட்டையே இவ்விராச்சியத்துக்குத் தலைநகர். நாற்புறமும் நல்ல அரணுடையதாய், எதிரிகளால் இலேசாய் தாக்கமுடியாதவிதமாக அந்நகர் அமைந்திருந்தது. பெரும்பகுதியும் நீரினால் அல்லது சதுப்பு நிலங்களால் சூழப்பட்டிருந்தது. இவையில்லாத தரைப்பக்கத்தில் உயர்ந்த மதில்கள் அரண்செய்தன. மதில்களைச் சூழ்ந்து அகழியும் மண்ணாலமைந்த சுவரும் விளங்கின. மேலும் இந்நகர் பிரதானமான ஒரு தானத்தில் அமைந்திருந்தது. நாட்டினுள்ளே நுழைவதானால் கோட்டையைத் தாண்டியே போகவேண்டியதாயிருந்தது. ஒரு பாதை களனி கங்கையை—இக்காலத்து பாலத்துறை என்று வழங்குமிடத்தில்—குறுக்கிட்டது. மேலும் வட பக்கமாகக் கொழும்புக்குச் செல்வதானாலும் கோட்டையைத் தாண்டியே போகக்கூடியிருந்தது. இவ்வழி களனியை வத்தளை என்னுமிடத்தில் சந்தித்தது. மேலும் ஹோரணை மார்க்கமாகத் தென்கிழக்குத் திசையாய்க் கொழும்புக்கு வருவோரும் கோட்டையைச் சந்தித்தே செல்லவேண்டியிருந்தது.

கீழ்த்திசை நாடுகளில் இலங்கைக் கறுவாவைப்போல் சிறந்த கறுவா வேறெங்குங் காணப்படவில்லை. சிலுவை யுத்தம் முடிந்ததின் பின்னர் இலங்கைக் கறுவாவுக்கு அதிகம் கிராக்கி ஏற்பட்டது. எனவே, கறுவா வியாபாரம் விருத்தியடையத் தீவின் தென்மேற்குப் பகுதிகள் மற்றப் பாகங்களிலும் சிறப்புப் பெற்றன. ஏனெனில், தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக்காற்றினால் மழையைப் பெறும் இப்பிரதேசங்களிலேயே கறுவா ஏராளமாக வளர்ந்தது. நாம் முன் கூறியபடி கோட்டையை முதல் முதல் ராசதானியாக்கியவன் ஆருவது பராக்கிரமபாகு என்பவன். கறுவா வியாபாரத்தைக் கைப்பற்றித் தனது வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளவேண்டுமென்ற நோக்கங்கொண்டே அந்நகரத்தை இவன் ராசதானியாக்கினனன்றித் தமிழ்ப் படைகளின் எதிர்ப்புக் கஞ்சி இவன் அங்கு சென்று ஒதுங்கவில்லை. இவனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவே இவனுக்குப் பின் வந்த அரசர்களும் கறுவா வியாபாரத்திஞல் வருவாயை அதிகரிக்கலாமென எண்ணி அந்நகரியை ராஜதானியாகக் கொண்டனர்.

யாழ்ப்பாண ராச்சியம், யாழ்ப்பாணக் குடாநாட்டையும் அதைச் சார்ந்த அயல் தீவுகளையும் இக்காலத்து முல்லைத்தீவு, மன்னுர்ப் பகுதிகளையும் உள்ளடக்கியிருந்தது. இங்கு தமிழரே அதிகமாக வசித்தனர். இவர்கள் சைவ சமயத்தை அனுட்டித்தனர். யாழ்ப்பாணப் பட்டினத்திலிருந்து சில மைல் கிழக்கேயுள்ள நல்லூர் என்னும் நகரமே ராஜதானியாக இருந்தது. மன்னுருக்கும் திருகோணமலைக்குமிடையேயுள்ள வன்னி என்னும் பகுதி வன்னியர் என்ற வேளாள அதிகாரிகளால் ஆளப்பட்டு வந்தது. யாழ்ப்பாண அரசனுக்கு இவர்கள்மீது அதிக அதிகாரம் இருக்கவில்லை. 13-ம் நூற்ருண்டிலிருந்து இவர்கள் அநேகமாகத் தாங்கள் நினைத்தபடியே ஆட்சி நடத்தி வந்தார்கள்.

பழங்காலத்தில் மலையநாடென வழங்கிவந்த உடரட்டை என்னும் கண்டி ராச்சியம் உடுநுவரை, எட்டிநுவரை, தும்பறை, ஹரிஸ்பற்று, ஹேவஹேத என்ற ஐந்து பகுதிகளை உடையதாயிருந்தது. ஆஞல் கண்டியரசனுக்கு ஊவா, மாத்தளை, பஞமா, மட்டக்களப்பு, வெல்லச, விந்தனை, திரிகோணமலை என்ற குறிச்சிகளின் அதிகாரிகளும் கட்டுப்பட்டிருந்தனர். விந்தனை, வெல்லச என்ற இடங்கட்குக் கிழக்கே வெகு சிலரே குடியிருந்தனர். இவர்களிற் பெரும்பாலோர் வேடர். காட்டு மிருகங்களும் இப்பகுதிகளில் அதிகம். மட்டக்களப்புக்கு மேற்கேயுள்ள குறிச்சியை வன்னியர் ஆண்டுவந்தனர்.

கண்டி ராச்சியம் நாலு பக்கங்களிலும் மலைகளாலும் காடுகளாலுஞ் சூழப்பட்டிருந்ததிஞல் கரையோரப் பகுதிகளிலிருந்து அங்கு செல்வது கஷ்டமாயிருந்தது. ஒரு சேனை கொழும்பிலிருந்து கண்டி சேர விரும்பிஞல் முதல் கடுகணுவைக் கணித்தாயுள்ள வல்லனை என்ற இடத்தில் மலையேறவேண்டும்; கிழக்குப் பக்கத்திலிருந்து வருவதாஞல் அலுத்நுவரை மார்க்கமாய் வரவேண்டும்; வட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கிலிருந்து வருவதானால் கலகேதரைக் கணவாய் வழியாய் வரவேண்டும். 17-ம் நூற்றாண்டில் கண்டி ராச்சியத்திலிருந்த றொபேட் நொக்ஸ் என்னும் ஆங்கிலக் கைதி இப்பாதைகள் ஒடுங்கியிருந்தபடியால், அவற்றுக் கூடாகச் செல்வோர் ஒருவருக்குப் பின் ஒருவராகவே செல்லக்கூடியதாயிருந்ததென்றும், மலைகளின் அடியிலும் முடியிலும் முட்களாலமைந்த கபாடங்களிருந்தன வென்றும், சமவெளிகளிலிருந்து மலைநாட்டுக்கு ஒருவரும் வராதபடி தடுக்க காவலாளர் நியமிக்கப்பட்டிருந்தனர் என்றும் கூறியிருக்கிறார்.

கண்டி நகரம் இயற்கை யரணையுடையதாயிருந்தது. நாற்புறமும் மலைகள். தெற்கே சிறிது தூரம் மலை யின்றிக் கிடந்த வெளியில் இருபது அடி உயரமுள்ள மதிலொன்றெழுப்பப்பட்டிருந்தது.

## II. விவசாயமும் வர்த்தகமும்

இக்காலத்தில் இலங்கை வாசிகள் முக்கியமாக நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்தனர். வளவை கங்கைப் பிரதேசத்திலும், வெல்லச, திரிகோணமலை, மட்டக் களப்பு ஆகிய இடங்களிலும் நெல்லு ஏராளமாகச் சாகு படி செய்யப்பட்டது. ஏலம், கறுவா முதலிய வாசனைச் சரக்குகள் எதேஷ்டமாக வளர்ந்தன. இரு பருவங்களி லும் மழைவளம் மாறாத பிரதேசங்களிலும், பிரதான மாகக் கடற்கரையைச் சார்ந்த நீர்கொழும்பு, காலி யாகிய இடங்களிலும் கறுவா அபரிமிதமாகப் பயிரா யிற்று. ஏலம், மிளகு, சாதிக்காய் ஆகிய சரக்குகளும் பயிராயின. தேங்காய், பாக்கு, பலாக்காய் ஆகிய வற்றையும் கமக்காரர் செய்கை பண்ணினர்.

சிங்களரும் தமிழரும் கமத்தொழிலையே அதிகஞ் செய்துவந்தனரன்றி வியாபாரத்தில் அவர்கள் சிரத்தை எடுக்கவில்லை. கிரேக்கர், பாரசீகர், அராபியர் ஆகிய அந்நியரே பழங்காலந் தொட்டு இலங்கைச் சரக்குகளை மேல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்தனர். 15-ம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றுண்டாகிய இக்காலத்தில் தக்கணத்து முஸ்லிம்களே இவ்வியாபாரத்தை நடத்தினுர்கள். அவர்கள் சரக்குகளில் வியாபாரஞ் செய்த தோடமையாது யானே, தேங்காய், பாக்கு, இரத்தினக்கற்கள், முத்து, யானைத் தந்தம் ஆகிய இவற்றையும் வாங்கி விற்ருர்கள். தற்காலத்தில் இரத்தினபுரி என்றழைக்கப்படும் தேனவாக என்ற இடத்திற்ருன் இரத்தினக்கற்கள் முக்கியமாகக் காணப்பட்டன. யானைகள் பிரதானமாக சப்த கோறளை யிலும், நான்கு, மூன்று கோறளைகளிலும், மாத்தறையிலும், வன்னிப் பகுதியிலும் காணப்பட்டன.

இக்காலத்தில் கொழும்பே பிரதான துறைப்பட்டினமாயிருந்தது. முஸ்லிம் வியாபாரிகள் அங்கேயே வசித்து வந்தார்கள். கறுவா நிறைந்த பிரதேசங்களின் மத்தியில் நீர்கொழும்புக்கும் காலிக்கும் நடுவே கொழும்பு இருந்ததால் கறுவா வியாபாரிகட்கு அது நல்ல வியாபாரத் தலமாயிருந்தது. ஆனுல் முஸ்லிம்கள் கொழும்பில் மாத்திரம் தங்கவில்லை. கரையோரமாய்ச் சிதறிக் கிடந்த மற்றைய துறைமுகங்களுக்குஞ் சென்ருர்கள். உள்ளூரிலிருந்து சாமான்களைத் துறைமுகஞ் சேர்ப்பதற்கு அக்காலத்தில் நல்ல வீதிகளிருக்கவில்லை. ஒன்றில் சுமை ஆட்கள் மூலமாகவோ அல்லது பொதிமாடுகள் மூலமாகவோ அணித்தாயுள்ள துறைமுகத்துக்குச் சாமான்கள் அனுப்பப்பட்டன. இல்லாவிட்டால் ஆற்று மார்க்கமாகக் கடற்றுறைக்கு அனுப்பப்பட்டன. அக்காலத்துக் கப்பல்கள் சிறிய தோணிகளாதலால் முகத்துவாரத்திலிருந்து வெகு தூரம் ஆற்றுட் செல்லவும், சிறிய துறைமுகங்களில் நங்கூரமிடவும் ஏற்றனவாயிருந்தன. இலங்கையின் கரையோரங்களிலுள்ள பல சிறிய துறைமுகங்களிலும் முஸ்லிம் வியாபாரிகள் வியாபாரம் நடத்தினர்.

கோட்டை ராச்சியமே இவ்வியாபாரத்துக்கு ஏற்ற நிலைக்களமாயிருந்தது. வாசனைச் சரக்குகள் பிரதானமாக அதன் எல்லைக்குள்ளேதான் பயிர்செய்யப்பட்டன. இரத்தினக்கற்களும் அதன் ராச்சிய எல்லைக்குட்பட்ட தேனவாக என்ற இடத்திற்ருன் வெட்டப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைகள் அதிகமாக சப்த கோறளையிலும், ஏனைய கோறளைகளிலும், மாத்தறையிலுமே காணப்பட்டன. இவ்வாறு கோட்டை ராச்சியம் பல்வளங்களுஞ் சிறந்து பொலிவுற்றது. அத்துடன் அரசனும் வலியுள்ளவனாயிருந்திருப்பானாகுல் கண்டியையும் யாழ்ப்பாணத்தையும் தன்னாணைக்குக் கீழ்க் கொண்டுவந்திருப்பான்.


## III. போர்த்துக்கீசரின் முதல் வருகை

இலங்கைக் கறுவா வியாபாரத்தை முற்றாகத் தம்வசமாக்கிக்கொள்ளவேண்டுமென நினைத்த போர்த்துக்கீசர் இலங்கைக்கு அவசியம் செல்லவேண்டுமென ஆவலுற்றனர். ஆனால் அவர்கள் தாம் காத்திராப்பிரகாரமே முதல் முதல் இலங்கையை அடைந்தனர். போர்த்துக்கீசர் முஸ்லிம் வியாபாரிகளை மலையாளக் கரையிலிருந்து கலைத்ததும், அவர்கள் கள்ளிக்கோட்டைக்குச் செல்லாமல் நேரே பாரசீகக் குடாக்கடலையும் ஏடனையும் நோக்கிச் சென்றனர். இதையறிந்த பிரான்ஸிஸ் டி அல்மேயிதா என்பவன் மலாக்காவிலிருந்து தன்னைத் தப்பி ஓடும் முஸ்லிம் கப்பல்களைக் கைப்பற்றுமாறு 1505-ல் தனது மகனான லொறென்ஸோவை ஒரு சிறிய கடற்படையோடு அனுப்பினான்.

லொறென்ஸோ வரும் வழியில் ஒரு பெரும் புயலில் அகப்பட்டுக் காலித் துறைமுகத்திலெற்றப்பட்டான். தான் பல நாளாக அடையவேண்டுமென்று ஆவலுற்றிருந்த இலங்கைத் தீவு இதுதான் என்று அறிந்ததும் நேரே கரையோரமாகக் கொழும்புக்குச் சென்றான். புகழ் வாய்ந்த இலங்கைக் கறுவாவைப் பெறும் நோக்கத்தோடு சிங்கள அரசனுடன் ஒரு உடன்படிக்கை செய்யவும் அவன் நினைத்தான். ஆனால் கொழும்பு வாசிகள் இப் புதிய மனிதரை மகிழ்வுடன் வரவேற்கவில்லை; எதிரிகள் போலக் கருதி அவர்களுக்குக் கெடுதியுஞ் செய்தார்கள். எனினும், கப்பலிலிருந்த போர்த்துக்கீசர் தமது பீரங்கிகளைத் திறந்து சில வெடிகளைப் போட்டதும் எல்லாக் கலவரமும் அடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புதிய சாதியாரைக் கண்டு சிங்களர் பெரிதும் வியப்புற்றனர். வெள்ளைத் தோலுள்ள மனிதரை அவர்கள் முன்னொருபோதும் பார்த்ததே இல்லை. இரும்புச் சட்டையும் தொப்பியுமணிந்த போர்வீரரையும் அவர்கள் முன் கண்டதில்லை. சிங்களப் போர்வீரர் அரை நிர்வாணமாய் நின்றே போர் புரிந்தனர். இப்புதியவர்கள் வெள்ளி நாணயங்களையும் தங்க நாணயங்களையும் தாராளமாகக் கொடுத்துப் பண்டங்களை வாங்குகிறார்களே என்று அவர்கள் ஆச்சரியமடைந்தனர். இலங்கையில் அந்த நாட்களில் உலோக நாணயங்கள் அதிகம் உபயோகிக்கப்படவில்லை. பண்டங்களையே சனங்கள் வரியாகக் கொடுத்தார்கள். முஸ்லிம் வியாபாரிகளுக்கும் அவர்கள் நாணயங்களுக்குப் பதிலாகப் பாக்கு முதலிய பொருள்களைக் கொடுத்தே சீலை முதலியவற்றை வாங்கினர். வெடிமருந்தையாவது துப்பாக்கியையாவது முன் கண்டறியாத இவர்கள், இடிமுழக்கம்போல் வெடித்துக்கொண்டு வெகு தூரஞ் செல்லுங் குண்டுகளையுடைய பீரங்கிகளைக் கண்டு அச்சமுற்றனர்.



போர்த்துக்கல் வீர முத்திரை

போர்த்துக்கீசரின் வருகை முஸ்லிம் வியாபாரிகட்குத் திகிலையுண்டாக்கிற்று. தங்களுடைய வியாபாரம் இனித் தொலைந்தது என எண்ணினர். சிங்கள அரசன் இவர்களைச் சிநேகமுறையில் நடத்தாதவாறு தடுக்க முயற்சி செய்தார்கள். ஆனால் எட்டாவது வீரபராக்கிரமபாகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(1484-1509)* என்ற அக்கால அரசனே போர்த்துக்கீசரை எதிர்க்க வலியில்லாது, அவர்களுடன் சமாதான உடன்படிக்கை ஒன்று செய்தான். வருஷந்தோறும் தான் போர்த்துக்கீசருக்கு திறையாகக் கறுவா கொடுப்பதாகவும், போர்த்துக்கல் அரசனையே தனது தலைவனாக மதிப்பதாகவும் இணங்கினான். இதற்குப் பதிலாக லொறென்ஸோ இலங்கைத் துறைமுகங்களை எதிர்க்கும் பகைவர்களை எல்லாம் தாக்கி வலிதொலைப்பதாக வாக்குறுதி செய்தான்.

லொறென்ஸோ ஊர் திரும்புமுன் மேல்நாடுகட்கு ஏற்றுமதி செய்யுஞ் சாமான்களைச் சேமிப்பதற்காக ஒரு பண்டசாலையை நிறுவி, சில போர்வீரர்களை அதைக் காவல் செய்யுமாறு வைத்தான். போர்த்துக்கீசர் தேவாராதனை செய்வதற்கு ஒரு சிறிய தேவாலயத்தையுங் கட்டினான். கொழும்புக்குடாவின் முன்னால் உள்ள ஒரு பாதையில் தனது தேச வழக்கப்படி போர்த்துக்கல் நாட்டின் வீர முத்திரையைச் செதுக்கவும் கட்டளையிட்டான். இவ்வீர முத்திரையில் ஐந்து முனைகளையுடைய ஐந்து கேடகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இம்முத்திரை பொறித்த பாறையைத் தற்போது நமது மகா தேசாதிபதியின் மாளிகைக்கு அணித்தாயுள்ள கோர்டன் நந்தவனத்தில் காணலாம்.

லொறென்ஸோ கொழும்பை விட்டு நீங்கியதும் கொழும்பில் தங்கியிருந்த போர்த்துக்கீசரை அரசனால் காப்பாற்ற முடியவில்லை. முஸ்லிம் வியாபாரிகள் சில சிங்களரோடு சேர்ந்து போர்த்துக்கீசரைத் தாக்கினார்கள். இந்தியாவிலிருந்த போர்த்துக்கீசர் இக்காலத்தில் எகிப்திய சுல்தானோடு யுத்தஞ் செய்து வந்தபடியால் இலங்கையிலிருந்த தமது சகோதரர்களுக்குப் படைத்துணை யனுப்ப முடியவில்லை. அதனால் முன்னர் ஏற்படுத்தப்பட்ட பண்டசாலையை மூடிவிட்டுக் கொழும்பிலுள்ள போர்த்துக்கீசப் போர்வீரர் கொச்சிக்குச் சென்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IV. கொழும்பில் போர்த்துக்கீசரின் முதற் கோட்டை

சில வருடங்களின் பின் மறுபடியும் போர்த்துக்கீசர் கொழும்பில் குடியேற வசதியேற்பட்டது. தான் இறப்பதற்குச் சில வருடங்கட்கு முன் 1509-ல் எட்டாவது வீரபராக்கிரமபாகு தனது மக்களான ஒன்பதாவது தர்ம பராக்கிரமபாகுவையும் விஜயபாகுவையும் கோட்டை ராச்சியத்தின் இணையரசராக நியமித்தான். ஆனால் இஃதொரு புத்தியீனமான செய்கையாய் உள்நாட்டுக் குழப்பத்துக்கேதுவாயிருந்தது. இவ்விரு அரசரும் ஒருவரையொருவர் நீக்கிவிட வழிபார்த்ததால் உள்நாட்டுக் குழப்பங்கள் உண்டாயின. இக்குழப்பங்கள் போர்த்துக்கீசருக்கு நன்மை பயந்தன. கோட்டையை ராசதானியாகக்கொண்டு அரசாண்ட பராக்கிரமபாகு, தனது சகோதரன் தன்மீது படையெடுக்க உத்தேசித்திருக்கிறான் என்பதை அறிந்து போர்த்துக்கீசரின் படைத்துணையை நாடினான். தாம் செய்யும் உதவிக்குப் பதிலாக கோட்டை ராச்சியத்தின் வியாபார உரிமையைத் தாங்களே பிரத்தியேகமாகப் பெற்றுவிடப் போர்த்துக்கீசருக்கு இப்பொழுது வசதியேற்பட்டது. ஆனால் அவர்கள் யுத்தத்தில் சாதகமாயிருக்கக்கூடிய பிரதானமான இடங்களைக் கைப்பற்றிக்கொண்டு, முஸ்லிம் வியாபாரிகளை இந்து சமுத்திரத்தில் வர்த்தகஞ் செய்யவிடாது கலைப்பதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தனர். மலாக்காவை வெற்றிகொண்ட பின், வங்காளக் குடாக் கடலிலும் ஆதிக்கம் வகிப்பதற்குக் கொழும்புத் துறைமுகத்தையும் தம்வசமாக்குவது அவசியமாயிருந்தது. எனவே, தர்ம பராக்கிரமபாகு துணை செய்வானென எண்ணி 1518-ல் மறுபடியும் போர்த்துக்கீசர் இலங்கையை அடைந்தனர்.

முஸ்லிம் வியாபாரிகளும் அவர்களை ஆதரித்த சிங்களரும் போர்த்துக்கீசரை எதிர்த்தார்கள். ஆனால் போர்த்துக்கீசருடைய பலம் தமது பலத்திற்கு மிக அதிகமென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பில் முதல் முதல் கட்டப்பட்ட போர்த்துக்கீசக் கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதை விரைவில் அவர்கள் உணர்ந்தனர். இம்முறை போர்த்துக்கீசர் கறுவா வியாபார உரிமையோடு தமது எதிரிகளை எதிர்க்க ஒரு கோட்டை கட்டவும் அனுமதி கேட்டார்கள். உள்நாட்டுக் குழப்பத்தினுல் பயந்திருந்த அரசன் போர்த்துக்கீசர் துணையைப் பெறுவது அவசிய மென நினைத்து அதற்கு உடன்பட்டான்.

பழைய சிங்கள அரசர் தமது நகரைச் சுற்றி மதிலெழுப்பியிருந்தார்களென்றும், ஆபத்துக் காலங் களில் சிகிரியா, வக்கிரிகாலபோன்ற மலைக்கோட்டைகளி லும், இயற்கையரணமைந்த கோட்டைபோன்ற நகரங் களிலுமிருந்து ஆட்சிபுரிந்தனரென்றும் நாம் மேலே கூறினேம். கொழும்பு நகரத்துக்கு இயற்கையான அரணே கிடையாது. போர்க்காலங்களில் உள்நாட்டில் சென்று ஒளித்துக்கொள்ளப் போர்த்துக்கீசருக்கு இயலா திருந்தது. எனவே, அவர்கள் ஐரோப்பாவில் உள்ள கோட்டைகள்போல ஒரு கோட்டையை கொழும்பில் கட்டினுர்கள்.

கொழும்புத் துறைமுக நீரணையின் தென்மேற்குப் பாகத்தில் இக்கோட்டை அமைக்கப்பட்டது. மூன்று பக்கங்களிலும் நீரால் சூழப்பட்டிருந்ததால் இந்த இடம் மிக வசதியாயிருந்தது. நிலப்பக்கத்திலிருந்து பகைவர் கோட்டையைக் கைப்பற்ருமல் ஒரு பெரிய கால்வாய் வெட்டப்பட்டது. இதைப் படத்தில் காண்க. ஐரோப் பாவிலுள்ள அரண்கள் அகழிகளால் சூழப்பட்டதுபோல இக்கோட்டையுங் கடலாற் சூழப்பட்டிருந்தது.

கோட்டையின் நடுவில் ஒரு உயர்ந்த கோபுரம் இருப் பதைப் படத்தில் காணலாம். அதைச் சுற்றி ஒரு சுவர் இருந்தது. சுவரின் வளைவுகள்தோறும் மாடம்போல் அறைகள் அமைந்திருக்கின்றன. அவை காவற்காரர் தங்கும் அறைகள். ஒரு மாடத்திலிருந்து பார்த்தால் சுவரின் இரண்டு பகுதிகளைப் பார்க்கலாம். பகைவர் வருவதைக் கண்டால் காவலாளர், உள்ளிருப்பவர் களுக்கு அறிவிக்கலாம். சுவரின் சிகரத்தில் உட்புறத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாதை செல்வதைக் காணலாம். இப்பாதையில் காவலாளர் கீழே இறங்காமலே சுற்றித் திரிவார்கள். சுவரின் சிகரம் கோணலாக நெளிந்து, வளைந்து இருக்கிறது. வெளியாயிருக்கும் பக்கத்தால் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்த பின் பகைவர் திரும்பி வெடிதீருமுன் சுவர் மறைவில் ஒளித்துக்கொள்ளக்கூடியதாயிருக்கும்.

இக்கோட்டையைக் கட்ட அரசன் அனுமதி கொடுத்ததால் சனங்கள் அவன்மீது வெறுப்புக்கொண்டனர். அக்கோட்டை அந்நியராதிக்கத்தின் அறிகுறியாக அவர்கட்குத் தோன்றிற்று. முஸ்லிம் வியாபாரிகள் துணைகொண்டு விஜயபாகு தனது சகோதரனிடமிருந்து ராச்சியத்தைக் கைப்பற்றினன். தன்னிடம் கடற்படையில்லாதபடியால் போர்த்துக்கீசரைக் கொழும்பிலிருந்து துரத்த முடியாதெனவும், அவர்களுடைய கோட்டையை ஒரு கடற்படை முற்றுகையிட்டு இந்தியாவிலிருந்து துணை வருவதைத் தடுத்தாலன்றி வெற்றியடைவது முடியாதெனவும் அவன் அறிந்தான். ஆனல் போர்த்துக்கீசருடன் பகைகொண்டிருந்த கள்ளிக்கோட்டை ஸாமோரின் துணைசெய்தபோதிலும் அவர்களது படைமுன் ஸாமோரின் எதிர்நிற்க முடியாது பின்வாங்க நேரிட்டது. எனவே, விஜயபாகு கடைசியாக போர்த்துக்கீசருடன் சமாதானஞ் செய்யவேண்டியதாயிற்று.

விஜயபாகுவின் தோல்வியினல் சனங்கள் அவனிடத்து வைத்திருந்த அபிமானங் குறைந்தது. அரசன் தனது தத்த புத்திரனுக்கு அரசை வழங்கக்கூடுமென அஞ்சியிருந்த அவனது புதல்வர்கள், இத்தருணத்தில் தமது காரியத்தை முடிக்க எண்ணி, விக்கிரமபாகுவின் பின் அரசு கட்டிலேறிய ஜயவீரன் என்ற (1501-1521) கண்டியரசனின் துணைகொண்டு விஜயபாகுவை 1521-ல் கொலைசெய்து ராச்சியத்தைத் தம்முட் பங்கிட்டார்கள்.

இக்குழப்பத்திற்குக் காரணமாயிருந்தவனும், எல்லாரிலும் இளையவனுமாகிய மாயாதுன்னை என்பவனுக்கு நான்கு கோறளைகளும் தற்போது சப்பிரகமுவா மாகாணம் என வழங்கப்படும் தேனவாகா என்ற பகுதியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வழங்கப்பட்டன. இரண்டாவது மகனுன றைகம் பண்டாரன் என்பவனுக்கு றைகம், பஸ்டுன், வலல்லவிதி என்ற கோறளேகளில் (களுத்துறை, காலி என்ற பகுதிகள், கடற்கரை தவிர்ந்த மற்றைய பாகங்களெல்லாம் வழங்கப்பட்டன. கோட்டை ராச்சியத்தின் எஞ்சிய பகுதி மூத்த மகனுன ஏழாவது புவனேகபாகுவுக்கு வழங்கப்பட்டது. இவனே இலங்கைச் சக்கரவர்த்தியென மதிக்கப்பட்டான்.

போர்த்துக்கீசர் கொழும்பில் தமது நிலைமையை வலியுறச் செய்வதற்கு இவ்வாறு ராச்சியம் பிரிக்கப்பட்டமை வாய்ப்பாயிருந்தது. தனது சகோதரர் தன்னை எந்நேரமாவது தாக்கக்கூடுமென்ற பயத்தினுல் புவனேகபாகு போர்த்துக்கீசருடன் நட்புக்கொண்டிருந்தான்.

சிங்களர் போர்த்துக்கீசரோடு அடிக்கடி சச்சரவிட்டுத் தமது வெறுப்பைக் காட்டியே வந்தனர். போர்த்துக்கீசத் துருப்புகள் நீதியீனமாக நடந்து வந்தபடியால் சிங்களர் அவர்களே நாட்டை விட்டுக் கலேத்துவிட விரும்பினர். இக்காலத்தில் இந்தியாவிலிருந்த போர்த்துக்கீசர் செங்கடல் மூலமாகவும் பாரசீகக் குடாக்கடல் மூலமாகவும் நடைபெற்ற வர்த்தகத்தைக் கைப்பற்றும் முயற்சியிலீடுபட்டு வந்தனர். அதனுல் இலங்கையில் யுத்தஞ் செய்ய அவர்கள் விரும்பவில்லே.

தமது வியாபாரத் தலங்களேக் காப்பாற்றுவதே போர்த்துக்கீசரது கொள்கையாயிருந்ததால் மற்ற விஷயங்களில் அவர்கள் தலேயிடவில்லே. இந்திய மன்னரது துணேயைப் பெற்றுத் தமது வியாபாரத்தை வலுப்படுத்த வேண்டுமெனவே அவர்கள் பெரிதும் விரும்பினுர்கள். எனவே, புவனேகபாகுவின் சிநேகிதத்தில் நம்பிக்கை கொண்டு 1524-ம் ஆண்டில் கொழும்பிலிருந்த தமது கோட்டையை அழித்துவிட்டார்கள். பண்டசாலேயை மாத்திரம் பரிபாலித்து வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V. மாயாதுன்னேயோடும் முஸ்லிம்களோடும் நடைபெற்ற யுத்தம்; போர்த்துக்கலுக்கு தூது

புவனேகபாகுவின் நட்பில் நம்பிக்கை வைத்துப் போர்த்துக்கீசர் கோட்டையை அழித்ததும், தமது தொல்லையெல்லாம் ஒழிந்ததெனஎண்ணினூர்கள். ஆனல் அவர்களது நிலைமை சிறிது நாளில் மோசமாகிவிட்டது. மாயாதுன்னே திறமையும் பேராசையும் உடையவனுதலால் கோட்டை ராச்சியத்தைக் கைப்பற்ற எண்ணினுன். ஏற்கெனவே அவன் இதில் முனேவதற்குத் தடையாயிருந்தது போர்த்துக்கீசரின் கோட்டையும், அவர்கள் புவனேகபாகுவுக்களித்த துணையுமேயாகும். தற்போது கோட்டை அழிக்கப்படவே, அவன் தனது தந்தையின் சூழ்ச்சியைப் பின்பற்றி, முஸ்லிம்களேயும் கள்ளிக்கோட்டை அரசனையும் துணேவேண்டிப் பெற்றுக்கொண்டான். இவர்களே எதிர்ப்பதற்காகப் புவனேகபாகு போர்த்துக்கீசரின் துணையை நாடினுன். போர்த்துக்கீசர் இத்தருணத்தில் துணைபுரியாவிட்டால் அவர்களுடைய வியாபாரத் தலமாகிய கொழும்பை இழக்க நேரிடும். அதனல் அவர்கள் யுத்தத்தை விரும்பாதபோதிலும் துணேபுரியவேண்டி போரில் இழுக்கப்பட்டனர்.

1527-ம் ஆண்டு தொடக்கம் 1539-ம் ஆண்டுவரை 12 வருடமாக முறைக்கு முறை மாயாதுன்னே கோட்டை ராச்சியத்தை முற்றுகையிட்டுப் புவனேகபாகுவை எதிர்த்தான். கள்ளிக்கோட்டை ஸாமோரின் தனது கடற்படையோடு கொழும்பை முற்றுகையிட்டு மாயாதுன்னேக்கு உதவி புரிந்தான். ஒவ்வொரு முறையும் புவனேகபாகு தனது போர்த்துக்கீசப் படைத் துணேகொண்டு எதிரிகளேப் புறங்காட்டச் செய்தான். கோவையிலிருந்த போர்த்துக்கீசக் கடற்படையும் இதற்குப் பெருந்துணை செய்தது. 1538-ல் போர்த்துக்கீசர் மாயாதுன்னேயை அவனது ராஜதானியாகிய சீதவாக்கைவரை புறங்காட்டி யோடச்செய்து, அவனிடமிருந்த மலேயாளப் படையதிகாரிகளேத் தம்மிடம் கொடுத்துவிடுமாறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டார்கள். மாயாதுன்னை முதல் அதற்கு இசையவில்லை. பின்னர் அதனால் தனக்குப் பெரிய ஆபத்து வருமென அறிந்து அவர்களைக் கொலைசெய்து தலைகளைப் போர்த்துக்கீசருக்கு அனுப்பினான். இதையறிந்த கள்ளிக்கோட்டையரசன் மாயாதுன்னைக்கு மேற்கொண்டு துணையனுப்ப மறுத்துவிட்டான். தனிமையாக யுத்தத்தை நடத்த முடியாதபடியால் மாயாதுன்னை 1539-ல் புவனேகபாகுவுடன் சந்து செய்துகொண்டான். ஆயின் இச்சமாதானம் 1547-ல் முறிந்துபோயிற்று.

இச்சமாதானம் புவனேகபாகுவுக்காவது போர்த்துக்கீசருக்காவது மனச்சாந்தியை அளிக்கவில்லை. புவனேகபாகுவின் பட்டத்துத் தேவிக்கு ஆண் மகவு இல்லாதபடியால் மாயாதுன்னைக்கே சிங்காசன உரிமை சேரவேண்டியிருந்தது. ஆனால் புவனேகபாகு ராச்சிய உரிமையைத் தனது மகளின் மகனுக்குக் கொடுக்க விரும்பினான். மாயாதுன்னையை விரும்பாத போர்த்துக்கீசரும் இதற்கு உடன்பட்டார்கள்.

ஆனால் தனது உரிமையைப் பறிகொடுப்பவன் மாயாதுன்னை அல்ல என்பதைப் புவனேகபாகு நன்கறிந்திருந்தான். அவனது சகோதரனான றைகம் பண்டாரன் இறந்ததும் அவனது ராச்சியத்தையும் மாயாதுன்னை கைப்பற்றித் தனது அதிகாரத்தை மிகப் பலமுள்ளதாக்கிக் கொண்டான். கோட்டை ராச்சியத்துக்கு அரசனாக வேண்டுமென அவன் நீண்ட கனவுகொண்டிருந்தான் என்பது அவன் செய்த போர்களிலிருந்து புலனாயிற்று. விஷயங்கள் இவ்வாறாக, தனது பேரனான தர்மபாலனை எவ்வாறு பட்டஞ் சூட்டுவதென புவனேகபாகு நினைந்து, நினைந்து சஞ்சலப்பட்டான். 1540-ல் போர்த்துக்கீசரின் ஆலோசனைப்படி அவன் போர்த்துக்கல் அரசனின் துணையைக் கோரி, தர்மபாலனின் உருவமொன்றையும் ஒரு முடியையும் பொன்னிலாக்கிப் போர்த்துக்கலுக்கு அனுப்பினான். அங்கே ஆட்சிசெய்த மூன்றும் ஜோன் என்பவன் அவ்வுருவத்துக்கு முடிசூட்டி, கோட்டை ராச்சியத்துக்குத் தர்மபாலனே உரிமையுள்ள அரசனென உறுதிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்த வேண்டுமென்பதே புவனேகபாகுவின் விருப்பம். மேலும் தான் அவ்வரசனுக்கு ஆண்டுதோறும் திறை கொடுத்து வருவதாகவும் வாக்குறுதி செய்து இலங்கை வாசிகளைக் கிறிஸ்தவராக்கச் சில மதபோதகரை அனுப்புமாறும் வேண்டிக்கொண்டான். ஜோன் அரசன் இதையெல்லாம் தூதர் மூலம் கேள்வியுற்று மனமகிழ்ந்து, உருவத்துக்குத் தனது தேச ஆசாரப்படி முடியுஞ்சூட்டி பிரான்ஸிஸ் சபை மதகுருமார் அறுவரையும் இலங்கைக்கு அனுப்பினான்.

## VI. கிறிஸ்தவ குருமாரின் வருகையும் அதனால் ஏற்பட்ட பயனும்

1543-ல் போர்த்துக்கலிலிருந்து திரும்பிய சிங்கள தூதுக்கோஷ்டியுடன் கிறிஸ்தவ மதகுருமாரும் வந்தார்கள். இதே காலத்தில் பிரான்ஸிஸ் சவேரியார் இந்தியாவுக்கு விஜயஞ் செய்தார். இச்சம்பவங்களெல்லாம் இலங்கையில் நடைபெற்ற சம்பவங்களையும் ஓரளவுக்குப் பாதிக்கக்கூடியனவாயிருந்தன.

தென்னிந்தியாவில் பிரான்ஸிஸ் சவேரியார் தமது மதபோதனைகளினால் ஏராளமான சனங்களைக் கிறிஸ்து சமயத்துக்கு மனந்திரும்பச் செய்து வந்தார். இதே வகுப்பைச் சேர்ந்த மன்னார் வாசிகள் சவேரியாரைத் தமது ஊருக்கு வந்து போகுமாறு அழைத்தார்கள். ஆனால் அவருக்கு அங்கே போக வசதி ஏற்படாதபடியால் தன்னுடைய பெயரைத் தாங்கிய தனது சீஷனொருவரை அனுப்பினார். இவர் மன்னாருக்கு வந்து சிறிது காலத்தில் ஏராளமான இந்துக்களைக் கிறிஸ்தவ சமயத்துக்கு மாற்றினார்.

இதனைக் கண்டு திடுக்குற்ற கோயில் அருச்சகர்கள் யாழ்ப்பாணத்தரசனான செகராச சேகரன் (1519-1561) என்னும் சங்கிலி ராசனுக்கு முறையிட்டார்கள். இவ்வாறான மதமாற்றம் தொடர்ந்து நடைபெற்றால் இந்து தேவாலயங்கள் அழிக்கப்படுவதுடன் அரசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராச்சியத்தையே இழக்க நேரிடுமென்றும், கிறிஸ்து சமயத்துக்கு மாறியவர்கள் போர்த்துக்கீச ஆட்சியையே விரும்புவார்களென்றும் கூறினர்.

ஒரு வருடத்துக்கு முன்னரே போர்த்துக்கீசருக்குத் தொழும்புபூண்ட செகராச சேகரன் இச்செய்தியையெல்லாம் கேள்வியுற்றதும் மன்னருக்கு ஒரு படையை அனுப்பி கிறிஸ்து சமயத்துக்கு மாறினோரையெல்லாம் கொலை செய்வித்தான். இந்தியாவிலிருந்த போர்த்துக்கீச ராஜப் பிரதிநிதி இச்சம்பவங்களைக் கேள்வியுற்று, அடுத்த வருடத்தில் யாழ்ப்பாணத்துக்குப் படையோடு வந்து சங்கிலியைத் தண்டிக்க முற்பட்டான். சங்கிலி ராசன் போர்த்துக்கீசரின் ஆணையைத் தான் ஏற்றுக்கொள்வதாகக் கூறி அவர்களுடன் ஒரு உடன்படிக்கையைச் செய்து தண்டனைக்குத் தப்பினான். போர்த்துக்கீச ராசப்பிரதிநிதி யாழ்ப்பாணக் கரையில் உடைந்த ஒரு பர்மியக் கப்பலிலுள்ள திரவியத்தைக் கைப்பற்றப் பெரிதும் விருப்பமுற்று, சங்கிலியைத் தண்டியாது அவனது உடன்படிக்கை நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டான்.

கிறிஸ்தவப் போதகரின் வருகையால் கோட்டையிற் கூட நிலைமை மாறியது. கிறிஸ்தவப் பாதிரிமாரை அனுப்புமாறு புவனேகபாகு கேட்டிருந்தபோதிலும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவ அவன் விரும்பவில்லை. தனது பிரசைகள் பௌத்தசமயிகள் என்பதையும், தான் கிறிஸ்து மதத்தைச் சார்வதால் அவர்கள் தன்னை வெறுப்பதுமல்லாமல், மாயாதுன்னை அரசனாவதற்குத் துணை புரிவதாகுமென்பதையும் அவன் எண்ணினான். கோட்டையிலிருந்து அரசு செலுத்துவதற்காகவே அவன் போர்த்துக்கீசருடன் நட்புக்கொண்டான். கிறிஸ்து சமயத்தைத் தழுவினால் போர்த்துக்கீசருடன் தான் நட்புற்ற நோக்கத்துக்கே பங்கமேற்படுமென அவன் நினைத்தான்.

இக்காலங்களில் ஐரோப்பாவில் அரசன் அனுசரிக்கும் மார்க்கத்தையே குடிகளும் அனுசரிப்பது முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யென்ற எண்ணமிருந்து வந்தது. இலங்கையிலிருந்த கிறிஸ்தவ சந்நியாசிகள் சனங்களைக் கிறிஸ்த மார்க்கத்தைத் தழுவும்படி வற்புறுத்த விரும்பவில்லை. அவர்கள் மன்னனை மனந்திருப்பினால் சனங்களை மனந்திருப்புவது சுலபமாயிருக்குமென எண்ணினார்கள். ஆனால் புவனேகபாகு தனது சமயத்தை மாற்ற விரும்பவில்லை. எனவே, ஆசாபங்கமடைந்த கிறிஸ்தவ குருமார் தமது அதிகாரிகளிடம் முறையிட்டனர்.

இனி போர்த்துக்கீசர் செய்துவந்த அட்டூழியங்கள் புவனேகபாகுவுக்கு அதிருப்தியை உண்டாக்கின. சமாதான காலங்களில் போர்த்துக்கீசப் போர்வீரர் குடிகளைக் கொள்ளையடித்து அவர்களுக்குத் தொந்தரவு செய்தார்கள். புவனேகபாகுவுடன் அதிருப்திகொண்டவர்கள் கிறிஸ்து சமயத்தில் சேர்ந்து போர்த்துக்கீசரின் பாதுகாப்பை நாடினர். இவ்வாறு அரசனின் ஆட்சியிலிருந்து தப்பவும் வழி பார்த்தார்கள்.

இவற்றின் பயனாக புவனேகபாகுவின்மீது போர்த்துக்கீசர் மனக்கசப்புக்கொண்டார்கள். சிங்காசனத்திலிருந்து அவனைக் கலைத்துவிட்டு, கோவையில் கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவியிருந்து வந்தவனாகிய அவனது இரண்டாம் மனைவியின் மகனை முடிசூட்டவும் யோசனை செய்தனர்.

கிறிஸ்தவ குருமாரின் சமயப் பிரசார வேலைகளினால் போர்த்துக்கீசர் கண்டி ராச்சியத்தின் அலுவல்களிலும் தலையிட நேரிட்டது. கண்டி அரசனான இரண்டாவது ஜயவீரன் (1521-1551) மாயாதுன்னைக்கெதிராகப் போர் செய்வதற்குப் போர்த்துக்கீசரின் துணையை வேண்டியிருந்தான். அவன் கிறிஸ்தவ சந்நியாசிகளைத் தனது ராச்சியத்துள் நுழைய அனுமதித்ததுமன்றிக் கண்டியில் ஒரு தேவாலயத்தைக் கட்டவும் உத்தரவளித்தான். புவனேகபாகுவுடன் போர் புரிய வலியற்றிருந்த மாயாதுன்னை இப்பொழுது ஜயவீரனோடு போர் தொடுத்தான். உடனே அவன் போர்த்துக்கீசருக்குத் தான் திறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பதாகவும், கிறிஸ்து சமயத்தில் சேர்வதாகவும் வாக்குறுதி செய்து போர்த்துக்கீசரின் துணையை வேண்டினான். போர்த்துக்கீசர் நேரத்துடன் அவனுக்குத் துணை செய்யத் தவறியதால் அவன் மாயாதுன்னையுடன் சமாதானஞ் செய்துகொண்டு போர்த்துக்கீசப் படைத்துணை வந்தபொழுது தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற மறுத்தான்.

1529-ல் புவனேகபாகுவுடன் மாயாதுன்னை சமாதானஞ் செய்தபோதிலும், கோட்டை அரசனாகவேண்டுமென்ற எண்ணத்தை அவன் கைவிடவில்லை. போர்த்துக்கீசருக்கும் புவனேகபாகுவுக்குமுள்ள நட்பைப் பேதப்படுத்த அவன் பெரிதும் முயன்றான். போர்த்துக்கீசப் படை கண்டியிலிருந்து திரும்பியதும், அவர்களுக்கு வேண்டிய உதவியெல்லாஞ் செய்து அவர்களது நட்பைப் பெற முயற்சி செய்தான். போர்த்துக்கீசர் புவனேகபாகுவுடன் முரண்பட்டனர் என்பதை அறிந்ததும், 1547-ல் அவனுக்கெதிராய் யுத்தஞ் செய்ய முற்பட்டான். யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில், ஒரு நாள் புவனேகபாகு, தன் படைகளுக்குக் கட்டளையிட்டுக் கொண்டு களனியில் இருந்தபொழுது ஒரு போர்த்துக்கீச வீரன் அவனைச் சுட்டுக் கொன்றான். இச்சம்பவம் 1551-ல் நடைபெற்றது.

## முக்கியமான ஆண்டுகள்

1505. இலங்கைக்கு போர்த்துக்கீசர் முதல் முதல் வருதல்.

1518. கொழும்பில் முதல் முதலாகப் போர்த்துக்கீசர் கோட்டை கட்டுதல்.

1521. கோட்டை ராச்சியம் பிரிக்கப்படல்.

1527-1539. மாயாதுன்னைக்கும் புவனேகபாகுவுக்குமிடையில் யுத்தம்.

1543. பிரான்ஸிஸ் சங்கச் சந்நியாசிகளின் வருகை.

1551. புவனேகபாகுவின் மரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாம் அத்தியாயம்

## சீதவாக்கையின் எழுச்சியும் வீழ்ச்சியும்

### 1. நொறன்ஹாவும் விதிய பண்டாரனும்

இந்த யுத்தத்தைப்பற்றியும் புவனேகபாகுவின் மரணத்தைப்பற்றியுங் கேள்விப்பட்ட போர்த்துக்கீச ராசப்பிரதிநிதியான நொறன்ஹா என்பவன் இலங்கைக்கு வந்தான். அவன் அரசனின் கொலையைப்பற்றி உடனே விசாரணைசெய்து, மாயாதுன்னைக்கெதிராகத் தர்மபாலனுக்குத் துணைபுரிவானென எதிர்பார்க்கப்பட்டது. ஆனல் அவன் இறந்த அரசனின் பொக்கிஷத்தைக் கவர்ந்து கொள்ளவும், தர்மபாலனைக் கிறிஸ்து சமயத்துக்கு மாற்றவும் நோக்கங்கொண்டான். கொள்ளையும் மதமாற்றமும் ஒன்றுக்கொன்று ஆதாரமானவையல்ல. எனினும், அக்காலங்களில் அவை சகஜமே. திரவியமொன்றையே போர்த்துக்கீசர் விரும்பினபடியால் தருமஅதருமங்களைப்பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. எவ்வழியிலும் பொருள் வந்தாற் போதுமென எண்ணினர். இதே சமயத்தில் போர்த்துக்கல் அரசன் கிறிஸ்து சமயத்தைக் கீழ்நாடுகளில் பரப்ப விரும்பினன். அதனல் மதப்பிரசாரகர்களின் வேலையை ஆதரித்து வந்தான். அரசன் கட்டளையைப் போர்த்துக்கீச தேசாதிபதிகள் நிறைவேற்றவேண்டியது கடமை. அந்நிய மதானுசாரியான அரசனின் நட்பிலும் பார்க்க கிறிஸ்தவ அரசனின் நட்பே மேலானது என்று கருதினர்கள்.

நொறன்ஹா ஒரு சிறு தொகை திரவியத்தையே பெற்றன். பின்னர் தனது படைகளை மாயாதுன்னைக் கெதிராகச் சீதவாக்கைக்கு நடத்திச்சென்றன். மாயாதுன்னை ஓடிவிட்டான் என்று அறிந்ததும் நகரைத் தரை மட்டமாக்கி, அரச மாளிகையையும் இந்து ஆலயமாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தை கோயிலையும் கொள்ளை அடித்தான். அவன் விரும்பினுல் மாயாதுன்னையைத் தேடிப்பிடித்து, அவனுல் கோட்டைக்கு ஏற்படுந் தொந்தரவுகளுக்கு ஒரு முடிவு தேடியிருக்கலாம். ஆனுல் பணத்தில் ஆசை கொண்ட அவன் கோட்டை மாளிகையின் திரவியத்தையே நினைத்து திரும்பினுன். இதற்கிடையில் துருக்கியர் ஓர்மசைப் பிடிக்க முயற்சிக்கிருர்களென அறிந்து இந்தியாவுக்குச் சென்ருன். திரவியங்களைக் கொள்ளையடித்ததைப் போர்த்துக்கல் அரசன் விரும்பவில்லை. அவற்றையெல்லாம் உடனே திருப்பிக் கொடுத்துவிடவேண்டுமென அவன் கட்டளையிட்டான். ஆனுல் அவை முற்ருய்த் திருப்பிக் கொடுக்கப்படாதது ஆச்சரியமல்ல.

நொறன்ஹா திரவியத்தைக் கைப்பற்றும் முயற்சியில் தர்மபாலனின் தகப்பனுன விதிய பண்டாரன் என்பவனைக் கைதுசெய்ய எண்ணினுன். அதையறிந்து அவன் தப்பி ஓடிவிட்டான். நொறன்ஹா இந்தியாவுக்குப் புறப்பட்ட பின் விதிய பண்டாரன் திரும்பிவந்து தனது மகனுன பாலிய அரசனுக்கு ராஜப்பிரதிநிதியாயிருந்தான். நொறன்ஹா தனக்குச் செய்த தீமைகட்குப் பழிவாங்கும் நோக்கமாகப் போர்த்துக்கீசரைத் தாக்கி அவர்களது தேவாலயங்களை அழித்து, கிறிஸ்தவரையும் வதைத்து வந்தான். திறை கொடுக்கவும் மறுத்தான். இக்காலத்தில் நொறன்ஹா இந்திய அலுவல்களில் அதிகம் ஈடுபட்டிருந்தபடியால் இலங்கையிலுள்ள போர்த்துக்கீசருக்கு உதவிசெய்ய முடியவில்லை. விதிய பண்டாரன் திறையுங் கொடுத்து கிறிஸ்தவரையும் வதைசெய்யாமல் விட்டால் அவனை ராஜப்பிரதிநிதியாய் ஏற்றுக்கொள்வதாயும் அறிவித்தான்.

விதியன் இதற்கு உடன்பட்டபோதிலும், அவனை நம்பியிருக்க முடியாதென்று போர்த்துக்கீசர் விரைவில் உணர்ந்தனர். எனவே, 1554-ல் தற்பாதுகாப்புக்காக ஒரு கோட்டையைக் கட்டினர். முதற்கட்டிய கோட்டையிலும் இது மிகப்பெரியதாயும், கடலிலிருந்து கனுல் வீதி, யோர்க் வீதிவரையும் பரந்ததாயுமிருந்தது. போர்த்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீசரின் பலத்தை அதிகரிக்கும் இந்தக் காரியம் விதியனுக்குப் பிடிக்கவில்லை. கிறிஸ்தவர்கள் தன்னிடத்திலும் பார்க்க போர்த்துக்கீசரிடம் அதிகம் அபிமானம் பூண்டிருந்தபடியால் அவர்களை மீண்டும் இம்சைப் படுத்தியதுடன் ராச்சியத்தையும் தனதாக்க முயன்றான்.

விதியன் அரசனவதைப் போர்த்துக்கீசர் விரும்பவில்லை. உடனே அவனைக் கைதுசெய்து கோட்டையில் ஒரு இருட்டறையில் போட்டனர். விதியன் அவ்வறையிலிருந்துந் தப்பிப்போய், படைதிரட்டி வந்து போர்த்துக்கீசருடன் போர் தொடுத்தான். ஆரம்பத்தில் அவன் வெற்றிபெற்றுக் கோட்டையை முற்றுகையிட்டான். ஆனால் அதைக் கைப்பற்ற அவனால் முடியவில்லை.

நொறன்ஹா இந்தியாவுக்குச் சென்றதும் தர்மபாலனுக்கெதிராக மாயாதுன்னை போர் செய்திருப்பான். ஆனால் சிறந்த போர்வீரனான விதியனுக்குப் பயந்து வாளாவிருந்தான். தற்போது அவனைத் தொலைத்துவிட ஒரு வழியுண்டெனா அறிந்து போர்த்துக்கீசரோடு சேர்ந்து அவனுக்கெதிராய்ப் போர் செய்தான். கடைசியாக விதியன் யாழ்ப்பாணத்துக்கு ஓடினான். அங்கே செகராசசேகரன் அவனை வரவேற்றுபசரித்தான். ஆனால் அவன் திரும்பிவந்து போர் செய்வதற்குள் அங்கு தற்செயலாகக் கேட்ட ஒரு துப்பாக்கி வெடியின் பயனாக உண்டான குழப்பத்தில் கொலையுண்டிறந்தான்.

## II. சங்கிலி ராசனுடன் யுத்தம்

விதியன் இறந்ததும் மாயாதுன்னை மீட்டும் தனது ஆசையை நிறைவேற்ற முயன்றான். கோட்டையிலும் நிலைமை தனக்குச் சாதகமாயிருப்பதை அறிந்தான். 1556-ல் கடற்கரையோரமாயிருந்த எழுபதினாயிரம் பேர் கிறிஸ்து சமயத்தைத் தழுவினர். தென்னிந்தியாவில் சவேரியார் நடத்திவந்த மதமாற்றத்துக்கும் இதற்கும் சம்பந்தமிருந்ததென்பதில் ஐயமில்லை. தருமபாலன் ஞானஸ்நானம் பெற்றவுடன் அநேக பிரமுகர்கள் அவனைப் பின்பற்றி கிறிஸ்து மதத்தைத் தழுவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செய்தி கோவையிலுள்ளாருக்கும் போர்த்துக்கல் வாசிகட்கும் அளவிறந்த ஆனந்தத்தைக் கொடுத்தது. ஆனால் தருமபாலனின் மதமாற்றத்தை அவனது பிரசைகள் விரும்பவில்லை. அநேக பௌத்த குருமார் கோட்டையை விட்டுச் சீதவாக்கைக்குங் கண்டிக்குஞ் சென்றனர். கோட்டையில் நடைபெற்ற போர்த்துக்கீசருக்குப் பாதகமான ஒரு கலகத்தில் சம்பந்தப்பட்ட பௌத்த சந்நியாசிகள் பலரை அவர்கள் கொலை செய்ததும், சனங்களின் கோபத்தை அதிகரித்தது.

இத்தருணத்தில் மறுபடியும் மாயாதுன்னை கோட்டையை முற்றுகையிட்டான். ஆனால் கடற்படைப் பலமுள்ள போர்த்துக்கீசர் இந்தியாவிலிருந்து படையை வரவழைத்து அவனைப் புறமுதுகிடச் செய்தனர்.

**1560**-ல் தருமபாலனை எதிர்க்க இன்னொரு வசதியான சமயம் வாய்த்தது. அவ்வாண்டில் செகராச சேகரனைத் தண்டிக்க எண்ணிப் போர்த்துக்கீசர் யாழ்ப்பாணஞ் சென்றனர். ராஜப்பிரதிநிதி செகராச சேகரனுடன் ஏற்கனவே உடன்படிக்கை செய்திருந்தபோதிலும் கிறிஸ்தவரை அவன் கொலைசெய்ததற்காக போர்த்துக்கல் அரசன் அவனைத் தண்டிக்கவேண்டுமெனக் கட்டளையனுப்பினான். மேலும் போர்த்துக்கீசரது விருப்பத்துக்கு மாறாக அவன் விதிய பண்டாரனை ஆதரித்ததும் இன்னொரு காரணம்.

போர்த்துக்கீசப் படைகள் யாழ்ப்பாணத் துறைமுகத்திலிறங்கி மதிலாலும் சுவராலும் அரண்செய்யப்பட்டிருந்த நல்லூரைத் தாக்கின. நகரைப் பகைவர்கள் கைப்பற்றியதும், செகராச சேகரன் கோப்பாய்க்குச் சென்று, அங்கிருந்து யானை இறவு மார்க்கமாக ஓடி குடாநாட்டைத் தாண்டினான். போர்த்துக்கீசர் அவனைப் பின் தொடர்ந்து சென்றார்கள். அவர்கள் முன்னேறி வருவதைத் தடுக்க ஒரு வழியுமறியாதவனாய் அவன் போர்த்துக்கீசரிடம் சரணடையவேண்டியதாயிற்று. விதியன் கொண்டுவந்த பொக்கிஷத்தையெல்லாம் அவர்களுக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறையாகக் கொடுப்பதாயும், கிறிஸ்தவருக்கு அவர்கள் நினைத்தபடி சமயத்தை அனுட்டிக்க வசதியளிப்பதாயுங் கூறினுன்.


சங்கிலியின் நிபந்தனைகளைப் போர்த்துக்கீசர் ஏற்றுக் கொண்ட பின்னர் ஊரெங்கும் அவர்கள் சென்று சைவாலயங்களை இடித்துப் பாழாக்கி வந்தனர். கிறிஸ்தவ சந்நியாசிகள் மதமாற்ற வேலையிலீடுபட்டனர். உடனே சங்கிலி மறுபடியும் அவர்களுடன் போர்தொடுத்து அவர்களை நாட்டைவிட்டுக் கலைத்தான். கலைக்கப்பட்ட போர்த்துக்கீசர் மன்னருக்குச் சென்று அங்கே ஒரு கோட்டையை அமைத்து தமது ஆதிக்கத்தை வலியுறுத்தினர்.

இவ்வாறு போர்த்துக்கீச ராஜப்பிரதிநிதி யாழ்ப்பாணத்தில் போர் நடத்திக்கொண்டு நிற்க, மாயாதுன்னை கோட்டையையும் கொழும்பையும் முற்றுகையிட்டான். 1562-ல் நடைபெற்ற இந்த யுத்தத்தில்தான் மாயாதுன்னையின் மகனுன ராஜசிங்கன் முல்லேறியாவில் போர்த்துக்கீசரை முறியடித்தான். கோட்டை நீண்ட காலமாக முற்றுகையிடப்பட்டதன் காரணமாக, அதனுள் வசித்தோர் உணவின்றிப் பெரிதும் கஷ்டப்பட நேர்ந்தது. இந்தியாவிலிருந்து துணை வரும்வரை போர்த்துக்கீசர் நிறைந்த வைராக்கியத்துடன் முற்றுகையை நிர்வகித்தார்கள். மறுபடியும் மாயாதுன்னை முற்றுகையை விட்டுப் புறங்காட்டி சீதவாக்கைக்கு பின்வாங்க நேர்ந்தது.

இந்த யுத்தத்தின் பயனுகப் போர்த்துக்கீசர் ஒரு உண்மையை அறிந்துகொண்டார்கள். அதாவது தம் வசமுள்ள சேனையைக்கொண்டு இரண்டு இடங்களைப் பகைவருக்கெதிராய்க் காப்பாற்ற முடியாதென்பதே. அதனுல் அவர்கள் கோட்டையை—150 வருடங்களாக இலங்கையின் தலைநகராயிருந்த ராஜதானியை—கைவிட்டு தர்மபாலனையுங் கூட்டிக்கொண்டு கொழும்புக்குச் சென்றனர்.

முன்னர் கோட்டை எவ்வளவு சிறப்பாக விளங்கிற்றே அவ்வளவு சிறப்பாக சீதவாக்கை இக்காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியது. ஏற்கெனவே ரயிகம் பண்டாரன் இறந்ததும் அவனுடைய ராச்சியத்தை மாயாதுன்னே கைப்பற்றியிருந்தான். இப்பொழுது தர்மபாலனும் போர்த்துக்கீசரும் கொழும்பை மாத்திரம் தமது ஆதிக்கத்துள் வைத்திருந்தனர். மற்றவையெல்லாம் மாயாதுன்னே கைப்பட்டன. அடுத்ததாகக் கண்டி ராச்சியத்தையுங் கைப்பற்றிவிடவேண்டுமென மாயாதுன்னே ஆலோசித்தான். கண்டி யரசன் தனது மகளை ராஜசிங்கனுக்கு வதுவை செய்துகொடுக்க மறுத்துத் தர்மபாலனுக்கு மணஞ்செய்வித்தான். அதனுல் மாயாதுன்னே கண்டியரசன்மீது போர் தொடுத்தான். ஆனுல் போர்த்துக்கீசர் ஒரு புறத்தில் அவனுடைய துறைமுகங்களைத் தாக்கி நாட்டைக் கொள்ளையடிக்கவே, கண்டியில் அவனுல் வெற்றிபெற முடியவில்லை.

மாயாதுன்னே அடுத்ததாகத் தர்மபாலனை நஞ்சூட்டிக் கொல்ல நினைத்தான். இது தவறவே, தனது மகனுன இராஜசிங்கன் தலைமையில் கொழும்பை முற்றுகையிடுமாறு 1579-ல் மறுபடியும் ஒரு படையை அனுப்பினுன். இரண்டு வருஷமாக முற்றுகையிடப்பட்டது. ஒரு வருடம் கழிந்ததும் தெற்குப் பக்கத்தில் நகரைப் பாதுகாத்துக் கிடந்த வாவியின் நீரை இறைத்து வற்றச் செய்தும் கொழும்பைக் கைப்பற்ற அவனுல் முடியவில்லை. அன்றியும் அவனிடம் கப்பற்படை இல்லாததினுல் இந்தியாவிலிருந்து வந்த பகைவரின் படைத்துணையைத் தடுக்க இவனுல் முடியாமற் போயிற்று.

## III. முதலாம் இராஜசிங்கன் (1581-92)

இராஜசிங்கன் சீதவாக்கைக்குத் திரும்பியபொழுது, அறுபது வருட ஆட்சி நடத்திய அவன் தகப்பன் இறந்து போனதாக அறிந்தான். உடனே தானே அரசுரிமைகளை ஏற்று ஆட்சி நடத்தினுன். இலங்கை முழுவதுக்குந் தானே தனியரசனுகவேண்டுமென அவன் தந்தையைப் போலவே அவனும் எண்ணினுன். கொழும்பை விரைவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லமுடியாதெனஅறிந்ததும், தனது தந்தையார் வெல்லமுயன்ற கண்டி ராச்சியத்திற் கண்ணோட்டஞ் செலுத்தினன். 1582-ல் கண்டியிலாண்ட கரலியட்ட பண்டாரன் என்பவனைக் கலைத்துவிட்டுச் சிங்கள ராச்சியம் முழுவதற்கும் தானே அரசனானன்.

கரலியட்ட பண்டாரன் நாட்டை விட்டோடி திருக்கோணமலையில் அம்மைநோய் வாய்ப்பட்டிறந்தான். இறக்கும்பொழுது யமசிங்கனென்னுந் தனது மருமகனுக்கு ராச்சிய உரிமையை வழங்கியிருந்தான். யமசிங்கன் கோவைக்குச் சென்று டொம் பிலிப்பு என்ற பெயருடன் கிறிஸ்தவனானன். கரலியட்ட பண்டாரனின் மகளை போர்த்துக்கீசர் மன்னருக்கு கொண்டுபோய் டோனு கதரினு என்ற பெயரை அவளுக்குச் சூட்டி கிறிஸ்த சமயத்தில் சேர்த்துக்கொண்டார்கள்.

இராஜசிங்கன் பெரிய போர்வீரனானலும், அவன் தந்தையிடத்திலுள்ள அமைதி, பொறுமை, தந்திரம் ஆதிய குணங்களவனிடத்திருக்கவில்லை. சகிப்புத்தன்மையில்லாதவனனபடியால், தனது விருப்பம் நிறைவேறுவதற்குத் தடையாயிருந்த எல்லாரையும் நீக்கின தோடமையாது, தனக்கு விரோதமாயெழுந்த பௌத்த பிக்குக்களைக்கூடக் கொலைசெய்வித்தான். இம்மாதிரியான முரட்டுச் செய்கைகளினுல் இவனுக்குப் பல பகைவர்கள் உண்டாயினர். இவர்களில் ஒருவன் கோனப்பு பண்டாரன். இவன் தகப்பனுன வீரசுந்தர பண்டாரன் கண்டியை வெல்ல இராஜசிங்கனுக்கு உதவி புரிந்தவன். ஆனல் அவனை இராஜசிங்கன் பின்னர் சதிசெய்து கொன்றுன். இதனல் கோனப்பு கொழும்புக்கு ஓடி போர்த்துக்கீசருடன் சேர்ந்தான். இவன் பின்னர் கோவைக்கனுப்பப்பட்டு டொன் ஜுவான் என்ற பெயருடன் கிறிஸ்தவனானன்.

1587-ல், மே மாதத்தில் இராஜசிங்கன் கொழும்பைப் பிடிக்கவும், போர்த்துக்கீசரை இலங்கையிலிருந்து கலைக்கவும் இன்னொருமுறை தெண்டித்தான். அப்பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டையில் 350 போர்த்துக்கீசரே இருந்தபடியால் அது சாத்தியமென எண்ணி கொழும்பை முற்றுகையிட்டு தெற்கேயுள்ள வாவியின் நீரை இறைத்து அத்திசையில் தாக்க முயற்சி செய்தான். கடலில் வலிமைபெற்றிருந்த போர்த்துக்கீசர் கடற்கரைப் பட்டினங்களை அழித்து, விகாரைகளையும், தீவாந்தர முனை (தேவிநுவரை) யிலிருந்த அழகிய கோவிலையும், இன்னும் பல ஆலயங்களையும் தரைமட்டமாக்கினார்கள். 1588-ம் ஆண்டு, பிப்ரவரி மாதத்தில் இந்தியாவிலிருந்து போர்த்துக்கீசருக்கு துணை வந்ததும் இராஜசிங்கன் பின்வாங்கினான்.

கொழும்பிலிருந்து திரும்பியதும் பல தொல்லைகள் அவனைச் சூழ்ந்தன. அவனுடைய கொடுங்கோன்மையைப் பொறுக்க முடியாது ஸொதுபால பண்டாரன் என்பவன் சப்த கோறளையில் ஒரு கலகத்தை உண்டாக்கினான். கொழும்பில் தோல்வியுற்றதனால் மனமுடைந்திருந்த இராஜசிங்கன் கலகக்காரரை இரக்கமின்றித் தண்டித்தான். இதே சமயத்தில் கண்டி வாசிகளும் இவனுடைய கொடுமையைப் பொறுக்கமாட்டாது கலகஞ்செய்தனர். டொம் பிலிப்பைத் தங்களது அரசனாகும்படியும் அழைத்தார்கள். அவன் உடனே டொன் ஜுவானுடன் போர்த்துக்கீசப் படைத்துணையோடு கண்டிக்குப் படையெடுத்துச் சென்றான். சென்று, தன் தகப்பனிழந்த சிங்காசனத்தை மீட்டான். சிறிது நாளைக்கு பின் டொம் பிலிப்பு நஞ்சூட்டிக் கொல்லப்பட்டான். டொன் ஜுவானே அநேகமாய் இக்கொலைக்குக் காரணம் எனக் கூறலாம். ஏனெனில், அவன் போர்த்துக்கீசரைக் கையகலக் கடத்திவிட்டு, விமலதர்ம சூரியன் என்ற நாமத்துடன் தானே அரசனென விளம்பரப்படுத்திக்கொண்டான்.

இந்தக் குழப்பங்களிடையே யுத்தத்தை மூட்டிக் கண்டியை மறுபடியும் தனக்காக்கிக்கொள்ளலாமென இராஜசிங்கன் நினைத்தான். ஆனால் போர்த்திறம்மிக்க விமலதர்ம சூரியன் வல்லனை என்ற இடத்தில் இராஜசிங்கன் சேனையை மறித்துப் புறமுதுகிடச்சாடினான். அவனோடு எதிர்நிற்க முடியாது இராஜசிங்கன் சீதவாக்

கைக்குத் திரும்புகையில், வழியில் ஒரு மூங்கில் சிராய் காலில் குத்தியதால் வலியுண்டாகி 1592-ல் இறந்தான்.

இராஜசிங்கனுக்கு மகனில்லாதபடியால், அவன் இறந்தபொழுது அடுத்தாப்போல் பட்டத்துக்குரியவர் யாரென நிச்சயிக்க முடியாது பெரிய குழப்பமுண்டாயிற்று. இதை யறிந்த போர்த்துக்கீசர் இராஜசிங்கனின் தேசத்தை எல்லாம் சிறிது சிறிதாகத் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். மாயாதுன்னையின் காலத்திலும் இராஜசிங்கன் காலத்திலும் சிறந்து விளங்கிய சீதவாக்கையும் இவ்வாறு வீழ்ச்சியுற்றது.

## முக்கியமான ஆண்டுகள்

1554. கொழும்பில் இரண்டாவது கோட்டை கட்டப்படல்.

1562. முல்லேறியா யுத்தம்.

1565. கோட்டை கைவிடப்படல்.

1582. முதலாவது இராஜசிங்கன் கண்டி ராச்சியத்தை வெல்லுதல்.

1592. முதலாவது இராஜசிங்கனின் மரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பதாம் அத்தியாயம்

## போர்த்துக்கீசர் கண்டியைப் பிடிக்க முயலுதல்

### I. விமலதர்ம சூரியனுக்கெதிராக யுத்தம்

இலங்கை வியாபாரத்தைக் கைப்பற்றுவதில்தான் போர்த்துக்கீசர் முதல் முதலீடுபட்டனர். பின்னர் மத மாற்றஞ் செய்வதில் கருத்தூன்றினார்கள். இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி செய்யவேண்டுமென அவர்கள் விரும்பவில்லை. முதலாம் இராஜசிங்கன் இறந்த பின்னர்தான் அதைப்பற்றி யோசனை செய்தார்கள். அதுவரை கொழும்பில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தித் தமது வியாபாரத்தைப் பாதுகாப்பதுவே அவர்கட்குப் போதிய சிரமமாயிருந்தது.

முதலாம் இராஜசிங்கன் இறந்ததும், இலங்கையைத் தாம் கைப்பற்றி ஆண்டால் என்ன என்று அவர்களுக்கு எண்ணமுண்டாயிற்று. இந்தியாவில் ஆதிக்கஞ் செலுத்த விரும்பினால் இலங்கையைத் தம்வசமாக்கவேண்டுமென்பதை அவர்கள் உணர்ந்தார்கள். இலங்கை இந்தியாவின் தெற்கு முனையில், இந்து சமுத்திரத்தின் மத்தியில் இருப்பதால் இந்தியாவின் கிழக்கு-மேற்குப் பகுதிகளை அங்கிருந்தே கண்காணித்து வரலாம். மேலும் போர்த்துக்கீசக் குடியிருப்புகளுடைய மலாக்காவுக்கும், வட மேற்கிலுள்ள ஏடன், ஓர்மஸ் என்னுமிடங்களுக்கும் மத்தியில் இலங்கை இருந்தது இன்னொரு வசதி. அன்றியும் அது ஒரு சிறிய தீவாயிருப்பதால் வலிமையுள்ள கடற்படையையுடைய போர்த்துக்கீசர் அதைச் சிரமமின்றிப் பகைவரனுகாது காக்கக்கூடியதாயுமிருந்தது. மலையாளக் கரையில் அவர்களுக்குப் பிரதான குடியிருப்புகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அமைந்த காலத்தில் கோவையைத் தலைநகராகக்கொண்டார்கள். ஆனால் அப்போது பிஜாப்பூர் அரசன் வலிமை பெற்று விளங்கியதால் கோவை அவ்வளவு பாதுகாப்பில்லாதிருந்தது. இத்தியாதி காரணங்களை முன்னிட்டு இலங்கைமீது அவர்கள் கவனஞ் செலுத்தினர்.

கோட்டை ராச்சியத்தை மிக எளிதில் கைப்பற்றிய உற்சாகத்தினுல் இலங்கை முழுவதையுமே வென்றுவிடலாமெனப் போர்த்துக்கீசர் எண்ணினர். மேலும் தனக்குப் பின் பட்டத்துக்கு வருவதற்குப் புத்திரன் இல்லாததால் கோட்டை அரசனுன தர்மபாலன் போர்த்துக்கல் மன்னனுக்கே அரசுரிமை வழங்குவதாக வாக்களித்திருந்தான். யாழ்ப்பாண அரசனும் போர்த்துக்கீசரது ஆணைப்படியே ஆட்சிசெய்து வந்தான். கண்டி ராச்சியமொன்றே அவர்களது ஆணைக்குட்படாது தனியரசனுல் ஆளப்பட்டது. வேறும் பல காரணங்களை முன்னிட்டுக் கண்டியையுந் தம்மடிப்படுத்தவேண்டுமென அவர்கள் நினைத்தார்கள்.

விமலதர்ம சூரியன் கள்ளமாய் ராச்சியத்தைக் கவர்ந்தவன். கண்டியரசுக்கு உரிமையுடையவள் கரலியட்ட பண்டாரனின் மகளும், கிறிஸ்தவ மார்க்கத்தில் சேர்ந்து மன்னுரில் இருந்துவந்தவளுமான டோனு கதரினு என்பவளே. மேலும் விமலதர்மன் மதத்துரோகியென்றும், கிறிஸ்து சமயத்திலிருந்து அவன் புத்த சமயத்துக்கு மாறினன் எனவே, அவனை சிங்காசனத்தை விட்டுக் கலைத்துத் தக்க தண்டனை செய்யவேண்டுமெனவும் அவர்கள் எண்ணினர்.

1594-ல் கண்டிமீது படையெடுக்குமாறு கோவையிலிருந்து பீரேரு லொபெஸ் டி சூஸா என்பவன் அனுப்பப்பட்டான். விமலதர்மனைக் கலைத்துவிட்டு டோனு கதரினுவைச் சிங்காசனத்தில் வைக்கும்படி அவனுக்குக் கட்டளையிடப்பட்டது. டி சூஸா 600 போர்த்துக்கீசத் துருப்புகளோடும், ஒரு பெரிய சிங்களச் சேனையோடும் புறப்பட்டுக் கண்டியை நோக்கிச் சென்றுன். சென்றவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளியுலகு சம்பந்தப்பட்டவரையில் கொழும்பு வீற்றிருக்கும் நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனகலை, மெனிக்கடவரை என்ற இடங்களைத் தாண்டி, வல்லனையில் கண்டிச் சேனையை எதிர்த்துத் தோற்கடித்தான்.

போர்த்துக்கீசப் படையை எதிர்த்துச் சண்டையிடுவது இலேசான காரியமல்ல என்பதை விமலதர்மன் அறிந்திருந்தான். தனது சொந்தப் படையின் குறைபாட்டையும், போர்த்துக்கீச வீரரின் திறமையையும் நன்குணர்ந்திருந்தான். துப்பாக்கிப் பிரயோகஞ் செய்யவும் பீரங்கி வெடிக்கவும் சிங்கள வீரர் போர்த்துக்கீசரிடம் பழகியிருந்தபோதிலும், போரில் அவர்கள் அவ்வளவு திறமை காட்டவில்லை. சில சிங்கள வீரரிடமே துப்பாக்கியிருந்தது. ஏனையோர் ஈட்டி, வாள், கதை முதலிய ஆயுதங்களைத் தங்கள் செலவிலேயே வைத்திருந்தார்கள். அவர்கள் வில்வித்தை அறிந்திருந்தபோதிலும் காடுகளிலும் மலைகளிலும் அவர்கட்கு அதைப் பயன்படுத்த முடியவில்லை. மேலும் ஒவ்வொரு போர் வீரனும் 15 தினத்துக்குத் தனக்குத் தேவையான உணவைத் தானே கொண்டுவரவேண்டியதாயிருந்தது. அது முடிந்ததும் அவன் மறுபடியும் வீட்டுக்குச் சென்று 15 நாளைக்குப் போதுமான உணவோடு பின்திரும்பி வருவான். தற்காலப் போர்வீரனைப்போல அவனுக்குப் போர்முறையில் பயிற்சியே கிடையாது. பகைவரைத் தாக்குவதானல் பெருத்த சத்தமிட்டுக்கொண்டும், பேரிகைகளைக் கொட்டிக்கொண்டும் பகைவரை நெருக்கித் தாக்குவார்கள். போனஉடன் வெற்றி கிடைக்காவிடில் அல்லது தங்கள் தலைவன் போரில் இறந்துபட்டானுனல் அவர்கள் மனஞ்சலித்துப் பின்னிடுவார்கள். காடுகளிலும் மலைப் பகுதிகளிலும் பதுங்கி நின்று முரட்டுச்சண்டை செய்வதில் மாத்திரம் திறமை பெற்றிருந்தார்கள்.

ஆனல் போர்த்துக்கீசத் துருப்புகளோ அனுபவமும் நல்ல பயிற்சியும் பெற்றவர்கள். அவர்கள் போர் செய்வதையே தொழிலாகக்கொண்டவர்கள்; சிங்களரைப் போல யுத்தம் வந்த காலத்தில் மாத்திரம் படைதாங்கித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது எஜமானருக்குப் படைத்துணை செய்தும்; மற்றக் காலங்களில் வேளாண்மை நடத்தியும் வாழ்ந்தவர்களல்ல. மேலும் அவர்கள் சிங்களப் போர்வீரரைப் போல அரைநிர்வாணமாக யுத்தஞ் செய்யாமல், உடம்பெங்கும் உலோகத்தால் செய்த சட்டைகளை அணிந்திருந்தார்கள். துப்பாக்கியுங் கையுமாகவே திரிவர். பெரிய மதில்களையெல்லாம் தகர்த்தெறியக்கூடிய பீரங்கிகளை உபயோகித்தனர். இவற்றால் போர்த்துக்கீசருடைய போர்முறை ஒழுங்குள்ளதாயிருந்தது. அன்றியும் சமபூமியில் தங்களிலும் பத்து மடங்கு பெரிய சிங்களச் சேனையை ஒரே முறையில் வெல்லக்கூடியவராயிருந்தனர்.


விமலதர்மன் போர்த்துக்கீசரை நிர்வகிக்க முடியாமல் கண்டியிலிருந்து வெல்லச என்னுமிடத்துக்குப் பின் வாங்கினான். போர்த்துக்கீசர் தன்னை அங்கு தொடர மாட்டார்களென எண்ணினான். அவ்வாறு விமலதர்மன் பின்வாங்கியதும் சூஸா கண்டியை இலேசாகக் கைப்பற்றி, கண்டிக்குத் திறைசெலுத்தி வந்த ஏனைய சிற்றரசுகளையும் தன்வசமாக்கினான். கடைசியாக டோனா கதரினாவை கண்டியரசியாக முடிசூட்டுவித்தான்.

முதலில் டோனா கதரினாவை வரவேற்ற கண்டிப் பிரசைகள், போர்த்துக்கீசர் அவளைத் தங்கள் விருப்பத்துக்கெல்லாம் ஆட்சிசெய்வார்களென்பதை விரைவில் கண்டு கொண்டார்கள். மேலும் அவளை ஒரு போர்த்துக்கீசனே மணக்கவுங் கூடுமெனை அறிந்தனர். முதலாம் இராஜசிங்கனின் நண்பனும், போர்த்துக்கீசர் பக்கத்தில் தற்போது சண்டை செய்து வந்தவனுமான ஜயவீர பண்டாரன் இம்மாதிரி விவாகம் நடைபெறுவதை விரும்பவில்லை. விமலதர்மன் ஜயவீரனின் மன நிலையை அறிந்ததும், தான் போர்த்துக்கீசருடன் சண்டை செய்வதிலும், அவனை அவர்களிடமிருந்து பிரித்துவிடுவதே நல்லதென எண்ணினான். உடனே ஜயவீரனோடு கடிதப் போக்குவரவு செய்து அவனுடைய ஆதரவைப் பெற்றான். போர்த்துக்கீசர் இதையறிந்து ஜயவீரனைக் கொலைசெய்தார்கள். உடனே அவர்களுக்குத் துணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்த சிங்கள வீரர் அவர்களைக் கைவிட்டுவிடவே, துணையற்றவராய் அவர்கள் கண்டியை விட்டுக் கொழும்பு நோக்கி ஓடினர்.

இதையறிந்த விமலதர்மன், இதுதான் தருணமென எண்ணி அவர்களைத் தொடர்ந்து தனது சேனையை நடத்தினன். மலைப் பாதைகளை நன்கறிந்த சிங்கள வீரர் போர்த்துக்கீசரைக் கலைத்துச் சென்று பேராதனைப் பூந்தோட்டம் தற்போதிருக்கும் இடத்திற் கணித்தாயுள்ள



ஸ்பில்பேர்கனும் விமலதர்ம சூரியனும் சந்தித்தல்

கன்னொறுவாவில் அவர்களைத் தடுத்துப் போர்செய்தனர். மகாவலி கங்கையைத் தாண்ட முயற்சி செய்த அப்போர்த்துக்கீசரைச் சிங்கள வீரர் சூழ்ந்து, பலரைக் கொன்று, எஞ்சியவரைச் சிறைப்படுத்தினர். அவர்களோடு கூடச்சென்ற டோனு கதரினவை விமலதர்மன் தனது இராணியாக்கினன். இச்சேர்க்கையால் தனது ஆட்சிக்குப் பலமுண்டாகுமெனவும் எண்ணினன். சில போர்த்துக்கீசப் போர்வீரரை விமலதர்மன் அங்கவீனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தி, கண்களைக் கெடுத்து, நான்கு பேருக்கு ஒரு கண் வீதம் அவர்களை அனுப்பினுன். அவர்கள்மீது தனக்கிருக்கும் வெறுப்பைக் காட்டவே அவ்வாறு செய்தான்.

கண்டியில் போர்த்துக்கீசருக்கு நேர்ந்த கஷ்டம் ஒரு புறமாக, கோட்டையிலும் சனங்கள் அவர்களுடைய ஆட்சியை விரும்பாது கலகம் விளைத்தனர். கண்டியில் விமலதர்மன் வெற்றி பெற்ருனெனக் கேள்வியுற்றதும் அந்த உற்சாகத்தினுல் தூண்டப்பட்டு கோட்டை வாசிகள் போர்த்துக்கீச ஆதிக்கத்திலிருந்து தம்மை விடுவிக்கவேண்டுமெனக் கிளம்பினர்.

## II. அஸிவிடோ

எவ்வித குழப்பங்களேற்பட்டபோதிலும் இலங்கை முழுவதையும் தாங்கள் ஆளவேண்டுமென்ற எண்ணத்திலிருந்து போர்த்துக்கீசர் அணுவளவும் மாறவில்லை. நாட்டிலுள்ள கலகங்களை அடக்கி, போர்த்துக்கீச ஆணையை நிலவச் செய்விக்குமாறு 1594-ல் ஜெரனிமோடி அஸிவிடோ என்பவன் தளபதியாக்கப்பட்டான்.

அவன் இலங்கைக்கு வந்தபொழுதுகூட சனங்கள் போர்த்துக்கீச ராட்சிக்கெதிராய்க் கலகஞ் செய்துகொண்டிருந்தார்கள். சனங்களைப் பயமுறுத்தும் பொருட்டும், முன்னர் போர்த்துக்கீசப் போர்வீரரை அங்கவீனப்படுத்தியதற்குப் பழிவாங்கும் நோக்கமாகவும் அஸிவிடோ கலகக்காரரைப் பிடித்து மிகக்கொடிய தண்டனைகளை விதித்தான். இது சிங்களருக்கு ஆத்திரத்தை யுண்டாக்கவே விமலதர்மனின் தூண்டுதலால் கோட்டை ராச்சியத்தின் பல பாகங்களிலும் கலகம் உண்டானது. சில சமயம் விமலதர்மன் தனது சேனையுடன் வந்து கலகக்காரருக்கு உதவி புரிந்தான். சில சமயம் போர்த்துக்கீசரோடு சேர்ந்து நிற்கும் சிங்கள வீரரை அவர்களுக்குத் துணைசெய்யாது கலகக்காரருடன் சேருமாறு தூண்டி வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவுந் திறமையுடன் அஸிவிடோ கலகக்காரரை யடக்கிச் சமபூமியிற் சமாதானத்தை நிலவச்செய்த பின் 1602-ல் விமலதர்மனை வெல்ல வல்லனேவரை படையெடுத்துச் சென்ருன். இவ்வருஷத்தில் போர்த்துக்கீசருக்கெதிராகத் துணைசெய்வதாக இரண்டு ஒல்லாந்தர் விமலதர்மனிடஞ் சென்றனர். முதற் சென்றவனுக்குப் பெயர் ஜோரிஸ் வான் ஸ்பில்பேர்கன்; இவன் வந்து ஆறு மாசங்களுக்குப் பின் சிபால்ட்டி வேட் என்பவன் சென்ருன். வலிமையுள்ள ஒரு கடற்படையுடைய அந்நியரின் படைத்துணையில்லாமல் போர்த்துக்கீசரை இலங்கையிலிருந்து கலைக்கமுடியாதென எண்ணியிருந்த விமலதர்மன், காத்திராப் பிரகாரம் வந்த இத்துணையை ஏற்று அவர்களை உபசரித்தான். தான் தரையிலிருந்து தாக்க, அவர்கள் கடலிலிருந்து போர்த்துக்கீசப் படையைத் தாக்கினுல் இலங்கையில் வியாபாரஞ் செய்வதற்கு ஏகபோக உரிமையளிப்பதுடன் அவர்களுடைய போர்ச் செலவையும் தான் பொறுப்பதாக விமலதர்மன் ஒல்லாந்தருக்கு வாக்களித்தான்.

ஒல்லாந்தர் துணை செய்யக்கூடுமென்பதை அறிந்ததும் கண்டியரசனைத் தாமதமின்றி வெற்றிகொள்ள வேண்டுமென போர்த்துக்கீசர் எண்ணினர். கடற்சண்டையில் ஒல்லாந்தர் போர்த்துக்கீசரைத் தாக்குவதானுல் உள்ளூரில் சத்துருக்கள் இருப்பது உசிதமல்ல. ஆதலால் 1639-ல் அஸிவிடோ கண்டியைப் பிடிப்பதற்குச் சேனையோடெழுந்தான். அத்தனுகலே, மெனிக்கடவரை, அட்டப்பிட்டி என்ற இடங்களுக்கூடாகச் சேனையை இட்டுச் சென்று நான்கு நாட்களில் கணத்தன்னே என்ற இடத்தை அடைந்தான். ஆனுல் வல்லனேயென்னுமிடத்தில் கண்டியர் இவனுடைய சேனையை மேற்செல்ல விடாது தடுத்தனர். ஒரு மாதமாக அவ்விடத்தில் போர்செய்து அதனைக் கைப்பற்றியதும் இவனுக்குப் படைத்துணை புரிந்த சிங்கள வீரர் விமலதர்மனின் சூழ்ச்சியால் இவனை விட்டுப் பிரிந்தார்கள். மேற்செல்ல முடியாது இவன் புறங்காட்டவே விமலதர்மன் பின்னிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மல்வானேக்குச் சென்ற போர்த்துக்கீசச் சேனையை வழி தோறும் தாக்கினுன்.

இவ்வாறு போர்த்துக்கீசச் சேனை பின்னடையவே விமலதர்மன் நாடெங்கும் அவர்களுக்கெதிராய்க் கலகத்தைக் கிளப்பிவிட்டான். அதனுல் சண்டை அடுத்த வருடம்வரை நிகழ்ந்தது. இச்சண்டையில் சீபால் டிவேட் என்ற ஒல்லாந்தன் சிங்களருக்கு உதவி செய்யச் சேனையோடு வந்தான். ஆனுல் சிங்களருக்கும் இவனுக்குமேற்பட்ட சில பிணக்குகளால் இவனை அரசனின் உத்தியோகத்தர் சிலர் கொலைசெய்துவிட்டார்கள். ஒல்லாந்தர் துணை இவ்வாறு நீங்கவே விமலதர்மன் போர்த்துக்கீசரோடு சமாதானஞ் செய்ய விரும்பினுன். ஆனுல் அது முற்றவில்லை. சில நாளையில் அவன் தன்னரசைத் தனது மகனுக்கு விட்டு, ராஜப்பிரதிநிதியாகத் தனது மைத்துனனை சேனரதனை ஏற்படுத்தி இறந்து போனுன்.

இராஜப்பிரதிநிதியாக இருப்பது சேனரதனுக்குப் பிடிக்கவில்லை. டோனு கதரினுவை வதுவை செய்து கொண்டு தானே அரசனுகிவிடலாமென எண்ணினுன். இத்தருணத்தில் வேறுமிருவர் அவ்வாறே அரசைக் கைப்பற்ற முனைந்தெழுந்தார்கள். ஏழு மாதங்களில் தனது எதிரிகளையடக்கி சேனரதன் அரசனுனுன். இதற்கிடையில் அஸிவிடோ கலகக்காரர் கையிற் சிக்கிய நாடுகளையெல்லாம் மீட்டான்.

சேனரதன் அரசனுன சம்பவம் அஸிவிடோவின் கொள்கைகளைத் தினையளவும் மாற்றவில்லை. ஒல்லாந்தரோடு சேர்ந்து சேனரதன் தன்னை எதிர்க்கக்கூடுமென அவன் நினைத்தான். எனவே, கண்டியைத் தாக்குமாறு சேனையை அனுப்பாவிட்டாலும், மலைநாடுகளிலுள்ள சேனரதனின் ஊர்களைக் கொள்ளையடிக்குமாறு வீரர்களை அனுப்பிவந்தான். இம்மாதிரியான எதிர்ப்பை ஒழிப்பதற்கு வழிகாணுது சேனரதன் ஒல்லாந்தரின் துணையை நாடவேண்டியிருந்தது. டிவேட் என்பவனுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென் மேற்கு இலங்கை
17-ம் நூற்றாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைக்காக வஞ்சங்கொண்டிருந்தபோதிலும், ஒல்லாந்தர் இலங்கையின் கறுவா வியாபாரத்தைக் கைப்பற்றிவிடவேண்டுமென்ற நோக்கத்தினுல் சேனரதனுடன் சமாதானஞ் செய்துகொண்டார்கள்.

இதைக் கேள்வியுற்ற அஸிவிடோ சேனரதனைத் தன்னடிப்படுத்தவேண்டுமென எண்ணி, 1611-ல் ஒரு சேனையை இட்டுச் சென்று கன்னெறுவா என்ற இடத்தில் அரசனின் சேனையைப் புறங்கண்டான். அதன் பின் கண்டிக்குச் சென்று அந்நகரத்தைக் கொள்ளையிட்டு உடனே அங்கே தங்காமல் கண்டிக்குச் செல்லும்பொழுதே அரண்செய்திருந்த வல்லனைக்குத் திரும்பினுன். அங்கே பலமுள்ள ஒரு சேனையை நிறுத்திவிட்டு மலைநாட்டை விட்டகன்றான்.

போர்த்துக்கீசத் தேசாதிபதிகளுள் அஸிவிடோ மிகக் கொடியவனுனுலும் நல்ல திறமைவாய்ந்தவன். 1612-ல் அவன் போர்த்துக்கீச ராசப்பிரதிநிதியாக்கப்பட்டதால் இலங்கையை விட்டு நீங்கினுன். சேனரதன் மீண்டும் ஒல்லாந்தருடன் கடிதப் போக்குவரவு செய்து துணை கேட்டதனுல் அஸிவிடோவின் பின் வந்த போர்த்துக்கீசத் தளபதிகள் மலைநாட்டின்மீது அடிக்கடி படையெடுத்தார்கள்.

1616-ல் கோட்டை ராச்சியம் தனக்குச் சொந்தமானதென உரிமை பாராட்டி ஒருவன் தோன்றினுன். அவன் கிளப்பிய கலகம் நாடெங்கும் பரவிற்று. ஊவாவை ஆண்ட அந்தோனியோ பரெட்டோ என்பவன் அவனுக்குத் துணைசெய்தான். ஆரம்பத்தில் சேனரதன்கூட அவனுக்குத் துணைசெய்தபோதிலும் அவனுடைய கோரிக்கைகள் சிலவற்றை இவன் ஏற்றுக்கொள்ள முடியாததால் அவனைப் பின்னர் கைவிடவேண்டி நேர்ந்தது. கலகமெல்லாம் அடக்கப்பட்ட பின் 1617-ல் சேனரதன் போர்த்துக்கீசரோடு சமாதானஞ் செய்யவே கலகக்காரர் மறுபடியும் கிளம்பி சேனரதனையும் போர்த்துக்கீசரையும் எதிர்த்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## III. கொன்ஸ்தாந்தைன் டி சா

1618-ல் கொன்ஸ்தாந்தைன் டி சா என்பவன் போர்த்துக்கீசத் தளபதியாக இலங்கைக்கு அனுப்பப்பட்டான். 1620-1623 இடையிட்ட மூன்று வருடந் தவிர, 1618-ம் ஆண்டு தொடக்கம் 1630 வரை இவனே இலங்கைத் தளபதியாயிருந்துவந்தான். இவன் இரக்கமுள்ள மனத்தினனுதலால் கொடுமையே செய்து வந்த அஸிவிடோவுக்கு நேரெதிர்ப் போக்குடையவனுயிருந்தான்.

இவன் தலைவனுனதும் கலகக்காரரை அடக்குவதையே முதற் கடமையாகக்கொண்டான். கலகக்காரருக்குத் துணை செய்தோருடைய நிலங்களில் பயிர்களை அழித்து, கங்கர ஆராச்சியையும் பரெட்டோ என்பவனையும் கொலைசெய்தான். இவன் கலகக்காரருடன் செய்த வெற்றிகரமான போரைப்பற்றி அழகிய வண்ணன் என்ற சிங்களக் கவி 'குஸ்தாந்தினுஹதன்' (கொன்ஸ்தாந்தைன் போர்) என்ற ஒரு கவி எழுதியிருக்கிறுன்.

மேலும் இக்காலத்தில் இலங்கையின் அரசியல் நிலை மோசமாயிருந்தது. பாதகமறியாத குடிகளைப் போர்த்துக்கீச வீரர் துன்புறுத்தி அநீதிகள் பல புரிந்து வந்தார்கள். இச்செய்கைகள் அவர்களது ஆட்சியில் வெறுப்பைக் கொடுத்தன. இவ்வீரரின் அநீதிகளிலிருந்து தங்களைக் காப்பாற்றுவதற்குச் சனங்கள் தாங்களே பாதுகாப்பு தேடிக்கொள்ளவேண்டியிருந்தது. சீர்கெட்ட அரசாங்கம் நடைபெற்றது. அரசாங்க உத்தியோகத்தர் நெறியில்லாதவராயிருந்தார்கள். சொந்த வியாபாரங்களை அவர்கள் நடத்தி வந்ததோடு கண்டியரசனுக்குத் தேவையான போர்க் கருவிகளையும் விற்று வந்தார்கள்.

இந்நிலைமையை மாற்ற எண்ணி கொன்ஸ்தாந்தைன் சேனையைச் சீர்திருத்தி சிப்பாய்கள் நல்ல ஒழுங்கைக் கைப்பற்றச் செய்தான். உத்தியோகத்தர் நெறியுடையோராயிருக்கச் செய்து அவர்களிடத்து நிலவிவந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழல்களைக் களைந்தான். எல்லாரையும் தயவுடன் நடத்தி வந்தான். சிங்களர், போர்த்துக்கீசர் என்ற பேதம் பாராட்டாது எல்லாரையுஞ் சமனாக நடத்தியதோடு சிங்களப் பெண்களைக் கல்யாணஞ் செய்யுமாறும் போர்த்துக்கீசரைத் தூண்டினான்.

இவ்வாறு அரசாங்கத்தைச் சீர்திருத்தி, பின்னர் யாழ்ப்பாண ராச்சியத்தில் அவன் கண்ணோட்டஞ் செலுத்தினான். சங்கிலி ராசன் (செகராச சேகரன்) இறந்த நாட்டொட்டு, போர்த்துக்கீசர் யாழ்ப்பாண அரசியல் விஷயத்தில் அடிக்கடி தலையிட்டுக்கொண்டே வந்தனர். 1570-ல் பெரிய பிள்ளை என்றழைக்கப்படும் இன்னொரு செகராச சேகரனுக்குப் போர்த்துக்கீசர் முடிசூட்டினர். இவனுக்குப் பின் 1582 தொடக்கம் அரசுசெலுத்திய புவிராச பண்டாரம் அல்லது பரராச சேகரன் மன்னுரைப் போர்த்துக்கீசரிடமிருந்து பெற்றுக்கொள்ள முயற்சி செய்தான். போர்த்துக்கீசர் இவனை எதிர்த்து 1591-ல் கொலைசெய்தார்கள். பின் பெரிய பிள்ளையின் மகனை எதிர்மன்னசிங்கனுக்குச் (1591-1615) சிங்காசனத்தைக் கொடுத்தனர். இவ்வரசன் போர்த்துக்கீசருக்கு உண்மையுள்ளவனாக நடந்தபோதிலும், அவர்கள் அரசாங்க விஷயங்களில் அதிகம் தலையிட்டதால் சனங்களிடத்தில் இவனுக்கிருந்த செல்வாக்குக் குறைந்தது.

இவனிறக்கும்போது இவனுடைய மகன் மூன்று வயதுடைய சிறுவனாயிருந்தபடியால் தனக்குப் பின் இராசப்பிரதிநிதியாயிருக்குமாறு தனது சகோதரனை ஏற்படுத்தினான். அதையறிந்த எதிர்மன்னசிங்கனின் மருமகனான சங்கிலி அப்புதிய இராசப்பிரதிநிதியைக் கொலைசெய்து அரசாங்கத்தைக் கைப்பற்றினான். போர்த்துக்கீசர் இச்செய்கையை முதலில் விரும்பாதபோதும், சங்கிலி அவர்களுக்குச் செய்த சில சகாயங்களை முன்னிட்டு அவனெண்ணத்துக்கு அரசியலை நடத்த விட்டுவிட்டார்கள். ஆனால் சங்கிலியின் ஆட்சியை விரும்பாது குடிகள் கலகஞ் செய்தார்கள். உடனே சங்கிலி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சாவூரில் ஆட்சிசெய்த நாயக்க மன்னரிடமிருந்து துணை பெற்று கலகத்தை அடக்கினான்.

இதன் பின்னர் சங்கிலி போர்த்துக்கீசருக்கெதிராகவே நடந்தான். அவர்களுக்கெதிராகத் தென்னிந்தியாவிலிருந்தும் ஒல்லாந்தரிடமிருந்தும் படைத்துணை பெற்று சேனரதனையும் அவர்களுக்கு மாறாகப் போருக்குத் தூண்டிவிட்டான். மேலும் தான் போர்த்துக்கீசருக்குக் கொடுத்து வந்த திறையை மூன்று வருடமாக மறுத்துவந்தான்.



பின்ஹூாவோவும் எதிர்மன்ன சிங்கனும்*

கொன்ஸ்தாந்தைன், தனது உத்தியோகத்தனாகிய ஒலிவியெரா என்பவனைச் சங்கிலியிடம் அனுப்பித் திறை கேட்பித்தான். சங்கிலி மறுக்கவே போர் மூண்டது;

*'தான் பெரிய பிள்ளையின் மகனென்றும், தனனைக் கொல்லவேண்டாமென்றும் அரசிளங்குமரனான எதிர்மன்ன சிங்கன் கதறினான். சிமாவோ பின்ஹூாவோ உடனே அவனுக்கு உதவிசெய்ய ஓடினான். ஓடிப்போய் அவன் எதிரே நின்று அவனைக் காப்பாற்ற முயன்றான். எதிர்மன்னசிங்கன் முகங்குப்புற விழவே பின்ஹூாவோ அவன்மீது தனது ஒற்றைக்காலை வைத்துக்கொண்டு அவனைக் காப்பாற்ற முயன்றான்'.

(குவெய்ரோஸ் என்பவர் எழுதிய 'இலங்கை வெற்றி' என்ற நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பைப் பார்க்க—ப.க. 452).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈற்றில் சங்கிலி தோல்வியுற்முன். தஞ்சாவூர் நாயக்க மன்னனின் துணையிருந்தபடியால் போர் நீடித்தது. **1621**-ல் நல்லூரிலுள்ள கோவில் தரைமட்டமாக்கப் பட்டது. முடிவில் போர்த்துக்கீசர் தம்மாட்சியை யாழ்ப்பாணத்தில் தாபித்தார்கள். கோட்டை ராச்சியம் போல யாழ்ப்பாணமும் தன்னரசிழந்தது.

**1626**-ல் கொன்ஸ்தாந்தைன் போர்த்துக்கீச ராச்சியத்துட்பட்ட பகுதியில் வாழ்ந்த சோனகரை அங்கிருந்து துரத்திஞன். இது நான்காம் பிலிப்பு (**1621-1640**) மன்னன் கட்டளைப்படியே நடைபெற்றது. சோனகரைத் தனது நாடுகளில் குடியிருக்கவிடக் கூடாதென்பது அவனுடைய விருப்பம். சோனகர் இக்காலத்தில் இலங்கையில் உள்நாட்டு வியாபாரம் நடத்திவந்ததோடு போர்த்துக்கீசக் கப்பல்களில் மாலுமிகளாகவுமிருந்தார்கள். போர்த்துக்கீச நாடுகளில் இருக்கக்கூடாதெனக் கட்டளை பிறந்ததும், சோனகர் கண்டி ராச்சியத்துக்குச் சென்முர்கள். சேனரதன் அவர்களை ஆதரித்து மட்டக்களப்புத் துறைமுகத்துக்கருகில் பலருக்கு நிலங் கொடுத்தான்.

இக்காலங்களில் ஒல்லாந்தர் போர்த்துக்கீசருடைய வியாபாரங்களிலும் தலையிட்டார்கள். இதையறிந்த கொன்ஸ்தாந்தைன், இலங்கையை அவர்களிடமிருந்து காப்பாற்றக் கருதிஞன். தாம் முந்திக் கைப்பற்றி மிஞ்சியிருந்த துறைமுகங்களையும், கண்டி ராசனுடன் ஒல்லாந்தர் எவ்வித தொடர்பும் வைத்துக்கொள்ளாவண்ணம் கைப்பற்றிஞன். திருக்கோணமலைத் துறைமுகத்தைக் கைப்பற்றி, அங்கேயிருந்த இந்து ஆலயத்தை இடித்ததுடன் ஒல்லாந்தர் அத்துறைமுகத்தைக் கைப்பற்ருமல் தடுப்பதற்காக ஒரு கோட்டையையுங் கட்டிஞன். சேனரதன் இதை விரும்பவில்லை. போர்த்துக்கீசருடன் போர் செய்தால் கொட்டியாரத் துறைமுக மார்க்கமாகத் தனது ராச்சியத்தோடு நடைபெறும் வியாபாரத்துக்குக் கெடுதி வருமென அவன் எண்ணிஞன். கண்டி ராச்சியத்தின் மற்றத் துறையாயிருந்த மட்டக்களப்பையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்ஸ்தாந்தைன் கோட்டை கட்டி அரண்செய்த பின் கொழும்புக் கோட்டையைப் பலப்படுத்தினன். காலியிலும் ஒரு கோட்டையைக் கல்லாலும் சாந்தாலுங் கட்டி, அதற்குப் பாதுகாப்பாக தரைப்பக்கத்தில் ஒரு அகழியும் மதிலும் அமைத்தான்.

கண்டி ராச்சியத்தைக்கைப்பற்றும்படி போர்த்துக்கீச ராசப்பிரதிநிதி கொன்ஸ்தாந்தைனைத் தூண்டினன். கண்டி ராசன் ஒல்லாந்தருக்குத் துணை செய்துகொண்டு சுதந்திர மனுபவிக்கும்வரையில் தாழ்பூமியில் வசிக்கும் போர்த்துக்கீசருக்கு அவனால் சஞ்சலமேற்படுமென்பது தெளிவு. கண்டியை எதிர்ப்பதற்குக் கொன்ஸ்தாந்தைன் விரும்பினபோதிலும், அப்போரை நடத்துவதற்குப் போதிய படையில்லையென்பதே அவனுடைய ஆட்சேபம்; இருந்தும் ராசப்பிரதிநிதியின் கட்டளையைச் சிரமேற்கொள்ளக் கருதி **1639**-ம் ஆண்டு, அகஸ்ட் மாதம் தனது சேனையுடன் கண்டி ராச்சியத்தின்மீது படையெடுத்துச் சென்றான். அப்புத்தளைக்குச் சமீபத்திலுள்ள இதல்கசிமா கணவாய் மூலம் வதுளையை அடைந்தான். முடியங்கன விகாரையை இடித்த பின் அப்பட்டினத்தை அழித்தான். சிறிது நாளில் அவனுடைய வீரர் அவனை விட்டு நீங்கவே, அவனும் புறமுதுகிடவேண்டியதாயிற்று. வெள்ளவயா என்ற இடத்தில் ஒரு புயலில் அவனுடைய சேனை அகப்பட்டிருக்குந் தருணத்தில் சேனரதன் அவனைத் தோற்கடித்தான். அநேகர் இப்போரில் மாண்டார்கள். எஞ்சியவர் சிறைசெய்யப்பட்டனர். கொன்ஸ்தாந்தைன் தனது சேனையை விடுத்துக் கொழும்புக்கோட மறுத்து கடைசிவரை போர்செய்தான். ஈற்றில் தவறாக தனது வீரன் ஒருவனால் கொல்லப்பட்டான்.

சிங்களச் சேனை கொழும்பை முற்றுகையிட்டது. கோட்டை இராச்சியத்திலுள்ள சிங்களரும் கலகஞ் செய்தார்கள். கோவையிலிருந்து படைத்துணை வரும் வரை போர்த்துக்கீசர் இடங்கொடாது நின்றனர்; துணை வந்ததும் கலகஞ் செய்த நாடுகளை அடக்கினர். **1634**-ல் சேனரதன் போர்த்துக்கீசரது கோரிக்கைகட்கு இணங்கிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானஞ் செய்தான். ஆனால் அடுத்த ஆண்டில் அவன் இறந்ததனால் அச்சமாதானம் நெடுநாள் நிலைக்கவில்லை. அவனது மகனான இரண்டாம் இராசசிங்கன் அவன் பின் அரசனானான்.

இன்னொரு கடற்படையின் துணையின்றிப் போர்த்துக்கீசரை இலங்கையிலிருந்து துரத்திவிட முடியாதென்பதை இராசசிங்கன் உணர்ந்தான். நானு பக்கங்களிலும் போர்த்துக்கீசரால் சூழப்பட்டிருந்தபடியால், வெளியேயிருந்து துணைவேண்டி ஒரு தூதனையாவது ஒரு கடிதத்தைகூடவாவது அனுப்புவதற்கு வசதியில்லாமலிருந்தது. கடைசியாக 1636-ல் அவன் அனுப்பிய தூதன், போர்த்துக்கீசர் கையில் பிடிபடாமல் தப்பிக்கொண்டு பழவேற் காட்டிலுள்ள ஒல்லாந்தரிடம் போவதற்கு ஆறு மாதங்களெடுத்தன. போர்த்துக்கீசக் கோட்டைகளை முற்றுகையிடுவதற்கு ஐந்து கப்பல்களை அனுப்பும்படியாகவும்; அதற்கான செலவுகளையெல்லாம் தான் கொடுப்பதாகவும், அவர்கள் அவ்வாறு முற்றுகையிடுகையில் தான் போர்த்துக்கீசரைத் தரையில் தாக்குவதாகவும், மேலும் ஒல்லாந்தர் ஒரு கோட்டை கட்டுவதானால் அதற்குத் தான் அனுமதி கொடுப்பதாகவும் இராசசிங்கன் தூதுவன் மூலம் அறிவித்தான்.

இக்காலத்தில் போர்த்துக்கீசத் தளபதியாயிருந்த டியோகோ டி மெல்லோ என்பவன், ஒல்லாந்தர் இராசசிங்கனுக்கு உதவி செய்யுமுன் அவன்மீது படையெடுத்தான். 1638-ல் அவன் கண்டியை முற்றுகையிட்டு அந்நகரத்தை அழித்துவிட்டான். சேனை வெற்றியுடன் திரும்பும் பொழுது கன்னொறுவா என்ற இடத்தில் டி சூஸாவும் அவனது சேனையும் விமலதர்மனால் அழிக்கப்பட்டது போல் இவனும் இவனுடைய சேனையும் அழிக்கப்பட்டன. உடனே போர்த்துக்கீச ஆட்சியிலிருந்த சிங்களர் கலகஞ் செய்தார்கள். காலகதியில் போர்த்துக்கீசர் பாலர், பெண்கள் என்ற வித்தியாசங்கூடப் பாராமல் அநேக சிங்களரைக் கொன்று, கிராமங்களையும் அழித்து கலகத்தை அடக்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கியமான ஆண்டுகள்

1594. லொபெஸ் டி சூஸா கண்டிமீது படையெடுத்தல்.

1604. சேனரதன் சிங்காசனமேறல்.

1611. அஸிவிடோ கண்டியைத் தாக்கல்.

1621. யாழ்ப்பாண அரசைப் போர்த்துக்கீசர் கைப் பற்றல்.

1626. போர்த்துக்கீசப் பிரதேசங்களிலிருந்து சோனகர் கலைக்கப்படல்.

1630. கொன்ஸ்தாந்தைன் டி சா இறத்தல்.

1635. இரண்டாவது இராசசிங்கன் சிங்காசனமேறல்.

1638. கன்னொறுவாவில் போர்த்துக்கீசரும் டியோகோ டி மெல்லோவும் தோற்கடிக்கப்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாம் அத்தியாயம்

## கீழ்நாடுகளில் டச்சுக்காரர்

### I. கீழ்நாடுகளில் டச்சு வியாபார ஆரம்பம்


ஸ்பானிய அரசனான இரண்டாவது பிலிப்பு 1580-ல் எவ்வாறு போர்த்துக்கலுக்கும் அரசனானன் என்பதைப் பற்றி ஏற்கெனவே கூறினோம். கீழைத்தேசங்களுடன் வியாபாரஞ் செய்துவந்த போர்த்துக்கீசர், தமது பண்டங்களை லிஸ்பன் தலைநகரத்தில் கொண்டுவந்திறக்கினர். டச்சுக்காரர் இங்கிருந்து அவற்றை வாங்கி ஐரோப்பாவின் ஏனைய துறைமுகங்களுக்குக் கொண்டுசென்று பண்டமாற்றுச் செய்தனர். டச்சுக்காரர் தனக்கெதிராகக் குழப்பஞ் செய்ததை நினைத்து அவர்களை இத்தருணத்தில் நசுக்க முற்பட்ட பிலிப்பு மன்னன், அவர்களுக்குப் பண்டங்களை விற்கவேண்டாமெனப் போர்த்துக்கீசரைத் தடுத்தான். இதன் விளைவாக டச்சுக்காரர் கீழைத்தேசங்கட்கு தாமே சென்று பண்டமாற்றுச் செய்ய முற்பட்டார்கள். கிழக்கிந்திய வியாபாரச் சங்கமென ஒரு சங்கத்தையும் அவர்கள் 1602-ல் ஏற்படுத்தினர்.

கீழ்த்திசை நாடுகளில் தமது வியாபாரத்தை நிலைநிறுத்த போர்த்துக்கீசர் முஸ்லிம்களோடு எவ்வாறு சண்டை செய்ய நேர்ந்ததோ, அதுபோலவே புதிதாய் வந்த டச்சுக்காரரும் போர்த்துக்கீசரோடு யுத்தம் புரிய வேண்டியதாயிற்று. கீழைத்தேசங்களின் அக்கால அரசியல் நிலை டச்சுக்காரருக்குச் சாதகமாயிருந்தது. போர்த்துக்கீசரின் கொடிய ஆணைக்குக் கட்டுப்பட்டு, யாராவது தம்மை விடுதலை செய்வார்களோ என ஆவல்கொண்டிருந்த சுதேச மன்னர்கள் டச்சுக்காரரின் வரவை விரும்பினார்கள். 15-ம் நூற்றாண்டிலும் 16-ம் நூற்றாண்டினரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திலும் போர் செய்வதிலும் கடலோடுவதிலும் பிரமிக்கத்தக்க விதமாய் முன்னேறியிருந்த போர்த்துக்கீசர், யுத்தத் திறமையில் தம்மிலும் பார்க்க மிகவும் கீழான நிலைமையிலிருந்த கீழைத்தேச வாசிகளுடன் ஒரு நூற்றாண்டுக்கதிகமாகச் செய்து வந்த யுத்தத்தின் பயனாய்,



கீழ்த்திசைக் கடல்களில் ஓடிய டச்சுக் கப்பல்கள்

போர் முறையில் பின்னடைந்தார்கள். ஐரோப்பாவில் நடைபெற்றுவந்த போர்முறைத் திருத்தங்களை அவர்கள் பின்பற்றத் தவறினார்கள். ஆனால் டச்சுக்காரர் கடற் சண்டையில் அதிக முன்னேற்றமடைந்திருந்தார்கள். உயரமாகக் கட்டப்பட்ட போர்த்துக்கீசக் கப்பல்களிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க டச்சுக்காரருடைய கப்பல்கள் கடற்சண்டைக்கு ஏற்றவையாயிருந்தன. போர்த்துக்கீசக் கப்பல்களிலும் பார்க்க இவைகள் இலேசாகவும், சிறந்த துப்பாக்கிகளையுடையனவாயுமிருந்தன. முன் பக்கமும் பின் பக்கமும் விஸ்தாரமாயும், காற்றை நல்லாய் எதிர்க்கக்கூடிய அமைவுடையனவாயுமிருந்தன. காற்றை நன்கு வாங்கக் கூடிய முறையில் பெரிய பாய்மரம் பின்பக்கத்தை நோக்கிச் சரிவுடையதாயிருந்தது.

இத்தகைய சௌகரியங்களிருந்தபோதிலும், டச்சுக்காரர் போர்த்துக்கீசரின் பலம் குறைந்துள்ள கிழக்கிந்திய தீவுகட்கே முதற் சென்றார்கள். கோட்டை கொத்தளங்களால் நன்கு அரண்செய்யப்பட்டிருந்த மலையாளக் கரையைத் தாக்க அவர்கள் ஒருப்படவில்லை. ஆனால் கிழக்கிந்தியத் தீவுகளிலோ முக்கியமான போர்த்துக்கீச அரண்களொன்றுமில்லாதபடியால் கிராம்பு, சாதிக்காய் இவைக்குப் பேர்போன பண்டா தீவுகளையும், மொலுக்காஸ், அம்பொய்னு ஆகிய தீவுகளையும் சில வருடங்களில் கைப்பற்றினர். அதன் பின்னர் ஜாவா தீவில் வியாபாரத் தலங்களை ஏற்படுத்தினர். டச்சுக்காரரின் கீழ்நாட்டு வியாபார நிலையங்களுக்கு இத்தீவே விரைவில் மத்தியத் தானமாயிற்று.

## II. டச்சுக்காரரின் கீழைத்தேச வியாபார விருத்தி

டச்சுக்காரர் கீழைத்தேசங்களில் ஆட்சி நடத்த ஆரம்பித்தபொழுது கடற்படைத் தளபதியே அரசியல் நிர்வாகம் எல்லாவற்றுக்கும் தலைவனாயிருந்தான். ஆனால் 1609-ல் பலபடச் சிதறிக்கிடந்த டச்சுத் தலங்களையெல்லாம் நிர்வகிக்க ஒரு தேசாதிபதியும் அவனுக்கு ஆலோசனை கூற ஒரு சங்கமும் ஏற்படுத்தப்பட்டன. 1619-ம் ஆண்டில் ஜோன் பீட்டர்ஸ் கோவன் இரண்டாவது தேசாதிபதியாக நியமிக்கப்பட்டான்.

இவன் ஜாவாவிலுள்ள ஜகத்ரா என்ற இடத்தைக் கைப்பற்றி, பட்டேவியா என்ற நகரத்தை அதே தானத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவினான். இந்நகரம் மலாக்காவைப்போல கிழக்கிந்திய தீவுப்பகுதிகட்கு ஒரு மேற்கு வாசலாக இருந்து வந்தது. டச்சுக்காரரின் கீழ்நாட்டு நிர்வாகத்துக்கு இந்நகரே தலைமை ஸ்தானமாய் விளங்கிற்று. டச்சுக்காரர் கீழ்த்திசை நாடுகளில் வியாபாரம் நடத்துவது சம்பந்தமாக கோவன் ஒரு திட்டமான கொள்கை



ஜோன் பீட்டர்ஸ் கோவன்

யைக் கைக்கொண்டான். அல்புகூர்க்கே என்ற போர்த்துக்கீசத் தளபதி, தன் கடற்படை வலியால் முக்கியமான தலங்களைக் கைப்பற்றி, போர்த்துக்கீச வியாபாரத்தை எவ்வாறு விருத்திசெய்தான் என்பதை ஏற்கெனவே கூறியுள்ளோம். அல்புகூர்க்கேபோல வியாபாரத்தை முற்றாய்த் தன்வசமாக்க கோவன் முயற்சிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வில்லே. வாசனைச் சரக்குகள் விளையும் இடங்களை மாத்திரம் பெற்றுவிட்டால் போதுமென நினைத்து, தனது கடற்படைத் துணைகொண்டு அவ்விடங்களை முற்றுய்த் தன்வசப்படுத்த முயற்சித்தான். போர்த்துக்கீசரைத் தவிர பிரித்தானியர் மாத்திரமே அவனுக்கு எதிரிகளாயிருந்தார்கள். நல்ல கடற்படையாவது சேனைப் பலமாவது இல்லாதிருந்த ஆங்கிலேயரை அவன் சொற்ப காலத்தில் அவ்விடத்தை விட்டுக் கலைக்கக்கூடியதாயிருந்தது.

கோவன் தேசாதிபதியாவதற்கு முன்பே டச்சுக்காரர் தமது வியாபாரத்தை தூர கீழ்த்திசை நாடுகளில் பரப்ப முற்பட்டுவிட்டார்கள். **1613**-லேயே சீய தேசத்தோடு ஒரு உடன்படிக்கை செய்து வியாபாரம் நடத்திஞர்கள். பின்னர் போர்மோஸாவையும் கைப்பற்றி அதன் மூலம் சீஞவோடும் ஜப்பாஞேடும் வியாபாரம் நடத்தத் தொடங்கினர்.

இந்தியாவிலும் அரண் பாதுகாப்பின்றி பல வியாபாரத் தலங்கள் நிறுவப்பட்டன. வங்காளத்தில் சின்ஸுரா என்ற இடத்திலும், கூர்ஜரத்தில் சூரத் என்ற இடத்திலும், சோழமண்டலக் கரையிலும் இவ்வகையான தலங்கள் அமைக்கப்பட்டன. போர்த்துக்கீசருக்கும் இவ்விடங்களில் நல்ல அரண்களில்லாதபடியால் பழவேற்காடு என்ற இடத்தில் மாத்திரம் அவர்கள் டச்சுக்காரரை எதிர்த்தனர். டச்சுக்காரர் இச்சண்டையில் மும்முரமாகப் போர் செய்து வெற்றி பெற்றதும் தமது நிலைமையை ஸ்திரப்படுத்த **1613**-ல் அங்கே ஒரு கோட்டையைக் கட்டினர்.

வாசனைச் சரக்குகளைப் பெறுவதற்காகவோ அல்லது ஐரோப்பாவுக்குத் தேவையான சாமான்களை ஏற்றுமதி செய்வதற்காகவோ டச்சுக்காரர் இப்பகுதிகளில் வியாபாரம் நடத்தவில்லே. அவர்களுடைய நோக்கம் வேறு. கிழக்கிந்தியச் சனங்கள், தாங்கள் கொடுக்கும் சரக்குகளுக்குப் பதிலாக ஐரோப்பிய பண்டங்களைப் பெற விரும்பவில்லே. அவர்கள் அதற்குரிய விலையை தங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பழவேற்காட்டிலுள்ள டச்சுக் கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகவோ வெள்ளியாகவோ பெற விரும்பினர். டச்சுக்காரர் அவ்வாறு செய்ய விரும்பாதபடியால், இந்தியாவிலிருந்து ஜவுளிச் சாமான்களை வாங்கி கிழக்கிந்திய தீவுகளில் பரிமாறினார்கள். அங்குள்ள வாசனைச் சரக்குகளையும் இந்தியாவில் பண்டமாற்றுச் செய்தனர்.

## III. இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் டச்சுக்காரர் அடைந்த வெற்றி

கிழக்கிந்தியத் தீவுகளைக் கைப்பற்றி ஆட்சி செய்வதிலும், தூர கீழ்த்திசையில் தமது வியாபாரத்தைப் பரப்புவதிலுமே முதலில் டச்சுக்காரர் மிக ஊக்கமாயிருந்தார்கள். அதனால் இந்திய வாசனைச் சரக்கு வியாபாரத்தில் அதிக கவனஞ் செலுத்த முடியவில்லை. ஆனால் இந்த வேலைகள் எல்லாம் முடிந்ததும், மலையாளக் கடற்கரையிலுள்ள போர்த்துக்கீசரின் அரண்களைத் தாக்க வசதியேற்பட்டது. வான்டீமன் என்ற தேசாதிபதியின் ஆட்சியில் மலையாள மிளகு வியாபாரத்தையும் இலங்கைக் கறுவா வியாபாரத்தையும் முற்றுகத் தம்வசமாக்க முயற்சி செய்தார்கள். இக்காலத்திலேயே ஆஸ்திரேலியாவும் அதையடுத்த தீவுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. 1636-ம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு வருடமும் டச்சுக்காரர் கோவையை முற்றுகையிட்டு வந்தார்கள். தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக்காற்றுத் தொடங்கியதும் முற்றுகையைக் கைவிட்டுவிடுவார்கள். 1638-ம் ஆண்டில் இரண்டாவது இராசசிங்கனின் வேண்டுகோளின் பிரகாரம் மட்டக்களப்பைக் கைப்பற்றினர். 1641-ல் மலாக்காவிலிருந்து போர்த்துக்கீசரைக் கலைத்துவிட்டார்கள்.

1640-ல் போர்த்துக்கல் ஸ்பானியாவின் ஆதிக்கத்திலிருந்தும் விலகிச் சுயாட்சி பெற்றதும், டச்சுக்காரர் போர்த்துக்கீசரோடு சமாதானமானார்கள். சண்டையிடுவதற்குரிய காரணமில்லாமற் போயிற்று. டச்சுக்காரர் ஸ்பானியாவோடு பகைத்திருந்தமையால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்பானிய ஆட்சியிலிருந்த போர்த்துக்கலையும் பகைக்க வேண்டியதாயிற்று. தற்போது போர்த்துக்கலோடு டச்சுக்காரருக்கிருந்த பகை நீங்கியது. 1642-ல் இவ்விரு தேசத்தவரும் ஐரோப்பாவில் பத்து வருடத்துக்கு சமாதானமாயிருப்பதாக ஒரு உடன்படிக்கை செய்ததுடன், 1643-ல், கீழ்நாடுகளில் இனி தாம் சண்டையிடு



அந்தோனியோ வான்டிமன்

வதில்லையென்றும் ஒரு ஒழுங்குக்கு வந்தனர். ஆரம்பத்தில் டச்சுக்காரரும் போர்த்துக்கீசரும் தங்கள் கீழ்த்திசை நாடுகளில் கைப்பற்றிய தேசங்களைப் பங்கிடுவதைப் பற்றி சமரசமாய் முடிவு செய்ய இயலாதிருந்தனர். எனவே, 1644 வரையிற்றான் சமாதானம் ஏற்பட்டது. இதற்கிடையில் கொழும்புக்கு அடுத்தாப்போல் கறுவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரத்தில் முக்கிய தலங்களாயிருந்த நீர் கொழும்பு, காலி ஆகிய இரு பகுதிகளும் டச்சுக்காரர் கையிற் சிக்கின.

உடன்படிக்கைக் காலம் முடிவானதும் டச்சுக்காரர் மறுபடியும் போர்த்துக்கீசரைத் தாக்க ஆரம்பித்தனர். மொலுக்காஸில் உண்டான ஒரு குழப்பத்தை அடக்க வேண்டியிருந்ததால் இலங்கை விஷயத்தில் அவர்கள் 1655-ம் ஆண்டுவரை போதிய கவனஞ் செலுத்த முடியாம லிருந்தனர். 1656-ல் கொழும்பைக் கைப்பற்றிய பின் 1658-ல் யாழ்ப்பாணத்தையும் வென்றார்கள். இவ்வாறே இலங்கையில் நடைபெற்ற போர்த்துக்கீச ஆட்சிக்கு முடிவுகட்டினார்கள். அடுத்தாப்போல் சோழ மண்டலக் கரையிலிருந்து போர்த்துக்கீசரைக் கலைத்து விட்டு நாகபட்டினத்தை 1689-ல் அதன் தலைநகராக நிறுவினர். மலையாளக் கரையில் பல இடங்களைக் கைப் பற்றினார்கள். 1661-ல் கொல்லமும் 1663-ல் கொச்சியும் கைப்பற்றப்பட்டன. கோவையும் கூர்ஜரக் கரையிலுள்ள துறைமுகங்களும் அதிகம் பிரயோசனமில்லாதிருந்ததால் அவற்றை அவர்கள் பிடிக்க முயற்சி செய்யவில்லை. மலை யாளத்து மிளகு வியாபாரத்தை முழுவதும் கைப்பற்றலா மென்று பார்த்தபோதிலும், அங்கு வர்த்தகஞ் செய்த ஆங்கிலேயரை அங்கிருந்து துரத்த முடியாததால், அம் முயற்சி பலிக்கவில்லை.

இவ்வாறு போர்த்துக்கீசரைத் தோற்கடித்ததும் இந்திய கடல்களில் டச்சுக்காரருடைய செல்வாக்கு மிகுந்தது. ஆனால் போர்த்துக்கீசரைப்போல எதிரிகளின் கப்பல்களைப் பிடித்து, வியாபாரத்தைப் பூரணமாகத் தம்வசமாக்க டச்சுக்காரர் முயலவில்லை. வாசனைச் சரக்கு வியாபாரத்திலேயே அவர்கள் கண்ணுங் கருத்து மாயிருந்ததுடன் கீழைத்தொடுவாய்ப் பகுதியையே தமது முக்கிய தலமாகவும் கொண்டாடினார்கள். போர்த் துக்கீசருக்கு எதிராகப் போராடி உண்டான வெற்றி டச்சுக்காரருக்கு ஈற்றில் கேட்டையே உண்டாக்கினது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில், இதர ஐரோப்பிய தேசத்தவரும் இக்காலத்தில் இந்தியாவுடன் வியாபாரம் நடத்தத் தலைப்பட்டனர். இந்தியாவிலும் இலங்கையிலும் டச்சுக்காரரின் ஆதிக்கம் நாளடைவில் விழ்ச்சியுற்றது.

கீழைத்தேசத்தில் டச்சுக்காரர் வீழ்ச்சியுறவேண்டியதற்குக் காரணம், ஐரோப்பாவிலேயே அவர்களது ஆதிக்கம் குன்றியமையே.

பிரான்ஸ்போன்ற ஒரு வல்லரசின் எதிர்ப்பை நிர்வகிக்கவும், பலமோங்கி வளர்ச்சியுற்ற பிரிட்டன் போன்ற ஒரு வல்லரசுடன் வர்த்தகப் போட்டியிடவும் டச்சுக்காரர்போன்ற ஒரு சிறிய சாதியாருக்கு முடியாத காரியம். ஆனதால், 18-ம் நூற்றுண்டின் கடைசிப் பகுதிவரையில் டச்சுக்காரருடைய ஆதிக்கம் மிகவும் குன்றியதால், இந்தியாவையும் இலங்கையையும் பிரிட்டிஷ்காரரிடம் விட்டுவிட்டு கிழக்கிந்திய அலுவல்களை மாத்திரம் பார்த்துக்கொண்டிருக்கவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது.

## IV. கீழைத்தேசங்களில் டச்சு அரசியல்

ஐரோப்பிய சுயேச்சை அரசாங்கங்களுக்கிருக்கும் அவ்வளவு உரிமையை டச்சு கிழக்கிந்திய சங்கம் கீழைத் தேசங்களில் செலுத்தி வந்தது. இச்சங்கம் வர்த்தக சம்பந்தமான விஷயங்களைக் கவனித்தது மாத்திரமன்றி தான் கைப்பற்றிய நாடுகளின் அரசியல் நிர்வாகத்தையும் நடத்தியது. அந்நிய நாடுகளோடு யுத்த சமாதானங்களையும் நடத்தியது. இச்சங்கத்தின் அலுவல்கள் ஒரு ஆலோசனைச் சபையின் உதவியுடன் தேசாதிபதி என்ற ஒரு அதிகாரியின் ஆணையின் கீழ் நடைபெற்று வந்தன. ஆனல் ஆலோசனைச் சபையை மேவாமலே இந்த அதிகாரி, தான் நினைத்தபடி அதிகமாய் நடந்து வந்தான். இவனுக்குக் கீழ் குடியேற்ற ஸ்தலங்களை உபதேசாதிபதிகளும், சேனை தங்கும் ஸ்தலங்களை தளபதிகளும், வியாபார ஸ்தலங்களை காரியதரிசிகளும் கண்காணித்து வந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க நிர்வாகம் செவ்வனே நடைபெறவில்லை. சங்க அங்கத்தவர்கள் சங்கக் கட்டளைகட்கு மாறாக தமது சொந்தப் பொறுப்பில் வியாபாரம் நடத்தி வந்ததால் சங்கம் வலிகுன்றியது. மேலும் பலவேறு இடங்களிலும் சிதறிக்கிடந்த ஸ்தலங்களை வெகு தூரத்தேயுள்ள பட்டேவியாவிலிருந்து பரிபாலிப்பது கஷ்டமாயிற்று. சங்க உத்தியோகத்தர் பிழையான வழிகளில் இறங்கினார்கள். கூடாத நடத்தையுடைய டச்சுக்காரரையும் அந்நியரையும் உத்தியோகத்திலமர்த்தாது ஆரம்பத்தில் சிறிது கவனமாயிருந்தபோதிலும், தாய்நாடான ஒல்லாந்து போர்த்துக்கலைப்போலச் சிறிய தேசமானபடியால் சங்கத்தின் தேவைக்குப் போதுமான உத்தியோகத்தர்களைப் பெற்றுக்கொள்ள முடியாமலிருந்தது. எனவே, காலஞ் செல்லச் செல்ல நல்ல நடத்தையில்லாதவர்களும் அந்நியரும் உத்தியோகத்திலமர்த்தப்பட்டனர். பதினாறு வயதுள்ள பையன்கள்கூட படையில் சேர்க்கப்பட்டார்கள்.

டச்சுக்காரரும் மதமாற்றஞ் செய்வதில் பின்னிற்கவில்லை. கீழைத்தேச வாசிகளைக் கிறிஸ்து சமயத்திற்கு மாற்ற அவர்கள் முயற்சி செய்து வந்தனர். டச்சுத் தலங்கள் ஒவ்வொன்றிலும் 'கோயிற் சபை' என ஒரு ஆலோசனைச் சபையிருந்து வந்தது. மதகுருமார் பலர் சங்க உத்தியோகத்தரிடையிலும் குடியானவரிடையிலும் மதப்பிரசாரஞ் செய்து வந்தனர். ஆனால் இத்தகைய சமயப்பிரசாரங்கள் தமது ஆட்சியிலும் அதிகாரத்திலும் தலையிடாமல் பார்த்துக்கொண்டார்கள். இவற்றைச் சில தருணங்களில் தமது ஆட்சியை வலுப்படுத்துவதற்கும் உபயோகிக்கத் தவறவில்லை. ஆனால் டச்சு மதகுருமார், ரோமன் கத்தோலிக்க குருமாரைப்போல அவ்வளவு ஊக்கங்காட்டவில்லை. உதாரணமாக தமது வியாபாரத்தை விருத்தி செய்யும் பொருட்டு ஜப்பானில் டச்சுக்காரர் மதமாற்ற வேலையைக் கைவிட்டுவிட்டார்கள். இல்லையேல் போர்த்துக்கீசரைக் கலைத்ததுபோல் இவர்களையும் ஜப்பானியர் கலைத்திருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கியமான ஆண்டுகள்

1602. டச்சு கிழக்கிந்தியச் சங்கம் தாபிக்கப்படல்.

1619. பட்டேவியா தலைநகரமாக்கப்படல்.

1641. மலாக்காவை டச்சுக்காரர் கைப்பற்றல்.

1658. டச்சுக்காரர் போர்த்துக்கீசரை இலங்கையிலிருந்து துரத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினேராம் அத்தியாயம்

## இலங்கையில் போர்த்துக்கீசருக்கும் டச்சுக் காரருக்குமிடையில் சண்டை

### 1. டச்சுக்காரர் நீர்கொழும்பையும் காலியையும் கைப்பற்றுதல்

போர்த்துக்கீசரை இலங்கையிலிருந்து கலைத்துவிடு வதற்காக இரண்டாவது இராசசிங்கன் டச்சுக்காரரின்



டச்சுப் பீரங்கி

துணையைக் கேட்டிருந்தான் என்று ஏற்கெனவே கூறியுள் ளோம். இந்தியாவில் போர்த்துக்கீசருக்குள்ள அரண்களை அழித்துத் தமது ஆதிக்கத்தை டச்சுக்காரர் பரப்பிவந்த தருணத்தில் இராசசிங்கனுடைய கோரிக்கை அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. எனவே, மிகுந்த சந்தோஷத்துடன் அவர்கள் இராசசிங்கனுக்குத் துணைபுரிய முன்வந்தனர்.

கோவையை முற்றுகையிட்டுக்கொண்டிருக்கையில் தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக்காற்றுக் கிளம்பியதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கடற்படையுடன் பின்வாங்கிய வெஸ்டர் வோல்ட் என்ற டச்சுத் தளபதி 1638-ல் மட்டக்களப்பை அடைந்து அங்குள்ள போர்த்துக்கீசரின் கோட்டையைத் தாக்கினுன். ஏனைய கோட்டைகளைப்போலவே மட்டக் களப்புக் கோட்டையும் சிங்களரின் எதிர்ப்பை நிர்வகிப் பதற்காகக் கட்டப்பட்டதொன்ருனதால் அவ்வளவு வலியுள்ளதாயிருக்கவில்லை. டச்சுக்காரரின் பெரிய பீரங்கி வெடியைத் தாங்க முடியாமல் எட்டு நாட்களில் இக்கோட்டையை போர்த்துக்கீசர் கைவிட்டனர்.

இதுவரை வெளியுலகத்தோடு தொடர்பு வைத்துக் கொள்ள முடியாமல் போர்த்துக்கீசரால் சூழப்பட்டிருந்த இராசசிங்கனுக்கு இப்பொழுது ஒரு துறைமுகம் வெளி யாயிற்று. எனவே, போர்த்துக்கீசரை இலங்கையிலிருந்து கலைத்துவிடுவதற்காக வெஸ்டர் வோல்ட்டுடன் உடனே ஓர் உடன்படிக்கை செய்தான். அவனுக்குத் தேவை யான படைகளையும் கப்பல்களையும் டச்சு வியாபாரச் சங்கத்தின் சார்பாகக் கொடுத்து உதவுவதாக வெஸ்டர் வோல்ட் வாக்களித்தான். அவர்களுக்குண்டாகும் செலவுகளைச் சமாளிப்பதற்கு தான் கறுவா முதலிய விளை பொருட்களைப் பதிலாகக் கொடுப்பதுடன், இலங் கையில் வியாபாரஞ் செய்வதற்கு முழு உரிமையுங் கொடுப்பதாகவும், ஏனைய ஐரோப்பியரை வியாபாரஞ் செய்யவிடாது தடுத்துவிடுவதாகவும் இராசசிங்கன் உடன்பட்டான்.

அடுத்த வருடம் இராசசிங்கனின் துணையைப் பெற்று கொழும்பைத் தாக்கலாமெனடச்சுக்காரர் திரும்பினர். இராசசிங்கன் தரைமார்க்கமாக அவர்களுக்கு ஒருவித உதவியுஞ் செய்யவிடாது போர்த்துக்கீசர் தடை செய் தார்கள். உடனே டச்சுக்காரர் திருக்கோணமலைக்குச் சென்று அங்குள்ள கோட்டையைக் கைப்பற்றினுர்கள். ஆனுல் அவர்கள் விரும்பிய கறுவாவைப் பெறுவதற்கு இவ்வெற்றி பயனற்றதாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1640-ல் மறுபடியும் டச்சுக்காரர் கொழும்பைத் தாக்க வந்தார்கள். ஆனால் இராசசிங்கன் அவர்களுக்கு ஒருவிதமான துணையுஞ் செய்யாதவாறு போர்த்துக்கீசர் இம்முறையும் தடுத்தார்கள். இதையறிந்த டச்சுக் கடற்படை நீர்கொழும்புக்குச் சென்றது. நீர்கொழும்பைப் பாதுகாப்பதற்காக இராசசிங்கனை எதிர்த்துக்கொண்டிருந்த படையைப் போர்த்துக்கீசர் அங்கு அனுப்பினர். உடனே இராசசிங்கன் திடீரெனத் தனது படையைச் செலுத்திச் சென்று டச்சுக்காரருக்குத் துணை புரிந்தான். டச்சுப் போர்வீரர், தங்களுடைய பெரிய பீரங்கிகளால் வெடிதீர்த்து நீர்கொழும்புக் கோட்டையைக் கைப்பற்றினர். பிடித்த கோட்டையைத் திருத்தி, அதில் டச்சுப் போர்வீரர்களைக் காவலுக்கு வைத்தனர். ஆனால் இராசசிங்கன் இதற்கு உடன்படவில்லை. இதன் பின்னர் அவர்கள் தெற்கு நோக்கிச் சென்று காலியில் கடுஞ் சண்டை செய்து அதையும் கைப்பற்றினார்கள். காலிக் கோட்டையும் பலமின்றியே கட்டப்பட்டிருந்தது. அத்துடன் அங்கு வைக்கப்பட்டிருந்த துப்பாக்கிகள் டச்சுப் பீரங்கிகளோடிணை நிற்க முடியவில்லை. அன்றியும் டச்சுக்காரர் உபயோகித்த வெடிகுண்டுகளை அவ்வூர்ப்படைகள் பார்த்துப்



குண்டுவெடி வீசும் டச்சுப் போர்வீரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலிக் கோட்டையின் வீழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயந்துபோயின. அத்தகைய வெடிகளை அவர்கள் முன் பார்த்ததில்லை.

காலித் துறைமுகமும் டச்சுக்காரர் கைப்படவே, கறுவா உற்பத்தியாகும் முக்கியமான இடங்களுக்குரிய இரு துறைமுகங்களுக்கும் அவர்கள் அதிகாரிகளாயினர். மட்டக்களப்பு டச்சுக்காரர் கைப்பட்ட நாள் தொட்டு இலங்கையில் நடைபெற்ற டச்சு அலுவல்களுக்கெல்லாம் தலைமையாயிருந்த கொஸ்டர் என்பவன் இலங்கையிலுள்ள டச்சு ஸ்தலங்களுக்கெல்லாம் அதிபதியாக நியமிக்கப்பட்டான். இக்காலத்தில் இராசசிங்கனுக்கும் டச்சுக்காரருக்குமிடையில் சில பிணக்குகளுண்டாயின. அவற்றை இலேசாகச் சமாளிக்க முடியாமலிருந்தபடியால், இராசசிங்கனை நேரே கண்டு விஷயங்களைப் பேசுவதற்கு கொஸ்டர் கண்டிக்குச் சென்றான். திரும்பிவரும் வழியில் சிங்களரோடு அவன் பிணக்குப்பட்டு அவர்களால் கொலையுண்டான்.

1640 முடிவதற்குள் டச்சுக்காரரின் முன்னேற்றம் தடைப்பட்டது. கோவையில் கொண்டேடி அவெய்ராஸ் என்பவன் போர்த்துக்கீச ராஜப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டான். இவன் மிக ஊக்கமான ஒரு நிர்வாகியாயிருந்தபடியால், டச்சுக்காரருக்கு எதிராக யுத்தஞ் செய்யுமாறு இலங்கைக்கு ஒரு படையை அனுப்பினான். அதன் பயனாக போர்த்துக்கீசர் நீர்கொழும்பை மறுபடியும் கைப்பற்றினர். நான்கு கோறளையும் சப்த கோறளையும் அவர்கள் கைவசமாயின. காலியை முற்றுகையிட அவர்களுக்குப் பலமில்லாததால் கோட்டையைச் சுற்றியுள்ள நிலங்களைக் கொள்ளையடித்தார்கள்.

ஐரோப்பாவில் டச்சுக்காரருக்கும் போர்த்துக்கீசருக்குமிடையே ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின் பயனாய் இலங்கையிலும் ஒரு சமாதானத்தை ஏற்படுத்த 1642-ல் முயற்சி செய்யப்பட்டது. ஆனால் எல்லை பிரிக்கும் விஷயத்தில் இரு பகுதியாரும் ஒத்துவராதபடியால் சமாதானப்பேச்சுகள் முறிந்தன. சண்டை நடைபெற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே வந்தது. 1644-ம் ஆண்டு, ஜனவரி மாதத்தில் டச்சுக்காரர் மறுபடியும் நீர்கொழும்பைப் பிடித்தார்கள். சமாதானஞ் செய்யாது நீடித்தால் தாங்கள் கொழும்பு, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மற்றைய இடங்களையும் இழக்க நேரிடுமென எண்ணி போர்த்துக்கீசர் வருஷம் முடிவதற்குள் டச்சுக்காரரின் சமாதான நிபந்தனைகளுக்கு இணங்கினர்.

## 11. சமாதானத்தின் பின் டச்சுக்காரருடன் இராசசிங்கன் தொடர்பு

இவ்வாறு போர்த்துக்கீசருக்கும் டச்சுக்காரருக்கு மிடையில் ஏற்பட்ட சமாதானம், இராசசிங்கனோடு டச்சுக்காரருக்கிருந்த தொடர்பை எவ்வகையிலும் மாற்றவில்லை. இராசசிங்கனின் போக்கு டச்சுக் காரருக்குப் பிடிக்கவில்லை. ஏனெனில், போர்த்துக்கீசருக் கெதிராகச் சண்டை செய்தபொழுது அவன் அவர்கட்குப் போதிய துணை செய்யவுமில்லை. வாக்களித்த பிரகாரம் கொடுக்கவேண்டிய செலவுகளையாவது அவர்கட்குக் கொடுக்கவில்லை. சேனைக்குத் தேவையான உணவுகளை யும் மற்றத் தேவைகளையும் அவன் கொடுப்பதாகக் கூறி யிருந்தபோதிலும் அவ்வாறு செய்யவில்லை. இராசசிங்க னுக்கும் டச்சுக்காரர்மீது மனம் கசத்தது. போர்த்துக் கீசரை எதிர்ப்பதற்காகக் கோட்டைகளில் தமது சேனையை நிறுத்தி இராசசிங்கனின் விருப்பத்துக்கு மாறாக அவர்கள் நடந்துகொண்டனர். ஆனால் இப்போது போர்த்துக்கீச ருக்கும் அவர்களுக்கும் சமாதானம் ஏற்பட்டுவிட்டபடி யால் டச்சுக்காரர் இனி அக்கோட்டைகளைக் கைப்பற்ற உரிமையில்லையென்றும், தானும் அவர்களுக்குச் செய்த வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டிய நிர்ப்பந்தமில்லை யென்றும் இராசசிங்கன் எண்ணினான்.

ஆனால் தாம் செய்த யுத்தச் செலவுகளை அறவிட வேண்டுமெனவே டச்சுக்காரர் விரும்பினர். அதற்காக கறுவா விளையும் நிலங்களைக் கைப்பற்றி, அதில் விளையும் கறுவாவைச் சேகரித்தார்கள். இதைக் கண்ட இராச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கன் கறுவாவை அழிக்குமாறு சில கொள்ளைக்கூட்டத் தாரை அனுப்பினுன். டச்சுக்காரர் இச்செய்கையைக் கண்டு தமக்கு கறுவாவினுல் இலாபமில்லையென அறிந்த வுடன் ஓடிவிடுவார்களென எண்ணியே இராசசிங்கன் இவ்வாறு செய்வித்தான். ஆனுல் டச்சுக்காரர் அவன் அனுப்பிய கூட்டத்தவருடன் சண்டை செய்ததுமல்லா மல், போர்த்துக்கீசருடன் ஒரு பரஸ்பர உடன்படிக்கை யுஞ் செய்துகொண்டார்கள். இந்நடவடிக்கைகள் அவர் களுக்கு நன்மையை அளித்திருக்கலாம். ஆனுல் கொஸ் டருக்குப் பின் தேசாதிபதியாயிருந்த தைசன் என்பவன் போர்த்துக்கீசரின் ஆலோசனைப்படி இராசசிங்கனுக்கு எதிராகச் சண்டை தொடுத்தான்.

பட்டேவியாவிலிருந்த டச்சு அரசாங்கம் இராசசிங்க னேடு போர் தொடுப்பதை விரும்பவில்லை. யுத்தத்தில் பணத்தையும் மனிதரையும் இழக்க அது ஒருப்படாத படியால் அரசனைச் சாந்தப்படுத்தி நிலைமையைச் சமாளிப்பதற்காக நிர்வாக அனுபவம் நிறைந்தவனும், சிறந்த கல்விமானும், பெரிய அரசியல் நிபுணனுமான ஜோன் மட்ஸுய்கர் என்பவனை இலங்கைக்கு அனுப்பியது. தைசனின் செயல் சரியில்லை என்பதைக் காட்டுவதற்காக அவனைத் திரும்ப அழைத்தார்கள். மட்ஸுய்கர் சமாதானத்தை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்னர், சப்த கோறுளைகளிலுள்ள கறுவா நிலங்களைச் சூறையாடியதுடன் 1646-ம் ஆண்டு, மே மாதத்தில் டச்சுப்படையொன்றையும் இராசசிங்கன் தோற்கடித் தான். டச்சுக்காரரின் கஷ்டமான நிலைமையை அறிந்த போர்த்துக்கீசர் நீர்கொழும்பைத் திருப்பிக் கொடுத்து விடுமாறு கேட்டார்கள். ஐரோப்பாவில் தங்களுக்கும் டச்சுக்காரருக்குமிடையில் ஒழுங்கு செய்யப்பட்ட உடன்படிக்கை கீழைத்தேசத்திலும் அமுலுக்கு வந்த பிற்பாடே நீர்கொழும்பை டச்சுக்காரர் பிடித்திருந்த படியால் அதைத் திருப்பித் தங்களிடம் கொடுத்து விடுவதே முறையென போர்த்துக்கீசர் வாதாடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சமயத்தில் பிரேஸிலில் ஒரு குழப்பம் நேர்ந்தது. இதன் பயனாக போர்த்துக்கீசருக்கும் டச்சுக்காரருக்கும் ஐரோப்பாவில் நிலவிவந்த ஒற்றுமை பங்கப்பட்டது. இதைக்கொண்டு மட்ஸுய்கர் போர்த்துக்கீசரின் கோரிக்கையை மறுக்க வசதியேற்பட்டது. போர்த்துக்கீசருடன் மறுபடியும் யுத்தஞ் செய்யவேண்டிய நிலைமை



ஜோன் மட்ஸுய்கர்

யிருந்தபடியால் இராசசிங்கனை தாமதமின்றி சமாதானப்படுத்தவேண்டிய அவசியமுமுண்டாயிற்று. இராசசிங்கனோடு போர்த்துக்கீசர் சமாதானஞ் செய்து, தனது திட்டங்களைச் சிதறடித்துவிடாமற் பாதுகாப்பதற்காக முன்னேறியே மட்ஸுய்கர் சமாதானஞ் செய்தான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனுல் 1638-ம் வருடத்து நிபந்தனைகளைப்போல இச் சமாதான நிபந்தனைகள் டச்சுக்காரருக்கு வாய்ப்புடை யனவாயிருக்கவில்லை.

## III. டச்சுக்காரர் கொழும்பைக் கைப்பற்றுதல்

1650 தொடக்கம் 1655-ம் ஆண்டுவரை டச்சுக்கார ரும் சிங்களருஞ் சேர்ந்து போர்த்துக்கீசருடன் ஓயாமற் சண்டையிட்டார்கள். வெற்றியும் தோல்வியும் மாறி மாறி இரு கட்சியினர்க்கும் உண்டானது. ஆனுல் 1654 வரையில் போர்த்துக்கீசருக்குப் பாதகமாக சண்டை



டச்சு ஈட்டிப் போர்வீரன்

பலத்தது. அவ்வாண்டில் ரைகிளப் வான் கோயன்ஸ் என்பவன் கடலை ஆட்சி செய்துகொண்டு கோவையிலிருந்து போர்த்துக்கீசருக்கு துணை வராதபடி தடுத்தான். அடுத்த ஆண்டில் டச்சுக் கடற்படை, தரைப்படை எல்லாவற்றை யும் மேற்பார்வை செய்யுமாறு ஜெராட் ஹல்ப்ட் நியமிக் கப்பட்டான். அவன் முதலாவதாகக் களுத்துறையை முற்றுகையிட்டு வெற்றி பெற்ற பின் பாணந்துறையிலும் போர்த்துக்கீசரை முறியடித்து மிலாகிரி (பம்பலப்பிட்டி) வரை அவர்களைப் புறமுதுகிடச்செய்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹல்ப்ட், இராசசிங்கன் அவைக்களத்துக்குப் பவனிபோதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் ஹல்ப்ட் தரையிலிருந்தும் கடலிலிருந்தும் கொழும்பை முற்றுகையிட்டான். கோட்டைக்குக் கிழக்கே அவன் தனது பாடிவீட்டை அமைத்த இடமே இன்று ஹல்ஸ்டோப் என்று வழங்கப்படுகிறது. முற்றுகை அக்டோபர் மாதத்தில் தொடங்கிற்று. பிப்ரவரி மாதம் வரையில் கோட்டையுள் முற்றுகையிடப்பட்ட பலர் பஞ்சத்தினுல் இறந்தார்கள். கொள்ளை வியாதியொன்று பரவி அநேகரைக் கொன்றது. டச்சுக்காரருக்கு இராசசிங்கன் உணவும் படைத்துணையும் அனுப்பி வந்தான். அன்றியும் அவன் கண்டியை விட்டு நீங்கி, களனி கங்கைக்கு அப்பாலுள்ளதும் கொழும்பிலிருந்து சிறிது தூரத்திலுள்ளதுமான ரயிகம் வத்தை என்னுமிடத்தில் வந்து வதிந்தான். 1656-ம் ஆண்டு, ஏப்ரல் மாதம், 7-ம் தேதி ஹல்ப்ட் இராசசிங்கனைச் சென்று கண்ட பின் கொழும்புக்குத் திரும்பிவிட்டான். அவன் திரும்பிய அடுத்த நாளாகிய 10-ம் தேதி துப்பாக்கிச் சூடுபட்ட காயத்தினுல் உடனே மரணமானுன். இத்தருணத்தில் போர்த்துக்கீசர் மிக கஷ்டப்பட்டபோதிலும் விட்டுக் கொடுக்கவில்லை. மே மாதம், 7-ம் திகதி டச்சுக்காரர் கோட்டையைத் தாக்கினர். 12-ம் தேதிவரை கோட்டை அவர்கள் வசமாயிற்று.



ஜெராட் ஹல்ப்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னர் கைப்பற்றப்படுதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புக் கோட்டை இக்காலத்தில், தற்போதுள்ள கோட்டையையும் புறக்கோட்டையின் ஒரு பகுதியையும் உள்ளடக்கியதாய், புராதன காலத்தில் ஐரோப்பாவில் நிலவிய மதில் சூழ்ந்த நகரைப்போலிருந்ததேயன்றி கோட்டை என்று சொல்லக்கூடியதாயிருக்கவில்லை. கோட்டை நகரத்தைக் கைவிட்ட பின் போர்த்துக்கீசர் இதனை விஸ்தரித்தார்கள். தர்மபாலன் அதில் வசித்து வந்தான். டச்சுக்காரர் அதைக் கைப்பற்றியவுடன் அதனை முன்னிருந்த அளவுக்குக் குறைத்து புறக்கோட்டையிலிருந்தும் அதைப் பிரித்தனர்.

கொழும்பைக் கைப்பற்றவேண்டுமென்ற முக்கியமான நோக்கத்தைக்கொண்டே இராசசிங்கன் டச்சுக்காரரின் துணையை வேண்டினன். போர்த்துக்கீசர் அந் நகரைக் கைப்பற்றியதே இலங்கையில் ஏற்பட்ட குழப்பங்களெல்லாவற்றுக்குங் காரணமென்று இராசசிங்கன் நினைத்தான். டச்சுக்காரருடன் செய்த உடன்படிக்கையின்படி கோட்டையைத் தனக்குத் திருப்பிக்கொடுப்பார்களென அவன் எதிர்பார்த்திருந்தான். ஹல்ப்ட் இராசசிங்கனிடம் மிகுந்த சிநேகபாவத்தை காட்டி வந்தபடியால் தன்னை ஏமாற்றமாட்டார்களெனவும் அவன் எண்ணியிருந்தான். ஆனல் ஹல்ப்ட்டுக்குப் பின் வந்த வான் டெர் மெய்டன் கோட்டையை இராசசிங்கனுக்குக் கொடுக்க மறுத்தான். போர்ச்செலவுகளை இராசசிங்கன் கொடாதபடியால் கோட்டையை அவனுக்குக் கொடுக்க முடியாதெனவுங் காரணங் கூறினன்.

இதையறிந்த இராசசிங்கனுக்குத் தாங்கொணுக் கோபமுண்டாயிற்று. மலைக்கணவாயூடாக இவனுடைய ராச்சியத்துக்குப் போகும் வழிகளில் அமைத்திருந்த முள்ளுக் கதவுகளை அடைத்துவிடுமாறு கட்டளையிட்டான். டச்சுக்காரருக்கு ஆடு, மாடாவது உணவாவது கொடுக்கக்கூடாதென உத்தரவிட்டான். போர்த்துக்கீசரோடு சேர்ந்து கொழும்பையும், காலியையும், சுற்றியுள்ள பிரதேசங்களையும் அழித்து, டச்சுக்காரர் உணவு முதலிய தேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாதபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போர்த்துக்கீசரின் கொழும்புக் கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டங்களை உண்டாக்கினன். உடனே வான் டெர் மெய்டன் ஒரு சேனையை அனுப்பி, அரசனை ரயிகம் வத்தையிலிருந்து மலைநாட்டுக்கு புறமுதுகிடச்செய்தான்.

அரசன் போர்த்துக்கீசரோடு சேர்ந்துவிடுவானே எனப் பயந்து, டச்சுக்காரர் இலங்கையில் எஞ்சியிருக்கும் போர்த்துக்கீசப் பகுதிகளையும், இந்தியக் கரைகளிலுள்ள போர்த்துக்கீசப் பகுதிகளையும் கைப்பற்ற எண்ணினர். 1658-ம் ஆண்டு, பிப்ரவரி மாதம் ரைகிளப் வான் கோயன்ஸ் தூத்துக்குடியையும் மன்னுரையும் கைப்பற்றிய பின், ஏப்ரல் மாதத்தில் ஊர்காவற்றுறையையும் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றினன்.

## முக்கியமான ஆண்டுகள்

**1638.** டச்சுக்காரர் மட்டக்களப்பைப் பிடித்தல்.

**1640.** காலி கைப்பற்றப்பட்டமை.

**1656.** கொழும்பு கைப்பற்றப்படுதல்.

**1658.** யாழ்ப்பாணம் கைப்பற்றப்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரண்டாம் அத்தியாயம்

## பிரித்தானியரும் பிரெஞ்சுக்காரரும் தமது ராச்சியங்களைப் பெருக்கிய வரலாறு

### 1. ஐரோப்பிய வல்லரசுகள் புதிய நாடுகளைக் கைப்பற்றல்

புதுப் புதுத் தேசங்களைக் கண்டுபிடிப்பதற்காக ஸ்பானியர் அமெரிக்காவில் செய்த முயற்சிகளைப்பற்றியும், டச்சுக்காரரும் போர்த்துக்கீசரும் கீழ்த்திசை நாடுகளிற் செய்த பிரயத்தனங்களைப்பற்றியும் இந்நூலின் முந்தின அத்தியாயங்களிற் கூறினேம். ஐரோப்பாவுக்கு வெளியே இற்றை நாளில் அதிக ராச்சியங்களையுடைய வல்லரசுகள் பிரித்தானியாவும், பிரான்சும், ருஷ்யாவுமேயாகும். ருஷ்யா ஆசியாவுள் நுழைந்து புதிய பிராந்தியங்களைக் கைப்பற்றிய வரலாற்றைப் பின்னர் கூறுவோம். தரை மார்க்கமாகவே ருஷ்யா சண்டை செய்து வந்தது. ஆனல் பிரித்தானியாவும் பிரான்சும் கடல்மார்க்கமாகச் சென்று புதிய நாடுகளைச் சுவீகரித்தன. அவற்றின் ஆரம்ப வரலாறுகளை இவ்வத்தியாயத்தில் கூறுவோம். இவ்விரு வல்லரசுகட்குமிடையில் ஏற்பட்ட போட்டியைப்பற்றியும், பிரித்தானியா கடைசியாக பிரான்சுக்குச் சொந்தமான நாடுகளில் பெரும்பகுதியை எவ்வாறு கைப்பற்றிக் கொண்டதென்பதைப்பற்றியும் அடுத்த அத்தியாயத்தில் கூறுவோம். இப்போது பிரான்சுக்கு இருந்து வரும் குடியேற்ற நாடுகளில் பெரும்பாலானவை கடந்த நூறு வருடங்களுள் கைப்பற்றப்பட்டவையாகும்.

ஐரோப்பிய நாடுகள் தமது ராச்சியங்களைப் பெருக்கிக் கொண்ட வரலாறு தற்கால சரித்திரத்தில் மிக அவசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறியப்படவேண்டிய தொன்முதலின் அதைக் கவனமாய்ப் படிக்கவேண்டியது இன்றியமையாததாகின்றது.

## II. அமெரிக்காவில் பிரெஞ்சுக்காரரும் பிரித்தானியரும் குடியேறிய ஆரம்ப வரலாறு

பதினும் நூற்றுண்டில் பிரான்சும் பிரித்தானியாவும் ஸ்பானியாவுக்குச் சொந்தமான நகரங்களையும் திரவியக் கப்பல்களையும் கொள்ளையிடுவதில் முயன்றனவே யன்றி தமக்கெனப் புதிய தேசங்களைக் கைப்பற்ற முயலவில்லை. ஆனுல் ஆரம்பத்தில் இரு சம்பவங்களைக் கவனிக்கவேண்டும். ஒன்று கனடா குடியேற்ற நாட்டைத் தாபிப்பதற்குக் காரணமாயிருந்த ஒரு பிரெஞ்சுக்காரரின் பிரயாணம். மற்றது வட அமெரிக்காவின் கிழக்கு பாரிசத்தில் ஒரு குடியேற்றத் தலத்தை உண்டாக்க பிரித்தானியர் செய்த பயனற்ற முயற்சிகள். ஐக்கிய அமெரிக்காவின் சரித்திரம் இங்கேதான் ஆரம்பமாகிறதெனவுங் கூறலாம். இப்பிரயாணங்கள் அடுத்த நூற்றுண்டில் பெரிதும் வலுவடைந்ததன் பயனுக பிரான்சுக்கும் பிரித்தானியாவுக்குமிடையில் 18-ம் நூற்றுண்டில் மிக மும்முரமான போர் உண்டானது.

கபொட் என்ற பெயருடைய யாத்திரீகர்களும் அவர்களுக்குப் பின்னுல் யாத்திரை செய்தவர்களும் நியூ பவுண்ட்லந்துக்கயலேயுள்ள மீன்பிடிக்கும் தலங்களைக் கண்டுபிடித்தார்கள். அந்த லாபகரமான முயற்சியில் பிரான்சும் பிரித்தானியாவும் பங்குபற்றின. ஆனுல் 1534-ம் ஆண்டுக்கும் 1536-ம் ஆண்டுக்குமிடையில் காட்டியர் என்ற பெயருள்ள ஒரு பிரெஞ்சுக்காரன் உள்நாட்டைப் பார்க்க விரும்பி, செயின்ற் லோறன்ஸ் நதியில் ஆயிரம் மைல்வரை எதிரேறிச் சென்முன். பின்னர் யாத்திரீகர்கள் பலர் அங்கிருந்த பூர்வீகக் குடிகளான 'சிவப்பு இந்திய'ருடன் கம்பலத்துக்கான உரோம வியாபாரஞ் செய்யத் தொடங்கினுர்கள். 1608-ல் கியூபெக் என்ற குடியேற்றத் தலத்தை சாம்பிளேய்ன் என்பவர் தாபித்தார், இங்கிருந்துகொண்டே அவ்விடத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓுள்ள பெரிய ஏரிகளை பிரெஞ்சுக்காரர் கண்டுபிடித்தனர். கொல்பேட்டின் காலத்தில் அநேகம் பிரெஞ்சுக் காரர் அங்கு சென்று குடியேறினர். ஏரிகளின் மருங்கில் சங்கிலித் தொடராகக் கோட்டைகள் கட்டப்பட்டன. 1682-ல் லாசால் என்பவன் 'மிஸிஸிப்பி' என்னும் பெரிய ஆற்றின் பள்ளத்தாக்கைப் பார்வையிட்டான். அவ் வாற்றின் சங்கமத்தில் 'ஓரசியானே' என்ற இன்னெரு குடியேற்றத் தலம் தாபிக்கப்பட்டது. நதி விழும் 'கரபியன்' கடலிலுள்ள பல தீவுகளில் கரும்பு சாகுபடி செய்வதிலும் பல பிரெஞ்சுக்காரர் ஈடுபட்டார்கள். வட மேற்கில் அவர்களுக்கு கனடா, அக்கேடி என்ற இரு குடியேற்றத் தலங்களிருந்தன. அங்குள்ள குடியேற்ற வாசிகள் பிரதானமாக கம்பலத்துக்கான உரோம வியா பாரத்திலீடுபட்டிருந்தனர். இது ஒரு புறமாக, யேசு சபையைச் சேர்ந்த போதகர்கள் பலர், அங்குள்ள பூர்விக குடிகளைக் கிறிஸ்த சமயத்தில் சேர்த்துக்கொள்ள ஒல்லும்வகை முயன்ருர்கள்.

பதினேழும் நூற்ருண்டின் பிற்பகுதியில் கில்பேட், றலி என்ற ஆங்கிலேயர் கிழக்குக் கரையில் குடியேற முயற்சி செய்தனர். இது சித்தியடையாதபோதிலும், 1606-ல் ஏற்பட்ட வேர்ஜினியா சங்கம் வெற்றிபெற்றது. இச்சங்கம் ஜோன் ஸ்மித் என்னும் தளபதியால் நிறுவப் பட்டது. இவர் நம்புதற்கரிய பல கஷ்டங்களை அனுப வித்தார். புகையிலைச் சாகுபடியினுல் வேர்ஜினியா குடி யேற்றம் நிலைநிற்கக்கூடியதாயிருந்தது. 'சிவப்பு இந் தியர்'களிடமிருந்து கற்றுக்கொண்ட புகையிலைப் பழக் கம் ஐரோப்பா எங்கும் பரவிற்று. 1620-ம் ஆண்டில் மதப்பிணக்குக் காரணமாக இங்கிலாந்திலிருந்து ஒரு சிறு கூட்டத்தவர் 'மே பிளவர்' என்ற கப்பலில் அமெரிக் காவுக்குப் பிரயாணமாஞர்கள். அங்கே கிழக்குக் கரை யில் இப்போது 'நியூ இங்கிலாந்து' என்று சொல்லப்படும் இடத்தில் அவர்கள் குடியேறித் தாம் நினைத்தபடி தம் மதத்தை அனுட்டித்தனர். இவர்களைத் தொடர்ந்து வேறும் அநேகர் அங்கு சென்ருர்கள். இவ்வாருக குடி யேற்றத் தலங்கள் நாளாவட்டத்திற் பெருகின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவீடன் தேசத்தவரும் டச்சுக்காரருங்கூட வேர்ஜினியாவுக்கும் நியூ இங்கிலாந்துக்குமிடையில் பல குடியேற்றத் தலங்களையும் தாபித்தனர். ஆனால் அவை 1664-ல் ஆங்கிலேயர் கையில் சிக்கின. இக்குடியேற்றத் தலங்களிலிருந்தே பின்னர் நியூ யோர்க், நியூ ஜேர்ஸி, டிலாவார் என்ற குடியேற்றங்கள் கிளைத்தன. 1681-ல் வில்லியம் பென் என்பவர், முதலாவதாக ஒரு உள்நாட்டுக் குடியேற்றத்தைத் தாபித்தார். அதற்கிடையில் வேர்ஜினியாவுக்கு வடக்கே அநேகமாகக் கத்தோலிக்கருக்கெனவே பால்திமூர் என்ற குடியேற்ற தலம் தாபிக்கப்பட்டது. தெற்கே கரோலினாஸ் என்ற இரு குடியேற்றத் தலங்களும் நிறுவப்பட்டன. வறிய பிரிட்டிஷ் கடன்காரரின் சௌகரியத்திற்காக 1732-ல் ஜெனரல் ஒகிள்தோப் என்பவர் ஜோர்ஜியா என்ற குடியேற்றத் தலத்தை அதற்குத் தெற்கில் தாபித்தார். இவ்வாறு 13 குடியேற்றத் தலங்கள் நிறுவப்பட்டன. தெற்கேயுள்ளவர்கள் ஆரம்பத்தில் புகையிலை சாகுபடி செய்தார்கள். பின்னர் நெல்லும் பருத்தியும் பயிர் செய்து சீவியம் நடத்தினர். வடக்கேயுள்ள குடியேற்றத் தலங்களில் பிரித்தானியாவைப்போன்ற சீதோஷ்ண நிலையிருந்தது. அங்குள்ளவர்கள் அநேகமாய் தனிப்பட்ட கமக்காரராகவேயிருந்தனர். ஒவ்வொரு குடியேற்றத் தலத்திலும் இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட ஒவ்வொரு தேசாதிபதி இருந்தார். அத்துடன் சனப்பிரதிநிதிகளடங்கிய சட்டசபை ஒவ்வொன்றுமிருந்தது. சமய விஷயங்களில் ஒருவிதமான நிர்ப்பந்தமும் ஏற்படுத்தப்படவில்லை. மற்ற விஷயங்களிலும் அரசாங்கத்தார் ஒருவிதமாகவும் தலையிடவில்லை. இம்மாதிரியான சுதந்திரத்தை அவர்கள் பெரிதும் நயந்தார்கள். நாளடைவில் அவர்களுடைய சனத்தொகையும் பெருகுவதாயிற்று.

## III. ஆபிரிக்காவில் பிரித்தானியரும் பிரெஞ்சுக்காரரும்

ஆபிரிக்காவை இருளடைந்த கண்டமென்றும், உள்ளே நுழைந்துகொள்வதற்கு முடியாத தேசமென்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19-ம் நூற்றாண்டுவரை ஐரோப்பியர் கருதினர். ஆனால் ஆபிரிக்காவின் கரையோரங்களில் சில குடியேற்றங்களை உண்டாக்குவது இரண்டு விஷயங்கட்கு அத்தியாவசியமாயிருந்தது. ஒன்று இந்தியாவை அடைவதற்கு ஆபிரிக்காக் கரைகளில் ஒரு துறை தேடிக் கொள்வது உசிதம். டச்சுக்காரர் நன்னம்பிக்கை முனையில் ஒரு குடியேற்றத் தலத்தை உண்டாக்கினார்கள். இதுவே பிற்காலத்தில் தென்னாபிரிக்க ஐக்கிய நாடுகளாயிற்று. பிரிட்டிஷ்காரரும் பிரெஞ்சுக்காரரும் மேற்குக் கரையில் சில துறைமுகங்களை அரண்செய்தார்கள். இரண்டாவது, ஆபிரிக்காவிலுள்ள நீக்ரோக்களை அடிமைகளாக வியாபாரஞ் செய்வதற்கும் வசதி ஏற்பட்டது. இவ்வடிமை வியாபாரமென்பது சனசமூக சரித்திரத்தில் ஒரு துக்ககரமான சம்பவமாகும். அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர்களுக்கு குறைந்த செலவில் தொழிலாளர் தேவைப்பட்டார்கள். ஸ்பானியரின் சுரங்கங்களில் வேலை செய்வதற்கும் ஏராளமான தொழிலாளர் வேண்டியிருந்தது. அவ்வாறே பிரெஞ்சுக்காரரும் பிரித்தானியரும் தமது புகையிலை, கரும்புச் சாகுபடிக்குத் தொழிலாளரைத் தேவைப்பட்டனர். எனவே, ஆபிரிக்காவிலிருந்து அடிமைகளைக் கப்பல் கப்பலாய் இறக்குமதி செய்வித்தார்கள். உள்ளூரிலுள்ள அடிமை வியாபாரிகள் அடிமைகளைத் திரட்டி ஆபிரிக்காக் கரைகளுக்குக் கொண்டுவந்து மிகக் கேவலமான முறையில் அவர்களை ஐரோப்பிய கப்பல்களில் அமெரிக்காவுக்கு அனுப்புவார்கள். அங்கே இவ்வடிமைகள் விலைக்கு விற்கப்பட்டனர். இத்தகைய அநாகரிகமான வியாபாரத்தால் பெரிய கொடுமைகள் செய்யப்பட்டன. 19-ம் நூற்றாண்டில் இவ்வடிமை வியாபாரம் ஒழிக்கப்பட்டு அடிமைகளுக்கெல்லாம் விடுதலையளிக்கப்பட்டது.

## IV. இந்தியாவில் பிரித்தானியரும் பிரெஞ்சுக்காரரும்

கீழ்நாடுகளில் விளையும் வாசனைச் சரக்குகளைத் தமது தேசங்கட்குக் கொண்டுவந்து நல்ல இலாபமுள்ள வியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத்தைச் செய்வதற்காகவே ஐரோப்பிய வியாபாரிகள் ஆரம்பத்தில் கீழைத்தேசங்கட்குச் சென்றனர். இவ்வாறு இந்திய சமுத்திரத் தீவுகளில் டச்சுக்காரர் ஆதிக்கம் பெற்றூர்கள். பின்னர் பிரிட்டிஷாரும், அவர்களைத் தொடர்ந்து பிரெஞ்சுக்காரரும் இந்தியாவில் வியாபாரத் தலங்களை ஏற்படுத்தினர். 1600-ல் ஆங்கிலேயரின் கிழக்கு இந்திய சங்கம் நிறுவப்பட்டது. கீழைத்தேசங்களோடு வியாபாரஞ் செய்வதற்காக எலிஸபெத் ராணியால் இச்சங்கத்துக்கு முழு உரிமை வழங்கப்பட்டது. இரண்டு நூற்றூண்டுகளாக இவ்வுரிமையை இவர்கள் பாதுகாத்து வந்தனர். முதலாவது சாள்ஸ் காலத்திலும், பின்னர் மூன்றுவது வில்லியத்தின் காலத்திலும் இச்சங்கத்துக்கு எதிராக வேறு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டபோதிலும், அவற்றையெல்லாம் நாளடைவில் இச்சங்கம் தன்னுேடு சேர்த்துக்கொண்டது. இரண்டாவது முறை ஏற்படுத்தப் பட்ட எதிர்ச்சங்கமே 1708-ம் ஆண்டில் ஒன்றுசேர்க்கப் பட்டு 'கிழக்கிந்திய தீவுகளில் வியாபாரஞ் செய்யும் ஆங்கிலேய வியாபாரிகளின் ஐக்கிய சங்க'மெனப் பெயர் கொடுக்கப்பட்டது. இச்சங்கம் 'ஜோன் சங்க'மென்றும் விளையாட்டாக அழைக்கப்பட்டது. 1858-ம் ஆண்டில் கிழக்கிந்திய சங்கம் கலைக்கப்பட்டபொழுது இந்தியாவின் பெரும்பகுதி இதன் ஆட்சிக்குள்ளாகிவிட்டது.

பதினேழாம் நூற்றூண்டில் இந்தியாவில் புகழ்பெற்ற மொகலாய வமிசத்தவர் தனியரசு செலுத்தி வந்தனர். சிற்றரசர் பலர், முக்கியமாக தென்னிந்தியாவில் அரைக் கரைவாசி சுதந்திரத்துடன் ஆட்சி செய்தார்கள். இவ் வரசரோடெல்லாம் சிநேகபாவம் கொண்டிருக்கவேண்டு மென இவ்வாங்கிலச் சங்கம் மிகவும் விரும்பியது. 1612-ல் சூரத் என்னுமிடத்தில் அரண்செய்யப்பட்ட ஒரு வியா பாரத் தலத்தை நிறுவுவதற்கு ஜஹாங்கீர் சக்கரவர்த்தி யிடம் அனுமதி பெற்றூர்கள். அதே வருடத்தில் ஜஹாங்கீரின் அவைக்களத்துக்கு சேர் தோமஸ் ரோ என்னும் ஒரு ஆங்கில ஸ்தானீகர் சென்றூர். பத்து ருடங்களுக்குப் பின்னர் பாரசீகக் குடாக்கடலிலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஓர்மஸ் என்னும் துறைமுகம் போர்த்துக்கீசர் வசமிருந்து கைப்பற்றப்பட்ட பின்னர் ஆங்கிலேயேர் இந்தியாவுடனும் பாரசீகத்துடனுமே முக்கியமாக வியாபாரம் நடத்தத் தலைப்பட்டார்கள். சுமாத்ராவில் ஆங்கிலேயருக்கு ஒரு துறையிருந்தபோதிலும், டச்சுக்காரரின் ஆதிக்கம் அங்கே வலுப்பெற்றிருந்தபடியால் அங்கே இவர்கள் நாட்டஞ் செலுத்தவில்லை.

*1639*-ல் இந்தியாவின் தென்கிழக்குக் கரையில் செயின்ற் ஜோர்ஜ் என்ற கோட்டையைக் கட்டினார்கள். இக்கோட்டையைச் சுற்றி சென்னை மாநகரம் கிளம்பிற்று. *1651*-ல் கங்கை யாற்றின் சங்கமத்தில் வியாபாரத் தலங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டது. *1685*-ல் ஔரங்கசீப் சக்கரவர்த்தியின் உத்தியோகத்தர் ஒருவரோடு இச்சங்கத்தார் பிணங்கி, அவனது உத்தரவை மீறியதன் பயனாகப் பல வியாபாரத் தலங்களை இழக்கவேண்டியுமேற்பட்டது. இஸ்லாத்தில் மிகுந்த பக்தியுடையவனான ஔரங்கசீப் (மக்கத்துக்குச் செல்லும் யாத்ரீகரின் கப்பல்களை ஆங்கிலேயரின் கப்பல்கள் வழிமறிக்கக்கூடுமென அறிந்து) ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றிய வியாபாரத் தலங்களைத் திருப்பிக்கொடுத்ததுமன்றி புதிய ஒரு கோட்டையைக் கட்டவும் உத்தரவளித்தான். கங்கை யாற்றின் கிளையாகிய ஹுக்ளி ஆற்றில் வில்லியம் கோட்டை என்ற அரணை சாணொக் என்னும் ஒரு வியாபாரி கட்டினான். பிற்காலத்தில் இதிலிருந்தே கல்கத்தா என்ற நகரம் கிளம்பிற்று.

இதற்கு முன் *1661*-ல் இரண்டாவது சாள்ஸ் ஒரு போர்த்துக்கீச அரசியை மணந்தபொழுது, இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ளதும், சிறந்த துறைமுகமுடையதுமான பம்பாய்த் தீவு அவனுக்குச் சீதனமாக வழங்கப்பட்டது. இங்கு கூறப்பட்ட சென்னை, கல்கத்தா, பம்பாய் ஆகிய மூன்று இடங்களுமே அக்காலத்தில் பிரித்தானிய வர்த்தகரின்த் மத்தியத் தானங்களாயிருந்தன. இவை பிற்காலத்தில் பெரிய பட்டினங்களாய் வளர்ந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் இச்சங்க வர்த்தகர்கள் சமாதானத்தோடு வியாபாரத்தை நடத்தினால் போதுமென்றிருந்தார்கள். ஆனால் அடுத்த நூற்றாண்டில் மொகலாய ராச்சியம் நிலைகுலைந்தவுடன் பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரோடு போட்டியிட்டார்கள். இக்காரணங்களைக்கொண்டு ஆங்கிலேயர் தமது வியாபாரத் தலங்களை ஆயுதந்தாங்கிப் பாதுகாக்கவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது.



18-ம் நூற்றாண்டில் சென்னையிலிருந்த
செயின்ற் ஜோர்ஜ் கோட்டை

1664-ல் கொல்பேட் என்ற பிரெஞ்சு அரசியல் விற்பன்னர் கீழைத்தேசங்களில் வியாபாரஞ் செய்து முன்னர் நயமடைந்த ஒரு சங்கத்துக்குப் பதிலாக இன்னொரு சங்கத்தை ஏற்படுத்தினார். சென்னைக்கடுத்த புதுச்சேரியிலும், கல்கத்தாவுக்குச் சமீபத்திலுள்ள சந்திரநாகூரிலும், இன்னும் இந்தியாவின் கரையோரங்களில் பல இடங்களிலும் பிரெஞ்சு வியாபாரத் தலங்கள் நிறுவப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டன. பிரெஞ்சு வியாபார சங்கத்தின் அலுவலெல்லாம் பிரான்ஸிலிருந்தே மேற்பார்வை செய்யப்பட்டன. பிரித்தானிய சங்கத்தின் நிர்வாகம் அவ்வாறு நடைபெற்றதில்லை. பிரெஞ்சுக்காரரின் முறை சில கருமங்களில் நன்மையைக் கொடுத்தபோதிலும் ஈற்றில் நன்மையைக் கொடுக்கவில்லை. 18-ம் நூற்றுண்டில் பிரான்ஸின் அரசியல் நிலைமையே திறமையாய் நடைபெறவில்லை. மேலும் அவர்கள் இந்தியா முறைகளைச் சரியாக அறிந்திருக்கவுமில்லை. இந்தியாவிலுள்ள பிரெஞ்சு உத்தியோகத்தருக்கு பிரான்ஸிலிருந்தே ஆலோசனை கூறப்பட்டது. சிலவேளைகளில் அவை பொருத்தமில்லாத ஆலோசனைகளாகவுமிருந்தன. ஆனால் பிரித்தானியர் உறுதியாக அலுவல்களை நிச்சயித்து நடத்தினர்கள். எவ்வாறிருந்தபோதிலும் 18-ம் நூற்றுண்டு வரை இவ்விரு வர்த்தக சங்கங்களுக்குமிடையில் சச்சரவு ஏற்படவில்லை.

## முக்கியமான ஆண்டுகள்

1534. காட்டியரின் முதற் பிரயாணம்.

1600. ஆங்கிலேயரின் கிழக்கிந்திய வர்த்தக சங்கம் தாபிக்கப்படல்.

1606. வேர்ஜினியா கம்பெனி.

1608. கியூபெக் நிறுவப்படல்.

1620. ‘ மே பிளவர் ’ என்ற கப்பலின் பிரயாணம்.

1639. சென்னை, செயின்ற் ஜோர்ஜ் கோட்டை கட்டப்படல்.

1661. பிரிட்டிஷாரால் பம்பாய் கைப்பற்றப்பட்டமை.

1664. பிரிட்டிஷார் நியூ யோர்க்கைப் பிடித்தல். பிரெஞ்சு கிழக்கிந்திய வர்த்தக சங்கம் தாபிக்கப்படல்.

1681. பென்ஸில்வேனியா தாபிக்கப்படல்.

1690. கல்கத்தா தாபிக்கப்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதின்மூன்றும் அத்தியாயம்

## பதினெட்டாம் நூற்றுண்டில் பிரித்தானியாவுக்கும் பிரான்ஸுக்குமிடையில் நடைபெற்ற போட்டி

### I. ஸ்பானிய சிங்காசனப் போர்

பிரித்தானியர் ஏனைய நேசப்படைகளின் துணை கொண்டு பதினுன்காம் லூயியின் வலியை எவ்வாறு அடக்கினர் என்பதைப்பற்றி ஐந்தாவது அத்தியாயத்தில் எடுத்துக் காட்டினேம். நெதர்லாந்து தேசத்திலேயே அநேக யுத்தங்கள் நடந்தன; ஏனெனில், கடல் யுத்தத்தில் பிரித்தானியர் மற்றெல்லாரிலுஞ் சிறந்து விளங்கினர்கள். இதன் பயனுக பிரித்தானியருக்கு எவ்வளவோ நன்மைகளுண்டாயின. கிழக்கிந்தியத் தீவுகளில் யுத்தம் நடைபெருதபோதிலும் மேற்கு இந்தியத் தீவுகளில் சண்டை நடந்தது. மத்தியதரைக் கடலுக்கு வாசல்போன்றுள்ள ஜிப்ரோல்டர் என்ற மலைக்கோட்டையும் வேறு பல தீவுகளும் கைப்பற்றப்பட்டன. அமெரிக்கா கண்டத்தில் அக்கேடி பிடிக்கப்பட்டது. கனடாவைக் கைப்பற்ற இருமுறை சேனைகளை அனுப்பியும் அம்முயற்சி பயன்படவில்லை. ஒருபுறத்தில் பிரித்தானியருக்குச் சொந்தமான பகுதிகளைத் தாக்குமாறு பிரெஞ்சுக்காரரர் நாகரிகமற்ற செவ்விந்தியரைத் தூண்டிவிட்டார்கள். 1713-ல் செய்யப்பட்ட உற்றெச்ட் உடன்படிக்கையின் பயனுக ஐரோப்பாவில் பிரித்தானியா நடத்திய தரை யுத்தத்தின் பலனை வெளிநாடுகளில் பெறக்கூடியதாயிருந்தது. அமெரிக்காவில் கைப்பற்றப்பட்ட அக்கேடியாவுக்கு நோவா ஸ்கோஷியா என்ற புதுப் பெயர் கொடுக்கப்பட்டது. வடக்கே உரோம




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரத்துக்கு முக்கிய தானமாயிருந்த ஹட்ஸன் விரிகுடாவிலும், மீன்பீடி தொழிலுக்கு மிகவும் பிரதானத் துறையாயிருந்த நியுபவுண்லாந்திலும் பிரித்தானியருக்கும் உரிமையை பிரான்ஸ் அங்கீகரித்தது. மத்தியதரைக் கடலில் ஜிப்ரோல்டரையும் மினோர்க்கா தீவையும் வைத்திருந்ததுபோலவே, சிறந்த துறைமுகத்தையுடைய ஒரு மேற்கிந்திய தீவையும் பிரித்தானியர் கைப்பற்றிக் கொண்டார்கள். ஸ்பானியா அமெரிக்காவுடன் அடிமை வியாபாரம் செய்யும் உரிமையையும் வேறும் பல வியாபார உரிமைகளையும் பிரித்தானியர் பெற்றனர். இது வரை தடைசெய்யப்பட்டிருந்த இக்குடியேற்ற நாடுகளில் இவர்கள் பெற்ற வியாபார உரிமைகளைச் சுயநலங் கருதித் துஷ்பிரயோகஞ் செய்தும் வந்தனர்.

## II. அமெரிக்காவில் வர்த்தகப் போட்டியும் குடியேற்றப் போட்டியும்

1713-ம் ஆண்டு தொடக்கம் 1739-ம் ஆண்டுவரை இடையிட்ட ஆண்டுகளில் பிரித்தானியா ஸ்பானியாவுடனும் பிரான்சுடனும் சமாதானமாயிருந்ததாகவே நம்பப்பட்டது. ஆனால் வியாபாரமும் குடியேற்றமும் சம்பந்தமாக இந்நாடுகட்கிடையிலிருந்த போட்டியினால் அடிக்கடி குழப்பங்களுண்டாயின. பிரித்தானியாவுக்கு வழங்கப்பட்ட வியாபார உரிமைகளை அது சுயநலங் கருதித் துஷ்பிரயோகஞ் செய்தமை ஸ்பானியருக்குக் கோபமூட்டிற்று. அதனால் அவர்கள் ஜோர்ஜியா என்ற புதிய பிரித்தானிய குடியேற்றத்தை விரும்பவில்லை. ஸ்பானியாவின் நேசதேசமாகிய பிரான்ஸ், கனடாவிலுள்ள தனது குடியேற்றங்களை அரண்செய்த தோடமையாது பிரித்தானியர் தமது எல்லையுட் புகுந்து பரவிவிடாமல் தடுப்பதற்காக ஒஹியோ, மிஸிஸிப்பி ஆகிய ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் தொடர்ந்து பல கோட்டைகளைக் கட்டி லூசியானாவையும் கனடாவோடு இணைக்க முயற்சி செய்தது (படத்தைப் பார்க்க). 1739-ல் பிரித்தானியாவுக்கும் ஸ்பானியாவுக்குமிடையில் போர் மூண்டது. அடுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வருடத்தில் பிரான்ஸ் ஸ்பானியாவுடன் சேர்ந்தது. இப்போர் ஐரோப்பாவிலும் நடத்தப்பட்டது. அங்கே இதனை ஆஸ்திரிய சிங்காசனப் போர் என்று கூறினர் (அடுத்த அத்தியாயம் பார்க்க).

வட அமெரிக்காவிலுள்ள பிரித்தானியரின் குடியேற்றம் நாளுக்கு நாள் அதிகரித்தது. பிரெஞ்சுக்காரரிலும் பார்க்க பிரித்தானியரின் தொகையே கூடிற்று. பத்து, பன்னிரண்டு பிரித்தானியருக்கு ஒரு பிரெஞ்சுக்காரர் வீதமே குடியேறியிருந்தனர். ஆனால் பிரெஞ்சுக்காரர் விடா முயற்சியுடையவராயும், ஒருவரின் நிர்வாகத்துக்குக் கட்டுப்பட்டவர்களாயுமிருந்தனர். ஆனால் பிரித்தானிய குடியேற்றங்கள் பதின்மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமலிருந்தன. லண்டனிலிருந்து நடத்தப்பட்ட அரசியல் நிர்வாகத்தின் பயனாக ஓரளவுக்கு மாத்திரம் தொடர்பு இருந்தது. ஆனால் பிரித்தானியரின் கடற்படை மிகவும் திறமையுடையதாயிருந்தபடியால், சண்டைக் காலங்களில் பிரெஞ்சுக் குடியேற்றங்கள் வெளியேயிருந்து துணை பெறுதபடி தடுக்கவும் முடிந்தது.

1744 வரையில்தான் உண்மையாக அமெரிக்காவில் போர் உண்டானது. செயின்ற் லோறன்ஸ் என்ற ஆற்றின் சங்கமத்திலுள்ள பெரிய பிரெஞ்சுக் கோட்டையான லூயிஸ்பேர்க் கைப்பற்றப்பட்டது. ஆனால் 1748-ல் செய்யப்பட்ட ' ஏய்லாசாப்பெல் ' உடன்படிக்கையின் பிரகாரம் அது திருப்பிக் கொடுக்கப்பட்டது. இரு கட்சியினரும் கோட்டைகளைக் கட்டினார்கள். சிறிது சண்டையும் இடையே ஏற்பட்டது. 1754-ல் பிரெஞ்சுக்காரர் பிரித்தானியருக்குச் சொந்தமான ஒரு கோட்டையைக் கைப்பற்றி அதனை வலிதாய் அரண்செய்தார்கள். அதற்கு டூகுஸ்னே கோட்டை எனப் பெயருமிடப்பட்டது. பிரித்தானியரின் குடியேற்றத்தைத் தடைசெய்யும் முறையில் அக்கோட்டை அமைந்திருந்தபடியால், அதை மறுபடியும் படைகொண்டு மீட்டுக்கொள்வதற்கு பிரித்தானியர் அடுத்த வருடம் முயற்சி செய்தார்கள். ஆனால் அம்முயற்சி பலிக்கவில்லை. அடுத்த வருடம், அதாவது 1756-ல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பாவில் மறுபடியும் யுத்தம் தொடங்கிற்று. இதில் பிரெஞ்சுக்காரரும் பிரித்தானியரும் பங்குபற்றினர் (15-ம் அத்தியாயம் பார்க்க). இவ்வருடத்தில் பிரித்தானிய சேனைகள் சென்றவிடமெல்லாம் தோல்வியுற்றன. கடல் யுத்தங்களிலும் தோல்வியுண்டானது. மினோர்க்கா என்ற தீவையும் பிரித்தானியர் தோற்ருர்கள். மேலும்



சதாம் பிரபு வில்லியம் பிற்

பிரித்தானியாவின் நண்பனுகிய பிரஷ்யா நாட்டு பிரெடரிக் ஜெர்மனியில் தோல்வியடைந்தான். அமெரிக்காவில் லூயிஸ்பேர்க்கை பிரித்தானியர் இருமுறை தாக்கியும் பயன்படவில்லை. பிரெஞ்சுக்காரர் இரண்டு கோட்டைகளைக் கைப்பற்றிஞர்கள். ஆனல் 1757-ல் வில்லியம் பிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற அதிஊக்கமுள்ள ஒரு யுத்த மந்திரி இங்கிலாந்தில் நியமிக்கப்பட்டார். அதன் பயனாக பிரித்தானியா முன் னிழந்த கடல் யுத்தத் திறமையை மறுபடியும் பெற்றது. 1756-ல் லூயிஸ்பேர்க்கை ஆங்கிலேயர் கைப்பற்றினர். கனடாமீது படையெடுக்கப்பட்டது. கியூபெக் என்ற இடத்தைக் கைப்பற்ற அவர்கள் திறமையாக யுத்தம் நடத்தினார்கள். வெற்றி கிடைக்குஞ் சமயத்தில் வூல்வ் என்னும் பிரித்தானிய சேனாதிபதி சண்டையில் இறந் தான். 1760-ல் கனடாவில் மிஞ்சியிருந்த மொன்ரியல் என்ற ஒரேஒரு பிரெஞ்சுத் தலமும் வீழ்ச்சியுற்றது.

'ஏழாண்டு யுத்த'மென அழைக்கப்பட்ட இப்போர் பாரிஸ் உடன்படிக்கையின் மூலம் 1763-ல் நிறுத்தப்பட் டது. இந்தியாவிலும் அமெரிக்காவிலும் பிரான்சுக்கிருந்த குடியேற்றத் தலங்கள் இப்போரின் பயனாக பெரிதும் குறைக்கப்பட்டன. பிரான்ஸ் கனடாவையும் லூசியானா வின் கிழக்குப் பகுதியையும் பிரித்தானியாவுக்குக் கொடுத் தது. பிரித்தானியர் புளோறிடாவைக் கைப்பற்றிக் கொண்டு அதற்குப் பதிலாய் ஸ்பானியாவுக்கு லூசியானா வின் எஞ்சிய மேற்குப் பகுதியைக் கொடுத்தார்கள். பிரித் தானியரால் கைப்பற்றப்பட்ட மேற்கிந்திய தீவுகளில் சிலவற்றை மாத்திரம் அவர்கள் வைத்துக்கொண்டனர். அவ்வாறு ஆபிரிக்காவின் மேற்கரையிலுள்ள துறை களிலும் சிலவே அவர்கள் கையிற் சிக்கின. இந்தியாவில் நடைபெற்றவற்றை இன்னேரிடத்தில் கூறுவாம்.

## III. பிரித்தானியர் அமெரிக்காவை இழத்தல்

வட அமெரிக்காவின் கிழக்குக் கரை முழுவதையும் பிரித்தானியர் கைப்பற்றியபோதிலும், அக்குடியேற்றத் தலங்களைச் சரியான முறையில் நிர்வகிக்காததால் அவற்றின் பெரும்பாகத்தை அவர்கள் இழக்கவேண்டி நேரிட்டது. குடியேற்ற வாசிகள், பிரதானமாக நியூ இங்கி லாந்து என்னுமிடத்தில் குடியேறினோர், சுதந்தரத்தை விரும்பியே தமது ஜன்மபூமியை விட்டு அமெரிக்கா வுக்கு வந்தார்கள். புதிய இவ்விடத்தில் அவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை கிடைத்தது. தாய்நாட்டு அரசாங்கம் இவர்களுடைய விஷயத்தில் சிறிதளவும் தலையிடவில்லை. மேலும் பிரெஞ்சுக்காரரை பிரிட்டிஷார் வெற்றிபெறுவதற்காக இவர்கள் மிக உதவியும் புரிந்தார்கள். அன்றியும் இவர்கள் நாளுக்கு நாள் செல்வமுற்று, விருத்தியடைந்து வந்தார்கள். பிரித்தானிய பாராளுமன்றத்தில் அதிக செல்வாக்குடைய பிரித்தானிய வர்த்தகர்கள், தமது செழிப்புக்கு குடியேற்ற வாசிகளின் செல்வவிருத்தி பாதகமாயிராதபடி கவனஞ் செலுத்தியும் வந்தனர். வியாபார சம்பந்தமாகக் கட்டுப்பாடுகளும், கள்ள வியாபாரம் நடைபெறுது தடுப்பதற்குச் சட்டங்களுஞ் செய்யப்பட்டதை குடியேற்ற வாசிகள் பொருட்படுத்தவில்லை. பிரித்தானிய அரசாங்கத்தார் இக்கட்டுப்பாடுகளை நடைமுறையில் கொண்டுவர முயற்சித்ததுமன்றி வட அமெரிக்காவில் தாம் நடத்தும் யுத்தத்துக்கு குடியேற்ற வாசிகள் வரி கொடுத்துதவவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர். இதை அவர்கள் கொடுக்க மறுத்ததுமல்லாமல் வியாபாரக் கட்டுப்பாடுகட்கு உட்படவும் மறுத்தார்கள். இப்பிணக்கைத் சமாதானமாக இரு பகுதியினரும் தீர்க்காமலிருக்கவே சண்டை பலத்தது. 1775-ல் குடியேற்ற வாசிகளெல்லாரும் ஒன்று சேர்ந்து பிரித்தானியாவுடன் யுத்தம் நடத்தினர். வேர்ஜினியா வாசியாகிய ஜோர்ஜ் வாஷிங்டன் என்னும் பெரியார் அவர்களுக்குச் சேனுதிபதியாயிருந்து யுத்தத்தை நடத்தினுர். பிரித்தானிய சேனுதிபதிகளும் அரசாங்க நிர்வாகிகளும் அலுவல்களை மிக மோசமாக நடத்தினுர்கள். குடியேற்ற வாசிகளிற் கொஞ்சப் பேரே பிரித்தானியாவிலிருந்து விலக விரும்பினர். பழம்பகையைத் தீர்க்க எண்ணி பிரான்ஸ் 1778-ல் குடியேற்ற வாசிகளுக்குப் படைத்துணை உதவிற்று. சொற்ப காலமாகக் கடல் யுத்தத்தில் கலகக்காரர் பிரித்தானியரின் படையைத் தோற்கடித்தனர். 1783-ம் ஆண்டுக்கு முன்னரே பிரித்தானியா தனது கடற்படை ஆதிக்கத்தைத் திரும்பப் பெற்றபோதிலும் அவ்வாண்டில் போரை நிறுத்திச் சமாதானம் செய்துகொண்டது. பிரித்தானியர் கனடாவைத் தம்மாட்சிக்குள் வைத்துக்கொள்ளக்கூடியதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்தபோதிலும், பதின்மூன்று குடியேற்றத் தலங்களும் சுதந்தரம் பெற்றன. 1787-ல் இவையெல்லாம் ஒரு ஆட்சியின் கீழ் ஒற்றுமைப்பட்டு அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்ற புதிய ராச்சியமாக மாறின. இக்குடியரசுக்கு ஜோர்ஜ் வாஷிங்டன் முதல் தலைவரானார்.

## IV. இந்தியாவில் பிரித்தானியரின் வெற்றி

ஸ்பானிய சிங்காசன யுத்தம் நடைபெற்றபொழுது இந்தியாவிலிருந்த பிரித்தானிய வியாபாரிகளும் பிரெஞ்சு வியாபாரிகளும் ஒருவருக்கொருவர் சமாதானமாயிருந்தனர். பிரித்தானியர் தமது பழைய கொள்கையை அனுசரித்து சமாதானமாகவே வியாபாரத்தை நடத்த எண்ணினபோதிலும் நிலைமை மோசமாயிருந்தது. 1707-ல் ஔரங்கசீப் இறக்கவே பெரிய மொகலாய ராச்சியம் நிலைகுலைந்தது. சிவாஜி என்ற மராட்டியத் தலைவன் 17-ம் நூற்றாண்டில் மராட்டிய வல்லரசொன்றை தாபித்தான். அவன் இறந்ததும், மராட்டிய சமஸ்தானங்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஒருவிதமான ஐக்கிய நாடாயின. இவ்வாறு ஒற்றுமைப்பட்ட சமஸ்தானங்கள் மத்திய இந்தியாவில் பிரதானமான வல்லரசாயிருந்தன. அயோத்தி, வங்காளம் ஆகிய இடங்களில் சிற்றரசு நடத்திய நவாப்புகள் மொகலாய ஆட்சிக்குட்படாமல் மற்றைய சிற்றரசுகளைப்போலத் தாம் நினைத்தபடி கருமங்களைச் செய்து வந்தனர். தெற்கே, நவாப்பினால் ஆளப்பட்ட கர்நாடக தேசமும் மைசூர், ஹைதராபாத் ஆகிய இந்து சமஸ்தானங்களும் பெரிய குழப்பத்திலிருந்தன. வடக்கே ஆப்கானிஸ்தானத்திலிருந்து வந்த படையெடுப்பு மராட்டியரின் வலியைக் குறைத்தது. எனவே, இந்தியா முழுவதும் பெரும் குழப்பத்திலேயே இருந்தது.

இந்திய சமஸ்தானங்களின் கருமங்களில் தலையிட்டு, தமது ஆதிக்கத்தைப் பெருக்கிக்கொள்வதுமல்லாமல் பிரித்தானியரைக் கலைத்துவிடுவதற்குங்கூட இதுவே நல்ல தருணமென பிரெஞ்சு கிழக்கிந்திய வியாபார சங்கத்தார் எண்ணினார்கள். பல இந்திய ராஜாக்கள், தமது சேனையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குபடுத்தி நல்ல நிலைமையில் வைத்திருப்பதற்குப் பிரெஞ்சுக்காரரின் துணையைத் தேடினர். 1741-ம் ஆண்டில் பேராசைகொண்ட டுப்பிளே என்னும் பிரெஞ்சுத் தேசாதிபதி ஒருவன், இந்திய போர்வீரரடங்கிய நல்ல தொருசேனையைத் திரட்டி, பிரெஞ்சு சேனைத் தலைவர்களை நியமித்து, ஐரோப்பாவில் ஆஸ்திரிய சிங்காசனச் சண்டை மூண்டபொழுது, இந்தியாவிலுள்ள பிரித்தானியருக்கெதிராக அச்சேனையை உபயோகித்தான். இதன் பயனாய் 1746-ல் சென்னையைக் கைப்பற்றினான். ஆனால் 1748-ல் சமாதானம் ஏற்பட்டபொழுது, டுப்பிளேயின் விருப்பத்துக்கு மாறாக வட அமெரிக்காவில் பிரித்தானியர் திருப்பிக்கொடுத்த லூயிஸ்பேர்க்குக்குப் பதிலாக சென்னை அவர்களிடம் மறுபடியும் கொடுக்கப்பட்டது. ஆனால் இதற்கிடையில் டுப்பிளே தென்னிந்தியாவில் பெரிய புகழை நாட்டியதுமன்றி புஸ்ஸி என்ற அதிவல்லமை வாய்ந்த ஒரு பிரெஞ்சு உத்தியோகத்தனின் துணைகொண்டு ஹைதராபாத்திலும் கர்நாடகத்திலும் மிகவுஞ் செல்வாக்குண்டாக்கினான். இதற்கிடையில் பிரித்தானியரும் டுப்ளேயின் முன்மாதிரியைப் பின்பற்றி இந்தியப் போர் வீரரைக்கொண்ட ஒரு சேனையைத் தமது உத்தியோகத்தரின் தலைமையில் ஏற்படுத்தினார்கள். பின்னர் தென்னிந்திய சமஸ்தான விஷயங்களில் தலையிட்டனர். ரொபேட் கிளைவ் என்ற ஓர் ஆங்கில இளவல் சிறியதொரு சேனையை நடத்திச்சென்று கர்நாடக தேசத்தின் தலைநகரான ஆற்காட்டைக் கைப்பற்றவே பிரெஞ்சுக்காரரின் திட்டங்களெல்லாஞ் சிதறடிக்கப்பட்டன. பின்னர் கர்நாடகத்திலுள்ள பிரெஞ்சுச் சேனையுந் தோற்கடிக்கப்பட்டது. டுப்பிளே, தனது பேராசைமிக்க கொள்கைகளினால் பிரெஞ்சு வர்த்தக சங்கத்தின் பொருளையெல்லாம் செலவுசெய்து பெரிய கடனை உண்டாக்கினான். அதனால் 1754-ல் அவனை பிரெஞ்சு அரசாங்கத்தார் திருப்பி அழைத்துக் கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு வருடங்களாயின. பிரெஞ்சுக்காரருடன் போர் செய்யவேண்டிய அவசியத்தை பிரித்தானியர் உணர்ந்தனர். உடனே கல்கத்தாவிலுள்ள வில்லியம் கோட்டையை அரண்செய்தார்கள். இச்செய்கை வங்காளத்து நவாப்பு ஆன சுராஜுத்தவுலா என்பவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் உடனே காத்திராப் பிரகாரமாகக் கோட்டையைத் தாக்கி அங்கிருந்த ஐரோப்பியரை அநாகரிகமான முறையில் இம்சைப்படுத்தினான். உடனே சென்னையிலிருந்து கிளைவ் அங்கு அனுப்பப்பட்டான். அவன் கல்கத்தாவை மீட்டதுடன் யுத்தப் பிரகடனம் செய்து சந்திரநாகூரையும் கைப்பற்றினான். நவாப்பு பிரெஞ்சுக்காரருடன் சேர்ந்து கிளைவுக்கெதிராகச் சதி செய்தான். கிளைவ் பிளாசி என்ற இடத்தில் தனது 3,000 போர்வீரருடன் எதிரிகளின் 60,000 பேரைத் தாக்கி வெற்றிபெற்றான். பின்னர் முன்னிருந்த நவாப்பை நீக்கிவிட்டு இன்னொரு நவாப்பை அவனிடத்தில் நியமித்தான். இதன் பயனாக வங்காளத்தில் மிக லாபகரமான வரி வசூலிக்கும் உரிமைகள் பிரித்தானியருக்கு வழங்கப்பட்டன.

1758-ல் லாலி என்பவன் தலைமையில் பிரெஞ்சுக்காரர் புதுச்சேரிக்கு ஒரு சேனையை அனுப்பினார்கள். சென்னை முற்றுகையிடப்பட்டது. ஆனால் கருமங்கள் மிகச் சீர்கேடாக நடத்தப்பட்டதால் மசூலிப்பட்டணத்திலும் வாண்டிவாஷிலும் நடந்த யுத்தங்களில் தோல்வியுற்றனர். 1761-ல் புதுச்சேரியும் பிரித்தாணியரால் கைப்பற்றப்பட்டது. அத்துடன் இந்தியாவிலுள்ள பிரெஞ்சு ஆதிக்கம் அநேகமாய் ஒழிந்தது. 1763-ல் ஏற்பட்ட பாரிஸ் உடன்படிக்கைப்படி புதுச்சேரியும் சந்திரநாகூரும் பிரெஞ்சுக்காரர் வசம் ஒப்படைக்கப்பட்டபோதிலும், சேனையைப் பரிபாலிக்க அவர்களுக்கு உரிமை கொடுக்கப்படவில்லை. சில வருடங்களில் அவர்களது கிழக்கிந்திய வர்த்தக சங்கமும் மறைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V. பிரித்தானிய கிழக்கிந்திய சங்கத்தின் ஆட்சி முறை

பிரித்தானியரின் மூன்று முக்கியத் தலங்களாகிய கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய இடங்கள் ஒன்றுக் கொன்று எவ்வித தொடர்புமின்றியிருந்தன. ஒவ்வோ ரிடத்திலும் ஒவ்வோர் தேசாதிபதியேயிருந்தார். கல் கத்தா தேசாதிபதியே முக்கியமானவர். ஆனல் இவர் கள் எல்லாரும் லண்டனிலிருந்த கிழக்கிந்திய வர்த்தக சங்க மேற்பார்வையாளரின் கட்டளைப்படியே நடந்தார் கள். ஆரம்பத்தில் சங்கத்தின் தேசாதிபதிகளும் மற்றைய சிப்பந்திகளும் வியாபார விஷயங்களையே பரி பாலித்து வந்தனர். ஆனல் தற்போது சேனை சம்பந்த மான அலுவல்களையும் அரசியல் விஷயங்களையும் பார்க்க வேண்டி ஏற்பட்டது. அரசியல் நிர்வாகத்தை அவர்கள் செவ்வனே நடத்தாததால் பெரிய குழப்பம் இருந்து வந்தது. சங்கத்து உத்தியோகத்தருக்குச் சரியான சம்பளம் கொடுக்கப்படாததால் அவர்கள் சொந்த வியா பாரம் நடத்தினர்கள். இந்த முறை பல சீர்கேட்டை யுண்டாக்கிற்று. 1765-ல் சங்கத்தார் நிலைமையைச் சீர்ப் படுத்துமாறு கிளைவை அனுப்பினர்கள். கிளைவ் சங்கத் தின் பேரினல் வங்காளத்து வரிகளை வசூலித்து நல்ல நிர் வாக முறையை ஏற்படுத்த முயன்முன். ஆனல் 1772-ல் வாறன் ஹேஸ்டிங்ஸ் என்பவன் கல்கத்தா தேசாதிபதி யாய் நியமிக்கப்பட்டான். அவன் பல திருத்தங்களைச் செய்தான். ஆனல் அவனும் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. பம்பாயிலிருந்த சங்கத்துச் சிப்பந்தி களின் புத்திக்குறைவான சில செய்கைகளினல் வலிமை மிக்க மராட்டியரோடுகூட யுத்தஞ் செய்யவேண்டியேற் பட்டது. மேலும் மைசூர் ராச்சியத்தைக் கைப்பற்றி ஆண்டு வந்தவனும், பிரித்தானியருக்கு விரோதியுமான ஹைதர் அலி என்பவனேடும் சண்டையிடவேண்டியிருந் தது. இங்கிலாந்து அக்காலத்தில் அமெரிக்க சுதந்தர யுத்தத்திலீடுபட்டிருந்ததால் அங்கிருந்துகூட எவ்வித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாறன்ஹேஸ்டிங்ஸ் காலத்தில்

இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையையும் வாறன் ஹேஸ்டிங்ஸ் பெற முடியவில்லை. இந்தியாவிலிருந்த பிரெஞ்சுக்காரரின் துணைவரும் பிரித்தானியருக்கெதிராகப் பல குழப்பங்களை உண்டுபண்ணினர். வாறன் ஹேஸ்டிங்ஸ் அனுட்டித்த முறை குறைபாடுடையதாயிருந்தபோதிலும்,* சங்க நிர்வாகத்தைச் சீர்படுத்தி எவ்வித ஊழலுமின்றி திறமையுடன் நடத்துவதற்கு அடிகோலினன். அவனுக்குப் பின் வந்த தேசாதிபதியான கோண்வாலிஸ் பிரபு இன்னொரு மராட்டிய யுத்தத்தை வென்று ஹேஸ்டிங்ஸ் செய்த வேலையைத் தொடர்ந்து செய்து வந்தார். மறுபடியும் பிரெஞ்சுக்காரர் குழப்பத்தை உண்டாக்கினர். 1792-ல் மறுபடியும் பிரித்தானியா பிரான்சுடன் ஒரு பெரிய போரில் ஈடுபட்டது. இதுவே இவ்விரு சாதியாருக்குமிடையில் நடைபெற்ற கடைசி யுத்தமாகும். இந்த யுத்தத்தில் தான் பிரான்சுடன் ஓரளவுக்கு விருப்பமின்றியே நேசம் பாராட்டிவந்த டச்சுக்காரர் வசமிருந்த இலங்கையை பிரித்தானியா 1795-ல் கைப்பற்றவேண்டிய அவசிய மேற்பட்டது.

## முக்கியமான ஆண்டுகள்

1704. பிரித்தானியர் ஜிப்ரோல்டரைப் பிடித்தல்.

1713. உற்றெஸ்ட் உடன்படிக்கை.

1714. வட அமெரிக்காவிலும் இந்தியாவிலும் பிரெஞ்சுக்காரருக்கும் பிரித்தானியருக்குமிடையில் போர்.

1748. ஏய்லாசெப்பெல் உடன்படிக்கை.

1751. கிளைவ் ஆர்க்காட்டைப் பிடித்தல்.

1755. டுகுஸ்னே கோட்டையைப் பிடிக்கத் தவறுதல்.

---

*வாறன் ஹேஸ்டிங்ஸ் இங்கிலாந்துக்குத் திரும்பியதும், பிரித்தானியப் பிரபுக்கள் சபையில் அவன் எழு வருடமாக விசாரணை செய்யப்பட்டு ஈற்றில் விடுதலை செய்யப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1756. ஏழாண்டு யுத்தத்தின் ஆரம்பம்.
1757. பிளாசி யுத்தத்தில் கிளைவ் வெற்றி பெறல்.
1759. கியூபெக் பிடிபடல்.
1761. புதுச்சேரி பிடிக்கப்படல்.
1763. பாரிஸ் உடன்படிக்கை.
1776. அமெரிக்க சுதந்திர தினம்.
1781. யோர்க் டவுனில் பிரித்தானியர் தோல்வியுறல்.
1783. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை.
1784. வில்லியம் பிற்றின் இந்திய அரசியல் மசோதா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினான்காம் அத்தியாயம்

## மத்திய ஐரோப்பாவும் கிழக்கு ஐரோப்பாவும்

### I. புதுயுக ஆரம்பத்தில் கிழக்கு ஐரோப்பாவின் நிலைமை

இக்காலத்தில் மத்திய ஐரோப்பாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் ஆதிக்கம் பெற்ற இரு வல்லரசுகள் ஜெர்மனியும் ருஷ்யாவுமேயாகும். 16-ம் நூற்றுண்டில் இவ்விரு தேசங்களும் இத்தகைய ஆதிக்கம் பெறுமென ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. இக்கால ஜெர்மனி, பரிசுத்த ரோம ராச்சியத்தின் ஒரு சிறிய தேசமாயிருந்த பிரஷ்யாவிலிருந்தே இத்தகைய உயர்நிலைக்கும் ஒற்றுமைக்கும் வந்தது. ருஷ்யா நாகரிகமற்ற ஒரு தேசமாயிருந்தது. 15-ம் நூற்றுண்டிலேயே தார்ட்டார் என்ற கொள்ளைக்கூட்டத்தாரின் தொல்லையிலிருந்து அது விடுதலை பெற்றிருந்தது.

மத்திய ஐரோப்பாவில் பரிசுத்த ரோம சக்கரவர்த்தியின் கீழடங்கியவெனக் கருதப்பட்ட பெருந்தொகையான ஜெர்மனிய சமஸ்தானங்களிருந்தன. இந்நூலில் விவரிக்கப்பட்ட மூன்று நூற்றுண்டுகளிலும் இந்த ரோம சக்கரவர்த்திகள் பெரும்பாலும் ஹப்ஸ்பேர்க் வமிசத்திலிருந்து வந்தவர்களாகவே காணப்பட்டனர். இவர்கள் ஆஸ்திரிய ராச்சியத்திலேயே அதிக செல்வாக்குடையவர்களாயிருந்தார்கள். ஜெர்மனிய சமஸ்தானங்கட்குக் கிழக்கே சிலேவியர் என்ற சாதியாரின் பல தேசங்களும், போலந்து, பொஹீமியா, ருஷ்யா ஆகிய தேசங்களும், மட்கியார் என்ற சாதியாரின் ராச்சியமாகிய ஹங்கேரியுமிருந்தன. பொஹீமியாவும் ஹங்கேரியும் ஹப்ஸ்பேர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வமிசத்தவர் கையில் சிக்கின. ஒரு காலத்தில் ஒரு வல்லரசாயிருந்த போலந்து, அங்குள்ள பிரபுக்களின் குழப்பங்களால் பலவீனமுற்றது. மத்திய காலம் முழுவதும் ஜெர்மனியர் சிலேவியருடன் ஓயாமல் சண்டை செய்து அவர்களை கிழக்கே மேலும் மேலும் கலைத்து விட்டார்கள். முதலில் சிலேவியர் சமயமில்லாத மிலேச்சராயிருந்தார்கள். பின்னர் ரோமன் கத்தோலிக்க குருமாரின் முயற்சியால் போலந்தும் பொஹீமியாவும் கிறிஸ்து சமயத்தைத் தழுவின. கொன்ஸ்தாந்தினேபிளிலிருந்து வந்த கிரேக்க, வைதீக குருக்கள்மார் ருஷ்யாவையும் கிறிஸ்து சமயத்துக்கு மாற்றினர்.* பால்க்கன் குடாநாட்டிலுள்ள கிறிஸ்தவ சமஸ்தானங்களெல்லாம் துருக்கியரால் கைப்பற்றப்பட்டு 18-ம் நூற்றூண்டின் இறுதிவரை அவர்களால் ஆளப்பட்டு வந்தன. ஹங்கேரி கூட சில காலமாய் துருக்கிய ஆட்சியின்கீழிருந்தது. 17-ம் நூற்றூண்டில் வீயன்னுவைத் துருக்கியர் முற்றுகையிட்டனர். ஆனுல் போலந்து அவர்களை எதிர்த்துச் செய்த கடும்போரினுல் துருக்கியரை அங்கிருந்து துரத்திற்று. ஜோன் சோபிஸ்கி என்ற ஒரு போலிஷ் போர்வீரனே வீயன்னுவைத் துருக்கியர் ஆதிக்கத்திலிருந்து விடுவித்தான்.

## II. வட ஐரோப்பா

டென்மார்க், சுவீடன், நோர்வே என்ற இராச்சியங்கள் மத்திய காலத்தில் சில சமயங்களில் ஒரு ஆட்சியின் கீழ் ஒற்றுமைப்பட்டிருந்தபோதிலும், அடிக்கடி ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக்கொண்டே வந்தன. முப்பதாண்டு யுத்தத்தில் கஸ்தாபஸ் அடோல்பஸ் என்ற சுவீடனின் அரசன் தலையிட்ட பின்னர், 17-ம் நூற்றூண்டில் சுவீடன் மிகவும் செல்வாக்குற்றது. பால்ற்றிக் கடலின்

*ஒரு ருஷ்ய அரசன், தனது பிரசைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்காகத் தனது சேனையைக்கொண்டு அவர்களை ஓர் ஆற்றில் தள்ளுவித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் கரையிலுள்ள சில ஜெர்மன் சமஸ்தானங்களையும், கிழக்குக்கரையிலுள்ள பின்லாந்தையும் சுவீடன் பெற்றது. ஆனால் அடுத்த நூற்றாண்டில் இவையெல்லாவற்றையும் இழக்க நேரிட்டது. 19-ம் 20-ம் நூற்றாண்டுவரையில் தான் இச்சிறு தேசங்கள் தம்மிடையே சமாதானமா யிருப்பதாலேற்படக்கூடிய நன்மையை உணர்ந்தன. உணர்ந்து, சமாதானமும் ஒழுங்கும் நல்ல ஆட்சி முறையும் நடைபெறும் தேசங்களுக்கு இவை எடுத்துக் காட்டாய் விளங்கின.

## III. ஆஸ்திரியாவின் எழுச்சி

ஹப்ஸ்பேர்க் வமிசத்தவரின் ஆட்சியின் கீழ் ஆஸ் திரியா ஐரோப்பாவில் ஒரு பெரிய வல்லசராக விளங்கிற்று. கத்தோலிக்க சமயத்தை நிலைநிறுத்தி, ஐரோப்பாவில் துருக்கியருடைய ஆதிக்கத்தையும் வலிகுறைத்தவர்கள் ஆஸ்திரியரே. இவர்கள் தம்மைப் பரிசுத்த ரோம ராச் சியத்தவரென்று கூறிக்கொண்டபோதிலும், பொஹீமியா வின் நன்மையையும், 17-ம் நூற்றாண்டில் துருக்கியரிட மிருந்து கைப்பற்றப்பட்ட ஹங்கேரியின் நன்மையுமையே யன்றி இவ்வெல்லைக்கு அப்பாற்பட்ட ஜெர்மனியரின் நலங்களைக் கவனித்ததே கிடையாது. ஸ்பானிய சிம்மா சனச் சண்டைக்குப் பின்னர் அவர்கள் ஸ்பானிய நெதர் லந்தைக் கைப்பற்றியபோதிலும், டச்சுக்காரருக்கும் பிரித்தானியருக்குமிடையில் ஏற்பட்ட வியாபாரப் போட்டியின் காரணமாக, புதிய இவ்வெற்றியின் பயனை அனுபவிக்க முடியவில்லை. முப்பதாண்டு யுத்தத்திலும், பின்னர் போலந்து சிம்மாசனச் சண்டை, ஆஸ்திரிய சிம்மாசனச் சண்டை ஆகிய போர்களிலும் பிரெஞ்சுக் காரருடன் ஓயாமல் யுத்தஞ் செய்யவேண்டி ஏற்பட்டது. ஏழாண்டு யுத்தத்தில் அவர்கள் பிரான்சுடன் சேர்ந்து தமது புதிய எதிரியாகிய போலந்துக்கெதிராய் யுத்தம் நடத்தினர். அந்த நூற்றாண்டின் இறுதியில் ருஷ்யாவும் பிரஷ்யாவும் போலந்தைப் பங்கிட்டபொழுது அவ்வநியா யத்தில் ஆஸ்திரியாவுங் கலந்துகொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IV. பிரஷ்யாவின் எழுச்சி

15-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தெற்கேயுள்ள நியூரெம்பர்க் என்னும் நகரத்தை ஒரு ஜெர்மன் பிரபு ஆண்டு வந்தான். வட ஜெர்மனியிலுள்ள பிராண்டன்பர்க் என்னும் இடத்துக்கும் இவனே அரசனானான். இதனால் இவன் பரிசுத்த ரோம சக்கராதிபதியை தேர்ந்தெடுக்கும்பொழுது தனது வாக்குரிமையைப் பிரயோகிக்கக்கூடிய ஓர் உரிமையைப் பெற்றான். இவன் ஹொஹென்ஸொல்லேண் வமிசத்தைச் சேர்ந்தவன். அடுத்த நூற்றாண்டில் பிராண்டன்பர்க்கின் தேர்தற்றலைவன் புரட்டஸ்தாந்து சமயத்தைத் தழுவினான். ஜெர்மனியின் வடகிழக்கு மூலையிலுள்ள ரியூட்டோனிக நைட்பட்டவர்த்தனர்களுக்குரிய பிரஷ்யா என்ற தேசத்தையும் இவன் பெற்றான்.



மகா பிரெடரிக்

இவ்வாறு பிராண்டன்பர்க்—பிரஷ்யாவின் அரசர்கள் முப்பதாண்டு யுத்தத்தில் மேலும் தமது நாடுகளைப் பெருக்கிக்கொண்டார்கள்.

ஆனால் பிரஷ்யாவை உண்மையான பெருநிலைக்குக் கொண்டுவந்தவன் 1640 தொடக்கம் 1670 வரை யாண்ட பிரெடரிக் வில்லியமாகும். இவன் சுவீடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்துச் சேனைகளை வென்று தனியாட்சி நடத்திய பொழுது, தனது நாட்டின் விவசாயத்தையும் கைத்தொழிலையும் பெருக்கினான். பதினாலாம் லூயியின் கொடுங்கோன்மைக்கு ஆற்றாது வெளியேறிய ஆயிரக் கணக்கான பிரெஞ்சு புரட்டஸ்தாந்திய கைவினைஞருக்கு தன்னாட்டில் குடியிருக்க வீடுகளை வழங்கி ஆதரித்தான். இவனுடைய மகனுக்கு அரசன் என்ற பட்டம் வழங்கப் பட்டது. இவனுடைய பேரனான பிரெடரிக் வில்லியம் என்பவன் அற்புதமான ஆற்றல் வாய்ந்தவன். இவன் அங்குமிங்குமாகச் சிதறிக்கிடந்த தனது நாடுகளைப் பாது காப்பதற்கு வலிமையுள்ள ஒரு படையை நிறுவவேண்டு மென நினைத்தான். இவ்விஷயத்தில் அவன் பைத்தியங் கொண்டவனாய், தன் நாட்டின் வருமானம் முழுவதையும் 80,000 போர்வீரர்களைக்கொண்ட ஒரு நிரந்தரப் படை யைத் திரட்டுவதில் செலவுசெய்தான். அரசியல் நிர் வாகத்தையும் திறமையுடையதாக அமைத்தான். எல்லாரோடும் கலந்து பழகுவது இவனிடம் கிடையாது. அன்றியும், இவன் ஒருவித வசீகரமுமில்லாதவனாயிருந் தான். போர்வீரர்களைத் திரட்டுவதே இவனுடைய ஒரே வேலையாயிருந்தது. ஆறு அடிக்கு மேல் உயரமுள்ள ஒரு காவலாளர் படையைத் திரட்டுவதில் ஏராளமான பணத்தைச் செலவுசெய்தான். தனது மகனைப்பற்றி இவன் அதிக நம்பிக்கை வைக்கவில்லை. ஏனெனில், அவன் இலக்கிய ஆராய்ச்சியிலும் இதர கவின்கலைகளிலுமே தனது நேரத்தைக் கழித்து வந்தான். ஆனால் இவன் தனது மகனை அந்நிலையில் விடவில்லை. நல்ல ராணுவத் தேர்ச்சி கொடுத்தான். எனவே, பிரஷ்ய மன்னர்கள் எல்லாரிலும் அவன் சிறந்தவனாக விளங்கினான்.

பிரெடரிக் வில்லியத்தின் மகனான இரண்டாவது பிரெடரிக் பட்டத்துக்கு வந்ததும், தனது தந்தை திரட்டிவைத்த சேனையைப் பயன்படுத்த எண்ணினான். இக்காலத்தில் ஆஸ்திரியாவின் சிம்மாசனத்தில் மரியா திரெஸா என்ற ஒரு பெண் வீற்றிருந்ததை அறிந்த பிரெடரிக், அவளோடு யுத்தஞ் செய்து சைலீஷியா என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது செழிப்பான மாகாணத்தைக் கைப்பற்ற நினைத்தான். இச்சண்டையில் பிரான்சும் ஸ்பானியாவும் பிரெடரிக்கை ஆதரித்தன. பிரஷ்யரை, மரியா திரெஸாவால் கலைக்க முடியவில்லை. 1756-ல் மறுபடியும் யுத்தம் மூண்டது. இம்முறை பிரான்ஸ் ஆஸ்திரியாவுக்குத் துணை செய்தது. சமீபத்தில் பலமுற்ற ருஷ்யாவும் ஆஸ்திரியாவையே ஆதரித்தது. பிரான்ஸை எதிர்க்கும் நோக்கமாக பிரித்தானியா இப்பொழுது பிரெடரிக்கை ஆதரித்தது. பிரெடரிக் பல யுத்தங்களில் சிறந்த வெற்றிபெற்றபோதிலும், ருஷ்யா அவனுடைய நாட்டின் மீது படையெடுத்து பெர்லினைக்கூட கைப்பற்றியது. ஆனால் பிரெடரிக் ஒருவிதமாக விட்டுக்கொடாது நின்று வந்தான். பிரெடரிக்கின் சென்மசத்துருவான ருஷ்ய சக்கரவர்த்தினி எலிஸபேத் இறந்ததும், ருஷ்யா பிரஷ்யரோடு சமாதானஞ் செய்துகொண்டது. அவனுக்குப் படைத்துணை செய்த பிரித்தானியர் பிரான்ஸை மிக மோசமாகத் தோற்கடித்துவிட்டதால், சைலீஸியாவை அவனே வைத்துக்கொள்ளக்கூடியதாயிருந்தது. சேனுபலத்தினாலும், பலாத்கார ஆட்சியினாலும் பிரஷ்யாவின் பெருமை நிலைநாட்டப்பட்டது. பின்னர் பிரெடரிக் ருஷ்யாவுடனும் ஆஸ்திரியாவுடனும் சேர்ந்து போலந்தைப் பங்கு போட்டான். இதுவரை சிதறிக்கிடந்த பிராண்டன்பர்க், பிரஷ்யா, சைலீஸியா ஆகிய தேசங்களை ஒன்றுபடுத்தினான். ஒன்றுக்கொன்று அதிக ஒற்றுமையில்லாத சமஸ்தானங்களின் கூட்டமாகிய ஜெர்மனி என்று வழங்கப்பட்ட தேசத்தில், பிரஷ்யா ஆஸ்திரியாவுடன் ஒத்த வலிமையுடைய ஒரு வல்லரசாய் விளங்கிற்று. ஒரு நூற்றாண்டின் பின்னர் பிரெடரிக்குக்குப் பின் ஆட்சிக்கு வந்தோர் ஆஸ்திரியா நீங்கிய மற்ற சமஸ்தானங்களையெல்லாம் சேனையின் துணைக்கொண்டு ஒற்றுமைப்படுத்தி, அதன் மூலமாகப் பிரஷ்யாவை ஐரோப்பிய வல்லரசுகளில் ஒன்றாகும்படி செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V. ருஷ்யாவின் எழுச்சி

மத்திய காலத்திலிருந்த தார்த்தாரியார் என்ற சாதியாரின் படையெடுப்புக்களுக்குத் தப்பிய மொஸ்கோ என்ற சிற்றரசே ருஷ்ய ராச்சியத்துக்கு அடிப்படையென்று கூறலாம். 16-ம் 17-ம் நூற்றுண்டுகளில்



மகா பீற்றர்

இங்கிருந்த சனங்கள் கருங்கடலுள்ளும் காஸ்பியன் கடலுள்ளும் பாயும் ஆறுகளின் வளம்பொருந்திய பள்ளத்தாக்குகளை நோக்கி தென்கிழக்குப் பக்கமாகப் பிரிந்து குடியேறினர். கிழக்கே அவர்கள் சைபீரியா சமவெளியூடாக வட ஆசியா முழுவதும் பரவி பசிபிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஐரோப்பா—1792-1795
குறிப்புகள்
ஸ்காத்லாந்து
அயர்லாந்து
இங்கிலாந்து
பாரிஸ்
பிரான்ஸ்
சவோய்
கோர்சிக்கா
சார்டினியா
ரோமாபுரி
ஜிப்ரால்டர்

கடற்கரைவரை பரந்திருந்தார்கள். இக்குடியேற்ற வாசிகள் அநேக கஷ்டங்களை அனுபவிக்கவேண்டியிருந்தது. இவர்கள் 'கொஸாக்ஸ்' என்றழைக்கப்பட்டனர்.

ருஷ்ய அரசர்கள் ஸார் என வழங்கப்பட்டனர். (ஸார் என்பது சக்கரவர்த்தி எனப் பொருள் படும்). நிலைகுலைந்த கிழக்கு ரோம ராச்சியத்தின் சமயத்தையே இவர்கள் கைக்கொண்டனர். ஆனால் ருஷ்யா அநேகமாய் ஆசியா மயமாய் இருந்ததேயன்றி ஐரோப்பிய மயமா யிருக்கவில்லை. ஐரோப்பாவின் கடல்களை அணுகுவதற்கு ருஷ்யருக்கு வசதியிருக்கவில்லை. மேலும் அவர் களுடைய பழக்க வழக்கங்கள் கீழைத்தேச பழக்க வழக் கங்களாகவே யிருந்தன. ஆனால் 17-ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஒரு புதிய ருஷ்ய வமிசத்தவர் அரசுகட்டி லேறினர். இவர்களே ரோமனேப்ஸ் எனப்படுவோர். முதலாவது ரோமனேபின் பேரனுன மகா பீற்றர் என்பவன் ருஷ்யாவில் பல மாறுதல்களைக் கொண்டு வந்தான்.

இவன் ஆட்சிகாலம் 1696 தொடக்கம் 1725 வரை. ருஷ்யாவை மேல்நாட்டு மயமாக்கவேண்டுமெனவும், ஐரோப்பிய கடல்களை ருஷ்யர் அணுகவேண்டுமெனவும் இவன் எண்ணினன். மேல்நாடுகள் பலவற்றுக்குச் சென்று தன் கண்ணுர விஷயங்களைப் பார்த்தான். பல கைத்தொழில்களைக்கூடக் கற்றுன். தன்னுடு திரும்பிய தும் தனது காவற்படையில் உண்டான குழப்பத்தை அடக்கப் பல பயங்கரமான தண்டனைகளை விதித்தான். அதன் பின்னர் சில கட்டளைச் சட்டங்களைப் பிரசுரித்தான். இவற்றின் நோக்கம் தன்னுட்டவரை மேல்நாட்டு மயமாக்குவதாகும். பிரஷ்ய சேனையைப்போல 80,000த் துக்கு மேற்பட்ட போர்வீரர்களைக்கொண்ட ஒரு சேனையை நிறுவினன். கப்பல்களைக் கட்டுவித்தான். புராதனமான உடைகளை உடுத்து நீண்ட தாடிகளை வளர்த்து வந்த தனது பிரபுக்களை, ஐரோப்பிய உடைகளை அணியுமாறும், தாடிகளைச் சவரஞ் செய்துவிடுமாறும் உத்தரவிட்டான். சில சமயங்களில் தானுகவே அவர்களுடைய தாடிகளைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவரஞ் செய்ததுமுண்டு! பிரபுக்களின் பெண்களை வெளியே வந்து பொதுசனசமூக வாழ்வில் ஈடுபடும்படி செய்தான். அரசியலிலும் சமயத்துறையிலும் சர்வாதிகாரமுள்ள ஒரு முடியாட்சியை நிறுவினன். அந்நியர்கள், தனது தேசத்துள் நுழைந்து ருஷ்யருக்குப் புதிய கைத்தொழில்கள் கற்றுக்கொடுப்பதை அவன் ஊக்கப்படுத்தினன். சுவீடன் தேசத்தரசனும் சிறந்த போர்வீரனுமாகிய பன்னிரண்டாவது சாள்சைத் தனது புதிய சேனையின் துணையால் வென்று பால்ற்றிக் கடலுக்குள் நுழைவதற்கு வழிகண்டான். இக்கடலுள் விழும் நீவா என்ற ஆற்றங்கரையில் செயின்ற் பிட்டஸ்பார்க் என்ற ஒரு புதிய நகரத்தைக் கட்டினன். மொஸ்கோவைவிட இதுவே ருஷ்யாவின் தலைநகராக வெகு சமீபகாலம்வரை இருந்து வந்தது. இவன் துருக்கியரை ஒருபுறமாகத் தாக்கி, கருங்கடலை நோக்கியும் ஓரளவுக்கு முன்னேறிச் சென்றான்.

பீற்றர் பலவிதத்தாலும் அரசலட்சணம் வாய்ந்தவனுயிருந்தபோதிலும், மிகக் கொடிய அநாகரிகமான சில முறைகளைக் கையாண்டான். ஆயினும், அவனது முயற்சியாலேயே ருஷ்யா நாகரிகமுடைய ஒரு ஐரோப்பிய வல்லரசாக விளங்கிற்று. இவ்வளர்ச்சி 18-ம் நூற்றாண்டில் படிப்படியாக முன்னேற்றமடைந்தது. 1762-ல் இரண்டாவது கதரைன் என்ற ஒரு அரசி சிங்காசனமேறினள். அவளது ஆட்சியில் ருஷ்யா துரிதமாக முன்னேறிற்று. அவள் துருக்கியரை வலிதொலைத்து கருங்கடலின் வடகரையின் பெரும்பாகத்தைக் கைப்பற்றினள். கல்வி, கைத்தொழில் ஆகியவற்றை விருத்தி செய்ய ஒல்லும் வகையில் முயற்சிசெய்தாள். போலந்து பங்கிடப்பட்டபொழுது இவளே பெரும்பாகத்தைப் பெற்றாள். போலந்தின் வலிமையற்ற, பாதுகாப்பில்லாத நிலையைக் கண்டு, அதைப் பயன்படுத்தி, இலாபம் பெற நிச்சய புத்தியோடு முயன்றவள் இவளே. 1795-ல் இவள் இறந்தபொழுது போலந்து தனது சுதந்தரத்தையிழந்தது. ருஷ்யா ஐரோப்பாவில் மிக வலிமையுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ராச்சியமாய் விளங்கியதுமல்லாமல், ஐரோப்பாவின் ஏனைய பாகங்களையெல்லாம் வென்று பிரான்சுடன் இணைத்த நெப்போலியனோடு சமர்செய்து அவனையுந் தோற்கடித்தது.

## முக்கியமான ஆண்டுகள்

1562. மோஹாக்ஸில் துருக்கியர் ஹங்கேரியரைத் தோற்கடித்தனர்.

1640. மகா எலெக்ரர் அரசுகட்டிலேறல்.

1696. மகா பீற்றர் அரசுகட்டிலேறல்.

1709. புல்டாவாவில் சுவீடியரை பீற்றர் வெற்றி பெறல்.

1740. மகா பிரெடரிக் சிங்காசனமேறல்.

1756. இரண்டாவது சைலீசிய யுத்தம்.

1762. மகா கதரைன் சிங்காசனமேறல்.

1795. போலந்து கடைசியாகப் பங்குபோடப்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினைந்தாம் அத்தியாயம்

## 1714-ம் ஆண்டு தொடக்கம் 1795 வரை பிரித்தானியாவின் நிலைமை

### 1. விக் கட்சியாரின் ஆட்சி

முதலாவது ஜோர்ஜ் மன்னரைச் சிங்காசனத்தில் வைத்தது விக் கட்சியே. அடுத்த அரை நூற்றுண்டாக இங்கிலாந்தில் விக் கட்சியாரின் ஆட்சியே நடைபெற்றது. டோரிக் கட்சி பலங்குன்றியது. இவர்களில் அதிதீவிரமான போக்கையுடைய ஜாகோபைட்ஸ்* என்றழைக்கப்படும் ஒரு கட்சியினர், நாடு கடத்தப்பட்ட ஸ்டுவட் வம்சத்தவரை மறுபடியும் சிங்காசனத்துக்குக் கொண்டுவருவதற்கு ஓயாமல் சதிசெய்து வந்தார்கள். 1715-ல் இரண்டாவது ஜேம்ஸின் மகன் ஸ்கொட்லாந்தில் வந்திறங்கினன். 1745-ல் அவனது பேரனுன சாளி இளவரசனும் அவ்வாறு செய்தான். முதலாவது குழப்பம் ஒரு பயனுமுதவவில்லை. இரண்டாவது குழப்பம் ஓரளவுக்குச் சித்தியெய்தியபோதிலும் ஈற்றில் தோல்வியாகவே முடிந்தது. சாள்ஸ் எட்வர்ட் என்ற இளவரசன் ஸ்கொட்லாந்து மலைவாசிகள் சிலரைத் திரட்டி, ஒரு சேனையை உருப்படுத்தி, இங்கிலாந்துள் டெர்பி நகரம் வரை படையெடுத்துச் சென்றுன். ஆனல் தேசத்தில் இவனுக்கு ஆதரவு குன்றவே இம்முயற்சி ஆபத்தில் முடிந்தது.

விக் கட்சியில் பெரிய நிலச்சுவான்களும், பணம் படைத்த பெரிய வியாபாரிகளுமிருந்தனர். இவர்

*ஜேம்ஸ் என்ற சொல்லுக்கு லத்தீனில் 'ஜாகோபைட்ஸ்' என்பது தற்பவம். ஜேம்ஸை அனுசரிப்போர் எனபது பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு தேர்தல்களில் அதிக செல்வாக்கிருந்தது. சமாதானத்தை நிலைநிறுத்திய விக் ஆட்சியில் சனங்கள் சந்தோஷத்தோடு சீவியம் நடத்தினர். இங்கிலாந்தும் ஸ்கொட்லாந்தும் வளமுற்று வந்தன. பத்துப் பேரில் ஒருவருக்கே தேர்தலில் வாக்குக் கிடைத்தது. இவர்களில் பலர் தமது பிரபுக்கள் சொல்லியபடி வாக்குக் கொடுக்கவும், சிலவேளைகளில் தமது வாக்கைப் பணத்துக்கு விற்கவுந் தயாராயிருந்தனர். ஒரு சிறிய கட்சியைச் சேர்ந்த நிலச்சுவான்களாகிய இந்த விக் கட்சிப் பிரபுக்கள், தாம் நினைத்தபடி ஆட்சியை நடத்தினார்கள். அரசனுக்கு ஒருவித அதிகாரமுமிருக்கவில்லை. அரசியல் திட்டத்தில் விதித்திருக்கும் முறைப்படி ஆட்சி செய்வதோடு அவன் திருப்தியடைந்தான். பிரபுக்கள் சபையிலிருந்தோ பொதுமக்கள் சபையிலிருந்தோ தேர்ந்தெடுக்கப்பட்ட சில மந்திரிகளே 'கபினெட்' எனப்படும் மந்திரசபை என்ற பெயரோடு அரசாங்க அலுவல்களையெல்லாம் செய்தனர். மந்திரசபைத் தலைவர் பிரதம மந்திரி என அழைக்கப்பட்டார். இவரே ஏனைய மந்திரிகளையுந் தெரிவு செய்வார். 1721-ம் ஆண்டு தொடக்கம் 1742-ம் ஆண்டு வரை சேர் ரொபேட் வால்ப்போல் என்பவர் மந்திரசபைக் கூட்டங்களில் தலைமைவகித்து வந்தார். பிரதம மந்திரி என்ற பதவியை உண்டாக்கியவர் இவர் என்றே கூறலாம். பொதுமக்கள் சபையில் பெரும்பாலோர் பிரதம மந்திரியின் கொள்கைகளுக்கு மாறாக இருந்தால், அவர் தமது பதவியைத் தாமாகவே விட்டு விலகிவிடுவார். இதுவரை பிரதம மந்திரிகளும் மந்திரசபையும் இக்கொள்கையையே அனுசரித்து வருகின்றன. கைலஞ்சம் வழங்கியும், பாராளுமன்ற அங்கத்தினருக்கு உயர் பதவிகளை வழங்கியும், சேர் ரொபேட் வால்ப்போல் தமது பதவியை நிலைநிறுத்தி வந்தார். பிரித்தானியாவில் முக்கியமாக வர்த்தக வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஸ்பானியரோடும் பிரெஞ்சுக்காரரோடும் வியாபார சம்பந்தமான யுத்தஞ் செய்யப் புறப்பட்டதே வால்ப்போலின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது. வால்ப்போல் பிரித்தானியாவை யுத்தத்திலீடுபட விடாமல் புத்தியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி நடத்தி வந்ததுமல்லாமல், நாட்டின் பண விஷயங்களிலும் பல மாற்றங்களை உண்டுபண்ணியதால் நாடு செழிப்புற்றது. வால்ப்போலுக்குப் பின் வந்த மந்திரிகள் அவரைப்போல் அதி திறமையில்லாதிருந்தபடியால் 1756-ல் ஏழாண்டு யுத்தம் நடைபெற்றபொழுது ஆரம்பத்தில் அலுவல்களை மிகக் கேவலமாக நடத்தினார்கள். ஆனால் சதாம் பிரபுவான வில்லியம் பிற் என்னும் ஒரு ராஜ தந்திரியின் திறமையால் நிலைமை சீரடைந்தது. இவர் மிகத் திறமையுடைய யுத்து மந்திரியாக விளங்கினார். இவருடைய முயற்சியினாலேயே அந்தப் போரில் பிரித்தானியர் பெரும் வெற்றிகளையெல்லாம் பெறக் கூடியதாயிருந்தது.

## 11. விக் கட்சியின் வீழ்ச்சி

இந்த யுத்தம் முடிவதற்குள் மூன்றாவது ஜோர்ஜ் சிங்காசனமேறினான். இவன் தன்னுடைய மூதாதைகளான முதலாம், இரண்டாம் ஜோர்ஜ் அரசர்களைப் போலல்லாது இங்கிலாந்திலேயே பிறந்து, வளர்ந்து வந்தபடியால் அங்கிலேயரை ஆட்சி செய்யும் விஷயத்தில் அதிக ஊக்கமுஞ் சிரத்தையும் எடுத்து வந்தான். இவனை எதிர்த்த விக் கட்சியார் எவ்வாறு பிசகான முறைகளைக் கையாண்டு ஆதிக்கஞ் செலுத்தினார்களோ அதே முறைகளை அவனும் அனுட்டித்து, நீண்ட காலம் கஷ்டப்பட்ட பின், பாராளுமன்றத்தில் தன்னை ஆதரித்து வந்தவரான நோர்த் பிரபுவை பிரதம மந்திரியாக்கினார். டோரிக் கட்சியினர் பலர் தமது ஜாகோபைட் கொள்கைகளை விடுத்து இவனையே ஆதரித்தார்கள். தான் நினைத்ததைச் செய்யக்கூடிய மந்திரசபையொன்றையும் நிறுவினான். ஆனால் அமெரிக்க சுதந்தரப் போரில் இவனது மந்திரிகள் விஷயங்களை மிக மோசமாக நடத்தியதால், இவன் தனது எண்ணங்களை நிறைவேற்ற முடியாமற் போய்விட்டது. நோர்த் பிரபு தமது பதவியை ராஜினாமாச் செய்தார். விக் கட்சியார் மறுபடியும் ஆதிக்கம் பெற்றனர். ஆனால் அவர்களுடைய ஆட்சியும் அதிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் நிலைக்கவில்லை. சதாம் பிரபுவின் மகனுன வில்லியம் பிற் என்பவரை ஜோர்ஜ் பிரதம மந்திரியாக்கினுன். பிற் தன்னை டோரிக் கட்சியினன் என்று சொல்லிக்கொண்டபோதிலும், நோர்த் பிரபுவைப்போல் அரசனுடைய விருப்பத்தின்படி எல்லா அலுவல்களையும் நடத்தவில்லை. பிற், தான் நினைத்தபடியே நாட்டை ஆட்சி செய்தார். இவருடைய ஆட்சி ஏறக்குறைய விக் கட்சியாரின் ஆட்சியைப்போலிருந்தபோதிலும், நாட்டில் முறைகேடான ஒழுக்கங்கள் குன்றின. புதிய சட்டங்கள் அநேகஞ் செய்யப்பட்டன. அரசனுக்கு இக்காலங்களில் இடையிடையே மூளைப் பிசகேற்பட்டு வந்ததால், அரசியல் விஷயங்களெல்லாவற்றையும் பிற்றே நடத்தி வந்தார். சமாதான காலங்களில் ஒரு மந்திரி செய்யக்கூடிய சீர்திருத்த வேலைகளையெல்லாம் பிற் திறமையாகச் செய்தார். வியாபாரத்தை விருத்தி செய்யப் பெரு முயற்சியெடுத்தார். கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தார் இந்தியாவில் கைப்பற்றி ஆண்ட தேசங்களின் அரசியல் நிர்வாகத்தை 1784-ல் சீர்திருத்தியமைத்தார். இதன் பயனுக அவ்விஷயங்களில் பிரித்தானிய அரசாங்கமும் மேற்பார்வை செய்யக்கூடியதாயிருந்தது. பிரித்தானிய வியாபாரிகள் பிற்றை ஆதரித்தார்கள். 1789-ல் மகா பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்டது. மூன்று வருடங்களின் பின் 23 வருடங்கள்வரை நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சி யுத்தத்தில் பிரித்தானியாவும் ஈடுபடவேண்டியதாயிற்று. யுத்த மந்திரி என்ற முறையில் பிற் தமது தந்தையாரைப் போல அதிக திறமை காட்டவில்லை.

இதுகாறும் பிரபுக்கள் சபையின் அங்கத்தினர் சிலரது ஆதிக்கத்திலேயே அரசாட்சி நடந்துவந்தபோதிலும் அரசியல் முறை பாராளுமன்ற முறையாகவேயிருந்தது. வரி முதலியவை ஏற்படுத்தும் விஷயங்கள் ஆதியவையெல்லாம் பொதுமக்கள் சபையிலேயே நடைபெற்று வந்தன.* பொதுமக்கள் சபையின் பெரும்பாலோரது

*பிரித்தானிய பாராளுமன்றம் பொதுமக்கள் சபை, பிரபுக்கள் சபை என இரு பிரிவினையுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவு கிடைத்தால்தான் மந்திரிசபை நிலைநிற்க முடியும். ஆனால் விக் கட்சியினர் தம்முள் ஒற்றுமையாய் இருக்கும் வரை பெரும்பாலோரது ஆதரவைப் பெறக்கூடியதா யிருந்தது. ஆனால் அடுத்த நூற்றாண்டில் மத்திய வகுப்புச் சனங்களும் தொழிலாளரும், தேர்தலில் தங்கட்கும் பங்கு கொடுக்குமாறு கிளர்ச்சி செய்து வாக்குரிமை பெற்றுக்கொண்டதும் பிரபுகளின் ஆதிக்கம் மெல்ல மெல்லக் குறைந்தது. இவ்வாறு அரசியல் முறையில் எவ்வித மாற்றமுமின்றியே பிரித்தானியாவில் ஜனநாயக ஆட்சி வேரூன்றிற்று.

## III. பொருளாதாரப் புரட்சியும் செல்வச் செழிப்பும்

பதினெட்டாம் நூற்றாண்டில் இரண்டு முக்கியமான விஷயங்களை பிரித்தானியாவில் நாம் கவனிக்கவேண்டி யிருக்கிறது. அவற்றுள் முதலாவது, பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சி (பதினான்காம் அத்தியாயம் பார்க்க). இரண்டாவது, நாட்டின் வியாபாரத்திலும் கைத்தொழிலும் ஏற்பட்ட பிரமிக்கத்தக்க முன்னேற்றம். அமெரிக்காவின் பெரும்பாகத்தை பிரித்தானியர் இழந்தபோதிலும், அதே காலத்தில் கப்ரின் ஜேம்ஸ் குக் என்பார் ஆஸ்திரேலியா என்ற புதிய கண்டத்தையும், அதைச் சுற்றிப் பல தீவுகளையும் கண்டுபிடித்தார். இவற்றின் பெரும்பாகம் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. பிரித்தானிய பொருட்களுக்கு உலகமெங்கும் வியாபாரத்தலங்கள் கண்டுபிடிக்கப்பட்டமையால் பிரித்தானிய கைத்தொழிற் பொருட்களும் விசேஷமாகச் சீலை நெசவும் மிக விருத்தியடைந்தன.

இந்நூற்றாண்டில் விவசாய முறைகளில் பெரிய மாற்றங்கள் செய்யப்பட்டன. பெரிய நிலச்சுவான்கள் தம் நிலங்களைத் திருத்துவதற்கு எடுத்துக்கொண்ட சலியா ஊக்கத்தினால், தங்கீழ் வேலைசெய்த விவசாயிகள் இப்புதிய முறைகளைக் கையாளச் செய்தார்கள். ‘டெர்னிப்ஸ்’

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற கிழங்குவகைகளும் பயிர்செய்து பரப்பப் பட்டன. புற்செய்கையினுல் கால்நடைகட்கு குளிர் காலங்களில் உணவளிக்கக்கூடியதாயிருந்ததுடன், நிலத் துக்கு ஓய்வுகொடுக்கவும் வசதியேற்பட்டது. அன்றியும், பேக்வெல் என்பவர் மாடு, ஆடுகட்குச் சாஸ்திரரீதியாக உணவு கொடுத்து நல்ல இனக் கால்நடைகளை விருத்தி செய்தார். உழுதல், விதைத்தல், நீர்ப் பாய்ச்சல் ஆகியவற்றில் புதிய முறைகள் கையாளப் பட்டன. இதன் பயனுக செய்கையற்று வெறுந்தரை யாய்க்கிடந்த பெரிய நிலப்பரப்புக்கள் கமச்செய்கைக் கேற்ற நிலங்களாக்கப்பட்டன. தானியமும் இறைச்சி யும் முன்னையிலும் அதிகமாகப் பெருகவே, நிலப்பிரபுக் களும் கமக்காரரும் செல்வந்தராயினர். ஆனுல் சொற்ப நிலமுடையவர்கள், புதிய இம்முறைகளைக் கையாள முடியாதபடியால் மிகக் கஷ்டப்படவேண்டியதாயிற்று. வெறுந்தரைகளில் தமது கால்நடைகளை மேய்த்து வந்த இவர்கள் இப்பொழுது அவ்வுரிமையை இழந்து, தமது சிறிய நிலங்களையும் விட்டு கூலிக்காரராக வேலை செய்ய வேண்டி ஏற்பட்டது. இந்நூற்றுண்டின் இறுதியில் இவர்களுடைய நிலைமை மிக மோசமாயிற்று.

ஸ்பானிய அரசனின் துன்புறுத்துகளுக் காற்றுது பிளாண்டேர்ஸிலிருந்து இங்கிலாந்துக்குத் தப்பி ஓடிய புரட்டஸ்தாந்திய நெசவுக்காரரின் முயற்சியால், எலிஸ பெத் ராணி காலத்தில் இங்கிலாந்தின் புராதன கைத் தொழிலாகிய நெசவுத்தொழில் பெரிதும் முன்னேற்ற மடைந்தது. பருத்தி நூற் புடவைத்தொழில் உட்பட அநேக புதிய கைத்தொழில்கள் அடுத்த நூற்றுண்டில் ஆரம்பிக்கப்பட்டன. 18-ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஜவுளித்தொழில் அதிசயிக்கத்தக்கவிதமாக முன்னேற்ற மடைந்தது. பல புதிய நெசவு யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மிகக் குறைந்த செலவில் பெருந்தொகையான துணியை நெசவுசெய்தார்கள். இந்நூற்றுண்டின் ஆரம்பத்தில் நீராவியைக்கொண்டு இயந்திரங்களை இயக்கலாமென அறிந்தார்கள். ஜேம்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவாட் என்பவர் நீராவியினால் இயக்கக்கூடிய ஒரு யந்திரத்தைக் கண்டுபிடித்தார். முன்னர் நீர்வீழ்ச்சியின் வேகத்தால் இயக்கப்பட்ட இயந்திரங்களை இதன் பின்னர் நீராவி யந்திரங்களால் இயக்கினர். பின்னிட்ட காலத்தில் வேறு பலவகையான கைத்தொழில்களுக்கும் நீராவி யந்திரங்கள் உபயோகிக்கப்பட்டன. இதனால் கைத்தொழில் முறைகளில் பல மாற்றங்களேற்பட்டன. 19-ம் நூற்றாண்டுச் சரித்திரங் கற்போருக்கே இதன் விபரங்களவசியம். ஆனால் கைத்தொழிலில் ஏற்பட்ட இம்மாற்றங்கள் 18-ம் நூற்றாண்டிலேயே ஆரம்பமாயின. இம்மாற்றங்களைச் சரித்திரக்காரர் கைத்தொழிற் புரட்சி அல்லது பொருளாதாரப் புரட்சி என்று வழங்குவர். நிலக்கரி, இரும்பு ஆகியவற்றின் உதவியால் நீராவி யந்திரங்கள் செய்யப்பட்டன. 16-ம் நூற்றாண்டு தொடக்கம் நிலக்கரி ஏராளமாக அகழ்ந்தெடுக்கப்பட்டது. 18-ம் நூற்றாண்டில் நிலக்கரியை உபயோகித்து இரும்பை நல்ல முறையில் உருக்கி எடுக்கக் கூடியதாயுமேற்பட்டது.

பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளில் வேறு பலவகையான கைத்தொழில்களும் விருத்தியடைந்தன. 18-ம் நூற்றாண்டில் போக்குவரத்துச் சாதனங்களும் மிக முன்னேற்றமடைந்தன. கால்வாய்கள் கட்டப்பட்டன. வீதிகள் திருத்தியமைக்கப்பட்டன. இம்மாற்றங்களைப் பிரித்தானியரே முதலாகச் செய்துகாட்டி, கைத்தொழில் வர்த்தகங்களில் முக்கியம் பெற்ற நாட்டினராய் விளங்கினர்.

## முக்கியமான ஆண்டுகள்

1714. முதலாவது ஜோர்ஜ் (ஹனோவரைச் சேர்ந்தவன்) சிம்மாசனமேறுதல்.

1721. சேர் ரொபேட் வால்ப்போல் 'பிரதம மந்திரி'யாதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1739. ஸ்பானியாவுடன் சண்டை (ஜென்கினது காது சம்பந்தமான யுத்தம்).

1757. பெரிய பிற் மந்திரியாதல்.

1760. மூன்றும் ஜோர்ஜ் சிம்மாசனமேறல்.

1784. இளைய பிற் முதல் மந்திரியாதல்.

1792. புரட்சியிலீடுபட்ட பிரான்சுடன் யுத்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினாறும் அத்தியாயம்

## சாத்திர அறிவிலும் எண்ணப்பாங்கிலும் ஏற்பட்ட மாற்றமும், பிரெஞ்சு அரசியல் புரட்சியும்

### 1. சாத்திர அறிவின் வளர்ச்சி

சாத்திர அறிவும் மக்களின் எண்ணப்பாங்கும் சிறிது சிறிதாக வளர்ந்து வந்ததின் பயனாகவே பிரித்தானியரின் கைத்தொழில்களிலும், ஏனைய நாட்டவரின் கைத்தொழில்களிலும் இத்தகைய மாற்றங்கள் ஏற்படக்கூடியன வாயிருந்தன. ஐரோப்பிய சமூகத்தவர் திருந்திய நாகரிக முடையவராயினர். நாகரிகத்தில் எவ்வளவு சிறந்த போதிலும், அரசரும் அரசாங்கங்களும் போர்செய்யும் அநாகரிகமான முறையை நிறுத்தவில்லை. போர்செய்து பிணக்குகளைத் தீர்ப்பதென்பது மிகவும் அநாகரிகமான முறையாயிருந்தபோதிலும், இற்றை நாளிற்கூட அவ் வழக்கம் ஒழிந்தபாடில்லை. சமுதாயங்களில் நாளுக்கு நாள் அநாகரிக வழக்கங்கள் குறைந்து மனிதத் தன்மை பெருகிற்று. தினசரி வாழ்க்கையில் புதிதாய்ப் பல சௌகரியங்களேற்படுத்தப்பட்டன. தேநீர், காப்பி, புகையிலை முதலியன உபயோகித்தல், நல்ல தளவாடங் களோடு வீடுகளமைத்தல், உலோகம், மரம் என்பவற்று லாகிய பாத்திரங்களுக்குப் பதிலாகப் பீங்கான் கோப்பை கள் பாவித்தல், நல்ல வீதிகளமைத்தல் முதலிய சௌகரி யங்கள் நடைமுறை வாழ்க்கையில் புகுத்தப்பட்டன. தொடக்கத்தில் இவ்வித சௌகரியங்களைத் தனவந்தர் களே அனுபவிக்கக்கூடியதாயிருந்தது. நாளடைவில் மத்திய வகுப்பாரிடையும் மற்றையோரிடையிலும் அவை பரவி நிலவின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மூன்று நூற்றாண்டுகளிலும் நவீன விஞ்ஞான சாத்திரம் வளர்ச்சியுற்றது. அத்துறையில் பல புதிய விஷயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பிரான்ஸிஸ் டெஸ்காட்டெஸ் என்றொரு பெரிய கணித நிபுணர் இருந்தார். அவரைப் பின்பற்றி சேர் ஐசாக் நியூட்டன் என்ற ஆங்கிலேயர் வானசாத்திரத்திலும் பௌதிக சாத்திரத்திலும் பெரிய, புது உண்மைகளைக் கண்டறிந்தார். பதார்த்தங்கள் நிலத்தில் ஏன் விழுகின்றன என்பதை விளக்கும் 'கவர்ச்சிச் சக்திப் பிரமாணத்தை' சேர் ஐசாக் நியூட்டன் விளக்கிக் காட்டினூர். வாயுவின் அமுக்கத்தை யறிவதற்குக் கண்டுபிடிக்கப்பட்ட வாயுமானி (பரோமீற்றர்) என்னும் கருவியும், சீதோஷ்ண நிலையை யறிதற்குக் கண்டுபிடிக்கப்பட்ட தாபமானி (தேர்மோமீற்றர்—உஷ்ணமானி) என்னுங் கருவியும் பௌதிக சாத்திர ஆராய்ச்சியின் பயனுக கண்டறியப்பட்டவைகளாம். மின்சார சக்தியின் இயல்புகள் அமெரிக்க தேசத்தவனுகிய பிறுங்கிளின் என்பவனுலும், பற்றறியென்னும் மின்சார அடக்கம் இத்தாலிய தேசத்தினராகிய வொல்று, கல்வாணி என்பவர்களாலும் கண்டுபிடிக்கப்பட்டன. இக்காலத்தில் நிலவிவரும் பௌதிக சாத்திரம் தாபிக்கப்பட்டது. பொயில், பிறீஸ்றலி, கவென்டிஷ் என்ற ஆங்கிலேய விஞ்ஞான சாத்திரிகளும், லவோயிசியர் என்ற பிரான்சிய விஞ்ஞானியும் இரசாயன சாத்திரத்தோடு சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளை நடத்தினர். இவ்விதமாகவே காற்றிலும் தண்ணீரிலும் இன்னின்ன வாயுக்கள் கலந்துள்ளன என்பதும், இரசாயன சாத்திரத்தின் இன்னேரன்ன அடிப்படையான உண்மைகளும் கண்டறியப்பட்டன.

உயிர்களைப்பற்றி விளக்கும் சீவ சாத்திரத்திலும், அதன் கிளையான வைத்திய சாத்திரத்திலும் மிகுந்த முன்னேற்றமேற்பட்டது. ஹாவே என்ற ஆங்கிலேயர் இரத்தோட்டத்தைப்பற்றிக் கண்டறிந்தார். லீயு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்கோக் என்ற ஒல்லாந்தர் (டச்சுக்காரர்) பக்டீரியா* எனப்படும் நுண்ணிய கிருமிகளைப்பற்றியும், ஏனைய பல முக்கியமான விஷயங்களைப்பற்றியும் புது உண்மைகளைக் கண்டுபிடித்தார். சுவிற்சலாந்து வாசியாகிய வொன் ஹாலரும் ஸ்கொத்லாந்து தேசத்தவராகிய ஹன்ரரும் முக்கியமான இரு சத்திர வைத்தியர் ஆவர். அவர்கள் மனித, அங்க நிலையைப்பற்றிய மற்றும் உண்மைகளைக் கண்டறிந்தார்கள். இவர்களது பெருமுயற்சியாலேயே அங்காதிபாதம், உடல், நூல் என்பவற்றின் வளர்ச்சி பெரிதும் விருத்தியடைந்தது. இவ்வாராய்ச்சிகள் வைத்திய பகுதியின் முன்னேற்றத்துக்கு அறிகுறியாய் விளங்கியதோடு மனித வர்க்கத்தின் நோய்களைக் குறைப் பதற்குச் சாதனங்களுமாயின. பிரான்சு தேசத்துப் பவ்வன், சுவீடன் தேசத்து லினுவோஸ்போன்ற மற்றைய விஞ்ஞான சாத்திரிகள் பிராணி சாத்திரத்தையும் தாவர சாத்திரத்தையும் முன்னேற்றத்துக்குக் கொண்டு வந்ததுமன்றி அவற்றைச் சாத்திர ரீதியாகப் படிக்கக் கூடிய முறையில் பாகுபடுத்தியும் விட்டார்கள்.

இங்கு குறிப்பிடப்பட்டோர் விஞ்ஞான சாத்திர ஆராய்ச்சியாளர் குழாத்தில் முக்கிய ஸ்தானம் பெற்ற வர்களில் ஒரு சிலரேயாம். சாத்திரீக சம்பந்தமான ஆராய்ச்சியின் பொருட்டுப் பல கழகங்கள் தோன்றலா யின. அவற்றுள் 1662-ம் ஆண்டில் இரண்டாம் சாள்ஸ் மன்னனின் ஆதரவின் கீழ் லண்டனில் ஏற்பட்ட ரோயல் கழகம் முக்கியமானதாகும். இரண்டாம் சாள்ஸ் மன்னன் மற்றைய அரச குடும்பத்தவரையும் பிரபுக்களையும் போன்று விஞ்ஞான சாத்திரத்தின் பல துறைகளது வளர்ச்சியில் பெரிதும் ஊக்கங்காட்டி நின்றான்.

---

*பக்டீரியா என்பனவை மிக நுண்ணியதான சீவசெந்துக்கள். அவை பூதக்கண்ணாடி மூலம் பார்ப்பினன்றி ஊனக் கண்ணுக்குத் தோற்றா. அவற்றின்மூலம் பல நோய்கள் பரவு கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II. அறிவுத்துறையில் ஏற்பட்ட வேறு சில மாற்றங்கள்

முற்கூறியவாறு அறிவு வளர்ச்சிக்கு ஆதரவளித்தோர் நூல்களையும் ஏட்டுப்பிரதிகளையுந் திரட்டி நூல் நிலையங்களிற் சேமிப்பதிலும், நூல் எழுதுபவர்களை ஊக்கப்படுத்துவதிலும் சிரத்தையெடுத்துக்கொண்டனர். 17-ம் நூற்றாண்டில் மொலியோர் கோர்னேலி, றேசீன் போன்ற பிரான்சிய நாடக ஆசிரியர்களின் நாடகங்களும் வேறு பல பிரான்சிய இலக்கியங்களுந் தோன்றின. அதே காலத்தில் மில்ற்றன் என்ற ஆங்கில மகாகவி அரிய நூல்களை எழுதினர். அவரைப் பின்தொடர்ந்து டிறைடன் போப் போன்ற கவிகளும், அடிசன், ஸ்ரீல் போன்ற கட்டுரை ஆசிரியர்களும், பிறரும் பல நூல்களை எழுதுவராயினர். 18-ம் நூற்றாண்டில் டாக்டர் சாமுவேல் ஜோன்சன் என்பார் பல பிரக்யாதி பெற்ற நூலாசிரியர்களிடையே மிளிர்ந்து விளங்கினர். இங்கிலாந்திலேயே நாவல் என்றழைக்கப்படும் கற்பனைக் கதைகள் இலக்கியமாகத் தோற்றின. அவை இலக்ஷக்கணக்கான வாசகர்களுக்கு இன்பத்தை யளித்தன. 18-ம் நூற்றாண்டில் ஜெர்மனியில் ஹாண்டல், பாச், ஹெயிடன், மொஸாட்போன்ற சங்கீத வித்வான்கள் தோற்றினதுமன்றி, இனிய கானத்தைப் பிறப்பிக்கும் அநேக சங்கீதக் கருவிகளும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டன.

பதினெட்டாம் நூற்றாண்டில் மதவிஷயங்களில் ஊக்கங் குன்றியது. முந்திய நூற்றாண்டுகளில் மதசம்பந்தமான போர்களில் மக்கள் சிந்திய இரத்தம் பொதுமக்களுக்கு வெறுப்பைக் கொடுத்தது. சிலர் கிறிஸ்துமதத்தின் அடிப்படையான கொள்கைகளில் நம்பிக்கையிழந்து வரையறையற்ற ஒரு மதத்தைத் தழுவினர். எனவே, அக்காலத்தில் நிலவிவந்த சமயங்களைத் தாறுமாருய்க் கண்டிப்பதற்கான வழிகோலப்பட்டது. பிரெஞ்சுப் புரட்சிக் காலத்தில் இத்தகைய மதகண்டனம் நடைபெறலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## III. பிரெஞ்சுப் புரட்சியின் ஆரம்பம்

நமது காலமாகிய இப்புதுயுக சரித்திரத்தில் பிரெஞ்சுப் புரட்சி ஒரு முக்கியமான நிகழ்ச்சியெனலாம். 19-ம் நூற்றூண்டுச் சரித்திரத்தைக் கற்போர்க்கே இதன் உண்மையான வரலாற்றை அறியவேண்டியிருக்கும். ஆனல் இப்புரட்சிக்குரிய காரணங்களை முந்திய நூற்றூண்டுகளிலேயே காணலாம்.

புரட்சியென்ருல் மாற்றம், அல்லது கூட்டமாகத் தொடர்ந்து வரும் மாறுதல்கள். சாத்திர அறிவின் முன்னேற்றமும், விஷயங்களை நுண்ணறிவுடன் ஆராயும் விவேக வளர்ச்சியும் அறிவுசம்பந்தமான புரட்சியென்று கூறப்படும். கைத்தொழில், வியாபாரம், விவசாயம் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களை பொருளாதாரப் புரட்சி எனலாம். ஆனல் அரசியலில் புரட்சி எனப் படுவது சண்டைசச்சரவுகளோடு கூடிய குழப்பத்தினு லேற்படும் மாற்றங்களையே குறிக்கும். 1688-ல் இங்கி லாந்தில் நடைபெற்ற அரசியல் புரட்சியில் பெரிய நிலப் பிரபுக்கள் அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றினர். அத் துடன் முடியாட்சிக்கு ஒரு முற்றுப்புள்ளியிடப்பட்டது. பின்னர் பிரபுக்களாட்சியிலிருந்த நாடு சிறிது சிறிதாக சனநாயக ஆட்சியில் முற்றியது (15-ம் அத்தியாயம் பார்க்க). வட அமெரிக்க குடியேற்ற வாசிகள் பிரித் தானியர் ஆட்சியிலிருந்து விலகிக்கொண்டதை 'அமெ ரிக்க புரட்சி' என்று கூறுவர். மற்றவர்களின் தலை யீடின்றி அமெரிக்கர் தமது விஷயங்களைத் தாங்களே தீர்மானிக்க இப்புரட்சி சந்தர்ப்பமளித்ததனுல் ஐக்கிய அமெரிக்கா உலகத்திலேயே பெரிய சனநாயக நாடாக முதிர்ந்தது.

உயர் வகுப்பாரின் விசேஷ உரிமைகளைத் தகர்த் தெறிந்து மக்களெல்லோர்க்கும் சமஅந்தஸ்துக் கொடுக்க வேண்டுமென்பதே பிரெஞ்சுப் புரட்சிக்காரரின் முக்கிய நோக்கமாகும். 'பெர்கோயிஸ்' என்று பிரான்சில் வழங்கப்படும் மத்திய வகுப்பாரே இப்புரட்சியில் அநேக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகக் கலந்தார்கள். இக்காலத்திலே பிரான்சிலும், ஐரோப்பாவின் ஏனைய கண்டங்களிலும், பிரபுக்கள் தமக்கென சகலவிதமான விசேட உரிமைகளையும் சட்ட பூர்வமாகச் செய்துகொண்டார்கள். பிரித்தானியாவில் பிரபுக்களாட்சியே நடைபெற்றபோதிலும் சட்டங்களைப் பொறுத்தவரையில் ஒரு குலத்துக்கொரு நீதி வழங்கப்படவில்லை. பிரான்சில் மத்திய வகுப்பாரே அரசாங்க வேலைகளைச் செய்துவந்தபோதிலும், அரசாங்கத்திலும் திருச்சபைகளிலும் உயர்ந்த சம்பளமுள்ள பெரிய பதவிகளையெல்லாம் பிரபுக்கள் கைப்பற்றினர். ஜெர்மனியிலுள்ளதுபோல் பிரான்சில் குடிகள் அடிமைகளாயில்லாவிட்டாலும், பிரபுக்களுக்குத் தேவையான பண உதவியோ, சரீர சேவையோ எல்லாம் இவர்களே செய்யவேண்டும். மேலும் அரசனுக்கு ஏராளமான வரிகளையும் இறுக்கவேண்டியிருந்தது. இவ்வாறே மத்திய வகுப்பாரும் பெருந்தொகையான வரியைச் செலுத்திவந்தார்கள். ஆனால் பிரபுக்கள்மீது சொற்ப வரியே விதிக்கப்பட்டது.

பதினாலாம் லூயியின் ஆட்சியில் நிகழ்ந்ததுபோல், அரசாங்கம், திறமையாகவும் பழுதில்லாமலும் நடைபெறும்வரையில் சனங்கள் இந்நிலைமையைச் சகித்துக்கொண்டனர். ஆனால் 18-ம் நூற்றாண்டில் அரசியல் திறமையின்றி நடத்தப்பட்டதோடு, பிரான்ஸ் பெருத்த கடனாளியாகியும் விட்டது. சண்டைகளிலெல்லாம் பிரான்ஸ் பிரதானமாக பிரித்தானியாவால் தோற்கடிக்கப்பட்டது. எங்கும் அதிருப்தி ஏற்பட்டது. பெரிய ஆசிரியர்களும் தத்துவ அறிஞரும் அரசாங்கத்தைக் கண்டித்து எழுதினர். இவர்களுடைய நூல்கள் மிகவும் பிரசித்திபெற்று வந்ததால், அரசாங்கம் முன்னையிலும் அபகீர்த்தியடைந்தது. வொல்றெயிர் என்ற ஆசிரியர் அரசாங்கத்தையும் திருச்சபையையும் கேலிசெய்தார். பிரித்தானியாவில் நடைபெறும் அரசியல் முறையை ஆராய்ந்து பிரான்ஸுக்கு ஒரு புதிய அரசியல் முறையை வகுக்கவேண்டுமென மொன்டெஸ்கூ என்பவர் முழங்கினர். மனித வர்க்கத்திடையே எங்கும் உயர்வு, தாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின்றிச் சமத்துவமும் சகோதரத்துவமும் நிலவவேண்டுமென றூஸோ என்பவர் இடித்துரைத்தார். 'சுதந்திரத்தோடு இப்பூமியில் தோன்றிய மனிதன் எங்கும் தலையிடப்பட்டிருக்கிருன்' என அவர் எழுதினர். நாட்டின் அரசாங்கத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் பங்கிருக்கவேண்டுமென அவர் வாதித்தார். இவ்வெண்ணங்கள் மத்திய வகுப்பாரையும், நிதான புத்தியுள்ள பிரபுக்களையுங்கூடச் சிந்திக்கச் செய்தன. சாத்திர அறிவிலும் எண்ணப்பாங்கிலும் ஏற்பட்ட மாற்றங்கள் விஷய ஆராய்ச்சி உடைய எல்லாரையும் 'முன்னேற்'றத்தில் நம்பிக்கை வைக்கச் செய்தன. பழைய நியாயமற்ற உரிமைகளையும் சம்பிரதாயங்களையும் உடைத்தெறிந்து அரசியலிலும் அரசாங்க நிர்வாகத்திலும் நியாயத்தையே மேற்கொள்ளவேண்டுமென இவர்கள் வாதித்தார்கள். இவ்வகையான எண்ணங்கள் அரசர்களைக்கூடச் சிந்திக்கச் செய்தன. ஆஸ்திரிய மன்னனுன இரண்டாவது ஜோசப் சக்கரவர்த்திபோன்றவர்கள்கூட பிரசைகளின் நன்மைக்காகவே ஆட்சி நடத்தவேண்டும், தங்களுடைய ஆடம்பரத்துக்கல்லவென்பதை நன்குணர்ந்து, முன்னையிலும் பார்க்க காருண்யமாக அரசியலை நடத்தினர். இத்தகைய சீர்திருத்த எண்ணங்கள் பிரான்ஸில் அதிக வலுவடைந்திருந்த காலத்தில், 1789-ல் பதினுரும் லூயி மன்னன், தனது அரசாங்கம் பணமுறிவுற்றதை அறிந்து பிரெஞ்சு தேசீயப் பிரதிநிதிகள்சபையான 'ஸ்டேட்ஸ் ஜெனரல்' சபையைக் கட்டினுன். அந்நேரந் தொட்டு சீர்திருத்தங்கள் நாட்டில் அடுத்தடுத்து வந்தன.


மிதவாதிகளின் கையிலிருந்து இச்சீர்திருத்தக் கிளர்ச்சி தீவிரவாதிகளிடத்து எவ்வாறு சென்றதென்பதைப்பற்றியும், நல்லெண்ணமுடைய, பலமற்ற லூயி மன்னனும், அவனது அழகிய ராணியும், எண்ணிறந்த பிரபுக்களும், ஏனையோரும் எவ்வாறு கழுமரத்துக்கிரையாயினர் என்பதைப்பற்றியும், ஐரோப்பா முழுவதும் எவ்வாறு நீண்ட யுத்தத்தில் அமிழ்ந்திருந்ததென்பதைப்பற்றியும், நெப்போலியன் என்ற பெரிய அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பன்னன் பிரான்ஸில் எவ்வாறு ராணுவச் சர்வாதிகார ஆட்சியை நிறுவினுன் என்பதைப்பற்றியும் கூறுவதற்கு இங்கு இடமில்லை. ஆனுல் இப்புரட்சியின் பயனுக பிரான்ஸிலும் ஏனைய நாடுகளிலும் பழைய பிரபுக்களாட்சி ஒழிந்து சனநாயக ஆட்சி தாபிக்கப்பட்டது.


சில ஆண்டுகளின் முன் இச்சனநாயக ஆட்சியைப் பல ஐரோப்பிய தேசங்கள் கைவிட்டு சர்வாதிகார ஆட்சியையே விரும்பின. நாட்டின் நன்மைக்காக எல்லாரும் பணிசெய்யவேண்டுமென்றும், ஆனுல் அரசியல் எவ்வாறு நடத்தப்படவேண்டுமென்பதைப்பற்றி அவர்களுக்கு அபிப்பிராயங் கூற அதிக உரிமையில்லையென்றும் சர்வாதிகார ஆட்சியை விரும்பிஞேர் கூறினர். நாட்டின் மேலான நன்மையைக் குறித்தே சர்வாதிகாரி கட்டளையிடுவார். அக்கட்டளைகளை தட்டாமல் அனுசரிக்க வேண்டியது பிரசைகளின் கடமை. இத்தகைய சர்வாதிகார ஆட்சியே ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளில் நடைபெற்றது. ருஷியாவில் இப்போதும் ஓர்வித சர்வாதிகார ஆட்சி நிலவுகிறது. ஆனுல் சனநாயக ஆட்சியின் தத்துவங்களை முன் அதிகம் அறிந்திராத இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் அவ்வாட்சி கொண்டுவரப்பட்டு இருக்கிறது. சனங்கள் வீண் வாக்குறுதிகளாலும் கைலஞ்சத்திஞலும் எடுபடாமல், தமது வாக்குகளைத் தாம் சரியென நினைப்போருக்கு வழங்கி வருவார்களாஞல் சனநாயக ஆட்சியே சிறந்த ஆட்சியாகும். இல்லையேல் அதுவே மோசமான ஆட்சியாக வரவுங்கூடும். கிராமப்பஞ்சாயத்து விஷயங்களைச் செவ்வனே நிர்வகிக்கச் சனங்கள் பழகிக்கொண்டால் பாராளுமன்றத் தேர்தல்களில் அவர்கள் செவ்வனே கலந்து நேர்மையும் நீதியுமுள்ள பிரதிநிதிகளைத் தேர்ந்தனுப்பக் கூடியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*1780-ல் உலகில் பல பாகங்களிலும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐரோப்பியருக்கிருந்த தேசங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கியமான ஆண்டுகள்

1748. 'சட்டங்களின் தத்துவம்' என்ற நூலை மொண்டெஸ்கூ எழுதினார்.

1762. றூசோ, தமது 'சமூக உடன்படிக்கை' என்ற நூலைப் பிரசுரித்தார்.

1778. வொல்ற்றெயிரின் மரணம்.

1789. பிரெஞ்சுப் புரட்சியின் ஆரம்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினேழாம் அத்தியாயம்

## கண்டி நாட்டரசரும் ஒல்லாந்த தேசாதிபதிகளும்

### 1. இரண்டாம் இராசசிங்கன், ரைகிளப் வான் கோயன்ஸ் மூத்தவன், இரண்டாம் விமலதர்ம சூரியன்

இராசசிங்கனுடைய ஓயாத போர் முறைகளையும் கொடுங்கோன்மையையும் பிரசைகள் வெறுத்தனர். அவன் கரைநாடுகளைத் தன் ஆணையின் கீழ் கொண்டு வரத் தவறியதுமல்லாமல் போர்த்துக்கீசர் கைப்பற்றியிருந்த நாடுகளை ஒல்லாந்தர் பிடிப்பதற்கு உதவியாயுமிருந்தான். அதனால் அவனுடைய செல்வாக்கு மிகவும் குறைந்தது. குடிகள் இதனை 'மிளகாயைக் கொடுத்து இஞ்சியைப் பெற்றுக்கொண்டமாதிரி'* எனக் கூறினர். அவனைக் கொல்வதற்குக்கூடச் சதிசெய்தனர். அதனால் அவன் கண்டியை விட்டு நீங்கித் தெற்கே கலஹா பாதையில் பதினைந்தாம் மைலுக்கண்மையிலுள்ள நிலம்பே என்னுமிடத்தில் அடைக்கலந் தேடினன். 1664-ல் அவன் அங்கேயே தங்கியிருந்த நேரத்தில் பின்னுமோர் முறை அவனைக் கொன்று, அவன் மகனைச் சிம்மாசனத்தேற்றவும் சனங்கள் சதிசெய்தனர். இம்முறை அவன் அங்குராங்கட்டைக்குக் கிழக்கேயிருந்த கலோதா என்ற ஓர் உயர்ந்த மலையிலோடியொழித்தான். கலகம் அடங்கியபோது அங்குராங்கட்டையைத் தனது இராசதானியாக்கி அங்கேயே 1687 வரை மரணபரியந்தம் தங்கியிருந்தான்.

---

*'மிரிஸ் தீலா இங்குறு கத்தவாகே' என்பது சிங்கள வாக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரண்டாவது இராசசிங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசசிங்கன், தன் ஆட்சியின் இறுதிக் காலத்தில் சிறு பிள்ளைத்தனமாக நடந்துவந்தான். தனது நாட்டுக்கு வந்த ஐரோப்பியரை தூதுவராயிருந்தபோதிலும் திரும்பிப்போக அவன் அனுமதிக்கவில்லை. 1660-ல் கொட்டியாரத்திலே வந்திறங்கிய றொபேட் நொக்ஸ் என்பவனைச் சிறைப்படுத்தினான். நொக்ஸ் இலங்கையில் பத்தொன்பது வருடகாலமாய் வசித்துவந்தான். அக்காலத்தில் அவன் கண்டி ராச்சியத்தைப்பற்றி நன் கறிந்துகொண்டான். இலங்கையிலிருந்து தப்பிச்சென்று இங்கிலாந்தையடைந்த பின் 'இலங்கையின் சரித்திரம்' என்னும் ஒரு நூலை எழுதினான். இந்நூலின் மூலமாக நாம் இரண்டாம் இராசசிங்கனைப்பற்றியும், அவனுடைய

---

இரண்டாம் இராசசிங்கனது உடையைப்பற்றி றொபேட் நொக்ஸின் வாணனை:

'அவனுடைய ஆடைகள் மிகவும் நூதனமானவை. அவனது நாட்டினரின் உடை முறையைப் பின்பற்றியதல்ல; அவன் நவமாகக் கண்டுபிடித்த ஒரு முறையைப்பற்றித் தயார் செய்யப்பெற்றது. தலையிலவன் நாலு மூலைப் பட்டமுடைய ஒரு தொப்பி அணிந்துகொள்கிறான். அது யேசுசபைச் சன்னியாசி களுடைய தொப்பியைப்போல இருந்தாலும், அதிலும் பார்க்க மூன்று நிரை உயரமுடையது. தொப்பியின் முற்பக்கத்தில் சிறகுகள் அலங்காரமாகச் செருகப்பட்டிருக்கும். பந்தியில் முன்னுக்கு நிற்கும் குதிரையின் தலையில் செருகப்பட்டிருக்கும் சிறகுகளைப்போல அழகு செய்யும். போர்த்துக்கீசர் அணிந் திருப்பதுபோல் முதுகிலிருந்து ஒரு நீண்ட கச்சை பின்னால் தொங்கிவிடப்பட்டிருக்கும். கழுத்திலிருந்து இடைவரை அணி யப்பட்டிருக்கும் சட்டை நூதனமாக அமைந்திருக்கிறது. அதை என்னால் சரியாக வருணிக்க முடியாது. மத்திய பாகம் ஒரு வர்ணத்திலும், கைகள் இன்னொரு வர்ணத்திலும் அமைந்திருக்கும். கணுக்கால்வரை நீண்ட காற்சட்டையும், கால்மேசும், சப்பாத்தும் அணிந்திருப்பான். எப்பொழுதும் ஒரே பாவனையில் அவன் உடுப்பணிந்துகொள்வதில்லை. மனம் போன போக்கில் அடிக்கடி மாற்றிக்கொள்வான். தோளி லிருந்து வரியப்பட்ட ஒரு கச்சில் அவனுடைய வாள் பக்கத்தே தொங்கிக்கொண்டிருக்கும். அரசனைத்தவிர்ந்த ஏனைய பிரசை கள் அம்மாதிரி வாள் தரித்திருக்கக்கூடாது. வெள்ளைக்காரர் மாத்திரம் அனுமதிக்கப்பட்டனர். வாளின் பிடியும் உறையும் தங்கத்தினால் செய்யப்பட்டிருந்தன. கையில் சாதாரணமாக ஒரு பிரம்பு தாங்கியிருப்பான். அது பல வர்ணமுடையதாய், நுனியில் அவனிடத்திலுள்ள மனதுக்குகந்த பல ரத்தினக் கற்கள் பதித்ததாய், பொன்னினாலாய பூணுடையதாயிருக்கும்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி முறையைப்பற்றியும், இலங்கையில் அப்போது வாழ்ந்த மக்களின் சமுதாய வாழ்க்கை, பொருளாதார நிலைமை முதலியவற்றைப்பற்றியும் நன்கறியக்கூடியதாயிருக்கிறது.

மன்னாரையும் யாழ்ப்பாணத்தையும் பிடித்த ரைகிளப் வான் கோயன்ஸ் என்ற ஒல்லாந்த தேசாதிபதி 1660 தொடக்கம் 1675 வரை இலங்கையில் ஒல்லாந்தர்



ரைகிளப் வான் கோயன்ஸ்

கைப்பட்டிருந்த இடங்களை ஆட்சிசெய்தான். இரண்டு முறை கொஞ்சக் காலத்துக்கு அவன் ஆட்சி நடத்தவில்லை. அவன் தளரா ஊக்கமுடையவன். யுத்த காலத்தில் கடற்கரை யுத்தங்களில் அவன் எவ்வித திறமை காட்டினானோ, அரசியல் நிர்வாகத்திலும் அத்தகைய திறமை காட்டினான். உத்தியோகப் பொறுப்பை அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையேற்றபொழுது, இடைவிடாது நடைபெற்ற யுத்தத்தின் காரணமாயும், போர்த்துக்கீச கொடுங்கோன்மையின் பயனுகவும் சனங்கள் இடுக்கண் நிறைந்தவர்களாய் வாழ்ந்ததைக் கண்டான். அவர்களுடைய பொருளாதார நிலைமையைச் சீர்படுத்த அவன் உடனே நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டான். வன்னிப் பகுதியில் பருத்தியையும், யாழ்ப்பாணக் குடாநாட்டில் புகையிலையையும், ஒல்லாந்த ராட்சிக்குட்பட்டிருந்த எல்லாப் பாகங்களிலும் நெல்லையும் செய்கைபண்ணும்படி சனங்களை ஊக்கப்படுத்தினுன். நீர்ப்பாசனத்துக்குப் புத்துயிரளிக்கும்பொருட்டு கொழும்பினயற் பாகங்களிற் சனங்களாற் கைவிடப்பட்டிருந்த வயல்களில் நெல் செய்கைபண்ணும்பொருட்டும் தஞ்சாவூரிலிருந்து அடிமைகளைக் கொண்டுவந்தான்.

நாட்டிற் கைத்தொழில்களை ஆரம்பித்துச் செல்வநிலையை விருத்தியாக்குவதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் யாவுஞ் செய்தான். பட்டுப் பூச்சி வளர்ப்பதற்கு முயற்சித்தான். யாழ்ப்பாணத்தில் சீலைக்குச் சாயமூட்டுந் தொழிலைத்தொடக்கினுன். நெசவுத் தொழிலை நன்னிலைக்குக் கொண்டுவரும் பொருட்டுத் தென்னிந்தியாவிலிருந்து திறமைமிக்க தொழிலாளரை வரவழைத்தான்.

இலங்கையில் ஒல்லாந்த அரசியல் நிர்வாகத்தைச் சீர்திருத்தும் வேலையையும் அவனே செய்ய நேர்ந்தது. அரசியல் முறையைச் சீர்திருத்தவும், அதன்கண்மலிந்திருந்த ஊழல்களை நிவிர்த்திக்கவும் அவன் கணப்பொழுதேனும் பின்நிற்கவில்லை. காணிகளைப் பதிவுசெய்து கொள்ளுவதைப் புதிதாக ஆரம்பித்து வைத்தான். சனங்களிடமிருந்து கிடைக்கும் வரும்படியையும் இதர சேவைகளையும் வர்த்தக சங்கத்தார் பெறும்படி அதற்கான ஒழுங்கும் செய்தான். போர்த்துக்கீசர் காலத்திலிருந்துவந்த 'முனிசிபல்' நகரசபை ஆட்சிமுறையைக் கொழும்பு, காலி, யாழ்ப்பாணமென்னுமிடங்களிற் சீர்திருத்தியமைத்தான். தம்மிஷ்டப்படி சென்ற போர் வீரரைக் கடுமையான ஒழுங்கு முறைகளை யனுசரிக்கச் செய்ததோடு அவர்களைச் சுறுசுறுப்புள்ளவர்களாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கினன். ஒல்லாந்த வர்த்தகக் கம்பெனியாருடைய வர்த்தகத்தைப் பாதிக்கும் முறையில் நடந்துகொண்ட சோனகருக்கு எதிராகவும், அரசாபிமானமற்ற துப்பாசெஸ் என்ற போர்த்துக்கீச சந்ததியினர்க்கெதிராகவும் நடவடிக்கைகளெடுத்துக்கொண்டான்.

இக்காலத்தில் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தாரும் பிரான்ஸிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தாரும் இலங்கையருடன் வர்த்தகஞ் செய்ய விரும்பினர். இலங்கையில் ஒரு சுயாதீனத் துறைமுகத்தை ஆங்கிலேயர் கைப்பற்ற விரும்பினர். ஆனால் வான் கோயன்ஸ் திருக்கோணமலை, கொட்டியாரம், மட்டக்களப்பு, கற்பிட்டி என்னுமிடங்களில் சேனைகளை நிறுத்தி, இராசசிங்கன் அவர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளாதபடி செய்தான். பிரான்ஸிய தளபதியாகிய டீலாகே என்பவன் 1672-ம் ஆண்டு, மார்ச்சு மாதம் கப்பற்படையுடன் வந்து திருக்கோணமலையில் நங்கூரம் பாய்ச்சி இராசசிங்கனுடன் கடிதப் போக்குவரத்துச் செய்தான். அவனது கப்பற்படையானது இலங்கையை விட்டுச் சென்றதும், வான் கோயன்ஸ் படையுடன் சென்று பிரான்ஸியர் பின் விட்டுச் சென்ற படையுடன் பொருது வெற்றிகொண்டு இலங்கை முழுவதின் வர்த்தகத்தையும் தன் நாட்டினர்க்குப் பெற்றுக் கொடுத்தான்.

கீழைத்தேச அரசர்களுடன் போர் செய்வதை ஒல்லாந்தர் விரும்பவில்லை. வியாபாரத்தின் மூலமாகச் செல்வத்தைப் பெருக்க அவர்கள் வந்தார்களேயன்றிப் போரில் அவர்கள் பணத்தைச் செலவழிக்க வரவில்லை. ஆயின், இராசசிங்கனைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அவனுடைய போரியற்ற வேண்டுமென்ற கொள்கையை வான் கோயன்ஸ் ஆதரித்தான். இராசசிங்கன் கலோதுவாவுக்கு 1664-ல் ஓடித் தப்பியபோது ஒல்லாந்தரின் உதவியைக் கேட்டான். அச்சமயம் வான் கோயன்ஸ் முன்னர் போர்த்துக்கீசராற் கைப்பற்றப்பட்டிருந்த நாலு கோறளையையும் சப்பிரகமுவாவையும் ஒல்லாந்தருக்குரியதான பாகத்துடன் சேர்த்துக்கொண்டான். அரசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபடியும் ஒல்லாந்தருக்குப் பகைவனாய் வந்தபோது, கண்டி நாட்டினர் வியாபாரஞ் செய்துவந்த கொட்டியாரம், கற்பிட்டி, மட்டக்களப்பு முதலாந் துறைகள் மூலம் அவர்கள் வியாபாரஞ் செய்யாதபடி தடுத்து விட்டான். அன்றியும், அறன்தொறு என்னுமிடத்தில் ஒரு கோட்டையைக் கட்டி அவ்வழியால் அவர்கள் செல்லாத படியுந் தடுத்துவிட்டான். பற்றேவியாவிலிருந்த அதிகாரிகள் தடைசெய்திராவிடில், வான் கோயன்ஸ் வல்லவரையுள்ள மேற்குக் கரைநாடுகள் முழுவதையுந் தன்னாட்சியின் கீழ் கொண்டுவந்திருப்பான். ஆனால் அவனுடைய போர்க்கோலத்தை பற்றேவியாவிலிருந்த இராசப்பிரதிநிதி வெறுத்ததினாலே, 1675-ல் மலைநாட்டிலிருந்து ஒரு படையெழுச்சி ஏற்பட்டபோது, 1665-ம் ஆண்டுவரை பிடித்த இடங்களெல்லாவற்றையுந் திருப்பிக்கொடுக்கும் படி வான் கோயன்ஸுக்கு அவன் ஆணை பிறப்பித்தான். ஆயின், வயோதிபனாயிருந்த இராசசிங்கன் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு எவ்வித பிரயத்தனமுஞ் செய்யாது ஒல்லாந்தருடன் இடையிடையே பகைமை பாராட்டினான். 1684-ல் அவன் மறுபடியும் ஒல்லாந்தருக்குக் கீழிருந்த பாகங்களைத் தாக்கி, ஒல்லாந்தர் அவனுக்குத் திருப்பிக்கொடுக்க எண்ணியிருந்த சில பாகங்களைக் கைப் பற்றினான்.

இரண்டாம் விமலதர்ம சூரியன், தனது தந்தையாகிய இரண்டாம் இராசசிங்கனின் பின் 1687-ல் அரசுக்கு வந்தான். அவன் சமாதானத்தைப் பெரிதும் விரும்பினபடியால் ஒல்லாந்தருடன் தொடர்ந்து போர் செய்துகொண்டிருக்க விரும்பவில்லை. ஒல்லாந்தர் கைப்பற்றியிருந்த நாடுகளில் அவர்கள் ஆதிக்கத்தை அவன் ஒப்புக்கொண்டான். அதற்குப் பதிலாக இரண்டாம் இராசசிங்கனிடமிருந்து கைப்பற்றிய நாடுகளைத் திருப்பித் தரும்படி கேட்டுக்கொண்டான். பற்றேவியாவிலிருந்த அதிகாரிகள் ஏற்கெனவேயதற்குச் சம்மதமளித்திருந்தபடியால், லோறன்ஸ் பைல் (1679-1692) என்ற ஒல்லாந்த தேசாதிபதி 1688-ல் மூன்று கோறளையையும், சப்பிரகாமுவாவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், கொலன்னுக் கோறளையையும், சப்த கோறளையின் ஒரு பகுதியையும், கிழக்குக் கரையிலே மட்டக்களப்புக்குத் தெற்கே பனமா என்றழைக்கப்படும் செழித்த பாகம் உள்ளடங்கிய ஒரு பகுதியையும் திரும்பி அவனுக்குக் கொடுத்தான். இப்போதைய வட மாகாணத்தையும், மகா ஓயா தொடக்கம் வளவை கங்கைவரையுமுள்ள கரைப் பகுதியையும், கற்பிட்டி, திருக்கோணமலை, மட்டக்களப்பு முதலாமிடங்களிலிருந்த கோட்டைகளையும் ஒல்லாந்தர் தமக்கென வைத்துக்கொண்டனர்.

புதிய அரசன் பக்தி நிறைந்த ஒரு பௌத்தமதானுசாரியாய் இருந்ததினால், புத்த தந்தத்தைச் சேமித்து வைப்பதற்கென்று மூன்றடுக்கு மாளிகையொன்றைக் கட்டுவித்தான். அவன் பௌத்த குருமாரின் யோசனைப்படியே ஒழுகிவந்தான். இராசசிங்கன் கிறிஸ்தவர்களுக்குப் பெரிதும் ஆதரவு காட்டியபடியால் அவனுடைய காலத்திலே பௌத்த சமயம் கீழ் நிலையையடைந்தது. பரிசுத்த வாழ்க்கையை நடத்திய ஐந்து பௌத்த குருமாரைத் தானும் அக்காலத்திற் காணக் கிடைக்கவில்லை. ஆகவே விமலதர்மன் ஒல்லாந்தரிடமிருந்து இரு மரக்கலங்களைப் பெற்றுத் தூதுவரை அரக்கனுக் கனுப்பிப் பௌத்த குருக்களை வரவழைத்துக் குருத்துவச் சடங்குகளை இலங்கையிற் செய்வதற்கு ஒழுங்குகள் செய்தான்.

## II. கோர்னேலியஸ் ஜோன் சைமனும் சட்டத் திருத்தமும்

விமலதர்ம சூரியன் ஒல்லாந்தரிடமிருந்து நாட்டின் சில பாகங்களைப் பெற்றுக்கொண்ட பின்பு கண்டி நாட்டினர் புத்தளம், கொட்டியாரம் என்னுந் துறைகளின் வழியாய் வியாபாரப் பொருள்களை ஏற்றுமதிசெய்து தமது வியாபாரத்தை விருத்திசெய்தார்கள். அவர்கள் ஒல்லாந்த எல்லைப் புறங்களின் வாயில்களையடைந்து மேற்கூறிய இரு துறைகளின் வழியாகவுமே பொருள்களை வெளியே அனுப்பச் செய்தார்கள். அதனால் புத்தளம் பாக்கு வியாபாரத்துக்கு முக்கியமான துறையாய் விளங்கிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1703-ல் தேசாதிபதியான கோர்னேலியஸ் சைமன் என்பவன் கண்டி நாட்டினரின் புதிய வர்த்தக முறையால் ஒல்லாந்த கம்பெனியாரின் வர்த்தகம் பெரிதும் பாதிக்கப்பட்டதைக் கண்டான். அதனுல் அவன் கம்பெனியாருடைய கப்பல்கள் அத்துறைகளுக்குப் போகாதவாறு கட்டளையிட்டதோடு கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் என்பவை தவிர்ந்த ஏனைய துறைகள் எல்லாவற்றையும் 1707-ல் மூடிவிட்டான். இச் செய்கைகளைக் கண்டி நாட்டினர் எதிர்த்தார்கள். அரசனுக்கும் வர்த்தக சங்கத்துக்கும் இடையே சிறிது காலமாக மனத்தாபம் அடிக்கடி ஏற்பட்டது.

அரசியலில் நடைபெற்ற முறைகேடுகளைத் திருத்த வேண்டிய பொறுப்பையும் சைமன் ஏற்ருன். லோறன்ஸ் பைல் என்ற தேசாதிபதி காலத்தில் (மூத்தோன், இளையோன் ஆகிய) வான் கோயன்ஸ் தேசாதிபதிகள் இருவராலும் நிறுவப்பெற்ற கடின ஆட்சி நெகிழவிடப்பட்டது. பிரசைகளின் நல்எண்ணத்தையும் நல்லுணர்ச்சியையும் கொண்டு நாட்டில் அதிகாரத்தை நிலைநிறுத்த முயற்சித்தனர். இந்த நோக்கத்தோடு அவர்கள் தமிழருக்கும் சிங்களருக்கும் மிதமான கொள்கையை அனுசரித்து சில சலுகைகளை வழங்கினர். இவ்வாறு காட்டப்பெற்ற நேசப்பான்மையைச் சனங்களும் வியாபார சங்கத்தின் வேலையாட்களும் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு வர்த்தக சங்கத்துக்குச் சேரவேண்டிய அநேக உரிமைகளைப் பறிமுதல் செய்தார்கள்.

இக்காலத்தில் பலர் குட்டரோகத்தால் வருந்துவதைக் கவனித்தனர். ஐரோப்பியரிடையேயும் அந்நோய் பரவிவிடுமோ என்ற பயம் பலரைப் பாதித்தது. குட்டரோகிகளை ஒதுக்கிடத்தில் வைத்துச் சனங்களுக்கு ஆபத்து ஏற்படாமல் தடுக்கவேண்டுமென்று தீர்மானித்து ஹெந்தலையில் ஒரு குட்டரோக வைத்தியசாலையைக் கட்டுவதற்கு சைமன் ஆரம்பித்தான். அக்கட்டிடம் பல வருடங்களாக முடிவுருதிருந்து, அவன் பின் வந்த ஹென்றிக் பெக்கர் என்ற தேசாதிபதி காலத்திலேயே முடிவுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைமன் செய்த நன்முயற்சிகளுள் இலங்கைச் சட்டங்கள் சம்பந்தமாக அவன் செய்த திருத்தங்கள் மிகவும் போற்றற்குரியன. இலங்கையின் சட்டங்களை அவன் ஒருமுறைப்படுத்தினன். அந்நாளில் சிங்களரிடையே முறையான சட்டங்களிருக்கவில்லை. வழக்குகளைத் தீர்ப்பதற்கு நீதிபதிகள் பண்டைய தேசாசார முறைகளைப் பின்பற்றினர். எனினும், அவர்கள் தமது யுத்திக்குத் தோன்றியவாறு பல விஷயங்களைத் தீர்க்கவேண்டியுமிருந்ததால் இம்முறை திருப்திகரமானதாயிருக்கவில்லை.

1597-ல் தர்மபாலன் இறந்தபோது போர்த்துக்கீசர் கரைநாடுகளின் அதிகாரிகளாயினர். அஸிவிடோ என்பவன் மல்வானையில் சிங்களத் தலைவர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தைக் கூட்டி, அவர்களிடம் போர்த்துக்கீச நீதி முறைச் சட்டங்களின்படி அவர்கள் ஆட்சி செய்யப்படுவதை விரும்புகிறார்களாவென வினவினன். ஆனால் சிங்களத் தலைவர்கள் எவ்வித மாற்றத்துக்கும் இணங்கினரல்லர். அவர்கள் தங்கள் சாதி வழக்கப்படியே நீதி வழங்கப்படவேண்டுமென விரும்பினார்கள். அவர்களுடைய வழக்க முறைகளை அறிந்துகொள்ளவும் அவற்றை எழுத்தில் வைக்கவும் போர்த்துக்கீசர் நினைக்கவில்லை. உத்தியோகத்தர் நீதிபரிபாலனஞ் செய்யும்போது எவ்வித முறைகளைப் பின்பற்றி யொழுகவேண்டுமென்றுதானும் அவர்களறிவித்திலர். போர்த்துக்கீசரின் அறியாமையைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு சிங்களத் தலைவர்கள் நாட்டின் வழக்கத்துக்கே முற்றும் மாறான நீதியை வழங்கி வந்தனர். கண்டிப் பகுதியிலிருந்தோரிலும் பார்க்க போர்த்துக்கீச ராட்சிக்குட்பட்டிருந்த இடங்களில் வாழ்ந்த மக்களுக்கே மிகவும் அநீதி வழங்கப்பட்டு வந்தது.

ஒல்லாந்தர் கரைநாடுகளுக்கு அதிபதிகளானபோது செப்பமான ஒரு நீதிமுறையை நிலைநாட்டினர். அவர்கள் தங்கள் சொந்தச் சாதியினரை ஒல்லாந்து தேசச் சட்டப்படியும் பற்றேவியாச் சட்டமுறைப்படியும் ஆட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தனர்.* சிங்கள, தமிழ்ச் சாகியத்தினரை அவரவர் சாதி முறைப்படி ஆட்சி செய்தனர். ஆயின், சாதிவழக்கங்கள் தெளிவின்றி முறைமையற்றவெனக் காணப்பட்டபோது ரோமன்-டச்சுச் சட்டப்படி நீதி வழங்கினர்.

ஒல்லாந்தர் நீதிபரிபாலனத்தின் பொருட்டு நீதித்தலங்களை ஏற்படுத்தினர். அவைகளுள் சிறந்து விளங்கியது ரூட் வான் ஜஸ்ரிற்றி (Raad Van Justitie) என்பதே. இங்கே ஐரோப்பியருக்கெதிராகவும், கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் என்னும் கோட்டைகளுக்குள் வசித்த மற்றைய சனங்களுக்கெதிராகவும் தொடர்ந்த வழக்குகள் விசாரிக்கப்பட்டன. அன்றியும் இக்காலத்துச் சுப்ரீம் கோடு (மேற்கோடு) போன்று 'லாண்டிரூட்ஸி' (கீழ்கோடு) லிருந்து மனுப்பண்ணப்பட்ட நீதித்தலத்தில் சிங்களர், தமிழர் ஆகியோரின் காணி, கடன் முதலியன சம்பந்தப்பட்ட வழக்குகள் விசாரித்துத் தீர்ப்பளிக்கப்பட்டன. சனங்களின் வழமையான நீதி முறைகளையறியும் பொருட்டுத் தமக்குத் துணையாயிருக்க சிங்களரையும் தமிழரையும் லாண்டிரூட்ஸ் நீதிபதிகளாக ஒல்லாந்தர் நியமித்தனர். சிங்களர், தமிழர் ஆகியோரின் சமூக வழக்கங்களைப் பின்பற்றிய இந்நீதித் தலங்கள் எல்லாச் சனங்களையும் சமமாக நடத்தவில்லை. ஆயின், தீர்ப்பளிக்கு முன் குற்றவாளியின் நிலை, குடியிருப்பு முதலியவற்றை நோக்கியே தண்டனைகள் விதிக்கப்பட்டன. கொழும்பிலிருந்த லாண்டிரூட்ஸின் தலைவர் ஒரு திசாவையாயிருந்தார். அவரது காரியாலயம் ஹல்ஸ்டோபிலிருந்தது.

மட்ஸுய்க்கரைப்போலவே சைமனும் நீதிச் சட்டங்களில் வல்லவனாய் அதில் டாக்டர் பட்டம் பெற்றிருந்தான்.

---

*ஒல்லாந்த நீதிச் சட்டங்கள் யஸ்தினியனால் ஏற்படுத்தப்பட்ட ரோமன் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டவை. காலகதியில் தங்கள் தேவைக்கேற்ற இவ்ரோமன் சட்டங்களை யவர்கள் திருத்திக்கொண்டார்கள். பற்றேவியாவின் சட்டமுறையென்பது 1642-ல் ஜோன் மட்ஸுய்க்கர் என்பவரால் தொகுக்கப்பட்டு வழங்கிவந்த இராச கட்டளைகளினதும் சட்டங்களினதும் சுருக்கமேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகேடாக நீதி வழங்கப்பட்டு வருவதையும், நீதி வழங்குவோர் நீதிச் சட்டங்களையறியாத வியாபார சங்கத்தின் சாதாரண உத்தியோகத்தராயிருப்பதையும் அவன் கண்டான். அவர்களுடைய வேலையை திறமையும் இலகுவுமுடையதாக்க சைமன் துணிந்தான். அரசினரால் வெளிப்படுத்தப்பட்ட சட்டங்கள் யாவற்றையும் திரட்டும்படி அவன் கட்டளையிட்டான். அவ்விதம் செய்ததினால் வேண்டியபோது விதிகளைப் பார்த்துக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் அவர்களுக்குண்டானது. நீதிபரிபாலனத்தின் பொருட்டு ஒல்லாந்திலும் பற்றேவியாவிலும் வெளியிடப்பட்ட சட்டதிட்டங்களைத் திரட்டுவித்து நீதிபதிகளுக்கு வழிகாட்டியாயிருக்கத்தக்கதாகச் செய்தான். தமிழருடைய 'தேசவழமை' என்னும் நீதி முறைகளைத் திரட்டுவித்து அவற்றைத் தம் பாஷையிலும் மொழிபெயர்ப்பித்தான். இலங்கையிலுள்ள வழமைகளைச் சட்டமாக்கியது இதுவே முதல் முறையாதலால் இச்செயல் விசேடமானதொன்றாகும். தமிழ் அங்கத்தினர் உதவியைப் பெருமலே யாழ்ப்பாணத்திலுள்ள ஒல்லாந்த நீதிபதிகள் நீதியை வழங்குவதற்கு இச்சட்டப் புத்தகங்கள் அவர்களுக்குப் பெரிதும் உதவின.

## III. பெக்கர் தொடக்கம் வான் இம்மாவ் வரையுமிருந்த ஒல்லாந்த தேசாதிபதிகள்

சைமன் சங்கத்தினரின் வியாபார உரிமைகளைப் பாதுகாக்கவும், சங்க ஊழியர்களின் முறைகேட்டைச் சீர்திருத்தவும் முயற்சித்தானெனினும், தன்முன்னிருந்த தேசாதிபதிகளின் சிநேகமான ஆட்சி முறையை மாற்றவோ திருத்தவோ அவன் முனையவில்லை. ஆயின், அவனுக்குப்பின் தேசாதிபதியான ஹென்டிக் பெக்கர் (1707-1716) என்பான் வான் கோயனைப் பின்பற்றி உறுதியான ஆட்சியை நடத்தினன். சங்கத்தார் கடனினின்றும் தப்பிக்கொள்ளும் பொருட்டு வருவாயைக் கூட்டவேண்டுமென்பதை அவன் கண்டுணர்ந்தான். கபட நடவடிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் முறைகேடுகளையும் தடுப்பதற்குத் தக்க நடவடிக்கைகளெடுத்தாலன்றி வருவாயைக் கூட்டுதலியலாதென்பதையுமவனுணர்ந்தான்.

பல செலவினங்களை அவன் குறைத்தான். தனது உதவி உத்தியோகத்தர் முறைகேடாக நடந்து கொள்ளாதபடி அவர்களுடைய வேலைகளைக் கவனமாய் மேற்பார்வையிட்டான். உத்தியோகத்தர்கள் சொந்தத்தில் செய்துவந்த பஞ்சு முதலிய வியாபாரங்களை நிறுத்தினான். சிங்கள அல்லது தமிழ் உத்தியோகத்தர்கள் நாமியற்றும் பணிக்கு அதிகமான நிலங்களைப் பெறுவதைத் தடுத்தான்.

சைமனைப்போன்று அவனும் துறைமுகங்களை மூடியபடியேயிருக்கவிட்டான். துறைகள் திறந்திருந்தபோது தலைவர்கள் பெற்ற நன்மைகளையிழந்துவிட விரும்பாதபடியால் அவ்விதம் செய்வது அவனுக்கு இலகுவாக இருக்கவில்லை. தலைவர்கள் பருத்தி, பாக்கு ஆகியவற்றின் வியாபாரத்தைத் தம் கையில் வைத்திருக்கவும், புத்தளம் ஒரு சுயாதீன துறையாகவிருக்கவும் விரும்பினர்.

நரேந்திரசிங்கன் (**1707-1739**). குண்டசாலை நகரையும் கண்டியிலுள்ள மகா தேவாலயத்தையும் கட்டியவனாகிய நரேந்திரசிங்கன், தனது பிதாவாகிய விமலதர்மசூரியனைப்போன்றிராது மூர்க்கக் குணமுடையவனாயிருந்தான். எனினும், ஒல்லாந்தரோடு பகைத்து வாழவாவது வெளிப்படையாக அவர்களுக்குத் தீங்கு விளைக்கவாவது அவன் துணியவில்லை. ஆயின், அதிகாரிகள் அரசனுக்கு நோயுற்ற வேளைகளில் முள் வாயில்களையடைத்துக் கண்டி நாட்டார்க்கும் ஒல்லாந்தர்க்குமிடையே வியாபாரம் நடக்காதபடி தடுத்து வந்தனர்.

ஐசக் அகஸ்தீன் றம்பு (*1716-1739*) பெக்கர் என்ற தேசாதிபதியின் நிர்வாக முறையைத் தழுவி நடந்தான். புத்தளத்துக்கு வடபாலில் சோனக வியாபாரிகள் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய துறையை ஏற்படுத்தாதவாறு தடை செய்தான். கற்பிட்டியிலிருந்த ஒல்லாந்த உத்தியோகத்தர் புத்தளத் துறைக்குச் சென்ற பொருள்களைத் தடை செய்ததினு லேயே அவர்கள் புதிய துறையை ஏற்படுத்த விரும்பினர். இவனுடைய ஆட்சியினிறுதியில் ஒல்லாந்தர்க்குட்பட்டி ருந்த பாகத்தில் கறுவாத் தொழிலிலீடுபட்டிருந்தோர்க் கிடையில் கலகமேற்பட்டது. அதன் நிலைமை மோசமா யிருந்தபோதிலும், அவன் அதனை இலகுவாக அடக்கி ஞன். கலகத்திற் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை யாக அவர்களது பல உரிமைகளை நீக்கிவிட்டான்.

பெக்கரால் தாபிக்கப்பட்டு றம்புவால் ஸ்திரப் படுத்தி நடத்தப்பட்ட நல்லரசாட்சிமுறை பீற்றர் வைஸ்ற் (1726-1729) என்ற தேசாதிபதியின் நியமனத் தின் பின் நிலைகுலைவதாயிற்று. பெக்கரும் றம்புவும் கடுமையான அரசியல் நிர்வாகத்தை நடத்தியபோதி லும் அவர்கள் வியாபார சங்கத்தின் நன்மைகளை எப் போதும் கருதி வந்தனர். ஆயின், பீற்றர் வைஸ்ரோ வெனின் அதற்கு மாருகத் தனது அதிகாரங்களைத் துர்ப் பிரயோகஞ் செய்து சங்கத்தைக் கஷ்டநிலைக்குள்ளாக்கி ஞன். அமைதியாக வேலை நடந்துகொண்டிருந்த ஒவ் வொரு உத்தியோகப் பகுதியிலும் தலையிட்டான். அதை எதிர்த்து நின்ற உத்தியோகத்தரை நியாய விரோத மாகத் தண்டித்து நிர்ப்பந்தப்படுத்தினன். இவனுடைய கொடுஞ் செயலை யறிந்தபோது, பற்றேவியாவிலிருந்த மேலதிகாரிகள் விலங்கு பூட்டியபடி இவனையங்கழைப் பித்து விசாரணை நடத்திய பின்னர் தூக்கிலிட்டனர்.

அவனுக்குப் பின் அரசியல் நிர்வாகத்தைக் கையேற்ற தேசாதிபதியும் நிலைமையைச் சீர்படுத்தாமையினல், நாட்டை நன்னிலைக்குக் கொண்டுவரும்படி கிறிஸ்தியன் பிலாத்து (1732-1734) என்பவனை இங்கனுப்பினர். தனக்கு முன்னிருந்தோர் காலத்தில் நல்லரசாட்சி செய் யப்படாமைக்கு, அடிக்கடி உத்தியோகத்தர்கள் மாற்றப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டமையும், அவர்களிடம் காணப்பட்ட திறமையின்மையுமே காரணமென்பதை இவன் தேர்ந்தான்.

இவனுடைய காலத்தில் கலகமொன்று நடந்தது. சனங்களுடைய குறைகளை நிவர்த்திசெய்து அவன் உடனே கலகத்தை அடக்கினான். ஆயின், அவன் இங்கிருந்தும் புறப்பட்ட உடனே பின்னுமோர் கலகமேற்பட்டது. அக்கலகம் கறுவா செய்கைபண்ணப்பட்ட இடங்களிலாரம்பித்துத் தீவின் தென் பகுதியிலும் தென்மேற்குப் பகுதியிலும் விரைவில் பரவிவிட்டது. தலைமைக்காரரும் சங்கத்தாரும் தங்களிடமிருந்து அநீதியாகப் பணம் வசூல்பண்ணுவதைக் கறுவாப்பட்டைத் தொழிலாளர் எதிர்த்தனர். அநியாய வரி வாங்கப்படுவதையும், சேனைச்செய்கை விஷயத்தில் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டதையும் சனங்கள் எதிர்த்தார்கள். இவ்வித எதிர்ப்புக்கும் கலகத்துக்கும் அரசன் மறைந்து நின்று உற்சாக மூட்டினான். 1737-ல் வான் இம்மாவ் தேசாதிபதி அக்கலகத்தையடக்கும்வரை அது நடந்தது.

அரசியல் நிர்வாகத்திற் சிறந்த ஒல்லாந்த தேசாதிபதிகளுள் வான் இம்மாவும் (1736-1740) ஒருவன். வான் கோயன்ஸ் தேசாதிபதியால் திட்டஞ் செய்யப்பட்ட அடக்கு முறையையாவது பெக்கர் தேசாதிபதியாற் கைக்கொள்ளப்பட்ட கடூர முறையையாவது அவன் ஆதரிக்கவில்லை. லோறன்ஸ் பைல் தேசாதிபதியையும் அவனுக்குப் பின் வந்த மற்றைய தேசாதிபதிகளையும் போன்று அதிக விலை கொடுத்து அரசனது நட்பைப் பெற அவன் விரும்பவுமில்லை. நல்ல அரசாங்கத்தை நடத்தி நாட்டின் வளத்தைப் பெருக்குவதால் அவன் சிங்களரையும் தமிழரையும் திருப்திப்படுத்த முயன்றான். அரசசபையின் விஷயங்களையும் வர்த்தக சங்கத்தின் விஷயங்களையும் சம்பந்தப்படுத்தி, அரசனடைந்த நட்டங்களுக்கீடாக ஒல்லாந்தரோடு அவனுக்கிருந்த வியாபாரத்தை விருத்தி செய்து அரசனோடு சமாதானமாய் இருந்துவந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கியமான ஆண்டுகள்

1664. இராசசிங்கன் கலோதுவாவுக்கு ஓடல்.

1672. பிரான்ஸியர் திருக்கோணமலையைக் கைப்பற்ற முயற்சித்தல்.

1687. இரண்டாம் இராசசிங்கனின் மரணம்.

1707. கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய துறைகள் மூடப்படல். ஹென்றி பெக்கர் தேசாதிபதியாக நியமிக்கப்படல்.

1736-1740. வான் இம்மாவின் அரசாட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினெட்டாம் அத்தியாயம்

## நாயக்கர் அரசர்களுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் ஏற்பட்ட விரோதம்

### 1. பௌத்த சமயப் புனருத்தாரணம்

வான் இம்மாவ் என்ற தேசாதிபதியாற் கைக்கொள்ளப்பட்ட ஆட்சி முறையை நீண்ட காலம் அனுசரிக்க முடியவில்லை. அவன் மரிப்பதற்கு முன்பே நரேந்திர சிங்கன் இறந்துவிட்டான். அவனுக்குப் புத்திர சந்தானமில்லை. அவனுடைய மனைவியான இராணி மதுரையைச் சேர்ந்த நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்தவள். ஆகவே அவளுடைய சகோதரன் ஸ்ரீ விஜய இராசசிங்கன் (1739-1747) என்னும் பெயரோடு அரசனானன். அவனும் மதுரையைச் சேர்ந்த ஒரு இராசகுமாரியையே மணந்துகொண்டான். அவ்வரசியின் தந்தையும் அநேக தமிழ்ப் பரிவாரங்களும் கண்டியில் வந்து குடியேறினர்.

ஸ்ரீ விஜய இராசசிங்கன் அரசுக்கு வந்ததும் இலங்கையின் நிலை பெரிதும் மாறுதலடைந்தது. இவனுக்கு முன்னிருந்த அரசர்களைப்போல இவன் சமாதான முறையில் ஒல்லாந்தருடன் நடந்துகொள்ளவில்லை. முன்னிருந்த அரசர்கள், ஒல்லாந்தர்மீது தங்களுக்கிருக்கும் வெறுப்பை, எல்லைப்புற வாயில்களை அடைப்பதினாலும் வியாபாரத்தை நிறுத்துவதினாலும் காண்பித்தனர். இவனோவெனில் ஒல்லாந்தருக்குரிய நாட்டிற் பிரவேசித்து பயிர்களை அழித்ததுமன்றிக் கறுவா உரித்தல் தொழிலில் இருந்தவர்களையும் திருப்பிக் கூப்பிட்டுக்கொண்டான். அன்றியும் கறுவா, மிளகு, பாக்கு, தேங்காய் முதலிய பொருள்களில், புத்தளத்திலிருந்த சோனகருடைய துணையினால் இந்தியக் கரையிலிருந்தவர்களோடு கள்ளத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனமான வியாபாரமும் நடத்தினுன். வியாபார சமுதாயத்தார் அதைத் தடுப்பதற்கெடுத்துக்கொண்ட முயற்சிகள் பலனளித்தில. 1743-ல் சீயன் கோறளையைச் சேர்ந்த ஒன்பது கிராமங்களைத் தன் நாட்டுடன் சேர்த்துக்கொண்டான். அதனைக் கண்ட ஒல்லாந்தர் அச்செயலைக் கண்டித்தார்களேயன்றித் திரும்பி யந்நாட்டைப் பெறுதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளவில்லை.

ஸ்ரீ விஜய இராசசிங்கன் தன் முன்ஞேர் கைக்கொண்ட சமய சம்பிரதாயங்களையும் மாற்றிக்கொண்டான். கத்தோலிக்க குருமார் தம் நாட்டில் இருப்பதற்கு ஒல்லாந்தர் இடங்கொடாதபடியால் அவர்கள் கண்டி நாட்டுக்குச் சென்று அங்கு தங்கி வாழ்ந்தனர். இரண்டாம் இராசசிங்கன் விசேட கருணையுடன் அவர்களை நடத்தினுன். விமலதர்ம சூரியன் பௌத்த சமயத்தவனுயிருந்தபோதிலும் அவர்கள் விஷயத்தில் தலையிடவில்லை. அவன் 1689-ல் யாழ்ப்பாணம் வந்து ஒல்லாந்தர்களுக்குத் தப்பி 1691-ல் கண்டிக்குச் சென்ற கொங்கணப் பிராமணனுன ஜோசெப் வாஸ் என்ற குருப்பிரசாதிக்கு மிகுந்த நேசங் காட்டினுன். நரேந்திரசிங்கனும் கத்தோலிக்க குருமார் கண்டி நாட்டில் வசிக்க இடங்கொடுத்தான். அவர்கள் அங்கிருந்து இரகசியமாக ஒல்லாந்தர் நாட்டினுட் புகுந்து மதபோதனை செய்து வந்தார்கள். ஆனுல் ஸ்ரீ விஜய இராசசிங்கன் பௌத்த சமயச் சீர்திருத்தத்தினுல் தூண்டப்பெற்றவனுகி, கத்தோலிக்கக் குருமாரைக் கண்டியில் நின்றும் துரத்திவிட்டதுமன்றிச் சிலாபத்திலும் புத்தளத்திலும் இருந்த கத்தோலிக்க தேவாலயங்களையும் இடிப்பித்தான்.

அவன் பௌத்த சமயத்தில் மிகுந்த ஊக்கங்கொண்டான். பழுதடைந்த பௌத்த அம்பலங்களைத் திருத்தியும் விழாக்களைக் கொண்டாடியும் சனங்களைப் பிரீதிப்படுத்தினுன். 1741-லும், 1747-லும் சீயத்துக்குத் தானுதிபதிகளையனுப்பி பௌத்த குருமாரை வரவழைத்து உபசம்பத என்ற பௌத்த சமய குரு அபிஷேகத்தையும் புனருத்தாரணஞ் செய்தான். இப்பிரயாணங்கட்கு வேண்டிய மரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்களை அரசனுடைய நன்மதிப்பைப் பெறும் பொருட்டு ஒல்லாந்தர் கொடுத்துதவினர்.

ஸ்ரீ விஜய இராசசிங்கனுக்குப் பின் அவனுடைய மைத்துனன் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் அரசுக்கு வந்தான். இவன் ஏற்கெனவே தனது தகப்பனோடு கண்டி அரசவைக்கு வந்திருந்தான். 1747-ல் அரசியல் பொறுப்பை அவன் நடத்த வயது வராமையால் நாலு வருடங்களின் பின்பே அப்பொறுப்பு அவனிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவன் தனது மைத்துனனிலும் பார்க்க பௌத்த மத வளர்ச்சியிற் பெரிதும் ஊக்கங்காட்டி நின்றான். சீய தேசத்துக்கு முன் அனுப்பப்பட்ட தூதால் யாதும் நன்மை கிடையாததினால், இவன் 1750-ல் மறுபடியும் பௌத்த குருக்களை யழைக்கும் பொருட்டு தானாதிபதிகளை யனுப்பி வைத்தான். அதன் விளைவாய் 1753-ல் சீய தேச பௌத்த பிக்குகள் இங்கு வந்தனர். இப்போது இலங்கையிற் பெருந்தொகையினராயிருக்கும் சீய தேச பௌத்த பிக்குகள் சங்கத்தை இவர்களே ஆரம்பஞ் செய்தனர். இக்கூட்டத்தைச் சேர்ந்த பௌத்த பிக்குகளே தீவிலுள்ள பழைய விகாரைகள் எல்லாவற்றிலும் வசிக்கின்றனர்.

கண்டியிலிருந்து பதினைந்து மைலுக்கப்பாலுள்ளதும் பனைப் பிரிவிலிருக்கும் வெளிவித்தா என்னுமிடத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட சரணங்கரா என்பவருடைய இடையறு முயற்சியினால் உபசம்பதம் திரும்பவும் தாபிக்கப்பட்டது. இவருடைய இளம் பிராயத்திலே பௌத்த சமயமானது க்ஷீணதசையடைந்திருந்தது. மகாவம்சக் கூற்றின்படி பிக்குகள் இழிதொழிலிற் பிரவேசித்திருந்ததோடு, தவறுதலான போதனைகளையும் அனுட்டித்தனர். அவர்கள் தம் நேரத்தைச் சோதிடத்திலும் மாந்திரீகத்திலும் கழித்தனர். சரணங்கரா பௌத்த சமயத்தைச் சீர்திருத்துவதையே தமது வேலையாகக் கொண்டார். அவர் பிக்குகளின் நடத்தையைக் கண்டித்துப் பிரசங்கங்கள் செய்து வந்தார். வயது முதிர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்குகள் அவரை எதிர்த்தபோதிலும் நரேந்திர சிங்கனது ஆதரவை அவர் பெறக்கூடியதாயிருந்தது.

அவர் தன் முயற்சிகளை ஸ்ரீ விஜயசிங்கன் காலத்தும் தொடர்ந்து நடத்தினார். அரசனைச் சீயத்துக்குத் தூதனுப்பும்படி அவர் தூண்டினார். 1753-ல் சீயத்திலிருந்து பிக்குகள் இங்கு வந்தபோது, சரணங்கரா ஐம்பத்தைந்து வயதினராய் இருந்தபோதிலும், குருத்துவத்தின் ஆரம்பப்பதவியிலேயே (சமனேரு) இருந்தார். அங்கிருந்து வந்த பௌத்த குருக்கள் கையினால் 'உபசம்பதம்' பெற்றார். அரசன் விரைவிலவரை 'சங்கராஜா' பதவிக்குயர்த்தினான். அப்பதவியிலிருந்தபடியே 1778-ல் அவர் இறந்தார்.

பௌத்த சமய புனருத்தாரணமும் இலக்கிய புனருத்தாரணமும் எப்பொழுதும் ஒன்றையொன்று தொடர்ந்தே செல்வன. இலக்கியத்திலேற்பட்ட கிளர்ச்சி மகாவம்சத்தின் விரிவுக்கிடமாயிற்று. சரணங்கரா அநேக நூல்களையெழுதி யிலக்கிய வளர்ச்சியைத் துரிதப்படுத்தினார். குருநாக்கலுக்கணித்தாயுள்ள றிட்டி விகாரையிலிருந்த அவருடைய சீடனான திபோத்துவாவே சித்தார்த்த புத்தரக்ஷித என்பவர் மகாவம்சத்தில் நான்காம் புவனேகபாகு தொடக்கம் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் வரையுமுள்ள சரித்திரத்தை யெழுதிவைத்தார். கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் சரணங்கராவுக்குச் சங்கத்தைத் தூய்மையாக்க உதவி செய்ததோடு பௌத்தசமய வளர்ச்சிக்காகவும் உழைத்து வந்தான். அவன் றிட்டி விகாரை போன்ற அநேக விகாரைகளைப் புதுக்கியதோடு கங்கரமா போன்ற அநேக புதிய விகாரைகளையும் எழுப்பினான். தம்புளைக் குகை முதலாய கண்டி விகாரைகளிலும் றிட்டி விகாரையிலுங் காணப்படும் குகைச் சித்திரங்கள் இவன் காலத்திலேயே சித்திரிக்கப்பட்டன.

## II. கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனும் ஒல்லாந்தருடன் நடத்திய யுத்தமும்

1760-ல் ஒல்லாந்த ராட்சிக்குட்பட்டிருந்த சிங்கள மாகாணங்களில் கலகங்களுண்டாயின. டச்சுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரரின் காணி சம்பந்தப்பட்ட கொள்கைகள் தலைவர்களுக்கும் பொதுசனங்களுக்கும் அதிருப்தியை உண்டாக்கின. அது காரணமாகவே அக்கிளர்ச்சிகள் ஏற்பட்டன. 1740-ம் ஆண்டளவில் டச்சுக்காரர் கொழும்பு, காலி, மாத்தறைப் பிரிவுகளிலுள்ள வயல், தோட்டங்கள் முதலியவற்றின் தோம்பு (உறுதி)களை எழுதினார்கள். அவைகளையெழுதி முடித்த பின்னர் வரியைக் கிராம அதிகாரிகள் மூலம் பெறுமல் தாமே நேரடியாகச் சனங்களிடமிருந்து திரட்டினார்கள். சிங்கள, போர்த்துக்கீச அரசாட்சிக் காலங்களில் வரி வசூல்செய்வது தலைமைக்காரர் மூலமே நடந்து வந்தது. இவ்வித மாறுபாட்டால் கிளர்ச்சியேற்பட்டது.



டச்சு துப்பாக்கி வீரன்

வேறு பல வழிகளாலும் அவர்கள் அரசிறை வருமானங்களைப் பெருக்க முயற்சித்தனர். செய்த சேவைக்காக நிலங்களைப் பெற்றிருந்தவர்களிடம் பூரணமாக வேலை வாங்கத் தெண்டித்தனர். உரித்தாளரில்லாதபோது வியாபார சங்கத்துக்குச் சேர்த்துக்கொள்ளப்படவேண்டிய காணிகட்கெல்லாம் படிப்பணம் கேட்டனர். ஒருவருக்கும் ஒதுக்கப்படாத பாகங்களையெல்லாம் அவர்கள் சங்கத்துக்குச் சேர்த்துக்கொண்டனர். உரித்தின்றி ஒருவரும் நிலங்களில் குடியிராதபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனித்தும் வந்தனர். தென்னை வரிபோன்ற வழக் கிறந்த பல வரிகளை விதித்தார்கள். அரசனிடமிருந்து பெறுங் கறுவாவை எப்போதும் காத்திராதபடி தாமே கறுவா பயிரிட எண்ணினர். இவ்வெண்ணங் காரண மாய்ச் சங்கத்தின் அனுமதியின்றி சேனைக்காடுகளை யெரித்தலையும் புதிய தோட்டங்களை உண்டாக்குவதையுந் தடுத்தனர்.

இவ்வித திட்டங்களே ஒல்லாந்தர்மேல் பொதுசன வெறுப்பை உண்டாக்கின. மாத்தறைப் பகுதியிலே ஒரு கிராமத்தில் சுதேசப் போர் வீரரிடையே ஆரம்பித்த குழப்பமானது, ஒரு பெரிய கலகத்துக்கிடமாகி, விரைவில் எங்கும் பரவிச் சங்கத்தாருக்கு அழிவைக் கொண்டுவந் தது. உதாரணமாக, காலிப் பகுதியில் கலகம் தொடங் கிய இரண்டு மாதங்களில் ஒரு சிங்கள வேலைக்காரனாவது போர்வீரனாவது வேலையிலிருக்கவில்லை.

கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன், தனது தந்தை ஒல்லாந்த ருடன் எவ்வித உறவு பூண்டிருந்தானோ அவ்விதமே தானும் நடந்துகொண்டான். தன்முன்னோர் காலத்தில் ஒல்லாந்தர் காட்டிய நேசபாவத்தை அவர்களது பலவீனமென விளங்கிக்கொண்டான். ஒல்லாந்தரின் கஷ்ட நிலைமையை அறிந்து அவர்கள்மேல் அவன் படை யெடுத்துச் சென்றிருக்கலாம். ஆயின், அவன் தனக் கெதிராக நடந்த ஒரு சதியைக் கண்டுபிடித்து, அதற் கேற்ற பரிகாரம் செய்வதில் சிறிது காலங் கழிக்கவேண்டி யிருந்தது. சிங்களப் பிரதானிகளின் ஒரு பகுதியார் நாயக்க வம்சத்தினர் அரசுசெலுத்துவதை யெதிர்த்து ஒல்லாந்தருடன் உடன்படிக்கை செய்ய விரும்பினர். அவர்கள் இத்தருணத்தில் அரசனைக் கொன்று, சீய தேசத்தின் அரச வம்சத்தைச் சேர்ந்த ஒரு பௌத்த பிக்கு வுக்கு முடிசூட்ட சூழ்ச்சி செய்தனர். இச்சதியை அடக் கிய பின்பு அரசன் வெளிப்படையாய்க் கலகக்காரருடன் சேர்ந்து தாழ்பூமிப் பிரதேசத்துக்குப் படையெடுத்துச் சென்றான். சங்கத்தார் கைக்கொண்ட சமாதான முறைகளினால் ஒல்லாந்தர் போர் புரியுந் திறமையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிழக்கவே, அவனுடைய சேனைகள் விரைவினில் மாத்தறை, கழுத்தறை, ஹன்வல்லை முதலாமிடங்களை வெற்றிகொண்டன.

கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனும் இரண்டாம் இராசசிங்கனைப்போலவே பிறசாதியினரின் உதவியின்றித் தன்னால் தாழ்பூமிப் பிரதேசங்களைக் கைப்பற்ற முடியாதென்று கருதினான். ஆகவே அவன் ஒல்லாந்தரை இலங்கையில் நின்றுந் துரத்துவதற்கு ஆங்கிலேயரின் உதவியை நாடினான். இந்த வேண்டுகோளுக்குச் சென்னபட்டினத்திலிருந்த ஆங்கிலேய தேசாதிபதி இரு காரணங்களைக் கொண்டு உடன்பட்டார். கிளைவ் இந்தியாவில் ஈட்டிய வெற்றியின் பின் பிரித்தானியரின் ஆதிக்கம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிப் பரவிற்று. அதனால் கடல் யுத்தம்யாவும் வங்காளக் குடாவிலேயே நடைபெறலாயின. அப்பகுதியில் கடற்படைத் துறையாக்குவதற்கு வசதியான ஒரு இடமில்லாமையினால், பிரித்தானியா இலங்கையில் ஒரு துறைமுகத்தைப் பெற்றுக்கொள்ள ஆவலாயிருந்தது. அத்துடன் கறுவா வியாபாரத்தையும் ஒல்லாந்தரிடமிருந்து பறித்துக்கொள்ள அதுவே நல்ல தருணமெனவும் நினைத்தனர். ஆங்கில ஸ்தானீகராகிய பைபஸ் என்பவன் இங்கு வந்தபோது, கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் ஒரு துறைமுகம் கொடுப்பதோடு கறுவா வியாபாரஞ் செய்யவும் அனுமதிப்பதாக வாக்களித்தான். ஆயின், அதற்குப் பதிலாக ஒல்லாந்தரை இலங்கையினின்றுந் துரத்துவதற்கு சென்னையரசினர் உதவிசெய்ய மறுத்ததினால் முன்னைய பேச்சுக்கள்யாவும் சித்திபெறாது போயின.

இவ்வித காரியங்களினால் ஒல்லாந்தர் அரசனுடன் சமாதானமாயிருக்க முடியாதுபோயிற்று. 1762-ல் ஒல்லாந்த தேசாதிபதியாக வந்த வான்எக் என்பவன், அரசனுக்குரித்தாயிருந்த புத்தளம், சலாபம் என்னும் இரு துறைகளையும் கைப்பற்றி 1763-ல் உள்நாட்டுக்கும் படையையனுப்பினான். கண்டியர் கையாண்ட முரட்டுச் சண்டையின் பயனாக இம்முறை அவனது முயற்சி பலனளிக்காத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினுல் அவன் மறுபடியும் 1765-ல் ஒரு சேனையுடன் சென்றான். சப்த கோறளையின் வழியாகச் சென்று கலகெதருக் கணவாய் வழியாகக் கண்டியுட் பிரவேசித்தான். அதே நேரத்தில் இன்னுமொரு சேனை புத்தளத்திலிருந்து சென்றது. அவன் கட்டுகாஸ்தோட்டையை யடைந்தபோது அரசன் அவர்களுக்குச் சாதகமான உடன்படிக்கை செய்ய இசைந்தான். ஆனுல் வர்த்தக சங்கத்தாரே அரசனது நாடுகளுக்கு மேலதிகாரிகளென்பதை அவன் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டதும், அதற்கு உடன்படாததால் வான்எக் கண்டி நகரைத் கைப்பற்றிக் கொள்ளையடித்தான். அதன் பின்பு அவன் கண்டியரசர்களுக்கு ஒதுக்கிடமாயுதவிவந்த குண்டசாலையையும் அங்குருங்கட்டையையுந் தாக்கினுன். இவ்விடங்கள் இயற்கை யரண்களையுடைத்தாயிருந்தன.

இப்படையெழுச்சிகளின் பின் வான்எக் கொழும்புக்குத் திரும்பினுன். ஆனுல் கண்டிப் படையெழுச்சியின் போது அவன் சுகாதாரத்துக்கொவ்வாத இடங்களின் வழியே திரிந்ததினுல் காட்டுச் சுரங்கண்டு மரணமடைந்தான். கண்டியில் அவனுல் நிறுவப்பட்ட 1,800 பேரடங்கிய சேனை உணவின்றித் தவித்துக் கொழும்புக்குத் திரும்ப வேண்டியதாயிற்று.

வான்எக் என்பவனுக்குப் பின் இமான் விலெம் பால்க் (1765-1785) என்பவன் தேசாதிபதியானுன். இவன் அரசனோடு உறுதியாகவும் ஊக்கமாகவும் நடந்து வந்தான். இவன் வந்திறங்கியதும் இன்னொரு போருக்கு ஆயத்தஞ் செய்தான். யுத்தங் காரணமாக நிலங்கள் பயிர்செய்ய முடியாதிருந்ததால் கண்டியர் பஞ்சத்தினுல் அவதிப்படவேண்டிற்று. எரியுங் கட்டையை ஏறத்தள்ளியதுபோல் பால்க், நாட்டின் சில பகுதிகளைக் கொள்ளையடித்து நிலைமையை மேலும் மோசமாக்கினுன். வேறொன்றுஞ் செய்ய முடியாதபடியால் 1766-ம் ஆண்டு, பெப்ரவரி மாதத்தில் அரசன் டச்சுக்காரரோடு சமாதானஞ் செய்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனுடைய எல்லைக்குள் அவனது ஆணை நடைபெறலாம் என்றும், வெளியேயிருந்து வந்து அவனைத் தாக்காமல் தாங்கள் பாதுகாத்துக்கொள்ளுவதாகவும் டச்சுக்காரர் அவனுக்கு வாக்களித்தார்கள். உப்பளங்களுக்குப் போவதற்கு கண்டியருக்கு அனுமதியளிப்பதாகவுங் கூறினர். அரசனுக்கு இவை அவ்வளவு லாபகரமானவையல்ல. ஆனால் டச்சுக்காரர் தாம் விரும்பிய கோரிக்கைகளை எல்லாம் அரசனிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள். யுத்தத்துக்கு முன்னர் டச்சுக்காரர் கைப்பற்றியிருந்த நாடுகளிலெல்லாம் அவர்களாணையே செல்லுமென அரசன் உடன்பட்டதோடு, தீவின் கரையோரங்களில் நான்கு மைல் அகலத்துக்கு கரை நிலங்களை டச்சுக்காரருக்குக் கொடுத்தான். தன்னூர்களில் கறுவா வெட்டுவதற்கும் அவர்களுக்கு அனுமதியளித்தான். ஐரோப்பிய சாதியாரோடாவது இந்திய ராசாக்களோடாவது எவ்வித உடன்படிக்கையுஞ் செய்வதில்லையென்றும், டச்சுஸ்தானீகர் தன்னைக் காணவருங் காலங்களில் அனுசரிக்கும் தாழ்மையான சன்மானங்களை அவர்கள் இனிக் காட்டவேண்டியதில்லையென்றும் அவன் உடன்பட்டான்.

வான்எக், தனது திறமையை வேறு பல வழிகளிலும் காண்பித்தான். குன்று நீதியாலும் மிதமான கொள்கைகளினாலும் அவன் பிரசைகளின் நன்மதிப்பைப் பெற்றான். தனக்குக் கீழ் உத்தியோகம் புரிவோரை ஊக்கத்தோடும் உறுதியோடும் நடத்தி அரசியல் நிர்வாகத்தைத் திருத்தினான். சனங்களுக்குத் தேவையான பொருள்களை அபிவிருத்திசெய்து சனங்களைத் திருப்திப்படுத்த முயன்றான். 1767-ல் கொழும்புக்கு வடக்கேயிருந்த முத்துராஜவெலா என்னும் வயல் நிலங்களைப் பண்படுத்த முயற்சியெடுத்து, அங்கு நெற் செய்கையை விருத்திசெய்ய விரும்பினான். இரு வருடங்களின் பின்னர் மருதானையில் கறுவாச் செடியையுண்டாக்கவும் பிரயத்தனஞ் செய்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## III. ஆங்கிலேயர் கரைநாடுகளைக் கைப்பற்றல்

கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் 1780-ல் இறக்கவே அவன் சகோதரனான இராசாதி இராசசிங்கன் (1780-1796) அரசியல் நிர்வாகத்தைக் கையேற்றான். இரண்டு வருடங்களின் பின்னர் ஆங்கிலேயர் அவனுடன் ஒல்லாந்தருக்கெதிராக ஓர் உடன்படிக்கை செய்துகொள்ள முயற்சித்தனர். ஆனால் அவன் தன் சகோதரனுக்கு சமயத்திலுதவாதவர்களோடு உடன்படிக்கை செய்து கொள்ள மறுத்துவிட்டான்.


பைபஸ் என்பவன் தூதனைச் சென்ற பின்பு பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தார் வங்காளத்தில் நடைபெற்ற யுத்தங்களிலும் குடியேற்றத்திலும் தம் கவனத்தைச் செலுத்தவேண்டியவராயினர். அதனால் இலங்கையைப்பற்றிக் கவனிக்கமுடியவில்லை. ஆயின், 1780-ம் ஆண்டினிறுதியில் அமெரிக்க சுதந்திரப் போர் நடந்த காலத்தில் ஆங்கிலேயர் ஒல்லாந்தருக்கெதிராகப் போர்தொடுத்தனர். அப்போது சென்னையிலிருந்த ஆங்கிலேயர் இலங்கையிலிருந்த ஒல்லாந்தருடன் போர் புரியத் தீர்மானித்தனர். 1782-ல் அவர்கள் திருக்கோணமலையைக் கைப்பற்றினர். ஆயின், பிரான்ஸியர் அவர்களைத் துரத்தி அதனைத் திரும்பவும் ஒல்லாந்தருக்கே அளித்துவிட்டனர்.

அடுத்த பன்னிரு வருடங்களுக்கு பிரித்தானியர் இலங்கையில் கவனஞ் செலுத்தவில்லை. ஆனால் பிரான்ஸிய புரட்சிக்காரருடன் நடத்திய போரானது அவர்கள் கவனத்தை 1795-ல் இலங்கையின்பாற்றிருப்பியது. அவ்வருடத்தில் பிரான்ஸ் ஒல்லாந்தின்மேற் படையெடுத்துச் சென்று குடியரசுச் சார்புடைய சில ஒல்லாந்தரின் உதவியுடன் பற்றேவிய குடியரசையேற்படுத்தியது. உடனே ஒல்லாந்து நாட்டின் ஸ்ராத்ஹோல்டர்* இங்கிலாந்துக்கு ஓடினான். ஒல்லாந்த குடியேற்ற நாடுகள் பற்றேவிய குடியரசுக்கு

*Stadtholder, நாட்டின் அதிபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவளிப்பதைத் தடைசெய்தற் பொருட்டு தன்னை, ஆதரித்த குடியேற்ற வாசிகட்கு பிரித்தானிய படை உதவி செய்யவேண்டுமென விரும்பினான். அன்றியும் அவன் ஒல்லாந்தர்க்குரிய இலங்கை நகரங்களிற் பிரவேசிப்பதற்கு ஆங்கிலேயருக்கு உத்தரவளிக்கும்படி இலங்கையிலிருந்த ஒல்லாந்த தேசாதிபதிக்கு எழுதினான். அவ்வாறு அவன் செய்தது பிரான்ஸியருடைய படை




திருக்கோணமலையிலுள்ள டச்சுக் கோட்டையும் துறைமுகமும்

யெடுப்பினின்றும் ஒல்லாந்த குடியேற்றங்களைப் பாதுகாத்தற்பொருட்டேயாம்.

அதுவுமல்லாமற் பிரான்ஸியர் திருக்கோணமலையை ஒரு கடற்படைத் தலமாக உபயோகித்து இந்தியாவைத் தாக்குவதைப் பிரித்தானிய கீழைத்தேச வர்த்தக சங்கம் விரும்பவில்லை. ஆகவே சென்னபட்டினத்திலிருந்த ஆங்கிலேய தேசாதிபதி இராசாதி இராசசிங்கனிடம் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதுவனையனுப்பி அவனுதவியைக் கேட்டு நின்றதோடு, ஒல்லாந்தர் பிரித்தானியரின் பாதுகாப்பை மறுத்தால் இலங்கையைக் கைப்பற்ற ஒரு கடற்படையையும் அனுப்பினன். ஆரம்பத்தில் ஒல்லாந்தர் பிரித்தானியரின் பாதுகாப்பை விரும்பவில்லை. பின்னர் அவர்கள் பற்றேவிய குடியரசின் அதிகாரத்தை ஒப்புக்கொள்வதென்றும், ஆங்கிலேயரின் படைத்துணை தமக்கு வேண்டியதில்லையென்றும் தீர்மானித்தனர். இதை விரோதத்திற்கு அறிகுறியெனக்கொண்டு, பிரித்தானியர் ஆகஸ்ட் மாதம் 18-ம் திகதி திருக்கோணமலையை முற்றுகையிட்டனர். எட்டு நாட்களின் பின் இந்த நகரத்தார் ஆங்கிலேயர்க்குப் பணிந்தனர். அக்டோபர் மாதம் 5-ம் திகதிவரையில் மட்டக்களப்புத் தொடக்கம் மன்னார்வரையிலிருந்த துறைமுகங்கள்யாவும் அவர்கள் கைவசமாயின. 1796-ம் வருடம், பெப்ரவரி மாதம் 15-ம் திகதி கொழும்பும் மற்றைய ஒல்லாந்தர்க்குரிய பாகங்களும் ஆங்கிலேயர்க்காயின.

ஐம்பது வருட காலமாக இலங்கையில் ஒல்லாந்தருடைய ஆதிக்கம் குன்றிக்கொண்டே வந்தது. 1739-ல் இருந்து அரசாங்கத்தின் வருமானத்தைவிடச் செலவு கூடிக்கொண்டே வந்தது. செலவைக் குறைப்பதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள்யாவும் பலனளித்தில. கீழுத்தியோகத்தர்களின் சம்பளங் குறைக்கப்பட்டது. அவர்கள் சொந்த வியாபார முறைகளைக் கையாண்டு தமது வருவாயைக் கூட்ட முயற்சித்தனர். அதனுல் வர்த்தக சங்கத்தின் வருவாய் குன்றியது. இலங்கைக்கு வந்த உத்தியோகத்தரும் திறமையற்றவர்களாயிருந்தனர். அது காரணமாய் வால்க், வான் டீகிறுவ் (1785-1794) போன்ற நேர்மையான தேசாதிபதிகளின் முயற்சிகளும் பலனளிக்கவில்லை.

ஒல்லாந்தர் சிங்களருடைய ஆதரவை யிழந்தனர். அவர்கள் அனுசரித்த நிலக்கொள்கையினுல் ஊர் அதிகாரிகளுடையவும் பொதுசனங்களுடையவும் வெறுப்பைத்தேடிக்கொண்டனர். அவர்கள் போர்த்துக்கீசரைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று யுத்த காலங்களில் கொடிய நிட்டூரமான முறைகளைக் கைக்கொள்ளவில்லையென்பதும், சனங்களை நீதியாக நடத்த முயற்சித்தனரென்பதும், உண்மையே; நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக அவர்கள் பாடுபட்டார்கள். சில தேசாதிபதிகள் வறியோருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் உதவி செய்தனர். இலாபம் பெறுவதற்காகவே வியாபார சங்கம் இலங்கையைக் கைப்பற்றியது. அப்போது சங்கத்துக்கு வருவாய்க்கு மிஞ்சிய செலவு ஏற்பட்டதால் எந்த வகையிலும் வருமானத்தை அதிகரிக்கவேண்டுமென சங்கத்தின் பங்காளர் விரும்பினர். இதற்காகக் கடுமையான வரிகளை விதித்ததுமன்றி, சனங்களின் நன்மையைக் கருதாமல் பல சீர்கேடான முறையில் உத்தியோகத்தர்களும் தமது வருமானத்தை அதிகரித்தார்கள். எனவே, இந்நிலைமையில் பிரசைகளை இவர்கள் திருப்திப்படுத்தத் தவறியது நூதனமல்ல. மேலும் கண்டி அரசர்களை இவர்கள் பகைத்து வந்தனர். வியாபாரத்திஞல் வரும் லாபத்தை முற்றுய்த் தாங்களே அனுபவிக்கும் நோக்கமாக அந்நிய நாடுகளுடன் வியாபாரஞ் செய்யாது அவர்களைத் தடுத்தனர். மேலும் வெளியேயிருந்து ஒருவித உதவியும் பெற முடியாதபடி துறைமுகங்களெல்லாவற்றையும் மூடினர். எனவே, வலிய படையுடன் பிரித்தானியர் படையெடுத்து வந்தபொழுது பிரசைகளாவது அரசனுவது ஒல்லாந்தருக்கு உதவிசெய்யாதது நூதனமல்ல. ஒல்லாந்த தேசாதிபதி அங்கில்பீக் (1794-1796) என்பவன் வந்த படையை எதிர்ப்பதற்குக்கூடச் சித்தப்படவில்லை எனில் ஒல்லாந்தரின் நிலைமையை ஊகித்துவிடலாம்.

## முக்கியமான ஆண்டுகள்

1739. நாயக்கர் வம்சம் தாபிக்கப்படல்.

1747. கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் சிம்மாசனம் ஏறல்.

1753. சீய தேசப் பிட்சுக்களின் விஜயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1760. டச்சுக்காரருக்கு எதிராகக் கலகம்.

1765. கண்டியை டச்சுக்காரர் கைப்பற்றல்.

1766. கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையில் சமாதான உடன்படிக்கை.

1769. பிரித்தானியர் டச்சுப் பிராந்தியங்களைக் கைப்பற்றல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தொன்பதாம் அத்தியாயம்

## இலங்கையில் போர்த்துக்கீச, ஒல்லாந்த* ஆட்சி

### I. கண்டி ராச்சியத்தின் அரசியல் நிருவாகம்

புராதன காலத்தில் இலங்கையில் எவ்வகையான அரசியல் நடைபெற்றதோ, ஏறக்குறைய அவ்வகையான நிருவாகமே கண்டி ராச்சியத்திலும் இக்காலத்தில் நடைபெற்றது. ரொபேட் நொக்ஸ் என்பவர் எழுதிய நூலிலும், போர்த்துக்கீச, ஒல்லாந்த சாசனங்களிலும் இதைப் பற்றிய விபரங்களை மேலும் அறியக்கூடியதாயிருக்கிறது. தேசவழமையையே கண்டியரசன் அனுசரித்தபோதிலும், அவன் சர்வாதிகாரமும், சட்டங்களுக்கு மிஞ்சிய ஆணையும் உடையவனுயிருந்தானென இச்சாசனங்கள் கூறும். நிலங்களெல்லாம் அரசனுக்கே சொந்தமானவை. அவற்றில் குடியிருக்கும் பிரசைகள் அவற்றை ஆட்சிப்படுத்துவதானுல் அரசனுக்கு எவ்வகையிலாவது ஊழியம் செய்யவேண்டும். இக்காலத்தில் கூலியாகவோ சம்பளமாகவோ பணம் கொடுக்கப்படவில்லை. எனவே, தனது அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய பணியாளருக்கும், அவரவரது சேவைக்குத் தகுந்தபடி சீவனத்துக்காக அரசனுல் நிலங்கள் வழங்கப்பட்டன.

உதகம்பஹ, பல்லகம்பஹ என்ற இரு அதிகாரிகளே அரசனின் உயர்தர உத்தியோகஸ்தராவர். அவர்களுக்குக் கீழ் மாகாண தேசாதிபதிகளான ஆறு திசாவைகளும், இக்காலத்தில் 'ரட்டமகாத்மியா' என வழங்கப்படும் ரட்டருளர்களுமிருந்தனர். ரட்டருளர் என்போர் கண்டி

*'டச்சுக்காரர்', 'ஒல்லாந்தர்' என்ற இரு சொற்களும் ஒரே இனத்தவரையே குறிப்பனவாகும்.



6793—K

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராச்சியத்தின் ஐந்து பகுதிகளை ஆட்சி செய்வோர். இவ்வுத்தியோகத்தரெல்லாரும் நிருவாக விஷயங்களையும், நீதிபரிபாலனம் சம்பந்தமான அலுவல்களையும் புரிந்து வந்தார்கள். இவர்களே நாட்டின் ஒழுங்குக்கும் சமாதானத்துக்கும் பொறுப்பாளிகளாயிருந்ததோடு, அரசனுக்குச் செல்லவேண்டிய திறையெல்லாம் சரியாகக் கொடுக்கப்பட்டு வருகிறதா என்பதையுங் கவனித்து வந்தார்கள். இவர்களைவிட வருமானக் கணக்குகளையும், பிரசைகள் செய்யும் சேவைகளையும், போர்வீரரின் தொகையையும், துப்பாக்கி முதலிய ஆயுதங்களின் கணக்கையும், அரசனுக்குச் சொந்தமான ஏனைய தளபாடங்களின் கணக்கையும், பதிவுசெய்ய மொஹத்தலர் என்னும் கணக்காளரும் (காரியதரிசிகள்) இருந்தனர். இவர்களெல்லாரும் அரசனின் பொதுச்சபைக் கூட்டங்களுக்கும் பிரசன்னமாயிருப்பார்கள். முற்கூறிய இரு அதிகாரிகளும், நான்கு பெரிய திசாவைகளும், பிரதம கணக்காளருமே அரசனின் நிருவாகசபை அங்கத்தவராயிருந்தனர். அரசன் ஒவ்வொரு இடங்களுக்கும் விஜயஞ் செய்து வரும்பொழுதும், ஏனைய உத்தியோகத்தர்கள் கிராமங்களுக்கு உத்தியோக அலுவலாய்ப் போகும் போதும், அவர்களுக்கு உணவளிப்பதுமல்லாமல் அவர்களுடைய சாமான்களையும் அங்கங்கு அனுப்பிவைக்க வேண்டியது கிராமாதிகாரிகளின் கடமையாகும்.

அரசனுக்கு வேறும் அனேக சேவகர்களிருந்தார்கள். இவர்களிற் சிலர் அவனுடைய போர்வீரர்கள். சிலர் துப்பாக்கி முதலிய யுத்த உபகரணங்களைச் செய்வோர். சிலர் அரசனுக்குத் தேவையான மரங்களை வெட்டி உதவி வந்தார்கள். சிலர் யானை வேட்டையாடியும், முத்துக் குளித்தும், இரத்தினக்கற்கள் அரித்தும் வந்தார்கள். சிலர் கறுவாத் தொழில் செய்தனர். சிலர் கிராமத்து வேலைகள் செய்தார்கள். சிலர் அரசனுக்குத் தேவையான உனவுப் பொருள்களை உதவினர். வேறு சிலர் தொழிலாளிகளாக வேலை பார்த்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன், தனது சேவைக்காக வைத்திருக்கும் நிலங்கள் கபடகம் என வழங்கப்படும். இந்நிலங்களைக் குத்தகைக்குப் பெற்று கமக்காரர் பயிர் செய்வார்கள். அவனது வீட்டு வேலைக்குத் தேவையான வேலையாட்களை யெல்லாம் இவர்களே உதவிவந்தார்கள். விளையும் பொருள்களில் ஒரு பகுதி இவர்களுக்குக் கூலியாகக் கொடுக்கப்பட்டது. அரசனது அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்ட நிலங்கள் நிந்தகம் என வழங்கப்பட்டன. விஹாரைகட்கும் தேவாலயங்கட்கும் கொடுக்கப்பட்ட நிலங்களை விஹாரகம், தேவாலகம் என வழங்கினர். இந்நிலங்களும் குத்தகைக்கு விடப்பட்டன. சில நிலங்கள் சேவைகளைப் பாராட்டிச் சிலருக்குப் பரிசாக வழங்கப்பட்டன.

அரசனுக்கு நிலங்களிலிருந்து வருமானம் கிடைத்தது. வருடத்துக்கு இருமுறை அதிகாரிகள் அரசனுக்குத் தமது சன்மானத்தைத் தெரிவிக்க வரும்பொழுது திறை கொணர்ந்து கொடுப்பார்கள். ஆரம்பத்தில் அநேகமாய் சமான்களே கொணர்ந்து கொடுக்கப்பட்டன. பின்னர் வியாபார விருத்தியின் பயனாகப்போலும் பணம் கொடுக்கப்பட்டது. பூதல் வரியும் அரசனால் விதிக்கப்பட்டது. இதை மரளஎன்று கூறுப. (மரண வரி) ஒருவரிறந்தால் அவருடைய சொத்துக்களுக்கு உரிமையாக ஒருவருமில்லாத பட்சத்தில் அவை அரசனுக்கே சேர்க்கப்பட்டன. பூதல் வரியாக இறந்தவருக்குச் சொந்தமான அசைவுள்ள பொருள்களில் மூன்றிலொரு பகுதி அரசனால் சுவீகரிக்கப்படும். துறைமுகங்களில் சுங்க வரி விதிப்பதினாலும் ஏராளமான வருமானம் அரசனுக்குக் கிடைத்தது.

## II. போர்த்துக்கீச நிருவாக முறை

டொன் ஜுவான் தர்மபாலன் இறந்ததும் தாழ் பூமிப் பிரதேசங்களைப் போர்த்துக்கீசர் ஆண்டார்கள். அரசியல் நிருவாகத்தில் அவர்கள் முக்கியமான எவ்வித மாற்றங்களையுஞ் செய்யவில்லை. தமது தேசத்தை அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




டச்சுக்காரரின் யாழ்ப்பாணப் படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் திசாவனி எனக் கூறப்படும் நான்கு பிரிவுகளாகப் பாகுபடுத்தினர். இவை மாத்தறை, சப்பிரகமுவா, நான்கு கோறளை, சப்த கோறளை என்பனவாகும். இவற்றின் எல்லைகளெல்லாம் கொழும்பிலிருந்தே பிரியக்கூடியனவாயும் எல்லைப்படுத்தப்பட்டன. மாத்தறை திசாவனி தற்போதுள்ள கீழ் மாகாணத்தையும், கொலன்னு கோறளையையும், களுத்துறைப் பகுதியையும், சல்பதி கோறளையையும் கொண்டதாயிருந்தது. நான்கு கோறளை என்ற பிரிவு, கேகாலைப் பகுதியின் வடபாகத்தையும், சியாணு, ஹபிதிகம கோறளைகளையும் உள்ளடக்கியிருந்தது. சப்த கோறளை என்ற திசாவனி வடமேல் மாகாணத்தையும், அலுத்குறு கோறளையையும், வடமத்திய மாகாணத்தின் பெரும் பகுதியையும் உள்ளடக்கியிருந்தது. சப்பிரகமுவா திசாவனி மூன்று கோறளைகளையும், கேகாலைப் பகுதியிலுள்ள புலத்கமவையும், ஹேவகம கோறளையையும், இரத்தினபுரி பகுதியில் கொலன்னு கோறளை தவிர்ந்த ஏனைய பாகங்களையும் உள்ளடக்கியிருந்தது.

ஒவ்வொரு திசாவனியையும் ஒரு திசாவை ஆண்டு வந்தான். கோறளையை ஒரு கோருளை ஆட்சி செய்தான். கோறளையின் பிரிவுகளை அத்துக்கோருளைகள் ஆண்டு வந்தனர். கிராமங்களை மயேரல்லர் அல்லது காரியகரணர் என்போர் ஆண்டு வந்தனர். கொழும்பு ஒரு நகரசபையின் பரிபாலனத்திலிருந்தது. கறுவா வியாபாரத்தில் போர்த்துக்கீசர் மிகவுஞ் சிரத்தை யுற்றிருந்தபடியால் கறுவா உரிக்கும் தொழிலாளரிருக்கின்ற கிராமங்களை மேற்பார்வை செய்வதற்காக ஓர் உத்தியோகத்தரை நியமித்தார்கள். இவரை மஹாபட்ட தளபதி என்று கூறுப.

அரசனுக்குப் பதிலாகத் தளபதியதிகாரியென ஓர் உயர்ந்த உத்தியோகத்தர் மல்வானையில் இருந்தார். கோவையிலுள்ளவரும் போர்த்துக்கல் மன்னரின் ஆணையைச் செலுத்துபவருமான இராசப்பிரதிநிதியின் மேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையில் இவர் இருந்து வந்தார். இவர்களைவிட, வருமான உத்தியோகத்தர் என்ற முறையில் வெண்டர்டா பஸெண்டா என்றழைக்கப்படும் ஓர் உத்தியோகத்தரும், ஒவிடோர் என்றழைக்கப்படும் நீதிபதியும் அரசியல் உத்தியோகத்தராக இருந்தனர். யாழ்ப்பாண ராச்சியம் போரில் வெற்றி கொள்ளப்பட்டதாதலால் அங்கே வேறு விதமான அரசியல் நிருவாகம் நடைபெற்றது.

வருமானங்களை வசூல் செய்யும் விஷயத்தில் போர்த்துக்கீசர் சிங்கள முறையை மாற்றவில்லை. கோட்டைராச்சியம் போர்த்துக்கீசர் கைப்பட்டபொழுது, அவர்களுக்குக்கிடைத்த திறையிலும்பார்க்க அதிகமான திறையைப் பெறக்கூடியதாயிருந்தும், தேசத்தில் ஏற்பட்ட போரின் பயனாக எங்கும் குழப்பங் குடிகொண்டிருந்தபடியால் அவ்வாறு பெற முடியாததைத அறிந்தனர். பின்னர் சேனரதனுடைய ஆட்சியில் நாட்டில் சமாதானம் ஏற்பட்டதும் நிலங்களையும், அவை என்ன சேவைக்காக வழங்கப்பட்டன என்பதையும், அவைகளால் அரசாங்கத்துக்குச் செல்லவேண்டிய தொகைகளையும் பதிவு செய்தனர். இவ்வேலையை ஒரு போர்த்துக்கீச உத்தியோகத்தர் நான்கு சிங்களக் காரியதரிசிகளின் உதவியோடு செய்துவந்தார். அந்நால்வருள் குச ஜாதகமென்ற சிங்கள காவியத்தையும், கங்கர ஆராச்சியும் மாயா துன்னையும் நடத்திய கலகங்களை அடக்கிய கொன்ஸ்தான்தைன் டி சா என்ற சேனுவீரனின் அருஞ்செயல்களைக் கூறும் குஸ்தான்தினுஹதன என்ற நூலையும் எழுதிய அழகிய வண்ணன் என்பவரும் ஒருவராகும்.* வருமானக் கணக்குகள் பதிவுசெய்த முறையிலேயே இவையும் பதிவு செய்யப்பட்டன. போர்த்துக்கீசர் இவற்றைத் தமது பாஷையில் தோம்புகளென வழங்கினர்.

ஏனைய நிர்வாக விஷயங்களிலும் சனங்களின் புராதன வழக்கங்களையே அவர்கள் அநேகமாய்க் கைப்பற்றி வந்தார்கள். சாதிக் கட்டுப்பாடுகள் அநேகமாய்க்

* இதைச் சிங்களத்தில் லேகம் மிதி என வழங்குப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கவனிக்கப்பட்டுவந்தன. அறியாமையாலும் சிலவேளை களில் தமக்கேற்படும் வசதியை முன்னிட்டும் இச்சாதி யாசாரங்கள் சிலவேளைகளில் அவர்களால் புறக்கணிக்கப் பட்டு வந்ததுமுண்டு.

சேனை சம்பந்தமான விஷயங்களில் தளபதியே பிர தானமான உத்தியோகத்தராயிருந்தார். இவர் மேனிக் கடவர என்னுமிடத்தில் தமது தலைமைக் காரியாலயத்தை நிறுவியிருந்தார். போர்த்துக்கீசத் துருப்புக்களில் கல் யாணமான சிப்பாய்களும் பிரமச்சாரிகளுமாக இருதிறத் தவரிருந்தனர். முன்னையோர் அவதியான காலங்களில் போர் செய்வார்கள். மற்றவர்களே நிரந்தரமான சேனையைச் சேர்ந்தவர்கள். சமாதான காலங்களில் இவர் கள் ஊரில் திரிந்து சனங்களைக் கொள்ளையடிப்பார்கள். படையில் சேர்ந்த இலங்கைச் சிப்பாய்கள் லஸ்கரீன் என அழைக்கப்பட்டனர். இவர்கள் கண்டியரசனின் போர் வீரரையே ஒத்திருந்தனர். இவர்களது தலைவர்கள் இக்காலத்தில் விக்கிரமசிங்கர் என அழைக்கப்பட்டனர்.

## III. ஒல்லாந்தர் அரசியல் முறை

நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் இலங்கையி லிருந்த டச்சு கிழக்கிந்திய ஐக்கிய வியாபார சங்கத்தின் அரசியல் முறை, கண்டி அரசியல் முறையைப்போலவே யிருந்தது. திசாவை முதலிய உத்தியோகத்தர் முன்னி ருந்தபடியே நியமிக்கப்பட்டனர். திறைகளும் பழைய 'மானியகால' முறைப்படியே வசூலிக்கப்பட்டன. போர்த்துக்கீசரைப்போலவே இவர்களும் தோம்புகள் தயாரித்தனர். ஆனல் அவர்களிலும் பார்க்க இவர்கள் அவற்றைச் செவ்வனே தயாரித்தார்கள். பிரசைகளின் குடிநிலங்களை அளந்து கணக்கிடக்கூட இவர்கள் ஆரம் பித்தனர். ஆனல் சனங்கள் அதை விரும்பாததால் அவ்வேலை இடையில் விடப்பட்டது. போர்த்துக்கீசர் தயாரித்த நிலத்தோம்புகளோடு இவர்கள் தலைமுறை களைப் பதிவுசெய்யுந் தோம்புகளையும்—அதாவது நிலத் தோம்புகளில் குறிப்பிடப்பட்ட சொந்தக்காரரின் தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




டச்சுக்காரரின் இலங்கைப் படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளையும் பதிவு செய்தனர். நிலங்களின் உண்மையான சொந்தக்காரர் யாரென்பதை இத்தோம்புகள் குறிப்பிட்டதோடு, அந்நிலங்களுக்கு உரிமையில்லாதவர்கள் அவற்றை அபகரித்துக்கொள்ளாவண்ணமுந் தடைசெய்தன. டச்சுக்காரர் பள்ளிக்கூடத் தோம்புகளென இன்னொருவகையான தோம்புகளையும் தயார் செய்தனர். இவற்றில் கிறிஸ்தவ குடும்பத்திலுள்ள எல்லாருடைய பெயர்களும் ஏனைய விபரங்களும் பதிவுசெய்யப்பட்டன.

ஆனால் போர்த்துக்கீச நிருவாகத்துக்கு சில மாற்றங்களை டச்சு அரசியல் முறையிற் காணலாம். இவர்களது அரசாங்கத்தின் தலைவர் தேசாதிபதியென அழைக்கப்பட்டார். இவர் கொழும்பில் வசித்தார். ஒல்லாந்திலிருக்கும் கிழக்கிந்திய வர்த்தக சங்க உத்தியோகத்தரின் ஆணையின் கீழ், பற்றேவியாவிலிருந்து வந்த மகா தேசாதிபதியின் மேற்பார்வையின் கீழ் இவர் இருந்து வந்தார். முக்கியமான பட்டினங்களான யாழ்ப்பாணமும் காலியும் தளபதிகளால் ஆட்சிசெய்யப்பபட்டன. உள்நாட்டுப் பகுதிகள் சிங்களர் காலத்திலிருந்ததுபோல் திசாவைகளால் ஆளப்பட்டன. இக்காலத்தில் 'சிவில் சேர்விஸ்' இருப்பதுபோல அக்காலத்திலும் 'பொலிட்டிகல் சேர்விஸ்' என ஒருவித உத்தியோகமுறை இருந்தது. இதில் பல வகுப்புகளும் தரங்களுமிருந்தன. உதாரணமாக உயர் வர்த்தகர், வர்த்தகர், கீழ் வர்த்தகரென மூன்று பதவிகளிருந்தன. இவர்களுடைய வேலை பிரதானமாக அரசியல் நிருவாக வேலையாயிருந்தபோதிலும், வியாபார சங்கமொன்றின் ஊழியர்களாயிருந்தபடியால் இவர்களுக்கு வியாபார சம்பந்தமான பதவிப் பெயர்கள் கொடுக்கப்பட்டன. மேலும் தரைப்படை ஊழியர், கடற்படை ஊழியர், கைவினைஞர், மத ஊழியர் எனப் பல குழுவினருமிருந்தார்கள். டச்சுச் சேனையில் ஐரோப்பியரும், ஜாவா, பண்டாத் தீவுகளிலிருந்து வந்தோரான மலாயரின் மூதாதைகளும், சிங்களரும், தமிழருமிருந்தனர். ஒல்லாந்தரும் சேர்க்கப்பட்டிருந்தனர். இவர்கள் நெருக்கடியான காலங்களில் போர்செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காலிக் கோட்டையும் அதன் சுற்றுப்புறமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் இந்துச் சட்டங்களின்படியே ஆட்சிசெய்யப்பட்டு வந்தது. தென்னிந்தியாவின் தெற்குப் பகுதிகளும் இலங்கைத் தேசாதிபதியின் ஆட்சியிலேயே இருந்து வந்தன.


## IV. போர்த்துக்கீச, டச்சுக் கோட்டைகள்

இலங்கைக்குப் போர்த்துக்கீசர் வந்தபொழுது, அவர்கள் கைப்பற்றிய பிரதான நகரங்களை எல்லாம் கடலிலிருந்து முஸ்லிம்களும் சிங்களரும் தாக்காமல் பாதுகாப்பதற்குக் கோட்டைகள் கட்டினார்கள் என்பதை ஏற்கெனவே அறிந்திருக்கிறோம். இக்கோட்டைகள் போர்வீரரின் அரணாகவும், சிலவேளைகளில் உணவு, ஆயுதங்கள், வியாபாரப் பொருள்கள் ஆகியவற்றைச் சேமித்து வைக்கக்கூடிய பண்டகசாலைகளாகவும் உதவின. கண்டியரசரின் படையெடுப்பைத் தடுப்பதற்காக உள்நாட்டில் முக்கியமான எல்லைகளில் சில கோட்டைகளையுங் கட்டினர்.

முக்கியமான துறைமுகங்களிலேதான் சிறந்த கோட்டைகள் கட்டப்பட்டன. கொழும்பே மிகப் பிரதானமான பட்டினமாயிருந்தபடியால் அங்கேயே மிகப் பெரிய கோட்டையொன்று கட்டப்பட்டது. அடுத்த பெரிய கோட்டைகள் காலியிலும் யாழ்ப்பாணத்திலும் கட்டப்பட்டன. ஏனைய இடங்களில் மிகச் சிறிய கோட்டைகளும் தம்ப அரண்களுமே அமைக்கப்பெற்றன.

சிற்ப வேலைகளில் போர்த்துக்கீசர் அவ்வளவு திறமையுடையவர்களல்ல. ஆசியா வாசிகளுடனேயே முதலில் அவர்கள் சண்டை செய்ததால் வலிமையுள்ள, பெரிய கோட்டைகளைக் கட்டவேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படவில்லை. சுவர்களெல்லாம் சாதாரணமாக களிக்கினால் கட்டப்பட்டன. சில சுவர்கள் மாத்திரமே கல்லால் அமைக்கப்பட்டன. சுவரைக் குறிக்கும் தாப்பே என்ற சிங்கள வார்த்தை போர்த்துக்கீசச் சொல்லடியாகப் பிறந்ததாகும். அதுபோலவே வீட்டுப் பலகணியைக் குறிக்கும் யன்னல் என்ற சொல்லும் போர்த்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நீர்கொழும்பிலுள்ள டச்சுக் கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கீசத் திசைச்சொல். இவர்களே முதல் முதல் வீடுகட்கு யன்னல் அமைக்கும் முறையையும், பீலி ஓடுகள் செய்யும் முறையையும் கொண்டுவந்தார்கள்.

டச்சுக்காரரோ மிகத் திறமையுடைய சிற்பிகளாயிருந்தனர். இவர்களது தாய்நாடாகிய ஒல்லாந்தின் பெரும் பகுதி முதலில் சதுப்பு நிலமாகவும் கடலாகவுமிருந்தது. அவர்கள் அவற்றை நிரப்பி நாடாக்கிய பயிற்சியால் வலியுள்ள பெரிய கட்டிடங்களைக் கட்டும் முறையையும் கற்றுக்கொண்டார்கள். மேலும் அவர்கள் சிங்களருடைய எதிர்ப்பை மாத்திரமின்றி போர்த்துக்கீசர், பிரெஞ்சுக்காரர், பிரித்தானியர் ஆகியோரின் எதிர்ப்பையும் நிருவகிப்பதற்கு வலிய கோட்டைகளைக் கட்ட வேண்டியதவசியமாயிருந்தது. போர்த்துக்கீசரின் கோட்டைகளை டச்சுக்காரர் திருப்பிக் கட்டியபொழுது, ஐரோப்பாவில் 17-ம் நூற்றுண்டில் புதிய முறையில் விசாலமான கொத்தளங்களோடும், பீரங்கிகளை சுலபமாக வைத்து வெடிக்கக்கூடிய மாதிரி கோட்டையின் முடக்குகளில் முனைப்புகளையும் அமைத்துக் கட்டப்பட்ட கோட்டைகளைப் பின்பற்றிஞர்கள்.

கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் டச்சுக்காரர் தமது பெரிய கோட்டைகளைக் கட்டினர். மாத்தறையில் உள்ள கோட்டை வான்எக் என்னும் தேசாதிபதியால் கட்டப்பட்டது. புத்தள வியாபாரத்தை மேற்பார்வை செய்வதற்காக கற்பிட்டியில் ஒரு கோட்டை கட்டப்பட்டது. யாழ்ப்பாணத் துறைமுகத்தைக் காப்பாற்றும் நோக்கமாகவே ஊர்காவற்றுறையில் ஒரு கோட்டை நிறுவப்பட்டது. நீர்கொழும்பு, மட்டக்களப்பு, திருக்கோணமலை, மன்ஞர், களுத்துறை ஆகிய இடங்களிலும் சில பிரதானமான கோட்டைகளிருந்தன. உள்ளூரிலும் டச்சுக்காரர் பல கோட்டைகளைக் கட்டினர். சிங்களப் படைகள் உள்ளூரிலிருந்து வந்து தங்களைத் தாக்காதபடி பாதுகாப்பதற்காக உள்ளூரிலிருந்து கரைப்பகுதிக்கு வரும் பாதைகளில் முக்கியமான இடங்களில் இவை அமைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டச்சுக் கட்டிடங்கள் அநேகமாய் கிரேக்க சிற்ப முறையையே அனுசரித்துக் கட்டப்பட்டன. காலியிலும் யாழ்ப்பாணத்திலும் கட்டப்பட்ட டச்சுத் தேவாலயங்களே இதற்குச் சான்று பகரும். ஸ்டீன் வான் கொலெனெஸ் என்ற தேசாதிபதி (1753-1765) யால் கட்டப்பட்ட கொழும்பு ஆதிருப்பள்ளித் தெருவிலுள்ள தேவாலயத்தில் இத்தாலிய சிற்ப முறையுங் கலந்திருக்கிறது. விருந்தை என்று சொல்லப்படும் தாழ்வாரத்துக்கு சிங்களத்தில் ஸ்தோப்புவ என்ற டச்சுச் சொல் வழங்கப்படுகிறது. மேல்மாடியைக் குறிக்கும் சொல்



காலியிலுள்ள கோட்டையின் கொத்தளம்

தாரே என்ற பதமும் படிக்கட்டைக் குறிக்கும் தரப்புவ என்ற பதமும் டச்சு வார்த்தைகளிலிருந்தே வந்தன. கக்கூசு, சாக்கு என்று இப்போது தமிழில் வழங்கப்படும் சொற்களும் டச்சு மொழியில் இருந்தே வந்தன.

## V. டச்சுக்காரரதும் போர்த்துக்கீசரதும் மதப் பிரசாரம்

போர்த்துக்கீசரும் டச்சுக்காரரும் தங்களது சமயப் பிரசாரத்தினாலே தமது நாகரிகத்தையும் பழக்க வழக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்களையும் இலங்கை வாசிகளிடத்துப் பரப்பி வந்தார்கள். போர்த்துக்கீசர் இலங்கை மக்களிடையே ரோமன் கத்தோலிக்க சமயத்தை எவ்வாறு பரப்பினார்கள், எத்தனை ஆயிரம் பேரைத் தமது சமயத்தில் சேர்த்துக் கொண்டார்கள் என்பதைப்பற்றியெல்லாம் ஏற்கெனவே கூறினோம். இம்மதமாற்றம் மதம் மாறியவர்களிடையே மாத்திரமன்றி, தாழ்பூமியில் பௌத்த, ஹிந்து சமயங்களை அனுஷ்டித்து வாழ்ந்துவந்தவர்களிடத்திலும் மாற்றங்களை உண்டாக்கியது.


ரோமன் கத்தோலிக்க குருமார், தமது மதத்தைப் பரப்புவதற்கு மிக ஊக்கத்தோடு உழைத்து வந்ததுமன்றி, சனங்களைக் கவரக்கூடிய முறையில் போதனை செய்தும் வந்தார்கள். தமது தேவாலயங்களுக்கு அடுத்தாப்போல் பள்ளிக்கூடங்களைக் கட்டி, அங்கே பிள்ளைகட்கு கிறிஸ்த சமய அறிவையும் ஊட்டி வந்தார்கள். நோயுற்ற காலங்களில் இக்குருமார் சனங்களுக்கு உதவி செய்து வந்ததுமல்லாமல், போர்த்துக்கீச உத்தியோகத்தர்களின் துர்நடத்தைகளையும் இவர்கள் தடுக்கக்கூடியதாயிருந்ததால் சனங்கள் இவர்களை விரும்பினார்கள். சாதிக்கட்டுப்பாட்டின் கொடுமையைக்கூட இவர்களது பிரசாரம் ஓரளவுக்குக் குறைக்கக்கூடியதாயிருந்தது.

பௌத்த சமயம் துறவறப்போக்குடைய சமயமென்றும், பௌத்த பிட்சுக்கள் பொதுசனங்களின் வாழ்க்கையை மறைமுகமாகவே பாதிக்கக்கூடியவர்களாயிருந்தனர் என்றும் ஏற்கெனவே கூறினோம். ஆனால் ரோமன் கத்தோலிக்க குருமார், ஐரோப்பாவில் இக்காலங்களில் நடைபெற்றதுபோல் சனங்களின் நடைமுறைகளை நேர்முகமாக மேற்பார்வை செய்துவந்தார்கள். சில குருமார் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு விலங்குகளும் மறியல் வீடுகளும் ஏற்படுத்தினர். உயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் குற்றமிழைத்தால் தண்டம் விதிக்கப்படும். வறியவர்கள் பிரார்த்தனைக்கு வராமலோ, அல்லது வேறுவிதமான நடைப்பிசகாகவோ குற்றஞ் செய்தால் தண்டிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவர். இவ்வாறு குற்றஞ் செய்வோரைத் தேடிப் பிடித்துத் தண்டிப்பதற்கு ஒவ்வொரு தேவாலயமும் மெரின்ஹோ என்றழைக்கப்படும் ஓர் உத்தியோகத்தரை நியமித்தது.

டச்சுக்காரரும் தமது சீர்திருத்தப்பட்ட டச்சுத் திருச்சபையின் மூலம் சனங்களிடத்துத் தமது சமயத்தைப் பரப்பி வந்தார்கள். ஆனால் போர்த்துக்கீசரளவு சமய குருமார் இவர்களிடத்திருக்கவில்லை. இவர்கள் பிரதானமாக பாடசாலைகளின் மூலமே தமது பிரசாரத்தை நடத்தி வந்தனர். இவர்களுடைய திருச்சபையும் ஒரு அரசாங்க இலாகாவைப்போலவே நடத்தப்பட்டு வந்தது. சனங்களுடைய ஆன்மார்த்த வாழ்வை சீரடையச் செய்வதோடமையாது பௌத்த, இந்து மதங்களை நாட்டிலிருந்து வேரோடு களைந்து, இஸ்லாம் மதத்தைப் பரப்பவிடாமல் தடைசெய்து தமது ஆட்சியை நீடிப்பதே இவர்களுடைய கல்விக் கொள்கையாயிருந்துவந்தது.



காலி டச்சுத் தேவாலயம்

தமது திருச்சபையைச் சேர்ந்தவர்களுக்கு டச்சுக்காரர் விசேஷ சலுகை காட்டிவந்ததோடு, அவர்களுக்கே அரசாங்க உத்தியோகங்களும் வழங்கினர். அவர்களிடமிருந்து குறைந்த வரியும் வசூலிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பயனுக அநேகம் பேர் ஞானஸ்நானம் பெற்று, வெளியே கிறிஸ்தவர்களைப்போலக் காட்டிக்கொண்டு, உள்ளுக்கு தத்தம் மதானுஷ்டானங்களை அனுசரித்தார்கள். தேவாலயங்கட்கு அவர்கள் ஒழுங்காகப் போய் வந்தனர். ஏனெனில், டச்சுக்காரரும் தமது பிரார்த்தனைகட்கு வராதவர்களைத் தேடிப்பிடித்துத் தண்டம் விதிக்க மெரின்ஹோா என்ற உத்தியோகத்தரை நியமித்தார்கள். போர்த்துக்கீசரும் தம்மதத்துக்கு மாறினவர்கட்கு விசேஷ சலுகை காட்டிவந்தனர். கத்தோலிக்கரை டச்சுக்காரர் எவ்வளவு துன்பத்துக்காளாக்கிய போதிலும், அவர்கள் தமது கொள்கையில் மாருதிருந்ததை நோக்குமிடத்து, அவர்கள் மனப்பூர்வமாகவே மதமாற்றஞ் செய்தார்கள் என்பது தெரியவரும்.

தங்களுடைய மதத்தின்படியே தங்கள் தேச எல்லைக்குள் பகிரங்க பிரார்த்தனை நடக்கவேண்டுமென டச்சுக்காரர் விரும்பினர். ரோமன் கத்தோலிக்கர் விஷயத்திலும் முஸ்லிம்கள் விஷயத்திலும் அவர்களைத் துன்புறுத்தினர். தமது எல்லைக்குள் கத்தோலிக்க குருமாராவது முஸ்லிம் கதீப்புகளாவது பகிரங்கப் பிரார்த்தனை செய்வதைத் தடுத்ததோடு அத்தகையோர் அங்கு பிரவேசிக்கக் கூடாதெனவும் கட்டளையிட்டனர். அரசியல் விஷயங்கள் காரணமாகவே ரோமன் கத்தோலிக்கர் துன்புறுத்தப்பட்டனர். கத்தோலிக்கர் கோவையிலிருக்கும் மற்றக் கத்தோலிக்கரோடு சேர்ந்து இலங்கையில் டச்சு ஆட்சிக்கு முடிவுதேடுவரென நினைத்தார்கள். ஆனுல் கீழைத்தேசங்களில் போர்த்துக்கீசரின் ஆதிக்கம் குன்றி டச்சு ஆட்சிக்கு ஆபத்துண்டாக்க முடியாதிருந்தபோது, அவர்களுக்கெதிராய் ஏற்பட்ட இந்நடவடிக்கைகள் கைவிடப்பட்டன. மேலும் நாயக்க மன்னர்கள் கத்தோலிக்கரை இம்சைப் படுத்தினர். அதனுல் அவர்கள் கண்டி ராச்சியத்தில் இருந்து டச்சுக்காரருக்கு எதிராக வேலைசெய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

பொருளாதாரக் காரணங்களை முன்னிட்டே முஸ்லிம்கள் டச்சுக்காரரால் துன்புறுத்தப்பட்டனர். போர்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


துக்கீசர் காலத்தில் முஸ்லிம்கள் எவ்வாறு உள்நாட்டு வியாபாரம் முழுவதையும் நடத்தி வந்தனர் என்பதைப் பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டோம். கொன்ஸ்தாந்தைன் டீ சா என்பவனது காலத்தில் இவர்கள் போர்த்துக்கீசரின் நாடுகளிலிருந்து கலைக்கப்பட்டனர். அதன்பின் இவர்கள் கண்டி ராச்சியத்தில் மட்டும் வியாபாரத்தை நடத்தி வந்தனர். ஆனால் போர்த்துக்கீசர் கலைக்கப்பட்டதும் இவர்கள் மறுபடியும் தாழ்பூமிப் பிராந்தியங்களுக்கு வந்தார்கள். போர்த்துக்கீசரைப்போல் டச்சுக்காரர் முஸ்லிம்களை அவ்வளவு கடுமையாக நடத்தாதபோதிலும், இவர்கள் டச்சுக்காரருடன் வியாபாரத்தில் போட்டியிட்டமையால் வியாபார நடவடிக்கைகளையே குறைக்கப் பார்த்தார்கள். இவர்கள் இறக்குமதி செய்யும் பொருள்கள்மீது ஏராளமான வரி விதித்தனர். பட்டினங்களில் வசிப்பதற்கு இவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. சில பட்டினங்களுள் இவர்கள் விசேஷ அனுமதியின்றி பிரவேசிக்க முடியாதிருந்தது.

## VI. போர்த்துக்கீச, டச்சு ஆட்சியின் வேறு சில அம்சங்கள்

போர்த்துக்கீச, டச்சு ஆட்சியின் பயனாக இலங்கை வியாபாரம் விருத்தியடைந்தது. போர்த்துக்கீசர் காலத்தில் இவ்வியாபார விருத்தியினால் சனங்களது வாழ்க்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. போர்த்துக்கீசர் போர் செய்வதிலேயே அதிகம் ஈடுபட்டிருந்ததால் நாட்டின் வளத்தைப் பெருக்குவதற்குரிய வசதிகள் அவர்களுக்கிருக்கவில்லை. ஆனால் டச்சுக்காரர் சமாதானத்தையே மேற்கொண்டு, தம்மாலானவரை விவசாயத்தை விருத்திசெய்தார்கள். கறுவாவுக்குக் கண்டி ராச்சியத்தை நம்பியிராமல் பல இடங்களில் கறுவா பயிர்செய்தார்கள். நெல், மிளகு, கோப்பி, தென்னை, ஏலம் முதலியவற்றைச் சாகுபடிசெய்ய ஊக்கமளித்தனர். மொறட்டுவையில் தச்சு வேலையைத் தொடக்கினார்கள். இற்றை நாள்வரை அத்தொழில் அங்கே நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று வளர்ந்து வருகிறது. போக்குவரத்துச் சாதனங்களைச் சீர்திருத்தி, அதன் பயனுக வியாபாரத்தையும் அரசியல் நிருவாகத்தையும் சிறப்புறச் செய்தனர். பிரதானமான பட்டினங்களைத் தொடுத்து வீதிகளை அமைத்தார்கள். ஒல்லாந்தில் பெற்ற அனுபவத்தைக்கொண்டு புத்தளத்துக்கும் கொழும்புக்குமிடையில் உள்ள கால்வாயைத் திருத்தியமைத்ததோடு களனி கங்கையையும் தொடுத்துப் புதிய கால்வாய்களை வெட்டினர்.



நீர்கொழும்பு டச்சுக் கால்வாய்

டச்சுக்காரரால் கட்டப்பட்ட குஷ்டரோக நிலையத்தைப் பற்றியும், அவர்களால் கொண்டுவரப்பட்ட சட்டச் சீர்திருத்தங்களைப்பற்றியும் முன்னெரு அத்தியாயத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். அவர்கள் 17-ம் நூற்றுண்டில் நடத்திய ஆட்சி ஒரு புதிய கொள்கையை உடையதாயிருந்தது. முன்னுண்ட சிங்கள மன்னர்களும் போர்த்துக்கீச தேசாதிபதிகளும் சனங்களின் உரிமையைப்பற்றிக் கவனிக்கவுமில்லை; அவர்களை அன்போடு ஆளவேண்டியது தமது கடமை என்பதை உணரவுமில்லை. சிறிய குற்றங்களுக்குக்கூட கொடிய தண்டனைகள் விதிக்கப்பட்டன. டச்சுக்காரரும் அவ்வாறு செய்துவந்தனர். ஆனல் சனங்களுக்கு மிக நிட்டூரமான தண்டனைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதித்துக் கொடுங்கோல் புரிந்த வூயிஸ்ட் என்பவனை டச்சுக்காரர் சிரச்சேதஞ் செய்ததிலிருந்து, அவர்கள் ஐரோப்பாவில் பரவிவந்த சீவகாருண்யக்கொள்கையால் பாதிக்கப்பட்டிருந்தனரென்பதை அறியலாம்.

கடதாசியை முதல் முதல் இலங்கையில் உபயோகித்தவர்கள் போர்த்துக்கீசரே.* ஆனால் அச்சியந்திரத்தை டச்சுக்காரரே இலங்கைக்குக் கொண்டுவந்தனர். †விவிலிய வேதத்தில் பாடசாலை மாணவர்க்குரிய பகுதிகளே ஆரம்பத்தில் அச்சடிக்கப்பட்டன. இலங்கையில் பிரசுரிக்கப்பட்டுவரும் ஏராளமான நூல்களும் பத்திரிகைகளும் அச்சியந்திரத்தின் பயனை எடுத்துப் பகரக் கூடியனவாயிருக்கின்றன.

வெடிமருந்தின் உபயோகத்தைச் சனங்கள் அறிந்தார்கள். அச்சியந்திரங்களால் பயனடைந்தார்கள். ஐரோப்பாவில் நடைபெற்ற மதச்சீர்திருத்தங்களும், அதற்கெதிராக ரோமன் கத்தோலிக்கர் தொடக்கிய எதிர்க்கிளர்ச்சியும் எல்லாம் சனங்களைப் பாதித்தன. ஆனால் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் பயன் இலங்கையில் இக்காலத்தில் ஏற்படவில்லை. மிகச் சிலரே ரோமன் கத்தோலிக்க பாடசாலைகளிலும் (செமினரி), புரட்டஸ்தாந்திய பாடசாலைகளிலும் லத்தீன், கிரேக்கமாகிய பாஷைகளைப் பயின்றனர். ஆனால் சனங்களில் மேல் வகுப்பார்கூட புராதனமான எண்ணப்பாங்குடையவராகவேயிருந்தார்கள். ஆனால் இன்னொரு முறையில் இம்மறுமலர்ச்சியால் இலங்கைக்கு நன்மையுண்டானது. இலங்கையில் தாம் நடத்திய ஆட்சியைப் பற்றிய சரித்திரத்தைப் போர்த்துக்கீசரும் டச்சுக்காரரும் எழுதினார்கள். குவேய்ரோஸ் என்ற போர்த்துக்

*கடதாசி என்ற தமிழ்ச் சொல் (சிங்களததிலும் கடதாசி) போர்த்துக்கீசச் சொல்லே.

†விவிலிய வேதத்தில் வழங்கப்படும் பெயர்கள் டச்சுக்காரர் உச்சரிப்பதுபோலவே இன்றும் சிங்களத்தில் உச்சரிக்கப்படுகின்றன. கிறிஸ்து சமயத்தைத் தழுவிய பின்னரே சிங்களர் டச்சு, போர்த்துக்கீசப்பெயர்களைத் தமக்கு இட்டுக்கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீசச் சரித்திரகாரர் 'லௌகீக, பரமார்த்திகத்துறை யிரண்டிலும் இலங்கையை வெற்றி பெற்ற வரலாறு' என்ற நூலை எழுதினார். பால்தியஸ், வலன்டைன் என்ற டச்சுக்காரரும் சரித்திரமெழுதினர். ஆனால் இவர்கள் மகாவம்சம்போலச் சரித்திரமெழுதிய புராதன ஐரோப்பிய பௌராணிகரைப் பின்பற்றவில்லை. ரோம, கிரேக்க சரித்திரக்காரரைப் பின்பற்றி, இவர்கள் இக்காலச் சரித்




போர்த்துக்கீச உடையில் டோனா கதரினா

திரத்தைப் படிப்பதற்குப் பயனுள்ள விஷயங்களை எழுதியிருக்கிறார்கள். இம்முறையில் மகாவம்சக்காரரிலும் இவர்கள் எழுதிய விஷயங்கள் சரித்திரங் கற்பதற்குப் பயனுள்ளன.

சனங்களின் பொருளாதார அபிவிருத்திக்கும் கல்வி வளர்ச்சிக்கும் போர்த்துக்கீசரை விட டச்சுக்காரர் அதிக வேலை செய்திருக்கிறார்கள். ஆனால் இவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கீசரைப்போலச் சனங்களோடு நெருங்கி ஊடாடவில்லை. சிங்களப் பெண்களையாவது தமிழ்ப் பெண்களையாவது விவாகஞ்செய்யுமாறு போர்த்துக்கீசர் ஊக்கப்படுத்தியதுமல்லாமல், கிறிஸ்தவ சமயத்தை அனுஷ்டிக்கும் இலங்கையருக்கு உயர் பதவிகளையும் வழங்கினார்கள். ஆனால் டச்சுக்காரர் அவ்வாறு கலப்பு மணஞ்செய்வதை தடுத்ததோடு உயர் பதவிகளை ஐரோப் பியருக்கென ஒதுக்கியும் வைத்தனர். இதன் பயனாக போர்த்துக்கீச பாஷையையும், நடை, உடை, பாவனை களையும் பல சிங்களரும் தமிழரும் கைக்கொண்டனர். ஆனால் வெகு சிலரே டச்சுப் பாஷையையும் நடை, உடை, பாவனையையும் மேற்கொள்ளக்கூடியதாயிருந்தது.

டச்சுக்காரரதும் போர்த்துக்கீசரதும் வருகையால், இது காறும் இந்திய நாகரிகத்தையே பிரதானமாகப் பின்பற்றிய இலங்கையர், ஐரோப்பிய நாகரிகத்தை மேற் கொள்ள முற்பட்டார்கள். இம்மாதிரியான மேலைத் தேச நாகரிகம் இலங்கையில் பல மாற்றங்களை உண்டு பண்ணியது. 19-ம், 20-ம் நூற்றாண்டுகளில் ஐரோப் பாவில் ஏற்பட்ட பெரிய மாற்றங்களைப்பற்றியும், இலங்கைக்கும் ஐரோப்பாவுக்குமேற்பட்ட தொடர் பினால், பிரித்தானியர் ஆட்சியில் இலங்கை மேலும் எவ்வளவுக்கு மாற்றமடைந்ததென்பதைப்பற்றியும் அடுத்த நூலில் கூறுவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாக்கள்

குறிப்பு:—மாணவர் தாமாக விஷயங்களை ஆலோசனை செய்யும்படி உற்சாகப்படுத்துவதற்காக எத்தகைய வினாக்களைக் கேட்கலாமென உபாத்திமாருக்கு வழிகாட்டும் முறையில் இவ்வினாக்கள் ஈண்டுக் குறிப்பிடப்படுகின்றன. பரீட்சைகளோடு இக்கேள்விகள் சம்பந்தப்பட்டவையல்ல.

## முதலாம் அத்தியாயம்

1. ஐரோப்பிய வியாபாரிகள் கீழ்த்திசை நாடுகளோடு வியாபாரஞ் செய்ய ஏன் விரும்பினார்கள்?

2. 15-ம், 16-ம் நூற்றாண்டுகளில் வியாபார முறைகளில் என்ன மாற்றங்கள் கவனிக்கத்தக்கன? இம்மாற்றங்களெவ்வாறுண்டாயின?

3. உலகப் படமொன்று கீறி, இந்நூலில் குறிப்பிடப்பட்ட பெரிய ஆராய்ச்சி யாத்திரை (Exploration) களின் மார்க்கத்தையும், அவை நடந்த காலத்தையும், யாத்திரை செய்தோரின் பெயர்களையும் குறிப்பிடுக.

4. கீழ்த்திசை நாடுகட்குச் செல்லும் மார்க்கத்தைக் கண்டறிய கொலம்பஸ் தவறியதேன்?

5. 16-ம் நூற்றாண்டில் ஸ்பானியா பெரிய நாடானதற்குக் காரணமென்ன? ஸ்பானிய அரசர்கள் ஐரோப்பாவெங்கும் தமது ஆதிக்கத்தைச் செலுத்த ஏன் தவறினார்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் அத்தியாயம்

1. மத்திய கால ஆரம்பத்தில் ஐரோப்பாவில் கல்வி குன்றியதற்குக் காரணமென்ன? பின்னர் அக் கல்வி எவ்வாறு, எவ்வளவு தூரம் விருத்தி யடைந்தது?

2. 'மறுமலர்ச்சி' (Renaissance) என்ருல் என்ன? விளக்குக.

3. மறுமலர்ச்சிக் காலத்தில் அறிவுத்துறையில் புதிதாக என்னென்ன கண்டுபிடிக்கப்பட்டன? இவற்ருல் ஏற்பட்ட பயன் என்ன?

4. புரட்டஸ்தாந்திய மதச்சீர்திருத்தம் ஏற்பட்ட தற்குக் காரணமென்ன?

5. இச்சீர்திருத்தத்தை எதிர்க்கக் கத்தோலிக்க திருச் சபை யாது செய்தது?

## மூன்ரும் அத்தியாயம்

1. ஸ்பானியா ஒரு தேசமாக எவ்வாறு ஐக்கியப் பட்டது?

2. ஐந்தாவது சாள்ஸ் எவ்வாறு வலிமைமிக்க ஒரு அரசனுனன்?

3. பிரெஞ்சு மன்னர் தமது நாட்டை எவ்வாறு அடக்கி யாண்டனர்?

4. முப்பதாண்டு யுத்தத்தின் விளைவென்ன?

5. 17-ம் நூற்ருண்டில் ஸ்பானியாவின் ஆதிக்கம் எவ்வாறு குறைந்தது?

## நான்காம் அத்தியாயம்

1. 'மத்திய வகுப்பா'ரென்பார் யாவர்? உமது கிரா மத்தில் அவ்வித வகுப்பாருண்டா? அப்படி யாஞல் எத்தகைய மக்கள் அவ்வகுப்பிலிருக்கின் றனர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 17-ம் நூற்றுண்டில் பிரெஞ்சு மந்திரிகள் பிரான்சுக்கியற்றிய சேவை என்ன?

3. பதினலாம் லூயி 'பெரிய சக்கரவர்த்தி' என ஏன் அழைக்கப்பட்டான்?

4. பிரித்தானியர் முதல் ஒல்லாந்தருக்கெதிராக யுத்தஞ் செய்து பின் அவர்களுக்குப் படைத்துணை செய்ததேன்?

## ஐந்தாம் அத்தியாயம்

1. ஆங்கில சிம்மாசனத்தைத் தனது பிற்சந்ததியாரே பெறக்கூடியதாய் ஏழாம் ஹென்ரி எவ்வாறு பாதுகாப்புச் செய்தான்?

2. எட்டாவது ஹென்ரி பாப்பாண்டவருடன் ஏன் கோபித்தான்?

3. ஸ்ருவர்ட் வம்சத்து முதலிரண்டு அரசர்களைச் சிலர் வெறுத்தார்கள்; ஏன்? அவர்கள் யார்?

4. இரண்டாவது ஜேம்ஸ் அபஜெயமடைந்ததற்கும், அவனது சகோதரன் சித்தியடைந்ததற்கும் காரணமென்ன?

5. ஹனேவேரிய வமிசத்தவர் பிரித்தானிய சிம்மாசனத்துக்கு எவ்வாறு அருகதையுடையவராஞர்கள்?

## ஆறும் அத்தியாயம்

1. ஆறும் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட இடங்களை ஆசியாப் படமொன்று வரைந்து அதில் குறிக்க.

2. அல்புக்கூர்க்கே, அக்பர், அவுரங்கீப் ஆகியோரின் சரித்திர சம்பந்தமான விசேஷமென்ன?

3. கோவை, டியூ, ஏடென், ஓர்மஸ், கள்ளிக்கோட்டை, மலாக்கா ஆகிய இடங்களைப் போர்த்துக்கீசர் ஏன் பிடித்தார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாம் அத்தியாயம்

1. இலங்கைப் படமொன்று வரைந்து அதில் கோட்டை, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய ராச்சியங்களைக் குறிப்பதுடன் இந்த அத்தியாயத்தில் கூறப்பட்ட இடங்களையும் குறிப்பிடுக.

2. இலங்கைக்குப் போர்த்துக்கீசர் ஏன் வந்தார்கள்? சோனகரை அவர்கள் எவ்வாறு நடத்தினர்?

3. போர்த்துக்கீசரின் வீரமுத்திரைப் படமொன்றையும், அவர்கள் கொழும்பில் முதல் முதல் கட்டிய கோட்டையின் படமொன்றையுங் கீறுக.

4. மாயாதுன்னையும் செகராச சேகரனும் போர்த்துக்கீசரோடு எவ்வாறு விரோதமுற்றனர்?

## எட்டாம் அத்தியாயம்

1. நொரன்ஹா, விதிய பண்டாரன், தர்மபாலன், கரலியட்ட பண்டாரன் ஆகியோரைப்பற்றிக் குறிப்பெழுதுக.

2. முதலாம் இராசசிங்கன் ஒரு பெரிய அரசன் என நீர் கருதுகின்றீரா? அப்படியானால் அதற்குக் காரணங் கூறுக.

3. சீதவாக்கை இராச்சியம் வீழ்ச்சியுற்றதற்குரிய காரணங்களென்ன?

4. முதலாவது விமலதர்ம சூரியன் காலம்வரை கண்டி ராச்சியம் சரித்திரத்தில் முக்கியத்தானம் பெறுவதேன்?

## ஒன்பதாம் அத்தியாயம்

1. தொன் பிலிப்பு இறந்த பின்னர் கண்டி ராச்சியத்தைக் கைப்பற்ற போர்த்துக்கீசர் ஏன் ஆவல் கொண்டனர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சூஸாவும் அஸவிடோவும் கண்டியைக் கைப்பற்றத் தவறியது எதனுல் ?

3. கொன்ஸ்தாந்தைதன் டீ சாவுடன் அஸவிடோவை ஒப்பிட்டு எழுதுக.

4. இலங்கைப் படமொன்று கீறி அதில் இவ்வத்தியாயத்தில் கூறப்பட்ட இடங்களைக் குறிப்பிடுக.

5. 1505-ம் ஆண்டு தொடக்கம் 1630 வரை போர்த்துக்கீசர் யாழ்ப்பாண ராச்சிய விஷயங்களிற்றலையிட்டதற்குரிய காரணங்களென்ன ?

6. ஒரு போர்த்துக்கீசப் போர்வீரனின் படத்தைக் கீறுக.

## பத்தாம் அத்தியாயம்

1. கீழைத்தேசங்களில் போர்த்துக்கீசரைத் தோற்கடிப்பதற்கு டச்சுக்காரருக்கு உதவியாயிருந்த காரணங்களெவை ?

2. கோவனின் கொள்கையையும் அல்புக்கூர்க்கேயின் கொள்கையையும் ஒப்பிட்டு எழுதுக.

3. டச்சுக் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் அரசியல் நிருவாக முறைக்கும் போர்த்துக்கீச நிருவாக முறைக்குமுள்ள வித்தியாசமென்ன ?

4. இவ்வத்தியாயத்தில் கூறப்பட்ட பெயர்களை அட்டவணைப் படுத்தி அவை எங்கெங்குள்ளன என்பதைக் குறிப்பிடுக.

## பதினேராம் அத்தியாயம்

1. இலங்கையிலிருந்து போர்த்துக்கீசரைக் கலைப்பதற்கு வெஸ்டர் வொல்ட், மட்ஸுய்கர், ஹல்ப்ட், இரண்டாவது இராசசிங்கன் ஆகியோர் எவ்வாறு முயற்சி செய்தார்கள் ?

2. டச்சு ஈட்டி வீரனதும், பதாதி வீரனதும், துப்பாக்கி வீரனதும் படங்களை வரைக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னிரண்டாம், பதின்மூன்ரும் அத்தியாயங்கள்

1. வட அமெரிக்காவில் பிரெஞ்சுக்காரரும் பிரித்தானியரும் எவ்வாறு விரோதிகளாஞர்கள்?

2. 18-ம் நூற்ருண்டில் பிரித்தானிய குடியேற்றங்கள் அபிவிருத்தியடைய விடாது தடுக்க பிரெஞ்சுக்காரர் எவ்வாறு முயற்சித்தனர் என்பதைப் படங்கீறி விளக்குக.

3. இந்நூற்ருண்டில் அடிமை வியாபாரம் விருத்தியடைந்ததற்குக் காரணம் என்ன? அது எவ்வாறு ஒழிக்கப்பட்டது?

4. வட அமெரிக்காவில் பிரெஞ்சுக்காரர் ஆதிக்கம் பெருமல் பிரித்தானியர் ஆதிக்கம் பெற்றதற்குக் காரணமென்ன?

5. பிரித்தானியர் அமெரிக்க குடியேற்றங்களை இழந்ததற்குக் காரணமென்ன? யாருடைய பிழையால் அவ்வாறு நடைபெற்றது?

6. மொகலாய அரசர்கள் ஐரோப்பிய வியாபாரிகளை வெறுத்ததற்குக் காரணமென்ன?

7. 18-ம் நூற்ருண்டில் பிரெஞ்சுத் தேசாதிபதிகள் இந்திய அரசியல் கொள்கையை எவ்வாறு மாற்றிஞர்கள் ? ஏன்?

8. இந்தியாவில் நிலவிய பிரெஞ்சு ஆதிக்கத்தை பிரித்தானியா தகர்க்க எவ்வாறு முடிந்தது?

## பதினுன்காம் அத்தியாயம்

1. ஆஸ்திரிய, ஹப்ஸ்பர்க் வமிசத்தவர் எவ்வாறு தமது ஆதிக்கத்தைப் பெற்றனர்?

2. பிரஷ்ய மன்னஞன மகா பிரெடரிக் யுத்தங்களில் வெற்றி பெற்றதற்குக் காரணம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ருஷ்யா எவ்வாறு மேல்நாட்டு மயமானது?

4. 18-ம் நூற்ருண்டினிறுதியில் போலந்து தனது சுதந்தரத்தை எவ்வாறிழந்தது?

## பதினைந்தாம் அத்தியாயம்

1. 18-ம் நூற்ருண்டில் பிரித்தானியாவில் நிலம் படைத்த பிரபுக்கள் எவ்வாறு அரசியல் ஆதிக்கத்தைத் தமது வசமாக்கிக்கொண்டனர்?

2. 'பிரதம மந்திரி', 'மந்திரிசபை' என்பவற்றின் அர்த்தமென்ன?

3. 'விக்' கட்சி வீழ்ச்சியுற்றதற்குக் காரணமென்ன?

4. 18-ம் நூற்ருண்டில் பிரித்தானியா முன்னையிலும் எவ்வாறு நாகரிகமுஞ் செல்வமுமுற்றுத்திகழ்ந்தது?

## பதினூரும் அத்தியாயம்

1. இந்நூற்ருண்டுகளில் என்னென்ன சாத்திரங்கள் வளர்ச்சியுற்றன? பௌதிக சாத்திரம், ரசாயனம், தாவர சாத்திரம், பிராணி சாத்திரம், அங்காதிபாதம், உடல் நூல் இவற்றை விளக்குக.

2. 18-ம் நூற்ருண்டிலும் பார்க்க 17-ம் நூற்ருண்டில் சமய பக்தி அதிகமாயிருந்ததற்குக் காரணமென்ன?

3. 'பெர்கோயிஸ்' என்ருலென்ன? பிரெஞ்சுப் புரட்சியில் அவர்களனேகமாகக் கலந்துகொண்டதேன்?

4. பிரெஞ்சுப் புரட்சி ஏற்படவேண்டியதற்குக் காரணமென்ன?

## பதினேழாம் அத்தியாயம்

1. சரித்திரம் சம்பந்தப்பட்டவரையில் ரைகிளப் வான் கோயன்ஸ் எவ்வாறு சிறந்தவன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கண்டி அரசர்களுக்கும் டச்சுக்காரருக்கும் ஏற்பட்ட விரோதத்துக்குக் காரணமென்ன?

3. ஒல்லாந்தர் இலங்கையில் எவ்வாறு நீதிபரிபாலனஞ் செய்தனர்?

## பதினெட்டாம் அத்தியாயம்

1. பௌத்த சமயப் புனருத்தாரணத்துக்கு நாயக்க மன்னர் எவ்வாறு துணைபுரிந்தனர்?

2. கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் ஒல்லாந்தரால் தோல்வியுற்றதற்குக் காரணங்களெவை?

3. டச்சு அரசியல் நிருவாகத்தை இலங்கையர் ஏன் விரும்பவில்லை?

4. இலங்கையைக் கைப்பற்ற பிரித்தானியர் ஏன் ஆவலுற்றனர்?

## பத்தொன்பதாம் அத்தியாயம்

1. 'கபடகம்', 'தலைமுறைத்தோம்பு', 'நிந்தகம்' என்பவற்றின் அர்த்தம் என்ன?

2. ரோமன் கத்தோலிக்க திருச்சபையும், சீர்திருத்தப்பட்ட டச்சுத் திருச்சபையும் இலங்கையில் எவ்வாறு பிரசாரம் நடத்தின?

3. டச்சுக் கோட்டையின் படமொன்று வரைக.

4. இலங்கையில் டச்சுக்காரரின் செல்வாக்கா போர்த்துக்கீசரின் செல்வாக்கா அதிகமாக இப்போது இருக்கிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org